# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்



தமிழண்ணல்

புதிய முறை எளிய உரை

# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்

தமிழண்ணல்

விற்பனை உரிமை

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.
தொலைபேசி: அலுவலகம் : 2345971 வீடு : 2560517
ஈமெயில்: meenakshiputhakam@hotmail.com

முழுவதும் திருத்திய முதற் பதிப்பு : அக்டோபர், 2010

திருவள்ளுவர் ஆண்டு : 2041, ஐப்பசி

விலை உரூவா : 100.00

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தொல்காப்பியம் சொல்லதிகாரம் |
| உரையாசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| முதற்பதிப்பு | : | அக்டோபர்,2010 (தி.வ.ஆண்டு 2041) |
| நூலின் தன்மை | : | இலக்கண விளக்கம் |
| நூல் அளவு | : | 14 X 22 செ.மீ. டெம்மி |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| மரபுரிமை | : | உரையாசிரியருக்கு |
| அச்சு எழுத்து அளவு | : | 11 புள்ளி |
| பக்கங்கள் | : | 248 |
| நூலின் விலை | : | உரூவா 100.00 |
| அச்சிட்டோர் | : | மோனார் கிராபிக்ஸ், சென்னை. |
| ஒளி அச்சுக் கோர்வை | : | ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை. |
| வெளியீடு | : | சிந்தாமணிச் செல்வம் |

**SELLING RIGHTS**

**MEENAKSHI PUTHAKA NILAYAM**

Mayura Complex 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.

☎ Off : 2345971 Resi : 2560517

E-Mail: meenakshiputhakam@hotmail.com

# முன்னுரை

மூதன் முதலாகத் தொடங்கிய புதியமுறை எளிய உரை இது. இதில் பெரிதும் இக்காலத்திற்கேற்ப, புதிய எடுத்துக்காட்டுக்களே தரப்பட்டுள்ளன.

தொல்காப்பியம்

1. எழுத்ததிகாரம்
2. சொல்லதிகாரம்
3. பொருளதிகாரம் : அகத்திணையியல், புறத்திணையியல்
4. களவியல், கற்பியல், பொருளியல்
5. மெய்ப்பாட்டியல், உவமையியல்
6. செய்யுளியல், மரபியல்

இவ்வாறு ஆறு பகுதிகளாக வரும் இந் நூல் வரிசை, மாணவர்களுக்கு மிகுதியும் பயன்படும். தொல்காப்பியம் முழுமைக்கான கையடக்கப் பதிப்பும் வெளிவந்துள்ளது. முன்னைய உரையாசிரியர்கள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர் போல்வார்க்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

இந்நூல் வரிசைகளை, அப் பழைய உரைகளைப் படித்து விளங்கிக் கொள்ள ஒரு நுழைவாயிலாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தொல்காப்பியத்தைப் பல்வேறு வகையில் விளக்கி எழுதி, அதன் சாரத்தையும் தொல்காப்பியரின் நுண்மாண் நுழை புலத்தையும் உலகிற்கு உணர்த்த வேண்டும். அதற்குப் புதுப்புது முயற்சிகளில் ஈடுபட வேண்டும்; அதற்கு புதுப்புது எடுத்துக்காட்டுகளைத் தேட வேண்டும். அதுதான் தொல்காப்பியப் பயிற்சியை எங்கும் பரப்ப, எல்லோர்க்கும் தெரிவிக்க உதவும். இம்முயற்சி அவ்வகையில் முதல் முயற்சி.

சதாசிவ நகர், **தமிழண்ணல்**

மதுரை - 625 020.

# உள்ளுறை

பக்கம்

1. கிளவியாக்கம் 5
2 வேற்றுமையியல் 42
3. வேற்றுமை மயங்கியல் 58
4. விளிமரபு 79
5. பெயரியல் 93
6. வினையியல் 127
7. இடையியல் 148
8. உரியியல் 175
9. எச்சவியல் 207

நூற்பா முதற்குறிப்பு 243

# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்

எழுத்தினாலாவது சொல். தனி எழுத்தாயினும் எழுத்துக்கள் தொடர்ந்து நின்றாயினும் பிறிதொரு பொருள்தருமேல் அவை சொல் எனப்படும். உலகிலுள்ள இருதிணை சார்ந்த பொருள்களின் பெயர்களையும் செயல்களையும் தன்மைகளையும் ஒருவர் உணர்ந்து கொள்ளுவதற்கான ஓசை அல்லது குறியீடுகளே சொல் எனப்படும். அவை பெரிதும் காரணங் கருதியே அமைவன வாயினும் காரணம் அறியப்படாது மறைந்தனவும் குறிப்பால் அறியப் படுவனவும் எனப் பலதிறத்தனவாகும்.

கடலொலி, இடிஒலி முதலியன பொருள் தழுவாத ஓசைகள், அவை அரவம், ஓசை என்று சொல்லப்படும். "சொல்லென்பது எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை" என்பர், இளம் பூரணர். இச் சொல் அல்லது இத் தொடர் இப்பொருளை உணர்த்துமென்பது, வழிவழியாகப் பயன்பட்டு வரும் மரபு பற்றி அறியப்படுவதேயாகும். மரம் என்ற சொல்லுக்கும், அப் பொருளாக எதிரே நிற்கும் ஒன்றற்கும் யாது தொடர்பு? ஏதோ ஒரு காரணம் பற்றிக் கூறப்பட்டு, வழிவழியாக உணரப்பட்டு வருதலால், மரம் என்ற ஒலி கேட்டதும் அஃதுணர்த்தும் பொருள் நம் மனக்கண்ணில் தோன்றுகிறது. எனவே மரபு என்பது மொழியின் உயிர்போன்றதாகும். அம் மரபை நமக்கு விளங்க எடுத்துரைப்பதே இலக்கணமாகும்.

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தையும் ஒன்பது இயல்களாகப் பகுத்துக் கொண்டு முதல் நான்கு இயல்களில் தொடர்மொழிகளின் இயல்புகளையும் அவற்றிலமையும் சொற்களதியல்பையும் விளக்குகிறார். பின்னர் வரும் நான்கு இயல்களில் தனிச் சொற்களின் இலக்கணத்தைக் கூறி, எஞ்சியவற்றை இறுதியியலில் கூறி முடிக்கிறார். முதல் நான்கு இயல்களில் முதல் இயலாம்

கிளவியாக்கத்துள் அல்வழித் தொடர் கூறப்படுகிறது. வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூன்று இயல்களிலும் வேற்றுமைத் தொடர் கூறப்படுகிறது. அடுத்துவரும் நான்கு இயல்களிலும் பெயர், வினை, இடை, உரிச் சொற்களின் இலக்கணம் தனித்தனியே விளக்கப்படுகின்றது. எச்சவியல் இறுதியாக எஞ்சியவற்றைக் கூறி முடிகிறது.

தொல்காப்பியத்தில் அதிகாரம், இயல்கள், இலக்கணக் கூறுகள் யாவும் ஒரு நெறி கருதி, வரிசைப்படுத்திக் கூறிச் செல்லப்படுகின்றன. இவ்வரிசை முறையையும் விளங்கிக் கொள்பவர்களே தொல்காப்பிய அடிப்படையையும் நோக்கத்தையும் முழுமையாக அறிய இயலும்.

தொல்காப்பிய இயல்தலைப்புக்களும் ஆழ்ந்து சிந்தித்தற்குரியன. இயல்தலைப்பு யாது, இயலினுள் கூறப்பட்டுள்ள செய்திகள் யாவை, அவை கூறப்பட்டுள்ள வரிசை முறை யாது, கூறப்பட்டுள்ள இடத்திற்கும் நூற்பாவுக்குமுள்ள தொடர்பு யாது முன்னர்க் கூறப்பட்டுள்ளனவற்றிற்கும் பின்னர்க்கூறப்படுவனவற்றிற்கும் உள்ள இயைபு யாது என நன்கு ஆழ்ந்து மூலபாடத்தை பலகாற் கற்று ஓதி உணர வேண்டும்.

## 1. கிளவியாக்கம்

'கிளவி' என்ற சொல்லால் எழுத்தையும் சொல்லையும் தொடரையும் தொல்காப்பியம் குறிக்கிறது. அகப் பாடல்களில் ஒருவரது கூற்றைக் 'கிளவி' எனக் குறிப்பிடுதலும் அறியத்தக்கது. உள்ளிருந்து எழும் காற்றால் எழுப்பப்படுவது எழுத்து ஆனது. அங்ஙனம் எழுகின்ற, எழுத்தைக் கண்ணெதிரே தோன்றுமாறு எழுதிக் காட்டுவதாலும் எழுத்தெனப்பட்டது.

தனிச் சொற்களென்பன தொடர்களின் வழிப்பட்டனவேயாம். இன்று எழுதப்படுவன மிகுதி என்றாலும், இவை யாவும் தொடக்க காலத்தில் வாய்மொழியாகப் பேசப்பட்டு வந்தனவேயாம். வாயால் பேசப்பட்டு நெடுங்காலம் கழிந்தபிறகே எழுத்துத் தோன்றிற்று. வாயால் பேசப்படுவன என்பன உரையாடல்களே. ஒருவரே தம் கருத்தை உரைப்பதாயினும் அதுவும் உரையாடலின் பாற்பட்டதேயாம். "உலகத்துப் பொருள் உணர்த்தும் சொல் எல்லாம் வினாவும் செப்புமாகிய இரண்டின் மேல் நிகழும்" என்பர்.

உரையாடல்களே வாக்கிய அமைப்பைத் தந்தன. வாக்கியங்கள், பல தொடர்களால் அமைவன. எனவே தமிழ்நூலுடையார், தொடர்களில் அதிகக் கருத்துச் செலுத்தி, வகைப்படுத்தி இலக்கணம் வகுத்தனர். இத் தொடர்கள் வேற்றுமைத்தொடர், வேற்றுமை அல்லாத வழித் தொடர் (அல்வழித் தொடர்) எனப் பகுக்கப்பட்டு, விளக்கப்பட்டுள்ள முறை தமிழ் இலக்கணத்தின் சிறப்பியல்பாகும்.

சொற்கள், பொருள்மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கம் என்னும் பெயர்த்தாயிற்று என்பர் இளம்பூரணர். வழுக்களைந்து சொற்களை அமைத்துக் கொண்டமையால் கிளவியாக்கமாயிற்று என்பர் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும். சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருள் மேலாகும் நிலைமையைக் கூறுவது இவ்வியலாதலின் கிளவியாக்கம் என்னும் பெயர்த்தாயிற்று என விளக்குவார் தெய்வச்சிலையார். இவை யாவும் பொருந்தியனவே. அனைத்தையும் ஒருங்குவைத்துப் பார்க்கும் பொழுதுதான் முழுமையான விளக்கம் கிடைக்கிறது.

## இயல் கருத்து நிரல்

### இருதிணை உணர்த்தும் சொற்கள்

மக்களென்று சிறப்பித்துச் சுட்டப்படுபவரை உயர்திணை என்பர்; அவரல்லாத பிறவனைத்தும் அஃறிணை எனப்படும். சொற்கள் அவ்விரு திணைப்பாற்பட்டுப் பொருளுணர்த்தும்.

### பாலுணர்த்தும் சொற்கள்

ஆடுஉ வறிசொல் (ஆண்பால்), மகடூஉ வறி சொல் (பெண்பால்), பலரறி சொல் (பலர்பால்) ஆகிய மூன்று பால் உணர்த்தும் சொற்களும் உயர்திணையினவாகும்.

ஒன்றறிசொல் (ஒன்றன்பால்), பலவறிசொல் (பலவின்பால்) எனும் அவ்விரண்டு பால் உணர்த்தும் சொற்களும் அஃறிணையினவாகும்.

உயர்திணையில் ஆண்மை திரிந்து பெண்தன்மை மிக்குப் பெண்மையைச் சுட்டிக் கூறும் பெயர்ச்சொல்லும் தெய்வத்தைச் சுட்டிக் கூறும் பெயர்ச்சொற்களும் இவையென அறிதற்கான தனியிறுதி நிலைகளை உடையன அல்ல. உயர்திணையிடத்து முப்பால்களிலுமாகப் பிரிந்து வழங்கும். (பேடி வந்தாள், கடவுள் காப்பார்).

### பால் உணர்த்தும் இறுதிநிலைகள்

னகர ஒற்றை ஈறாகவுடையன ஆடூஉவறிசொற்கள் ஆண்பால்.

ளகர ஒற்றை ஈறாகவுடையன மகடூஉ வறிசொற்கள் பெண்பால்.

ரகர ஒற்று, பகர இறுதியுடன், மார் ஈற்றுச் சொற்களுட்பட்ட மூன்றும் பலரறி சொற்களாகப் பொருந்தத் தோன்றும் பலர்பால்.

து று டு எனப்படும் த ற ட மெய்களையூர்ந்த குற்றியலுகர ஈற்றையுடையவை ஒன்றன்பாற் சொற்களாகும்.

அ, ஆ, வ என்னும் இறுதிகளையுடைய மூவகைச் சொற்களும் பலவின்பாற் சொற்களாகும்.

முற்கூறிய இருதிணையிடத்து ஐம்பாலையும் அறியச் சொற்களின் இறுதியிலமைந்து வழங்கும் பதினோர் எழுத்துக்களும் வினைச் சொற்களிடத்து விளங்கித் தோன்றும். (பெயரீறாவன எனினும் வினைகளிலேதான் விளங்கித் தோன்றும்).

**பால் திணை இயைபு**

வினையில் தோன்றும் பாலுணர்த்தும் சொற்களும் பெயரில் தோன்றும் பாலுணர்த்தும் சொற்களும் அவ்வப்பாலுக்கு அவையவையே வரும்; மயங்கிவருதல் கூடாது. பால் மயங்காமை கூறவே, திணை மயங்காமை தானே உணரப்படும். பிற எண், இடங்களும் மயங்கா என்பதும் பெறப்படும்.

ஆண்மை திரிந்து, பெண்மை சுட்டிய பேடி எனும் பெயர்ச்சொல் ஆண்பால் வினைமுற்றுச் சொற்களுடன் இயைபுபடுவதற்கு இடமில்லை. பேடி வந்தான் என வாராது; பேடி வந்தாள் என்றே வரும்.

**உரையாடல் : செப்பலும் வினவலும்**

தன் கருத்தைச் செப்புதலும் ஒன்றையறிய வினவுதலுமாகிய இவற்றை வழுவாமல் போற்றி உரையாடுதல் வேண்டும்.

வினாவிற்கு மறுமொழியாய் வினாவே வரின், அவ் வினாவும் குறிப்பால் விடைதருதலின், செப்பென்றே கொள்ளப்படும்.

செப்புதலாகிய விடைகள் நேர்விடையாகாமல் வழுவினாலும் அவ்வாறு விடையாகும்படியான பொருள் பொதிந்த சொற்களுடன் வருமிடத்து, அவை நீக்கப்பட்டுவனவல்ல. (எனவே வினா வழுவுதல் கூடாது என்பதாம்.)

**உறழ்தலும் ஒப்பிடுதலும்**

விடையிலும் வினாவிலும் உறழ்ந்தும் ஒப்பிட்டும் கூறுங்கால், சினைக்குச் சினையையும் முதலுக்கு முதலையும் என அவ்வப் பொருள்களையே கூற

வேண்டும். (மல்லிகைப் பூப்போல் முல்லைப்பூ மணம் மிக்கது. மல்லிகைப் பூவையும் வேங்கை மரத்தையும் ஒப்பிட இயலாது.)

முற்கூறியவாறன்றி சினையும் முதலும் மாறி, உறழ்ந்தும் ஒப்பிட்டும் கூறப்படுதலுமுண்டு. அதற்குத் தகுதியுடைமையும் சான்றோர் வழக்கும் அடிப்படையாகும். எனவே அவை நீக்கும் நிலைமையின அல்ல. (மதி போலும் முகம். மேகம் போலும் கூந்தல். இவை முதலுக்கும் சினைக்கும் ஒப்புமை கூறுகின்றன.)

## இனஞ்சுட்டா அடைமொழிகள்

இனஞ்சுட்டுகிற பண்புணர்த்தும் அடைகளே உலக வழக்கிற் காணப்படுவன. இனஞ்சுட்டாத பண்பு அடைகளுடன் கூடிய பெயர்கள் செய்யுளுள் (இலக்கியத்துள்) மட்டுமே காணப்படும். அவை உலக வழக்கிற் காணப்படா. செஞ்ஞாயிறு, வெண்திங்கள் என்பன இலக்கிய வழக்கு. இனம் சுட்டாமை காண்க. உலக வழக்கில் வெண்தாமரையை வேறுபடுத்திச் செந்தாமரை என்பது இனம் சுட்டும் பெயரடையாகும்.

## இயற்கைப்பொருள் செயற்கைப் பொருள்களைக் கூறும் முறை

உலகத்து இயற்கைப் பொருள்களை இத்தன்மைத்து எனக் கூற வேண்டும். (நீர் தண்ணிது.)

செயற்கைப் பொருள்களை ஆக்கச்சொல் கொடுத்துக் கூறவேண்டும். (நீர் சூடானது.)

முற்கூறியவாறு ஆக்கச்சொல் கொடுத்துக் கூறும்பொழுது, அதற்கான காரணத்தை முதலிற்கூற வேண்டும்.

(எரியும் அடுப்பில் வைத்ததால் நீர் சூடானது.)

உலக வழக்கில் இங்ஙனம் வரும் ஆக்கச்சொல் காரணமின்றியும் கூறப்படுவதுண்டு. (உடல் நலமானது, உடல் மருந்துண்டதால் நலமானது என்ற காரணம் தொடரில் தொக்கி நிற்கிறது.)

## திணை பால் ஐயம் தோன்றும் போது கூறும் முறை

ஆணா பெண்ணா எனப் பால் ஐயம் தோன்றியவிடத்து, தான் அறிந்த, அவ் உயர்திணையில் பலர்பாலால் கூறி வினவவேண்டும். (ஆண் எனில் 'அங்கு நிற்பவன் யாவன்?' எனலாம். பெண் எனில் 'அங்கு நிற்பவள் யாவள்?' எனலாம். ஆணா பெண்ணா எனத் தெரியாது மயங்கிய நிலையில் 'அங்கு நிற்பவர் யார்?' எனப் பன்மையில் வினவுகிறோம்.)

உயர்திணையா அஃறிணையா எனத் திணை ஐயம் தோன்றியவிடத்து "அங்கு தோன்றுகிற உரு(வம்) எது?" என்பர். அஃறிணையில் ஒன்றா, பலவா எனவும் அதுவா இதுவா எனவும் வேறுபாடறியாத மயக்கம் தோன்றுமிடத்து "ஓடியவை எத்தனை?" "இழந்தவை யாவை" எனப் பன்மையில் பொதுப்படக் கூறி வினவுவர். இவ்விரண்டிடத்தும் இவ்வாறு சுட்டிச் சொல்லுதல் உரித்தாகும்.

ஐயம் நீங்கியபின் 'அன்மைச்' சொல்லை, துணிந்த பொருளுக்கு வேறானவற்றொடு (ஐயப்பட்டவற்றொடு) சேர்த்துச் சொல்லுதலும் உண்டெனக் கூறுவர் (நேரே கூறலுமுண்டென்பதாம்). 'காணப்படுபவர் பெண்ணே' என்பது நேரே கூறுதல், (ஆணல்லள், பெண்; கம்பமல்லன், மனிதன் என்பன அன்மைச் சொல்லைச் சேர்த்துச் சொல்லுதல்.)

**அடைமொழிகள் : வண்ணச் சினைச் சொல்**

வண்ணமாகிய பண்பும் சினையாகிய உறுப்பும் முதலைக் குறிக்கும் சொல்லொடு சேர்ந்து அடை + சினை + முதல் என இவ்வரிசை முறை மயங்காமல் கூறப்பட்டு வழங்கும். (பசும்புல்தரை, சிறுகண்யானை, பெருந்தோள் மறவன் என இவ்வாறு தமிழில் வழங்கும் தொடரமைப்புகள் கணக்கில.)

**உயர்வுப் பன்மை உலக வழக்கு**

உயர்திணையில் ஒருவன் ஒருத்தியை, ஒருவர் என உயர்வுப் பன்மையில் கூறுதலும அஃறிணையில் ஒன்றனையும் அவ்வாறு உயர்வுப் பன்மையில் கூறுதலும் இலக்கண வழிப்பட்ட சொல்வழக்காறு அல்ல. அவை உலக வழக்கு வழிப்பட்ட 'உயர்வுப் பன்மை' குறிக்கும் சொல்வழக்காகும். (நக்கீரர், பாரதியார் எனவும்; நரியார், காளையார் எனவும் வரும்.)

**பொருள்வழி இடமுணர்த்தும் வினைச்சொற்கள்**

செல்லுதல், வருதல், தருதல், கொடுத்தல் என நிலையாக வழங்கும் நான்கு சொற்களும் தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூன்று இடங்களுக்கும் உரியனவாகும்.

அவற்றுள் தருதல், வருதல் இரண்டு சொல்லும் தன்மை, முன்னிலை என்னும் இரண்டு இடங்களுக்கு உரியனவாம். (எனக்குத் தந்தான், என்னிடம் வந்தான், உனக்குத் தந்தான், உன்னிடம் வந்தான். என்னிடம் சென்றான் என யாரும் கூறுவதில்லை.)

ஏனைய செல்லுதல், கொடுத்தல் இரண்டும் ஏனைய படர்க்கைக்கு உரியவையாகும். (அவனிடம் சென்றான். அவனுக்குக் கொடுத்தான். எனக்குக் கொடுத்தான் என்பதனிலும் எனக்குத் தந்தான் என்பதே பொருந்தி வருதல் கருதத்தக்கது.)

**அறியாப் பொருள், அறிந்த பொருள்களை வினவும் முறைகள்**

அறியாத நிலையில் ஒரு பொருளை யாது, எவன் (என்னை, என்ன, என்) என வினவுதல், மிகப் பொருத்தமுற அமையும். (அங்கு நிற்பது யாது? இதன் பொருள் எவன்? (என்ன))

அறிந்த பொருளில் உள்ள ஐயம் தீர்வதற்குத் தெளிவுதரும் சொல்லாக 'யாது' எனும் வினாச்சொல் அமைதலும் உண்டு. (இந் நூல்களில் உங்களுடையது யாது?)

**முற்றும்மை பெறும் தொடர்கள்**

சினையாகிய உறுப்புக்களாயினும் முதற்பொருள்களாயினும் இத்தனை என எண்ணிக்கை அறியப்பட்டவற்றுக்கு, வினைமுடிபு தந்து தொடரமைக்கும் போது, இறுதியில் முற்றும்மை கொடுத்துச் சொல்ல வேண்டும். (ஐவிரலும் துடித்தன; முத்தமிழும் வெல்க; நூற்றுவரும் தோற்றனர்.)

முற்றிலும் இல்லாத ஒரு பொருளைச் சொல்லுமிடத்தும், அஃதேபோல் முற்றும்மை கொடுத்துக் கூறுதல் இயல்பாகும். (ஒன்று இல்லை, ஒன்றுமில்லை. எங்கு இல்லை, எங்குமில்லை; வேறுபாடறிக)

**'அல்லது இல்லை'; வணிக மரபு**

எப்பொருளை ஒருவர் வின்வி வந்தாலும், அவர் வினவியதல்லாமல் பிறிது பொருள் தன்னிடமிருக்குமாயின், அங்ஙனம் தன்னிடமுள்ளதையே சுட்டி அல்லது இல்லை என்று கூறவேண்டும். ('சித்த மருந்துளதோ என வினவினவர்க்கு 'ஆங்கில மருந்தல்லதில்லை' என்றுதான் கூறவேண்டுமாம். 'சித்தமருந்தில்லை' என்பது கூடாதாம்.)

வினவப்பட்ட பொருளையே கூறவேண்டி வரின், அதனுள் யாது, எத்தகையது என விளங்குமாறு சுட்டிச் சொல்ல வேண்டும். அல்லது தன் முன்னுள்ளதைக் காட்டி, இதுதான் உளது எனல் வேண்டும். ('பட்டு உளதோ' என வினவி வந்தார்க்கு 'காஞ்சிப்பட்டல்லதில்லை' என்றோ, 'ஆரணிதான் உளது'. என்றோ சுட்டிக்கூற வேண்டுமாம்.)

### பொருட்பெயரும் சுட்டுப்பெயரும் தொடரிலமைதல்

பொருட்பெயரைச் சொல்லாது, தன் முன்னுள்ளதைக் காட்டி 'இதுவல்லதில்லை' என்பதும் 'இதுதான் உளது' என்பதும் உண்டு. அவை பொருளைத் தொடராது வரும் சுட்டுப் பெயர்களாகும். அங்ஙனம் வரினும் அவை அப்பொருள்களின் வேறுபடாது, அவற்றையே பொருந்தி நிற்கும்.

### இயற்பெயரும் சுட்டுப்பெயரும் தொடரிலமைதல்

இயற்பெயரும் சுட்டுப்பெயரும் வினைமுடிபு கொண்டு ஒருங்கு நடக்கும் தொடர்கள் அமையும்போது, சுட்டுப் பெயரை முதலிற் சொல்லாமல் இயற் பெயரைச் சொல்லி அதன் பின்பாகவே சுட்டுப்பெயரை அமைத்துக் கூறுவர். (கண்ணன் வருவான்; அவனுக்கு விருந்து படைக்க.)

அங்ஙனமல்லாது சுட்டுப்பெயரை முற்படக் கூறுதல், நயந் தோன்றப் படைக்கும் இலக்கியத்துள் (செய்யுளுள்) இடம்பெறும். (கதையைத் தொடங்கும் போது, "அவளுடைய கைகள் பலகணி வழியே தெரிந்தன. கலையரசி அடிக்கடி வந்து அங்குநிற்பது வழக்கம்" எனச் சொல்லும் விதம் காண்க.)

### சுட்டு முதலாகிய காரணக் கிளவிகள் தொடரிலமைதல்

சுட்டெழுத்தை முதலாகவுடைய காரணத்தைக் குறிக்க வரும் சொற்களும் (அதனால், இதனால் முதலியன), முன்னே சுட்டுப் பெயர்களுக்குக் கூறிய இயல்புப்படி, சுட்டப்படும் பொருளுக்குப் பின்னே பொருந்திவரும். (மக்கள் உண்மையான நாட்டுப்பற்றுடையராயினர்; அதனால் பாரதம் விரைந்து முன்னேறுகிறது.)

### சிறப்புப் பெயரும் இயற்பெயரும் தொடரிலமையும் முறை

சிறப்புப் பெயர்களுக்கு முன்னதாக இயற்பெயரை அமைத்துக் கூறமாட்டார்கள். அன்றும் இன்றும் எட்டி சாயலன், முனைவர் சி.இலக்குவனார், முத்தமிழ்க் காவலர் விசுவநாதம் எனப் பட்டப் பெயர்களும் சிறப்புப் பெயர்களும் போல்வனவற்றை இயற்பெயர்களுக்கு முன்னதாக அமைத்து வழங்குதல் தமிழ்மரபாகும்.

### பெயர்களும் வினை முடிபும் அமையும் தொடரமைப்பு

ஒரே பொருளைக் குறிக்கும் பல்வேறு பெயர்ச்சொற்கள் தொடர்ந்து வருமாயின், வேறு வேறு வினைமுடிபு கொடுத்தல் கூடாது. அங்ஙனம் கொடுப்பின் அவை யாவும் ஒரே பொருளைக் குறிப்பன எனப் பொருந்தமாட்டா. எனவே ஒரே வினைமுடிபு கொடுத்தல் வேண்டும். (செந்தமிழ்க் காவலர், முனைவர், பேராசிரியர்

அ.சிதம்பரநாதர் எனக்கு வழிகாட்டினார் என முடிக்க வேண்டும். செந்தமிழ்காவலர் வழிகாட்டினார்; முனைவர் தலைமை ஏற்றார்; பேராசிரியர் முதல்வரானார் என்று தனித்தனி வினைகொடுப்பின் அவை வேறுவேறு மனிதர்களைக் குறிப்பதாய் விடும்.)

**தன்மைச்சொல்லுடன் அஃறிணைப் பெயர்கள் தொடர்தல்**

உயர்திணை ஒருவர் தன்மைச் சொல்லுடன் அஃறிணைப் பெயர்களை எண்ணிக் கலந்து கூறுதலை, யாரும் மறுக்கமாட்டார்கள். (நானும் என் மனைவியும் எங்கள் நாய்க்குட்டியும் புறப்பட்டுச் சென்றோம்.)

**ஒருவன் ஒருத்தி என ஒருமையில் மட்டுமே வருதல்**

ஒருவன் ஒருத்தி என்ற ஒருமை எண்ணின் 'பொதுப்பிரிபாற்சொற்கள்' ஒருமைக்கு மட்டுமே வரும். அல்லாமல் இருவன் இருத்தி என இவ்வாறு எண்ணும் வரிசையில் பிற எண்களுடன் வாரா.

**திணை விரவி வியங்கோள் முடிபு பெறுதல்**

எண்ணிக்கை முறையில் கூறப்பட்டு வியங்கோள் முடிபு பெறும் பெயர்கள், திணை விரவி வருதலைத் தவறென்று நீக்கமாட்டார்கள். (மன்னனும் நாடும் மக்களும் வாழ்க.)

**பொதுச்சொல் பொதுவினை தொடரும் இயைபு**

பால் பருகினார். உணவு உண்டார். பருகுதல் தனி வினை. உண்ணுதல் பொதுவினை. தின்னுவன, பருகுவன, உரிஞ்சுவன பலவற்றுக்கும் பொதுவினை உண்ணுதல். இவற்றுக்குப் பொதுச்சொல் உணவு, சாப்பாடு, அடிசில். எனவே வேறுபட்ட வினைகட்குப் பொதுவான உணவு என்ற சொல்லுடன் பருகினார் என்ற ஒரு குறிப்பிட்ட வினையை இணைத்துக் கூறமாட்டார்கள். பொதுச்சொல்லைப் பொதுவினையால் முடிப்பர் என்பதாம். (அடிசில் உண்டார். உணவு சாப்பிட்டார்.)

வேறுவேறு வினைக்குரிய சொற்களை எண்ணிக் கூறும்போதும், அவ்வாறு பொது வினையால் முடிப்பதே அதன் மரபாகும். (யாழும் குழலும் பறையும் இயம்பினார்; சோறும் கறியும் மோரும் பழமும் உண்டார்.)

**இரட்டைக் கிளவியின் இயல்பு**

இரட்டையாகவே வழங்கும் சொற்கள் அங்ஙனம் இரட்டிப்பதினின்றும் பிரித்துத் தனித்துக் கூறப்படா. (கலகல, பொலபொல. சுறுசுறுப்பு, கதகதப்பு, வாட்சாட்டம், அகடவிகடம் என்பனவற்றையும் பிரித்துச் சொல்வதில்லை.)

### பொதுமையுடையவற்றை ஒரு பெயரால் குறிக்கும் மரபு

ஒரு தோட்டத்தில் பிற பொருள்களும் உளவாயினும் அவற்றைத் தவிர்த்து, 'வாழைத்தோட்டம்' என ஒரு பெயரால் குறிக்கும் பொதுச்சொற்கள், அங்ஙனம் கூறப்படுவதற்குக் காரணம் அவற்றின் தலைமையும் பன்மையும் பற்றியதாகும். உயர்திணையில் ஆசிரியர் குடியிருப்பு என்றும் அஃறிணையில் 'தென்னந் தோப்பு' என்றும் கூறப்படுவனபோல் இவை இரு திணையிலும் அமையும்.

### பால் வேற்றுமை உணர்த்தும் பெயரும் வினையும்

உயர்திணையிலும் அஃறிணையிலும் பெயராலும் தொழிலாலும் பால் முதலியன பிரிந்து பொருள் தரும் சொற்கள் பலவுள. அவை ஒன்றினொன்று மயங்குதல் கூடா; அவ்வவ் வழக்குப்படி பொருள் உணரப்படும். (சிலம்பணிந்தார் எனில் மகளிர் எனவும் கழலணிந்தார் எனில் ஆடவர் எனவும் அறிதல். நெடுங்கூந்தல் முடித்து வந்தார்; மீசை துடிக்கப் பேசினார் என்ற தொடர்கள்வழி பால்வேறுபாடு அறியப்படுதல் காணலாம்.)

### திணைவிரவி அஃறிணை முடிபேற்றல்

உயர்திணை, அஃறிணைப் பெயர்களைக் கலந்து எண்ணி முடிக்கும் போது, பெரிதும் அஃறிணைமுடிபு கொடுத்தல் செய்யுள் வழக்காகும். சிறுபான்மை உயர்திணை முடிபு கொடுத்தலுமுண்டு என்பதாம். (மக்களும் மாடும் மனையும் மாண்டன நில அதிர்வாலே.)

### பலபொருள் ஒரு சொல் பொருள்தரும் முறை

பலபொருள் ஒரு சொல் வினையான் வேறுபாடறியப் படுவனவும் வினையால் வேறுபாடறியப் படாதனவுமென அவ்விருவகையினவாகும். (கொடி படர்ந்தது; கொடி பறந்தது. மாவீழ்ந்தது – மரம், விலங்கு)

வினையால் வேறுபடும் பலபொருள் ஒருசொற்கள், அவற்றை வேறுபாடறிய உதவும் வினைச் சொல்லாலும் உடன்வரும் இனச்சொற்களாலும் சொல்லப்படும் இடச் சூழல் சார்பாலும் தெளிவாகப் புலப்படும்.

ஒரே வினைச்சொல்லும் பல பொருள்தருவதுண்டு. அது இடம் நோக்கிப் பொருந்தும் பொருளறியப்படும்.

வினையால் வேறுபடாத பலபொருளொருசொல், ஆராயுங் காலத்து, இன்னதெனக் கிளந்து சொல்லப்படும். (கொடி அசைந்தது என்றாலேற்படும் ஐயம் போர்க்கொடி அசைந்தது, பூங்கொடி அசைந்தது எனக் கிளந்து சொன்னால் ஏற்படாது.)

**பேசுங்கால் நன்கு விளங்கப் பேசுக**

ஒரு பொருளைச் சொல்லக் கருதியவன், தன் கூற்றினை இன்னதென விளங்கத் தெரிவிக்கும் சொற்களால் கூறுக.

**திணைக்குப் புறனடை**

**உயர்திணை சார்ந்த பெயர்கள் அஃறிணை முடிவு பெறுதல்**

குடிமை, ஆண்மை முதலியவாய், குறிப்பால் இவை உயர்திணையின என உணரப்படும் சொற்கள் எல்லாம் அவை உயர்திணையைச் சார்ந்தனவேயாயினும் அஃறிணையாக முடிபேற்று உலகின்கண் வழங்கும். (ஆண்மை வென்றது, குடிமை நன்று என அஃறிணையாக முடிப்பினும் இவை உயர்திணையைப் பற்றியனவேயாம்.) அச்சொற்களாவன : குடிமை, ஆண்மை, இளமை, மூப்பு, அடிமை, வன்மை, விருந்து, குழு (குழு அறிக்கையை அளித்தது), பெண்மை, அரசு, மகவு, குழவி, ஆண்மைதிரிந்த பெயர் (அலி), உறுப்பு வழிப்பட்ட பெயர் (குருடு), காதற்சொல் (என் கண்மணி வந்தது), சிறப்புச் சொல், செறற்சொல் (குரங்கு போய்விட்டதா), விறற்சொல் என்ற பதினெட்டுச் சொற்களாகும்.

**புறனடை**

**தெய்வப்பெயர் முதலியன அஃறிணை முடிவுபெறுதல்**

காலம், உலகம், உயிர், உடம்பு, ஊழ், வினை, பூதம், ஞாயிறு, திங்கள், சொல் ஆகிய பத்துடன் அவை போல்வன பிறவுமாகத் தெய்வநிலையுடையவற்றைக் குறிக்கவரும் சொற்கள் எல்லாம் உயர்திணைக்கண் பால்பிரிந்து கூறப்படமாட்டா; அஃறிணையாக முடிவு பெறும். காலம் கொண்டு போனது. உயிர் பிரிந்தது. உலகம் சிரித்தது.

இங்குக் கூறப்பட்ட காலம், உலகம் முதலியனவற்றுக்கு ஈறுதிரியாமல் அவ்வாறே நின்று, உயர்திணையாய்ச் சொல்லப்படுதல் இயல்பன்று. இதற்கு முன்பு கூறப்பட்ட குடிமை, ஆண்மை முதலியன அவ்வாறே நின்று உயர்திணையாகக் கூறப்படுதலுமுண்டு என்பதாம். (என் பாவை வந்தாள், செவிடு போகிறான், குடிமை நல்லன்.)

இங்குக் கூறிய காலம் உலகம் முதலியன, ஈறு திரிந்து உயர்திணையாய் வேறுபட்டவிடத்து, இவை உயர்திணையாய் முடிவுபெறுதலுமுண்டு. (உலகம் பசித்தது - உலகர் பசித்தனர். உடம்பார் அழிவர். காலன் கவர்ந்தான்.)

விதந்து கூறிய சொற்கள், தமக்கு இனமாகிய பிற கருத்துக்களையுணர்த்தலும் உண்டு. (அயலவர் கேட்டுக் கொண்டு வரவும் என்றால், உடையவர் நேரே வரலாம் என்பது தானே பெறப்படும். 'பாரதம் வாழ்க' எனில் பிற நாடுகள் வீழ்க என்பது கருத்தன்று. இனம் செப்பலும் உரித்து; செப்பாமையும் உரித்து என்பதாம்.)

கண், தோள், முலை என்பனவும் பிறவுமாகிய பலவற்றைக் குறிக்கும் உறுப்புப் பெயர்கள், பன்மையாகக் கண்கள், தோள்கள் என்று கூறப்பட வேண்டிய கட்டாயமுடையன வல்ல. தமக்குரிய பன்மைவினையாற் கூறும் இறுதி நிலைகளைப் பெறாவிடத்து அவ்வாறு கூற வேண்டுமென்பதில்லை. எனவே கண், தோள் என்றாலே பன்மை உணர்த்தும் என்பதும் கண் பார்த்தது, காது கேட்டது, விரல் துடித்தது, தோள் உயர்ந்தது என்றாலே அவை சாதி ஒருமையாய்ப் பன்மையைச் சுட்டுமென்பதும் கண்ணிரண்டும் துடித்தன, காதுகள் படபடத்தன என இவ்வாறு பன்மை வினைக்குரிய ஈற்று எழுத்துக்களைப் பெறுமிடத்தே அவை பன்மைவடிவாற் கூறப்படுமென்பதும் பெற்றாம்.

## கிளவியாக்கம்

*சொல்வகை : திணை உயர்திணையும் அஃறிணையும்*

**உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே;**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே;**
**ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே. (483)**

மக்கள் என்று சுட்டப்படுபவரை உயர்திணை என்று கூறுவர். அவர்கள் அல்லாத பிறவற்றை அஃறிணை என்று கூறுவர். அவ்விரு திணைகளாகச் சொற்கள் பொருளுணர்த்தும். மக்கள் சுட்டு – மக்கள் என்று உயர்த்துச் சுட்டிக் கூறப்படுவோர். அவரல பிற – அம் மக்களல்லாத உயிருள்ளனவும் உயிரில்லனவும். சொல் இசைக்கும் – சொல் பொருள் உணர்த்தும். உலகத்துப் பொருள் யாவும் உயர்திணை அஃறிணை என இரண்டில் அடங்கும். உயர்திணை அல்லாத திணை யெனவே மக்கள் அல்லாத எல்லாம் இவ் அல்திணையில் அடங்கும்.

*பால்*

*உயர்திணைக்குரிய மூன்று பால்கள்*

**ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்**
**பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி**
**அம்மூப் பாற்சொல் உயர்திணை யவ்வே. (485)**

ஆணை அறியும் சொல்லும் பெண்ணை அறியும் சொல்லும் பலரை அறியும் சொல்லொடு பொருந்தி, அம் மூன்று பாலுணர்த்தும் சொற்கள் உயர்திணைப்பாற்படும். ஆடூஉ, மகடூஉ என்பன ஆண், பெண் உணர்த்தும் பழந்தமிழ்ச் சொற்கள். இச் சொற்கள் இயற்கை அளபெடையாகவே வழங்கின. அறிசொல் – குறிக்கும் சொல். உயர்திணையவ்வே – உயர்திணையின.

*அஃறிணைக்குரிய இரண்டு பால்கள்*

**ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று**
**ஆயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே. (487)**

ஒன்றைச் சுட்டி அறியும் சொல், பலவற்றைச் சுட்டி அறியும் சொல் என்று, அவ் இருபாலையும் உணர்த்தும் சொற்கள் அஃறிணைப் பாற்படும். தமிழில் ஒன்றறிசொல் பலவறிசொல் எனப் பாலுக்குள் எண்ணையடக்கிக் கூறியிருப்பது

நினைவிற் கொள்ளத்தகும். தமிழ்நூலுடையார் வேற்றுமை என ஒன்றை வகுத்துக்கொண்டு, அஃதல்லாத அனைத்தையும் வேற்றுமை அல்லாதவழி – அல்வழித் தொடர் என்றனர். உயர்திணை அல்லாதவை – அல்திணை, அஃறிணை என்பர். அகம் என ஒன்றை வகுத்துக்கொண்டு, அஃதல்லாதவற்றை எல்லாம் ஒருசேரப் 'புறம்' (அகமல்லாதன) என்பர். இங்ஙனம் தமிழ் இலக்கணக் கலைச்சொற்கள் யாவும் திட்பமும் நுட்பமும் உடையன.

### *'பேடி' என்னும் பெயரும் தெய்வம் சுட்டிய பெயர்களும் உயர்திணையாய் அடங்குதல்*

**பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்**
**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**
**தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**
**இவ்வென அறியும்அந் தந்தமக் கிலவே**
**உயர்திணை மருங்கின் பால்பிரிந்து இசைக்கும். (487)**

உயர்திணையில் ஆண்மை திரிந்து பெண்தன்மைமிக்குப் பெண்மையைச் சுட்டிக் கூறும் பெயர்ச் சொல்லும் (பேடி), தெய்வத்தைச் சுட்டிக் கூறும் பெயர்ச்சொற்களும் அவை இவை என அறிதற்கான அந்தம் – ஈற்றுறுப்பு – விகுதியை உடையன அல்ல. அதாவது பேடிக்கும் தெய்வத்திற்கும், அவை முற்கூறிய பகுப்புள் அடங்காமையின், தனி இறுதிநிலைகள் வேண்டும். அவ்வாறு இன்மையின், அவை உயர்திணை ஈறுகளையே பெற்று, அம் முப்பால்களிலுமாகப் பிரிந்து வழங்கும். பேடி வந்தாள், பெருமாள் எழுந்தருளினன், திருமகள் வந்தாள், சிவபெருமான் அருளினன், பேடியர் வந்தார், கடவுளர் எழுந்தருளினர். இவை மக்கட் சுட்டு எனக் குறிக்கத்தக்கன அல்லவாயினும், அச்சுட்டுக்குரிய ஈறுகளைப் பெற்று வழங்கலின் இவ்விலக்கணம் வகுக்கப்பட்டது. பெயர்நிலைக் கிளவி – பெயர்ச்சொல். அந்தம் – ஈறு, விகுதி, உயர்திணை மருங்கின் பால் பிரிதல் – உயர்திணையிடத்து ஆண் பெண் பலர் முப்பாலாகப் பிரியும் ஈறுகள்.

### *சொற்களைப் பால் அடையாளம் காட்டும் ஈறுகள்*
### *ஆண்பாற் சொற்களின் ஈறு*

**னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல். (488)**

னகர ஒற்று ஈற்றுறுப்பாய் அமைவன ஆடூஉ வைக் குறிக்கும் சொற்கள். அவன், கரியன், உண்டான்.

### பெண்பாற் சொற்களின் ஈறு

**ளகரன் ஒற்றே மகடூஉ அறிசொல்.** **(489)**

ளகர ஒற்று ஈற்றுறுப்பாய் அமைவன மகடூஉவைக் குறிக்கும் சொற்கள். அறிசொல் - சுட்டி அறியும் சொல், குறிக்கும் சொல். அவள், செய்யாள், உண்டாள்.

### பலர்பாற் சொற்களின் ஈறு

**ரகரன் ஒற்றும் பகர இறுதியும்**
**மாரைக் கிளவி உளப்பட மூன்றும்**
**நேரத் தோன்றும் பலரறி சொல்லே.** **(490)**

பலர்பால் எனப்படும் பலரைக் குறிக்கும் சொற்கள் ரகர ஒற்றையும் பகரத்தையும் மார் என்னும் இடைச்சொல்லையும் பொருந்தும்படி இறுதியில் பெற்றுத் தோன்றுவனவாம். மாரைக்கிளவி - மார் விகுதியாகிய இடைச்சொல். நேரத்தோன்றும் - பொருந்தத் தோன்றும். அவர், நம்பியர், நங்கையர், வெள்ளையர், உண்டார், கரியர், என்ப, உண்ப. அண்ணன்மார், தம்பிமார், கொண்மார் வந்தார்.

### அஃறிணை ஒன்றன்பாற் சொற்களின் ஈறு

**ஒன்றறி கிளவி த ற ட ஊர்ந்த**
**குன்றிய லுகரத்து இறுதி யாகும்.** **(491)**

ஒன்றன்பால் எனப்படும் அஃறிணையுள் ஒன்றனை அறியும் சொல் த ற டக்களை ஊர்ந்த குற்றியலுகரத்து ஈறாகும். து, று, டு எனும் இறுதி நிலையில் முடிவனவே ஒன்றன்பாற் சொற்களாகும். வந்தது, போயிற்று, குறுந்தாட்டு (குட்டையான தாள்களையுடையது) கரிது, அது, நன்று.

### அஃறிணைப் பலவின்பாற் சொற்களின் ஈறு

**அ ஆ வ என வரூஉம் இறுதி**
**அப்பால் மூன்றே பலவறி சொல்லே.** **(492)**

அ ஆ வ என்று சொல்லப்படும் இறுதிகளையுடைய அவ்வகையின மூன்றும் பலவின்பால் எனப்படும், அஃறிணையில் பலவற்றைக் குறிக்கும் சொற்களாம். அப் பால் - அவ் வகை. எனவரூஉம் இறுதி - என்று இறுதியாகவருவன. வந்தன, ஊர்வன, கரிய. (பார்ப்புகள்) பறவா, (அவை) நடைபெறா. பல, சில, உண்குவ, வருகுவ, பருகுவ.

*முற்கூறிய பதினோர் ஈறுகளும் வினைச் சொற்களில் விளங்கித் தோன்றுதல்*

**இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய**
**ஈற்றில்நின்று இசைக்கும் பதினோ ரெழுத்தும்**
**தோற்றந் தாமே வினையொடு வருமே. (493)**

இதுகாறும் இருதிணை ஐம்பாலுக்கான ஈறுகள் கூறப்பட்டன. அவ்ஈறுகளை வைத்தே, திணை பால் அறியப்படுதலின், அவ் ஈறுகளுக்குத் தலைமையிடம் தந்து கூறினார். அவற்றை அறியுமாறு, ஈற்றில் நின்று உணர்த்தும் முற்சுட்டிய பதினோரெழுத்தும், வினைச் சொற்களில் அமைந்து நன்கு புலப்படும். ன, ள; ர, ப, மார்; து, று, டு; அ, ஆ, வ என்று அவை முறையே முன்னர்க் கூறப்பட்டன. தோற்றம் வினையொடு வரும் – வினைச் சொல்லில் தோன்றி (அமைந்து) புலப்படும். பெயரிலும் தோன்றுமாயினும் அங்கு மயக்கத்திற்கிடமுண்டு. எனவே தெளிவாகப் புலப்படுமிடத்தை விதந்தோதினார்.

*திணை, பால் ஈறுகள் வினையிலும் பெயரிலும் ஒத்தனவாய் அமைய வேண்டுமெனும் இயைபு*

**வினையின் தோன்றும் பாலறி கிளவியும்**
**பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்**
**மயங்கல் கூடா தம்மர பினவே. (494)**

வினையின்கண் அமைந்து பாலைச் சுட்டும் இடைச் சொற்களும் பெயரின்கண் அமைந்து பாலைச் சுட்டும் இடைச் சொற்களும் தம்முள் வேறுபட்டு மயங்குதல் கூடா; தத்தமக்கு ஒத்தனவே பொருந்தி வருதல் வேண்டும் என்பது அவற்றின் மரபாகும். பால் அறி கிளவி – பதினோர் ஈறுகள். இவை வினைக்கும் பெயருக்கும் ஒரு தொடரில் அவையவையே வரவேண்டும்; மயங்கி மாறிவரல் கூடாது. அவன் வந்தான், அவள் வந்தாள், அவர் வந்தார், அது வந்தது, அவை வந்தன. அவன் வந்தது, அது வந்தான் என வாரா. பால் வழுவாமை கூறவே, திணை இடம் காலம் மரபு முதலியன யாவும் மயங்குதல் கூடா என்பதும் பெறப்படுமென்பது நச்சினார்க்கினியர் கருத்து. யான் வந்தாய், நீ வந்தேன், நாளைக்கு வந்தேன் என்றெல்லாம் கல்லாதவரும் கூறுவதில்லை. காரணம் இவை இயல்பாக வரும் மரபுகளாகும். அதனால்தான் 'மயங்கல் கூடா' என இலக்கணம் வகுத்தவர், 'தம் மரபினவே' என மாறா இயல்பையும் சுட்டிக் கூறினார்.

### *பேடி என்னும் சொல் ஆண்பால் ஈற்று வினைச்சொல்லுடன் இயைபு படாமை*

**ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி**
**ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே. (495)**

முன்பு கூறியவாறு ஆண்மைத் தன்மையில் திரிந்து, பெண்தன்மை மிக்குப் பெண்மையைச் சுட்டிக் கூறும் சொல் (487) ஆண்பால் குறிக்கும் ஈறுகளையுடைய வினைமுற்றுச் சொற்களால் சேர்த்துக் குறிக்கப்படுவதற்கு இடமில்லை. பேடி வந்தான் என வாராது. பேடி வந்தாள், பேடியர் வந்தார் எனவரும். ஆகு இடன் - ஆகும் இடம், பொருந்துமிடம். இதுவும் பால் இயைபு பற்றிய இலக்கணமே.

### *உரையாடல் பற்றிய இலக்கணம் செப்பும் வினாவும்*

**செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல். (496)**

தனிச் சொற்களைத் திணை, பால் அடிப்படையில் வகைப்படுத்தியவர், இந்நூற்பா முதல் உரையாடல் வாக்கியங்கள் பற்றிக் கூறத் தொடங்குகிறார். ஒருவர் பிறர் கருத்தறிய வினவும் வினாவும் அதற்கு விடைகூறும் செப்பும் ஆகியவற்றை வழுவாமல் போற்றிப் பேசுக. உரையாடலில் ஒருவர் உனக்குப் பசிக்கிறதா என வினவும் போதும் 'ஆமாம், பசிக்கிறது' என்று விடைகூறும் போதும் எப்பிழையும் நேராவண்ணம் போற்றுதல் வேண்டும். வழாஅல் ஓம்பல் - வழுவாமல் காத்தல் வேண்டும். சேனாவரையர் ஒருவரே வினவாமலே ஒருவர்தம் கருத்தை வெளிப்படுத்துவதும் செப்பில் அடங்கும் என்று விளக்குகிறார்.

உரையாசிரியர்கள் வினா வகைகளையும் பலவாறு வகைப்படுத்தி விளக்கி உள்ளனர்.

இளம்பூரணர் வினா ஐந்து வகைப்படும் என்பார்.

1. அறியான் வினாதல்
2. அறிவொப்புக் காண்டல்
3. ஐய மறுத்தல்
4. அவனறிவு தான் கோடல்
5. மெய்யவற்குக் காட்டல்.

செப்பு எனும் விடை ஆறு வகைப்படும் என்பார்.

1. வினா எதிர் வினாதல்
2. ஏவுதல்
3. மறுத்தல்
4. உற்றுதுரைத்தல்
5. உறுவது கூறல்
6. உடம்படுதல்

பிற உரையாசிரியர்கள் மேலும் சில வகை கூட்டுவர். ஒருவர் அறிவில்லாமல் ஏதாவது வினவினால், அதற்கு விடை கூறாது, பேசாதிருத்தலும் (வாய்வாளாமை) ஒரு விடையே என்பார் தெய்வச்சிலையார். பிற்காலத்தில் இதைப் பல்வேறு வகைகளாக விரித்துக் கூறியுள்ளனர். புதியவன் 'சென்னைக்கு வழியாது?' என்றால் அறியான் வினா. 'சென்னைக்குப் போகும் வழி இதுதானே' என்றால் 'அறிவொப்புக் காண்டல்'. 'இன்னும் உறங்க வில்லையா?' என்று கேட்ட நண்பனிடம், 'நீ போ உறங்கு' என்றால், அதை ஏவல் விடை என்றனர்.

மதுரைக்கு வழியாது? என்றால், மல்லிகைப் பூ மணக்கும் என்பது செப்பு வழு; ஒரு விரல் காட்டி நெடிதோ, குறிதோ என்பது வினா வழு. இவ்வாறு ஒவ்வொருவராலும் இவை மிகப் பல வகைகளாக விரித்துரைக்கப்படுகின்றன.

'உலகத்துப் பொருளுணர்த்தும் சொல் எல்லாம் வினாவும் செப்புமாகிய இரண்டின்மேல் அடங்கும்' என்பது இலக்கணம்.

இதிலிருந்து இது உரையாடல் பற்றிய தென்றும் ஒன்றைப் பற்றி ஒருவர் தம் கருத்தைத் தெரிவிப்பதும் இதிலடங்கும் என்பதும் பெறப்படும். கிளவியாக்கம் என்பதை, இக்காலத்திற்கு ஏற்ப, 'உரையாடலும் உரைநடையும்' பற்றிய தென்று கூறலாம்.

*வினாவே விடையாக வருதல்*

**வினாவும் செப்பே வினாஎதிர் வரினே.** (497)

வினாவிற்கு மறுமொழியாய் வரின், வினாவும் தன் கருத்தை வெளிப்படுத்தும் செப்புதலேயாகும். உண்டாயா? என வினவுவார்க்கு, 'நான் என்ன விரதமா?' என எதிர் வினாவாக அல்லாமல் செப்பாகவும் அமைதல் காண்க.

*மறைமுகவிடைகள் வழுவல்ல*

**செப்பே வழீஇயினும் வரைநிலை இன்றே**
**அப்பொருள் புணர்ந்த கிளவி யான.** (498)

செப்பு அல்லது விடை நேர்விடையாகாது வழுவினும் நீக்கும் நிலைமை இன்று. விடைப் பொருளைத் தரும்படியான சொற்களைக் கொண்டு நடக்குமிடத்து அது தவறாகாது. அப்பொருள் புணர்ந்த கிளவியான - விடையாதற்குரிய பொருளை ஏதேனும் ஒருவகையில் குறிப்பாகத் தரும் சொற்கள் அமைந்து கிடக்குமேல். வழீஇயினும் - நேர் விடையாகாது மறைமுகவிடையாய் மயங்கி மாறினாலும். வழுக் காத்தல், வழுவமைதி என்ற இரண்டில், இது வழுவமைதி.

இங்ஙனம் மாறி, மயங்கிவருவன யாவும் ஒரு பயன் நோக்கி ஏற்றுக் கொள்ளப்படும். "பையா!, பள்ளிக்கூடம் போகவில்லையா?" எனக் கேட்டார்க்கு, "காலில் முள் குத்திவிட்டது" என உற்றதுரைத்தலும், 'மழைவரும்போல் இருக்கிறது' என உறுவது கூறலும் அனைய பலவிடைகள் இதிலடங்கும். 'செப்பே' வழுவினும் எனப் பிரிநிலை ஏகாரம் கொடுத்துக் கூறியதால், வினா வழுவுதல் கூடாதென்பதாம்.

### *உறழ்ந்து கூறுவதற்கும் ஒப்பிட்டுப் பேசுவதற்கும் ஒரு நெறிமுறை*

**செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு**
**அப்பொருள் ஆகும் உறழ்துணைப் பொருளே. (499)**

செப்புமிடத்தும் வினவுமிடத்தும் சினையைக் குறிக்கும் சொல்லுக்கும் முதலைக் குறிக்கும் சொல்லுக்கும் அவ்வப்பொருளே உறழ்ந்தும் ஒப்பிட்டும் கூறத்தகும் பொருத்தமுடையதாகும். மாற்றிக் கூறுதல் பிழையாகும். அதாவது சினைச் சொல்லுக்குச் சினைச்சொல் வரும்; முதற் சொல்லுக்கு முதற் சொல்லே வரும். 'இவள் கண்ணினும் இவள் கண் அழகிது' என உறழ்ந்து கூறலாம். 'அப்பொருளாகும்' என்றதால் அவ்வப் பொருளையே உறழ்ந்தும் ஒப்பிட்டும் கூறல் சிறப்பு. 'இவள் கூந்தலினும் அவள் கண் அழகிது' என்பது பொருந்தாது. 'இவனைவிட அவன் வல்லமையுடையவன்' என உறழ்ந்து கூறுவது முதற்பொருள் பற்றியது. 'இவன் தோளினும் அவன் தோள்வலியது' என்பது சினை பற்றியது. 'இவள் நிறம் போலும் அவள் நிறம்' என ஒப்பிடலாம்; 'இவளை விட அவள் நிறம் பொன்போன்றது' என உறழ்ந்து கூறலாம். வினவும் போதும் 'இவள் மேனியழகைவிட, அவள் மேனியழகு சிறந்ததா?' என அவ்வப் பொருளையே உறழ்ந்து வினவ வேண்டும். 'வேங்கை மரத்தைவிடத் தாமரைப் பூ அழகியதா?' என முதலையும் சினையையும் உறழ்ந்து கேட்பதில் பொருட் பொருத்தமில்லை. எனவே ஒப்பிடவும் உறழவும் பொது நீர்மை வேண்டுமென்பது கருத்து.

அக் காலத்தில், பாடம் சொல்லும் போது, கற்பார் கற்பிப்பார் அனைவரும் வினவியும் (கேள்விகேட்டும்), விடைகூறியும் படித்தனராதலால், இவ் இலக்கணம் தோன்றியுளது. ஆயினும் இன்றும் அது உலக வழக்கு நடைமுறையாகவுளது.

### *தகுதியும் வழக்காறும் பற்றிவரும் மாற்றங்கள்*

**தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்**
**பகுதிக் கிளவி வரைநிலை யிலவே. (500)**

முற்கூறியவாறு உறழ்தலும் ஒப்பிடுதலுமாகிய நிலைமைக்கண் தகுதியையும் வழக்கினையும் தழுவினவாய் மாறி நடக்கும் ஒரு பகுதிச் சொற்கள் நீக்கும் நிலைமை உடையனவல்ல. சினைக்குச் சினை, முதலுக்கு முதலென அமையாது மாறிவருவனவும் உளவாதலின், அவற்றுக்கு வழுவமைக்கின்றது இந்நூற்பா. தெய்வச் சிலையார்க்கும் ச. பாலசுந்தரனார்க்கும் இதுவே உடன்பாடு. மதி போலும் முகம் – முதலும் சினையும் ஒப்பிடுதல் தகுதிபற்றியது. மதி முகத்தை ஒக்குமோ என வினவுவதும் அது. 'முகிலினும் கரிய கூந்தல்', என முதலையும் சினையையும் உறழ்வது சான்றோர் வழக்குப் பற்றியது. தகுதியுடையதே சான்றோர் வழக்காதலுமுண்டு. பகுதிக்கிளவி – ஒப்பிடவரும் சினை, முதற்சொற்கள், வரை நிலை இன்று – நீக்கும் நிலைமை இன்று.

இதற்குப் பிற உரையாளர் எல்லாம் தகுதி வழக்கும் இயல்பு வழக்கும் தழுவிவரும் இலக்கணத்தில், பக்கச்சொல் கடியப்படா என உரை கூறியுள்ளனர். பக்கச்சொல்லாவது, உரிய சொல்லால் கூறாது, வேறு சொல்லால் குறிப்பாகச் சொல்வது. தகுதி வழக்கு மங்கலம், இடக்கரடக்கல், குழூஉக்குறி என மூவகைப்படும். ஒன்றை நேரே கூறாமல், மறைமுகமாகத் தகுதியுடைய சொல்லால் கூறுவதிது. செத்தாரைத் துஞ்சினார் என்பதும், காலமாகிவிட்டார் என்பதும் மங்கல வழக்கு. வாய்பூசி வருதும், கால் கழுவி வருதும் என்பன இடக்கரடக்கல். கள்ளைச் 'சொல்விளம்பி' என்பது குழூஉக்குறி. (வாய்பூசுதல் – பல் விளக்கி முகம் கழுவுதல். கள் குடித்தவன் கண்டபடி தானே பேசித்திரிதலால், அது 'சொல் விளம்பி' ஆயிற்று.)

இயல்பு வழக்கும் மூன்றாகக் கூறப்படும்; இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ. நேரே கூறப்படுவன இலக்கணமுடையனவாம்; மண், நீர், காற்று என்பன அவை. இல் முன் என்பதை முன்றில் என்பதும் கண்ணின் மேல் பகுதியை மீகண் என்பதும் இவைபோல்வனவும் இலக்கணப்போலி. சோழநாடு – சோணாடு, வாழ்நாள் – வாணாள், பொதுவில் – பொதியில். இவை மரூஉ வழக்கு. இன்று புதுகை, கோவை, புதுவை என்பனவும் இதிலடங்கும். முற்கூறிய உரையே சூத்திரம் வந்துள்ள இட இயைபுக்கு ஏற்ப அமைகிறது. இது மேலும் ஆராயத்தகும்.

### *இனஞ்சுட்டும் அடைமொழியும் இனஞ்சுட்டா அடைமொழியும் இனஞ்சுட்டா அடைமொழி செய்யுள் வழக்காதல்*

**இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க் கொடை**
**வழக்கா றல்ல செய்யு ளாறே. (501)**

இனத்தைச் சுட்டாத பண்பு அடைகொண்ட பெயர்ச்சொற்கள் உலக வழக்கிலுள்ளனவல்ல; செய்யுள் (இலக்கிய) வழக்கு நெறியாகும். உலகில் பெயரடைகள் யாவும் இயல்பாக இனஞ்சுட்டவே வரும். வெண்தாமரை என்பது செந்தாமரையின் வேறுபட்டதென உணர்த்தவேயாம். பெயர்க்கொடை - பெயர் ஆக்கம். இனச்சுட்டு - வெண்தாமரை எனில் செந்தாமரையைப் பிரிக்கும் இனச்சுட்டு உளது. இனம் இதுவெனப் பிரிக்கும் அடைமொழி. செஞ்ஞாயிறு என்பது செய்யுளில் வரும் இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயராக்கமாகும். ஏனெனில் கருஞாயிறு என வேறொன்றில்லையல்லவா? இவ்வாறு இலக்கிய வழக்கில் ஆளப்படும்.

### *இயற்கைப் பொருளைக் கூறும் முறை*

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் (502)

உலகத்து இயற்கைப் பொருள்களைக் குறிக்குமிடத்து, இத்தன்மைத்து எனக் கூறுக. இயற்கைப் பொருள் - நிலம், நீர், செடி, கொடி. இவை இயல்பாகத் தோன்றுவன. இற்று - இத்தகையது. கிளத்தல் - கிளக்க, கூறுக. நிலம் வலிது, நீர் தண்ணிது; செடி தளர்த்தது.

### *செயற்கைப் பொருளைச் செப்பும் முறை*

**செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல். (503)**

செயற்கையாய் ஆக்கப்படும் பொருள்களை ஆக்கச் சொல்கொடுத்துக் கூறுக. ஆக்கமொடு - ஆக்கச்சொல்லொடு. கூறல் - கூறுக. (இவை அல் ஈற்று வியங்கோள்). நீர் சூடாயிற்று. வழி அகலமானது. இங்ஙனம் ஆக்கச் சொற்கொடுத்துக் கூறுக என்பதாம்.

### *காரணத்தைச் சேர்த்து ஆக்கத்தைக் கூறுதல்*

**ஆக்கந் தானே காரண முதற்றே. (504)**

முற்கூறியவாறு ஆக்கச்சொல் கொடுத்துக் கூறும் பொழுது, அதற்கான காரணத்தையும் முன்வைத்துச் சொல்லுதற்குரியது அது. 'எண்ணெய் தேய்த்துக் குளித்தமையால் கூந்தல் அடர்த்தியானது. இருபுறத்தும் மண்ணைக் கொட்டியதால் வழி அகலமானது.'

### *உலகவழக்கில் காரணமின்றியும் ஆக்கத்தைக் கூறுதல்*

**ஆக்கக்கிளவி காரண மின்றியும்**
**போக்கின்று என்ப வழக்கி னுள்ளே. (505)**

ஆக்கச் சொல்லைக் காரணம் சுட்டாமலும் உலக வழக்கினுள் சொல்லலாம். அதனால் குற்றமில்லை. போக்கு - குற்றம். காரணமின்றிக் கூறினாலும், செயற்கைப் பொருள் அதற்கான காரணம் ஒன்றை உடையதேயாகும். வெளிப்படச் சொல்லாவிட்டாலும் அஃது உள்ளடங்கியிருக்கிறது என்பதாம். ஒப்பனை செய்ததால் முகம் பொலிவானது. முகம் பொலிவானது என்று காரணமின்றியும் கூறலாம்.

### *உயர்திணையில்*
### *பால் தெரியாத நிலையில் பன்மையால் கூறுதல்*

**பால்மயக் குற்ற ஐயக் கிளவி**
**தான்அறி பொருள்வயின் பன்மை கூறல்.** (506)

திணை தெரிந்து பால் இன்னதென அறியாது ஐயம் தோன்றிய ஒன்றைச் சொல்லநேரும் போது, தான் அறிந்த திணைப் பன்மைச் சொல்லால் கூறுக. ஐயக் கிளவி - ஐயத்தை வெளிப்படுத்தும் கூற்று. தான் அறி பொருள் - தான் அறிந்த திணை. உயர்திணை எனத் தெரிந்து, பால் தெரியாதவிடத்து, 'அங்கு நிற்பவர் யார்?' என வினவுவர். 'நாம் இருவர் நமக்கு இருவர்' என்ற குடும்பக்கட்டுப்பாட்டு விளம்பரத்தின்கண் குழந்தை ஆணாபெண்ணா என அறியாத நிலயில், 'ஒருவர்' எனப் பலர்பாலில் வருவது காண்க. தொல்காப்பிய ஆட்சி இன்றுமுளது என்பதற்கு மூதறிஞர் வ.சு.ப.மா. இதை எடுத்துக்காட்டுவார். 'பணத்தைத் திருடியவர் யார்?' இதில் ஒருவரா, பலரா, ஆணா, பெண்ணா என இரண்டு ஐயமும் உள.

### *திணை ஐயமும் அஃறிணைப் பால்ஐயமும்*
### *தோன்றியவிடத்து வினவும் முறை*

**உருவென மொழியினும்அஃறிணைப் பிரிப்பினும்**
**இருவீற்றும் உரித்தே சுட்டுங் காலை.** (507)

திணை ஐயம் தோன்றியவிடத்து உரு (அல்லது பிழம்பு, வடிவு) எனவும் அஃறிணையில் பால் அல்லது பிரிவு பற்றிய ஐயம் தோன்றியவிடத்து 'அது' போன்றதொரு பொதுச் சொல்லாலும் சுட்டிக் கூறுதல் உரியதாகும். அஃறிணைப் பிரிப்பினும் - ஒன்றோ பலவோ என்ற அஃறிணைப் பால் ஐயம்; இதுவோ அதுவோ எனும் ஐயமுமாம். இருவீற்றும் - இரண்டிடத்தும். "அங்கே தோன்றுகிற உருவம் எது?" "அது என்ன ஆளா, கம்பமா?" (அது - அவ்வுரு). செடியைத்தின்றவை எவை? அல்லது எத்தனை இவ்வாறு ஒன்றோ பலவோ எனத் தெரியாதவிட்த்துப் பன்மையில் வினவுவர். கடித்தது பூனையா, எலியா என்று தெரியாத பொழுது 'கடித்தது எது?' என்று பொதுச் சொல்லால் வினவுவதும் அது போன்றதே.

### ஐயம் நீக்கித் துணிந்த பொருளைச் சுட்டிக்கூறும் முறை

**தன்மை சுட்டலும் உரித்தென மொழிப**
**அன்மைக் கிளவி வேறிடத் தான. (508)**

ஐயம் நீக்கி 'அன்மை'க் கிளவியைச் சேர்த்துச் சொல்லும் போது, துணிந்த பொருளுக்கு வேறானவற்றொடு அந்த அன்மைச் சொல்லைச் சேர்த்துச் சொல்லுதலுமுண்டென்பர் புலவர். 'பெண்ணல்லன், ஆண்மகன்' எனல் வேண்டும். 'மகன் அன்று, குற்றி' (கம்பம்) என்று கூற வேண்டும். அன்மைக் கிளவி - அன்று, அல்லன் என்பன. வேறிடத்தான - துணிந்ததற்கு வேறான ஐயுற்ற பொருள். தன்மைசுட்டல் - தெளிந்த பொருளின் தன்மையை உணர்த்தல். 'ஆண்மகன்' எனத் துணிந்ததை மட்டும் சொல்லுவதுமுண்டு.

### அடைமொழித் தொடர்
### வண்ணச் சினைச்சொல்லை வழங்கும் முறைகள்

**அடைசினை முதல்என முறைமூன்றும் மயங்காமை**
**நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல். (509)**

அடைமொழித் தொடர் பற்றிய நூற்பா இது. அடைமொழிகள் அடுக்கி வரும்போது வண்ணம் - பண்பு பற்றியன முதலிலும், உறுப்புப் பற்றியன இரண்டாவதாகவும் உறுப்பையுடைய முதற்பொருள் மூன்றாவதாகவும் இவ்வாறு இவை மூன்றும் முறை மயங்காது வரவேண்டும். அவை வண்ணச் சினைச்சொல் என்று கூறப்படும். அடை - நிறம், பண்பு பற்றிய அடைமொழிகள். சினை - உறுப்பைச் சுட்டும் அடைகள். முதல் - அச்சினையின் முதல், முதற்பொருள். வண்ணச் சினைச் சொல் என்ற தொடரே, அதற்கு எடுத்துக்காட்டுப் போல உளது. செங்கால் நாரை (செம்மை + கால் + நாரை), பெருந்தலைச்சாத்தன் (பெருமை + தலை + சாத்தன்) எனக் காட்டுவர். இன்று 'வெண்தாடி வேந்தர்' என்பதை நினைவு கொள்க.

### உலக வழக்கில் காணப்படும் உயர்வுப் பன்மை
### இலக்கண வழக்கன்று

**ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**வழக்கி னாகிய உயர்சொற் கிளவி;**
**இலக்கண மருங்கின் சொல்லா றல்ல. (510)**

உயர்திணை ஒருவரைப் பன்மையால் சொல்லுதலும் அஃறிணை ஒன்றனையும் அவ்வாறு உயர்வுப் பன்மையால் சொல்லுதலும் உலக வழக்கில்

காணப்படும் உயர்வுபடுத்திக் கூறும் வழக்காறு ஆகும். அவை இலக்கண நெறிப்படி அமைந்த சொல் வழக்காறல்ல. ஆணையும் பெண்ணையும் குறிக்கவேண்டுமென்பதால், பால் மயக்குற்ற ஐயக்கிளவி இச்சூத்திரத்தில் 'ஒருவர்' எனப் பன்மையில் கூறப்பட்டுள்ளமை காண்க. மேலும் 'ஒருவரை' என்ற சொல்லாட்சியே உயர்வுப் பன்மையாக உளது எனலாம். கம்பன் காப்பியம் படைத்தான் என்பதைக் கம்பர் காப்பியம் படைத்தார் என்பதே 'உயர்வுப் பன்மை'யாகும். நரியார் வந்தார், பரியார் தாவினார் என அஃறிணையையும் உயர்வுப் பன்மை கொடுத்து, நகைச்சுவைபட உலகவழக்கிற் கூறுவதுண்டு. இலக்கண மருங்கின் சொல்லாறு – இலக்கணப்படி அமைந்த சொல்வழக்கு. உயர் சொற் கிளவி – மதிப்புப் பன்மைச் சொல், உயர்வுபடுத்தும் சொல்வழக்கு. இலக்கணமன்றாயினும் மரபுவழி வருவதென ஏற்கப்பட்டது.

### *இடம் : ஈறுகளானன்றி முதனிலைகளாலேயே இடமுணர்த்தும் சொற்கள்*

**செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்**
**நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்**
**தன்மை முன்னிலை படர்க்கை என்னும்**
**அம்மூ விடத்தும் உரிய என்ப. (511)**

செல்லுதல், வருதல், தருதல், கொடுத்தல் என்னும் நான்கு பொருளிலும் நிலைபெற வழங்கும் அந் நான்கு சொற்களும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்று இடங்களுக்கும் உரியனவாய் வழங்கும். இது பொது இலக்கணம். ஆயினும் சிறப்பாக மரபுவழி வழங்கும் முறை பின்னர்க் கூறப்படுகிறது. என்னிடம் வந்தான்; அவனிடம் சென்றான். இதைமாற்றிச் சொல்லிப் பாருங்கள். என்னிடம் சென்றான், அவனிடம் வந்தான் என்றால் பொருந்தவில்லையே. சொற்களே விகுதிகள் இன்றி இடத்தை உணர்த்தக் காணலாம்.

### *தருசொல்லும் வருசொல்லும் தன்மை முன்னிலைகளில் வருதல்*

**அவற்றுள்,**
**தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்**
**தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த. (512)**

அவற்றுள் தருதல், வருதலைக் குறிக்கும் இரண்டு சொற்களும் தன்மை முன்னிலைகளுக்குச் சிறப்பாக உரியன; படர்க்கைக்கு அத்துணைப் பொருந்தா

என்பதாம். எனக்குத் தந்தான்; உனக்குத் தந்தான், என்னிடம் வந்தான், உன்னிடம் வந்தான்.

### செல்லுதல், கொடுத்தல் பற்றிய சொற்கள் படர்க்கையில் இடம் பெறுதல்

**ஏனை இரண்டும் ஏனை இடத்த. (513)**

ஏனைய செல்லுதல், கொடுத்தலைக் குறிக்கும் இரண்டு சொற்களும் படர்க்கை இடத்துக்குச் சிறப்பாக உரியனவாகும். முன்னிலைக்கு அத்துணைப் பொருந்தா என்பதாம். அவனுக்குக் கொடுத்தான். அவனுக்குத் தந்தான் என்பதும் பொது இலக்கணப்படி பொருந்துமாயினும், கொடுத்தான் என்பதே சிறப்பாகப் பொருந்துமென்பது, அதன் பொருண்மையால் விளங்குகிறது. அதுபோலவே என்னிடம் வந்தான், உன்னிடம் வருவான் என்றும் அவனிடம் சென்றான் என்றும் கூற வேண்டும். 'அவனிடம் வந்தான்' 'என்னிடம் சென்றான்' – பொருந்தவில்லை. வினைச் சொற்கள் இறுதிநிலையால் இடமும் உணர்த்துவன. எனினும் இவை முதனிலையிலுள்ள பொருண்மையாலேயே இடச்சார்பும் உணர்த்துவதால், விதந்து கூறப்பட்டுள்ளன. இத்தகைய சொல்மரபுகள் தமிழில் பலவுள. அவற்றுக்கெல்லாம் இதை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு இலக்கணம் வகுத்தால், அது நடைமுறைத் தமிழ் இலக்கணமாக அமையும். 'வண்டி வாடகைக்கு வரப்படும்' : ஒரு விளம்பர அறிவிப்பு. இதை 'வண்டி வாடகைக்கு விடப்படும்' என்றுதான் குறிக்க வேண்டும் என்பதை இவ் விதிகள் வழி அறியலாம். வருதல் படர்க்கைக்கு வராது; விடுதல் படர்க்கைக்கு வரும் என்று உணர்கிறோம் அல்லவா?

### அறியாப் பொருளை யாது, எவன் என வினவுதல்

**யாது எவன் என்னும் ஆயிரு கிளவியும்**
**அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும். (514)**

யாது, எவன் (என்னை, என்ன) என்னும் அவ்விரு சொற்களும் அறியாப் பொருளை வினவுதற்கண் பொருத்தமுற வழங்கும். அறியாப் பொருளை வினவுதல், அறிந்த பொருளை வினவுதல் என இருவகைப்படுத்தி, யாது என்பது அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் பயன்படும்; எவன் என்பது அறியாத ஒன்றைப் பற்றி வினவவே பயன்படும் என்று இந்நூற்பாவிலும் அடுத்ததிலும் விளக்கப்படுகின்றன. நும் ஊர் யாது? இதற்குப் பொருள் யாது? இதற்குப் பொருள் எவன்? (இடைக்காலத்தில் 'இதற்குப் பொருள் என்னை' என வினவினர். இன்று

'என்ன? என வினவுகின்றனர்.) 'அங்கு தெரிவது யாது?' என, அறியாப்பொருள் எதுவாயினும் வினவலாம் என்பதே குறிப்பு.

*அறிந்த பொருளையும் யாது என வினவுதல்*

**அவற்றுள்,**
**யாது என வரூஉம் வினாவின் கிளவி**
**அறிந்த பொருள்வயின் ஐயம் தீர்தற்குத்**
**தெரிந்த கிளவி யாதலும் உரித்தே. (515)**

அவற்றுள் யாது என வழங்கும் வினாச்சொல் அறிந்த பொருளிலுள்ள ஐயம் தீர்ப்பதற்கும் பயன்படும் தெளிந்த சொல்லாதலுமுரித்து. தெரிந்த கிளவி - ஐயந்தீர்த்தற்குத் தேர்ந்தெடுத்த சொல். தெளிவு தரும் சொல். 'பரிசுப் பொதிக்குள் இருப்பது யாது?' - அறியாப் பொருள் வினா. 'காசுப் பைக்குள் இருக்கும் சில்லரை யாது?' அறிபொருள்வினா. சில்லரை என்பது தெரிகிறது; என்னை சில்லரை என்பதுதான் தெரியவில்லை. அதைப்போல் 'இம்மரங்களுள் தேக்குமரம் யாது?' என வினவுவதே, அறிந்த பொருள்வயின் ஐயம் தீர்தலாகும்.

*இத்தனை என எண்ணிக்கை அறியப்பட்ட சினை, முதல் சொற்களுக்கு இறுதியில் உம் வருதல் – முற்றும்மை*

**இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு**
**வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும். (516)**

இத்தனை என எண்ணிக்கை அறியப்பட்ட சினையைக் குறிக்கும் சொற்களுக்கும் முதலைக் குறிக்கும் சொற்களுக்கும் வினைச்சொல்லாகிய பயனிலையொடு கூட்டிச் சொல்லுமிடத்து, இறுதியில் 'உம்'மை கொடுத்துச் சொல்ல வேண்டும். இதனை முற்றும்மை என்பர். 'இனைத்து என' என்பது எண்ணிக்கை பற்றியது. வினைப்படு தொகுதி - வினையொடு முடியும் சொற்றொடர். ஐந்து விரலும் சிவந்துள்ளன. மூவேந்தரும் ஆட்சி செய்தனர். கண்ணிரண்டும் துடிக்கின்றன. ஐவிரல், மூவேந்தர் எனத் தனித்துக் கூறலாம். இப்பள்ளியில் படித்த நூறுபேர் தேர்ச்சி பெற்றனர் என்றால் முற்றுப்பெறாது. இப் பள்ளியில் படித்த நூறுபேரும் தேர்ச்சி பெற்றனர் என்றால்தான் நூற்றுக்கு நூறு விழுக்காடு என்பது தெற்றென உணரப்படும். முத்தமிழ்பயில்வோம் என உம்மையின்றி வரினும், அஃது தொக்குநிற்பதாகவே உணரப்படும். சினைக்கிளவி – உறுப்புக்கள் : ஐவிரல், இருகை. முதற்கிளவி முதலைக்குறிப்பன. மூவேந்தர், முத்தமிழ்.

### *இல்லாப் பொருளைச் சொல்லுமிடத்தும் உம் வருதல்*

**மன்னாப் பொருளும் அன்ன இயற்றே. (517)**

முற்றிலும் இல்லாத பொருளைச் சொல்லுமிடத்தும், அவ்வாறு இறுதியில் உம்மை கொடுத்துக் கூறவேண்டும். 'மன்னாப் பொருள் என்பது இல்லாப் பொருள் என்ப' என்று இளம்பூரணர் கூறுவர். எங்கும் மன்னாத (இல்லாத) பொருளாம். 'எங்கு இல்லை' என்று சொன்னால் நிரம்பாது. 'எங்கும் இல்லை' என்று 'உம்' கொடுத்துச் சொல்லவேண்டும். புத்தகத்தை எந்த இடத்திலும் காணவில்லை, பையனை எங்கும் பார்க்கவில்லை, இங்கு யாரும் வரவில்லை.

### *ஒருவணிக உரையாடல் மரபு : 'அல்லது இல்லை' எனும் வாய்பாட்டு விடைமரபு*

**எப்பொரு ளாயினும் அல்லது இல்லெனின்**
**அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல். (518)**

'அல்லது இல்லை' என்பது ஒரு விடை கூறும் வாய்பாடு. எவ்வகைப்பட்ட பொருளாயினும், 'அல்லதில்லை' என்று கூற வேண்டின், வினவப்பட்ட அப் பொருளல்லாத பிறிது பொருளைக் கூறி, அதனொடு சார்த்திக் கூறுக. பிறிது பொருளாவது தன்னிடமுள்ள பொருள். 'காஞ்சிப்பட்டு இருக்கிறதா?' என வினவி வந்தவர்க்கு, 'ஆரணிப்பட்டல்லதில்லை' என்று கூறவேண்டும். 'காஞ்சிப்பட்டு இல்லை' என்று கூறுவது மரபன்று. அது மரபாயின், 'இல்லை, இல்லை' என்று கூறவேண்டி வரும். தன்னிடம் ஒருபொருள் இல்லை என்பதை நேரே சொல்வது வணிகமரபன்று.

### *இருக்கும் பொருளைச் சுட்டிக் கூறுதல்*

**அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல் (519)**

வினவப்பட்டது இருந்து அப் பொருளையே சுட்டி, விடை கூற வேண்டின், குறிப்பிட்டுக் கூறுக. அப்பொருள் – வினவப்பட்ட பொருள். சுட்டிக்கூறல் – சுட்டொடு சேர்த்துக் கூறுக. இப்பயறல்லதில்லை, 'பாசிப் பயுறல்லது இல்லை' என உரையாசிரியர்கள் காட்டுவர். முற்கூறியவாறு 'பட்டு இருக்கிறதா?' என வினவி வந்தார்க்கு, 'இதுதான் உளது' என்று முன் கிடந்ததைச் சுட்டிச் சொல்லலாம்.

### *பொருட் பெயரும் சுட்டுப் பெயரும் அமையும் நெறிமுறை பொருளைச் சொல்லாது சுட்டுப் பெயரில் தொடங்குதல்*

**பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்**
**பொருள்வேறு படாஅது ஒன்றா கும்மே. (520)**

ஒரு பொருளைச் சொல்லி, பின்பு அதைச் சுட்டிச் சொல்ல வேண்டும். பொருளைச் சொல்லாது சொல்லும் சுட்டுப்பெயரேயாயினும் அப் பொருளினின்றும் வேறுபடாது, அதனையே பொருந்தி நிற்கும். பொருளொடு புணராச் சுட்டுப் பெயர்கள் : அது, இது, அவை, இவை, அங்கு, இங்கு என வருவன. ஒரு புத்தகத்தைக் காட்டி இது என்னுடையது என்று கூறலாம். முன் நூற்பாவில் கூறியவாறு முன் கிடந்ததைக் காட்டி 'இது வல்லதில்லை' என்றாலும், அது அப்பொருளைக் குறிக்கு மென்பதாம்.

*இயற்பெயர் முன்னரும் சுட்டுப்பெயர் பின்னரும் வரவேண்டும்*

**இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்**
**வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றின்**
**சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்**
**இயற்பெயர் வழிய என்மனார் புலவர். (520)**

இயற்பெயர்ச்சொல்லும் (முருகன், சாத்தன்), சுட்டுப் பெயர்ச்சொல்லும் (அவன், இவன்), வினைச் சொல்லாகிய பயனிலை கொள்ளுதற்கு ஒருங்கு நடப்பதொரு காலம் தோன்றுமாயின், சுட்டுப் பெயர்ச்சொல்லை முதலில் சொல்லிக் கூறமாட்டார்கள்; இயற் பெயரை முற்படக் கூறியே, அதன் பின்னாகச் சுட்டுப் பெயரைச் சொல்லுவர் என்று நூற்புலவர்கள் கூறுவர். இயற்பெயர் வழிய - இயற்பெயருக்குப் பின்வரும். முருகன் திறமை மிக்கவன்; அவன் வெற்றி பெறுவான்.

*சுட்டுப்பெயரை முதலிற்கூறி, இயற்பெயரைப் பின்பு கூறுதல் செய்யுளில் வரலாம்*

**முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே. (522)**

அங்ஙனமன்றிச் சுட்டுப்பெயரை முன்சொல்லி, இயற்பெயரைப் பிற்படக் கூறுதல் செய்யுளுள் இடம்பெறும். 'அவனெம் இறைவன் அழகமர் மாமுருகன்' எனச் சுட்டுப்பெயர் முன்னும், இயற் பெயர் பின்னுமாகச் செய்யுளில் வரும்.

*அதனால் முதலிய சுட்டுமுதற் காரணக்கிளவிகள் சுட்டுப் பெயர்போல் பிற்பட வரவேண்டும்*

**சுட்டுமுத லாகிய காரணக் கிளவியும்**
**சுட்டுப்பெயர் இயற்கையின் செறியத் தோன்றும். (523)**

சுட்டெழுத்தை முதலாகவுடைய காரணக் கிளவி, முன்னே கூறிய சுட்டுப்பெயர்களின் இயல்புபோல, சுட்டப்படும் பொருளுக்குப் பின்னே பொருந்தி

வரும். சுட்டு முதலாகிய - சுட்டெழுத்தை முதலில் உடைய. காரணக் கிளவி- காரணத்தைக் குறிக்கும் சொல் (அதனான், இதனான் என்றாற்போல்வன). செறியத் தோன்றும் – பொருந்தி வரும். கண்ணப்பன் கையெழுத்துத் தெளிவாக இருக்கும்; அதனால் வேலை கிடைத்தது. அவன் படிப்பில் திறமை மிக்கவன்; அதனால் உதவித் தொகை கிடைத்தது. அதனான் என்பது இன்று அதனால் என வழங்குகின்றமை அறிந்ததே.

### *சிறப்புப் பெயர் இயற்பெயருக்கு முன்னர் வர வேண்டும்*

**சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்**
**இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார். (524)**

சிறப்பினால் ஒருவற்கு எய்திய பெயர்ச்சொல்லுக்கும் முற்பட இயற்பெயர்ச் சொல்லையமைத்துக் கூற மாட்டார். சிறப்புப் பெயருக்குப் பிற்படவே இயற்பெயரை அமைத்துக் கூறுவர். சிறப்பினாகிய பெயர் நிலைக் கிளவி – அரசாற் பெறும் படடப் பெயர்கள், கல்வியால் பெறும் பட்டப் பெயர்கள் போல்வன. கணக்காயர் ச. சோமசுந்தர பாரதியார், முனைவர் மு.வரதராசனார். முன்பு எட்டி சாயலன், மருத்துவன் தாமோதரன் என வழங்கின.

### *ஒரு பொருளுக்குப் பல பெயர்கள் வரும்போது ஒரு வினை முடிபே வரவேண்டும்*

**ஒரு பொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி**
**தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே. (525)**

ஒரே பொருளைக் குறிக்கும் வேறு வேறு பெயர்ச் சொற்கள் வரிசைப்பட வருமாயின், அவை ஒவ்வொன்றற்கும் வேறுவேறு வினைமுடிபு கொடுத்துக் கூறினால், அவை ஒன்றனுக்கே எனப் பொருந்தா. எனவே ஒரே வினைமுடிபு கொடுக்க வேண்டும். ஆசிரியன் பேரூர் கிழான் சாத்தன் வந்தான். புலவர் குழு நிறுவனர், மூதறிஞர், முத்தமிழ்க் காவலர் விசுவநாதம் தலைமை தாங்கினார். புலவர் குழுநிறுவனர் வந்தார்; முத்தமிழ்க் காவலர் பேசினார் என்றால் வேறுவேறு மனிதரைக் குறிப்பதாகும். முத்தமிழ்க் காவலரே வருக, மூதறிஞரே வருக, முயற்சியின் திருவுருவே வருக - இவ்வாறு வினை முடிபு ஒரு தன்மைத்தாயவழியும் ஒருவரைச் சுட்டும்.

### *தன்மைச் சொல்லுடன் அஃறிணைப் பெயர்களை எண்ணி முடிக்கலாம்*

**தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவிஎன்று**
**எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார். (526)**

உயர்திணை ஒருவர் தன்மைச் சொல்லுடன் அஃறிணைப் பெயர்களை எண்ணிக் கூறுமிடத்து அச்சொற்கள் விரவிவருதலை நீக்கமாட்டார்கள். எண்ணுவழி - எண்ணிக் கூறுமிடத்தில். யானும் என் குதிரையும் வருவோம். நானும் புத்தகமும் நட்புடையோம்.

### *எண்*
### *ஒருவன் ஒருத்தி என்னும் பொதுப்பிரி பாற்சொல் ஒருமைக்கு மட்டுமே வரும்*

**ஒருமை எண்ணின் பொதுப்பிரி பாற்சொல்**
**ஒருமைக் கல்லது எண்ணுமுறை நில்லாது. (527)**

உயர்திணையில் பாற்பொதுமைப்பட ஒருமையைச் சுட்டிக் கூறும் 'ஒருவர்' எனும்சொல் பிரிந்து ஆண், பெண்ணைக் குறிக்கும் சொல்லாக ஆகுமிடத்து, ஒருவன் ஒருத்தி என ஒருமைக்கு மட்டுமே வரும். அஃதல்லாது இருவர், மூவர் என்னும் எண்ணுமுறைக்கண் அங்ஙனம் பொருந்தி நில்லா (இருவன், இருத்தி எனவாரா என்பதாம்). பொது - ஒருவர் எனும் பாற் பொதுச்சொல். பொதுப் பிரி பாற்சொல் - ஒருவன், ஒருத்தி என அப் பொதுமையைப் பிரித்துச் சுட்டும் பாற்சொற்கள். எண்ணு முறை நில்லா - இருவன், இருத்தி; மூவன், மூத்தி என்றெல்லாம் வாரா. எனவே ஒருவர், இருவர், மூவர் எனப் பாற்பொதுவாய் மட்டும் அமையும் என்பது பெறப்படும்.

### *திணை விரவி வியங்கோளில் முடிக்கலாம்*

**வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு வரையார். (528)**

வியங்கோள் வினைமுடிபு கொள்ளும், எண்ணிக்கை முறையில் கூறப்படும் பெயர்கள் திணை விரவி வருவதலை நீக்கமாட்டார்கள். ஆவும் ஆயனும் வருக. நாமும் நம் நாடும் உயர்க. தமிழும் தமிழரும் வெல்க.

### *பொதுப்பெயர் ஒன்றைச் சிறப்பு வினையால் முடிக்கக் கூடாது*

**வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை கிளவார். (529)**

வேறுபட்ட வினையையுடைய பொருள்கட்குப் பொதுவாகி வரும் சொல்லை, அவற்றில் ஒன்றற்குரிய சிறப்பு வினையால் கிளந்து கூறமாட்டார்கள். எனவே பொதுவினையால் கூறுக என்பதாம். தின்னுவன, பருகுவன, உரிஞ்சுவன என உண்பன பலவகைப்படும். அவற்றிற்குப் பொதுச் சொல் அடிசில், உணவு,

சாப்பாடு. அடிசில் உண்டார் அல்லது அயின்றார் எனல்வேண்டும். அடிசில் பருகினார், உணவைக் குடித்தார் என்று ஒன்றற்கேயுரிய சிறப்புவினையால் கூறக்கூடாது.

*சிறப்புவினைக்குரிய பெயர்களை எண்ணும்போது பொதுவினையாலேயே முடிக்க வேண்டும்*

**எண்ணுங் காலும் அதுஅதன் மரபே. (530)**

வேறுவேறு வினையையுடைய சொற்களை எண்ணிக்கைப் படுத்திச் சொல்லும்போதும், அவ்வாறு பொதுவினையாற் சொல்லுவதே மரபாகும். அது - பொதுவினையால் முடிப்பது. யாழும் குழலும் பறையும் இயம்பினார். தனித்தனியே கூறினால் யாழ் மீட்டினார்; குழல் ஊதினார்; பறை அறைந்தார் எனல் வேண்டும். கறியும் சோறும் பானமும் பாயசமும் உண்டார்.

*இரட்டைக்கிளவிகள் தனித்தனி பிரித்தால் பொருள்தரா*

**இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந் திசையா. (531)**

இரட்டித்துச் சொல்லும் சொற்கள் அவ் விரட்டுதலிற் பிரிந்து தனித்து வழங்கா. இசையா - வழங்கா, சொல்லப்படா. கலகல, மடமட என அடுக்கியே வரும். சுறுசுறுப்பு - சுறு அல்லது சுறுப்பு எனில் அமையாது. அகடவிகடம், வாட்ட சாட்டம் என இவ்வாறு இரட்டித்தே வழங்குவனவற்றையும் இதில் அடக்கலாம்.

*ஒரு பெயர்ப் பொதுச்சொற்கள் தலைமையும் பன்மையும் பற்றியன*

**ஒரு பெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்**
**தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்**
**உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும். (532)**

உயர்திணையிலும் அஃறிணையிலும் ஒரு பெயர்ப்பட நின்ற பொதுச்சொற்களை, ஆண்டுள்ள பொருள்கள் பலவாயினும் அவற்றையெல்லாம் நீக்கித் தலைமை பற்றியும் பன்மை பற்றியும் தெரிந்தெடுத்துச் சொல்லுக. ஒரு பெயர்ப் பொதுச்சொல் - வாழைத் தோட்டம், புலவர் அவை என்பன போல்வன. உள் பொருள் - ஆண்டுள்ள பிற மரம், செடி, கொடிகள் அல்லது அவ் அவையிலுள்ள பிறர். வெற்றிலைக் கொடியுமிருப்பினும் வாழை மிகுதியாக இருத்தலால் வாழைத் தோட்டம் என்பதும் பிறரும் வாழினும் 'ஆசிரியர் குடியிருப்பு' என்பதும் தலைமையும் பன்மையும் பற்றியன.

*பெயரானும் வினையாலும் பாலறியப்படும் சொற்கள்*

**பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம்**
**மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன. (533)**

உயர்திணையிலும் அஃறிணையிலுமாகப் பெயரினாலும் தொழிலினாலும் பிரிந்து பொருள் தரும் சொற்கள் எல்லாம் வழக்குவழிப் பட்டனவாதலின் அதன்படி விளங்கிக் கொள்ளப்படும். அவை மயங்கி உணரப்படுதல் கூடா. மயங்கல் கூடா – அறிந்து போற்றுவார்க்கு மயங்குதல் ஆகாது. சிலம்பணிந்தார், கழலணிந்தார் என்பன பெயரினாலேயே முறையே மகளிரையும் ஆடவரையும் குறித்தன. ஆயிரவர் போரிட்டார் – பெண்ணொழி பொதுச் சொல். பெருந்தேவி பிள்ளை பெறுங்கால் நால்வர் துணையிருந்தார் – ஆணொழி பொதுச்சொல்.

*உயர்திணை, அஃறிணைப் பெயர்களை விரவி*
*எண்ணும் போது, செய்யுளுள் அஃறிணை முடிபேற்றல்*

**பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்**
**அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே. (534)**

உயர்திணைப் பெயரையும் அஃறிணைப் பெயரையும் சேர்த்துத் திணை விரவி எண்ணப்படும் பெயர்கள், செய்யுளுள் வரும்போது பெரிதும் அஃறிணை முடிபுகொள்ளும். வடுகர் அருவாளர் வான்கரு நாடர், சுடுகாடு பேய் எருமை என்றிவை ஆறும் குறுகார் அறிவுடையார், 'என்றிவர்' என்னாது 'இவை' என முடிக்கப் பட்டுள்ளது. 'பலவயினானும்' எனவே சில இடங்களில் உயர்திணை முடிபும் கொள்ளும் என்பதாம். 'பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர், மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டு' (சிலம்பு – வஞ்சினமாலை) எனத் திணைவிரவி எண்ணி உயர்திணையில் முடிக்கப்பட்டுள்ளது.

*வினையால் வேறுபாடறியப்படும் பலபொருளொரு சொல்*

**வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்**
**வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல் என்று**
**ஆயிரு வகைய பலபொரு ளொருசொல். (535)**

பலபொருள் ஒரு சொற்கள் வினையால் வேறுபாடறியப் படுவனவும் வினையால் வேறுபாடறியப்படாதனவுமென அவ்விரு வகையினவாகும். கொடி படர்ந்தது; கொடி பறந்தது. முன்னது செடி கொடி சார்ந்தது; பின்னது நாட்டுக்கொடியைக் குறிக்கும். இது வினை வேறுபடும் பல பொருளொரு சொல்.

அதாவது படர்ந்தது என்ற வினைச் சொல்லால் படர்கொடியையும் பறந்தது என்ற வினைச்சொல்லால் தேர்க்கொடி என்பதையும் வேறுபடுத்தி அறிகிறோம். 'மா வீழ்ந்தது' என்றால் மாமரம் வீழ்ந்ததெனவும் விலங்கு வீழ்ந்தது எனவும் இருவகைப்படவும் உணர நிற்றலால், இது வினை வேறுபடாப் பலபொருள் ஒரு சொல் எனப்படும்.

### *பலபொருள் ஒருசொல் வினை, இனம், சார்பால் வேறுபாடறியப்படுதல்*

**அவற்றுள்,**
**வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்**
**வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்**
**தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே. (536)**

அவற்றுள் வினையால் வேறுபடும் பலபொருளொரு சொல் அவ்வப் பொருளை அறிய உதவும் வேறுபாடுடைய வினைச்சொல்லாலும் இனத்தாலும் சார்பாலும் இப்பொருள் இதுவெனத் தெளிவாகப் புலப்படும். பொருள் தெரிநிலை - இப்பொருள் இதுவெனத் தெரிந்து கொள்ளுதல். தேறத் தோன்றும் - தெளிவுபடப் புலப்படும். மா துள்ளிப் பாய்ந்தது - வினையால் விலங்கெனப் புலப்பட்டது. மாவும் கொய்யாவும் வேம்பும் உள்ளன - இனத்தால் மரமென உணரப்பட்டது. போர்க்களத்திற்கு மாவைக் கொணர்க என்றார் - சார்பால் குதிரை என்பறியப்பட்டது.

### *ஒரே வினைச்சொல்லாயினும் பொருந்தும் பொருள் இடம் நோக்கி அறியப்படும்*

**ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும். (537)**

ஒரே வினைச்சொல்லாயினும் இடம் நோக்கிப் பொருந்தும் பொருள் அறியப்படும். மா என்பதனுடன் வீழ்ந்தது என்ற ஒரேவினை சேர, மாமரம் வீழ்ந்தது எனவும் மா - விலங்கு அடிபட்டு வீழ்ந்ததெனவும் அத்தொடர் கூறப்பட்ட இடம் நோக்கிப் பொருளறியப்படும். ஒன்று வினை - இருபொருள் தரும் ஒரே வினை. ஒன்றி - இடத்தொடு பொருந்தி.

### *வினையால் வேறுபாடு காட்டவியலாவிடத்து இன்னதெனக் கிளந்து சொல்லுதல்*

**வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல்**
**நினையுங் காலைக் கிளந்தாங் கியலும். (538)**

வினையால் வேறுபடாத பலபொருள் ஒருசொல், ஆராயுங்காலத்து, இயல்பாக இன்னதெனக் கிளந்து சொல்லப்படும். கிளந்து – இன்னதெனச் சுட்டிச் சொல்லி. முல்லைக்கொடி அசைந்தது; போர்க்கொடி அசைந்தது. இன்ன கொடி என்று விதந்து சொல்லப்பட்டவாறு அறிக. பரிமா பாய்ந்தது, அரிமா பாய்ந்தது என விதந்து சொல்லிவிடில் ஐயமேற்படாது.

*சொல்வோன் தன் கருத்தை வெளிப்படச் சொல்க*

**குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி. (539)**

தான் ஒரு பொருளைச் சொல்லக் கருதியவன் தன் கூற்றினை இன்னதென்று தெரிவிக்கும் சொற்களால் விளங்கச் சொல்க. தெரித்துமொழி – விளங்கத் தெரிவிக்கும் சொற்கள. கூற்றம் – கூற்று, கிளவி – சொல். கன்று என்பது ஆன்கன்று, மாங்கன்று இரண்டையும் குறிக்குமாதலின், கன்று எனப் பொதுப்படக் கூறக்கூடாது. 'ஆன்கன்றை நீர் ஊட்டி வளர்க்க' எனவும், 'மாங்கன்றை நீர்பாய்ச்சி வளர்க்க' எனவும் விளங்கத் தெரிவிக்கும் மொழிகளில் கூறுக என்பதாம்.

*திணைக்குப் புறனடை*

*உயர்திணைப் பாங்குடைய பெயர்கள் அஃறிணை போல் முடிவு பெறுதல்*

**குடிமை ஆண்மை இளமை மூப்பே**
**அடிமை வன்மை விருந்தே குழுவே**
**பெண்மை அரசே மகவே குழவி**
**தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி**
**காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொல் என்று**
**ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ**
**அன்ன பிறவும் அவற்றொடு சிவணி**
**முன்னத்தின் உணரும் கிளவி எல்லாம்**
**உயர்திணை மருங்கின் நிலையின வாயினும்**
**அஃறிணை மருங்கின் கிளந்தாங் கியலும். (540)**

குடிமை, ஆண்மை, இளமை, மூப்பு, அடிமை, வன்மை, விருந்து, குழு, பெண்மை, அரசு, மகவு, குழவி, ஆண்மைதிரிந்த பெயர் (அலி), உறுப்பின் வழிப்பட்ட பெயர் (செவிடு), காதல் சிறப்பு சினம் வெற்றியைக் குறிக்கும் சொற்கள் என இவை பதினெட்டும் உட்படக் கொண்டு, இவை போல்வன பிறவும் இவற்றொடு

பொருந்தி, குறிப்பினால் உயர்திணையை உணர்த்துவன என்றறியும் இவை எல்லாம் உயர்திணைப் பக்கம் பொருள் சார்ந்து அமைந்தனவெனினும் அஃறிணையாகவே உலகில் பேசப்பட்டு வழங்கும். இவை பல பண்புப் பெயர்களாயும் பிறவாறும் அஃறிணைச் சொல்வடிவினவாதலின் அஃறிணை முடிபேற்கும் எனத் தெளிவுபடுத்தியவாறாயிற்று. காதற்சொல், சிறப்புச் சொல், செறற்சொல், விறற்சொல் என்பன முறையே அன்பு, சிறப்பு, சினம், வெற்றி ஆகியவற்றால் உயர்திணையை அஃறிணை போல் கூறுவன. ஆண்மை வென்றது. அரசு நீதி வழங்கியது. அடிமை தோற்றது. விருந்து வந்துளது. குழு பொறுப்பேற்றது. என்பாவை வந்தது எனக் காதலால் பெண்மகவைக் குறிப்பதுண்டு. மூடம் வந்ததா? (செறற்சொல்). செவிடு பொல்லாதது.

*பாலுக்குப் புறனடை*

*தெய்வப் பெயர்கள் முதலியன அஃறிணை முடிவு பெறுதல்*

**காலம் உலகம் உயிரே உடம்பே**
**பால்வரை தெய்வம் வினையே பூதம்**
**ஞாயிறு திங்கள் சொல் என வரூஉம்**
**ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன**
**ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்**
**பால்பிரிந் திசையா உயர்திணை மேன. (541)**

காலம் உலகம் உயிர் உடம்பு ஊழ்த்தெய்வம் வினை பூதம் ஞாயிறு திங்கள் சொல் ஆகிய பத்துடன் அவை போல்வன பிறவுமாக, தெய்வ நிலையுடையவற்றைக் குறிக்கவரும் சொற்கள் எல்லாம் உயர்திணைக்கண் பால்பிரிந்து கூறப்பட மாட்டா; அஃறிணையாக அமைந்து முடியும். அவர் காலமானார் என்பதை அவரைக் காலம் கவர்ந்தது என்பர். பால் வரை தெய்வம் – ஊழாய் நின்று வாழ்வை வரையறைப்படுத்தும் தெய்வம். சொல் – நாமகள். முன்பு 'தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக் கிளவி... உயர்திணை மருங்கின், பால்பிரிந்திசைக்கும்' (487) என்றதற்குப் புறனடையாக, அஃறிணையாகச் சொல்லப்படும் நெறிமுறையை இங்கு எடுத்துக்காட்டியுள்ளார், தொல்காப்பியர். மாரி காத்தது. ஊழ் வந்து உருத்தது. உயிர் பிரிந்தது. ஞாயிறு எழுந்தது.

*காலம், உலகம் முதலியவை அவ்வாறே நின்று உயர்திணை முடிவு பெறா*

**நின்றாங்கு இசைத்தல் இவண்இயல் பின்றே. (542)**

ஈறு திரியாமல் நின்று, உயர்திணையாய்ச் சொல்லப்படுதல் இங்கு கூறப்பட்ட காலம் உலகம் முதலிய சொற்களுக்கு இயல்பன்று. எனவே குடிமை, ஆண்மை முதலியவாய் முற்சூத்திரத்தில் கூறப்பட்டவற்றிற்கு இவ்வியல்புண்டு என்பதாம். குடிமை நல்லன், என் பாவை வந்தாள் எனவும் கூறலாம் என்பதாம். இங்கு காலன் கவர்ந்தான் என, ஈறு திரிந்து நின்றே உயர்திணையாய்ச் சொல்லப்படும். காலம் கவர்ந்தான் என ஈறுதிரியாமல் உயர்திணை முடிபு ஏலாது. அடுத்துவரும் நூற்பா காண்க.

***காலம், உலகம் முதலியவை ஈறுதிரிந்து உயர்திணை முடிவு பெறும்***

**இசைத்தலும் உரிய வேறிடத்தான. (543)**

இங்குக் கூறிய காலம், உலகம் என்னும் சொற்கள், ஈறு திரிந்து வேறுபட்டவிடத்து, இவை உயர்திணையாய்ச் சொல்லப்படுதலும் உண்டு. வேறு இடத்தான – ஈறு திரிந்து நின்ற இடத்தில். உலகம் பசித்தது – உலகோர் பசித்தனர். உடம்பார் அழிவராயின் உயிரார் அழிவர். உலகோர், உடம்பார், உயிரார் என ஈறு திரிந்தவிடத்து உயர்திணை முடிவு பெற்றன.

***விதந்து கூறப்படும் சொற்கள் இனமாகிய பிற***
***கருத்துக்களையும் குறிப்பாலுணர்த்தும்***

**எடுத்த மொழிஇனஞ் செப்பலும் உரித்தே. (544)**

விதந்து கூறிய சொற்கள், தமக்கு இனமாகிய பிற கருத்துக்களையும் உணர்த்தும். எடுத்த மொழி – விதந்து கூறிய சொற்கள். 'கையில் அழைப்பிதழ் உள்ளவர்கள் மட்டும் மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படுவர்', பிறர் அனுமதிக்கப்பட மாட்டார் என்பது இனம் செப்புதலாகும். 'தமிழ் வாழ்க' எனில் பிறமொழி வீழ்க என்பது கருத்தன்று. அஃது இனம் செப்பாது. அதனால்தான் 'செப்பலும் உரித்தே' என்றார். செப்பாமையும் உண்டு என்றவாறு. பிறவாறு இனப் பொருளைச் சுட்டுவனவும் உள எனக் காட்டுவர். 'வண்டி பள்ளத்துள் கவிழ்ந்தது' என்ற வழி, வண்டியிலிருந்தாரும் கவிழ்ந்தமை சொல்லாமலே பெறப்படும். சோறுண்டேன் என்றால் துணைக்கறிகள் உண்டாமையும் உணரப்படும். 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி' என்றால், 'மகள் தந்தைக்கு ஆற்றும் உதவி' என்பதும் பெறப்படும்.

*பன்மைக்குரிய உறுப்புச் சொற்கள் சாதி ஒருமையாய் அமைதல்*

**கண்ணும் தோளும் முலையும் பிறவும்**
**பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி**
**பன்மை கூறும் கடப்பா டிலவே**
**தம்வினைக் கியலும் எழுத்தலங் கடையே. (545)**

கண், தோள், முலை என்பனவும் இவை போல்வனவும் பன்மைப் பாலுக்குரிய உறுப்புப் பெயர்களாகும். ஆயினும் இவை தமது பன்மைக்கேற்ற வினையொடு முடியும் எழுத்துப் பெறாவிடத்து, பன்மையாகக் கூறும் கடப்பாடுடையனவல்ல. கண் வலித்தது, தோள் உயர்ந்தது, கால் கடுத்தது என்று கூறினாலே போதும். தமக்குரிய பன்மை வினையாற் கூறும் ஈற்றெழுத்தைப் பெறாவிடத்து, இவ்வுறுப்புப் பெயர்களைப் பன்மையால் கூறியாக வேண்டும் என்னும் யாப்புறவில்லை என்பதாம்.

கண் வலித்தன, தோள் தண்ணிய என்னும் போது, பன்மை வினையாற்கூறும் ஈற்றெழுத்தைப் பெற்று அவை பன்மையையும் உணர்த்துகின்றன. தம் வினைக்கு இயலும் எழுத்து – பன்மைக்குரிய வினை இறுதி எழுத்து. அங்ஙனம் கூற வேண்டுமென்ற கட்டாயமில்லை. இவை சாதி ஒருமையாய், இயல்பாகவே பன்மையைத்தான் சுட்டும். கண்ணிரண்டும் அழுதன, காதிரண்டும் நொந்தன, ஐவிரலும் துடித்தன எனப் பன்மையாற்கூறிப் பன்மைவினை முடிபு தருதலும் உண்டு. உலக வழக்குப்படி தோள்கள் துடித்தன எனப் பன்மை வினை முடிபுக்கு ஏற்பக் 'கள்' விகுதி பெறும் எனக் கூறவும் நூற்பா இடந்தருகிறது.

## உ. வேற்றுமை இயல்

தொல்காப்பியர் வேற்றுமைத் தொடர்களின் இலக்கணத்தை இவ்வியலில் தொடங்குகிறார். பெயர்ப் பொருளை வேறுபடுத்தும் இடைச்சொற்களாகிய உருபுகளையே அவர் வேற்றுமை என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். "ஒரு பொருளை ஒருகால் வினை முதலாக்கியும் ஒருகாற் செயப்படு பொருளாக்கியும் ஒருகால் கருவியாக்கியும் ஒருகால் ஏற்பதாக்கியும் ஒருகால் நீங்க நிற்ப தாக்கியும் ஒருகால் உடையதாக்கியும் ஒருகால் இடமாக்கியும் இவ்வாறு தம்மை ஏற்ற பெயர்ப் பொருளை வேறுபடுத்தினமையால் வேற்றுமை எனப் பட்டன" என்றும் "மேல் கிளவியாக்கத்தால் அல்வழித்தொடர் கூறி இனி வேற்றுமைத் தொடர் கூறுகிறா"ரென்றும் தெய்வச்சிலையார் கூறுவன அறியத்தக்கன.

பெயர்ப்பொருளை வேறுபடுத்தித்தருவன வினைமுடிபுகளாகிய கொண்டு முடிக்கும் சொற்களாகும். பெயருடன் ஒட்டிநின்று, அதன் பொருளை வேறுபடுத்தும் உருபுகளே, அவ்வேலையைச் செய்வதால், அவற்றின் இன்றியமையாமை உணர்தற்குரியது. பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என வேற்றுமை எட்டாகும். இவை அவ்வப்பெயராலேயே ஐ வேற்றுமை, ஒடுவேற்றுமை என அழைக்கப்படும். முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை எனவும் எண்ணிக்கை முறையில் அழைக்கப்பட்டு, அது பிற்பாடு பெருவழக்காகிவிட்டது. இவ்வியலில் எழுவாய் வேற்றுமை முதலாக ஏழாம் வேற்றுமை ஈறாகவுள்ள ஏழு வேற்றுமைகளின் உருபும் உருபுநிற்குமிடமும் பொருளும் அப்பொருளின் வகைகளும் ஆகியவை முறையே விரித்துரைக்கப்படுகின்றன. பெயர்க்குரிய இலக்கணமாகப் பயனிலை கோடலும் உருபேற்றலும் காலந் தோன்றாமையும் கூறப்படுகின்றன.

வேற்றுமைகள் மிகப் பலவாகும். எழுவாயாக நிற்றல், செயப்படு பொருளாக நிற்றல், கருவியாக விளங்குதல், ஏற்றுக் கொள்வதாகவும் நீங்கி நிற்பதாகவும் திகழ்தல், கிழமை எனப்படும் உடைமையும் உரிமையுமாதல், நிகழிடமாதல், விளி ஏற்றல் என இவ்வாறு எட்டு அடிப்படை வேற்றுமைகளையே வரன்முறைப் படுத்த முடிகிறது. தொல்காப்பியர் உள்-வகைகளாக விரிப்பனபோல எத்தனை யெத்தனை விதமாகவோ பெயர்ப் பொருளைத் தொடரின்கண் வைத்து வேறுபடுத்தி உணரலாம். அவற்றிற்கான அடிப்படைகளும் முன்னுதாரணங் களுமே இலக்கணமாகத் தரப்படுகின்றன என அறிதல் வேண்டும்.

## இயல் கருத்து நிரல்

### வேற்றுமை வகைகள்

வேற்றுமை ஏழு வகைப்படும்.

விளிகொள்ளும் பெயரின்கண்ணுள்ள விளிவேற்றுமையுடன் கூட்ட எட்டாகும்.

அவை பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என்னும் பெயரையும் முறையையும் உடையன.

### முதல் வேற்றுமை – பெயர் வேற்றுமை

பெயர் தோன்றிநிற்கும் நிலையே எழுவாய் வேற்றுமையாம். (தனி உருபு இல்லை).

பெயர் வேற்றுமை பயனிலை கொண்டு முடியும். அப்பெயர்ப் பயனிலைகள் பொருள் உள்ளதெனச் சுட்டுதல், ஏவுதற் பொருள் கொள்ளுதல், செயலிதுவெனல், வினவுதல், பண்புணர்த்தல், பிறிதொரு பெயரைப் பயனிலையாகக் கொள்ளுதல் என்ற ஆறும் அவை போல்வன பிறவும் ஆம். கண்ணன் வந்தான், கண்ணன் எங்கே?, முருகன் அழகன்.

பெயர் பல தொடர்ந்து ஒரு தொகையாய் நிற்பனவும் உள; அவையும் எழுவாயாக நின்று முற்கூறிய பயனிலை கொண்டு முடியும். நிலாமதி நங்கை வந்தாள்.

தன்மை முன்னிலை படர்க்கை முதலிய எவ்விடப் பெயராயினும் வெளிப்படத் தோன்றி நின்று, முற்கூறியவாறு பயனிலைகொண்டு முடிதல் சிறப்புடையதாகும். (அங்ஙனம் வெளிப்படத் தோன்றாது நிற்கும் தோன்றா எழுவாயுமுள, அவை அத்துணைச் செவ்வி உடையன அல்ல என உணர்த்தியவாறு.) 'நடந்து வா!' இதில் 'நீ' – என்பது தோன்றா எழுவாய்.

### பெயரும் உருபுகளும்

முற்கூறியாங்கு (சூ. 113, 116) உருபுகள் நிலைதிரியாமல் பெயருக்குப்பின் இறுதியில் ஒட்டிநிற்கும். நூலைப்படி, (நூல் + ஐ)

பெயரும் பெயர்த்தன்மையுடையனவுமான சொற்கள் காலங்கட்டா, வினையாலணையும் பெயர்களாகிய ஒரு பகுதியினமட்டும் காலங்காட்டும்.

**இரண்டாம் வேற்றுமை - ஐவேற்றுமை**

ஐ வேற்றுமை எனப்படும் இரண்டாம் வேற்றுமை தெரி நிலைவினை குறிப்பு வினை என்னும் இரண்டினடிப்படையில் செயப்படுபொருளைப் பெற்றுத் தோன்றும்.

அவ்விருவகை வினையும் காப்பு முதலாக சிதைப்பு ஈறாகக் கூறப்பட்ட இருபத்து எட்டும் அவை போல்வன பிறவுமாகிய அனைத்தின் அடிப்படையில் அமைவனவாம். காத்தல், ஒப்புமை கூறுதல், ஊர்தல் (தேர்ஊர்தல்), இழைத்தல் (செய்தல்), ஓப்புதல் (விரட்டுதல்), புகழ்தல், பழித்தல், பெறுதல், இழத்தல், காதலித்தல், வெகுளுதல், செறுதல் (பகைத்தல்), மகிழ்தல், கற்றல், அறுத்தல், குறைத்தல், தொகுத்தல், பிரித்தல், நிறுத்தலளவை, முகத்தலளவை, எண்ணலளவை, ஆக்குதல், சார்தல், செல்லுதல், கன்றல் (அடிப்படப் பழகி அதிலேயே மூழ்குதல்), நோக்குதல், அஞ்சுதல், சிதைத்தல் என்பன இருபத்து எட்டு. இவை முன்மாதிரியே. இவை போல்வனவாகிய யாவும் இதனுளடங்கும். மொழியைக் காப்போம். ஊழலை ஒழிப்போம்.

**மூன்றாம் வேற்றுமை - ஒடு வேற்றுமை**

ஒடு வேற்றுமை எனப்படும் மூன்றாம் வேற்றுமை ஏவுதற் கருத்தாவாகிய வினைமுதலும் கருவியுமாகிய அவ்விரண்டினடிப்படையில் தோன்றும்.

கருவிப் பொருட்டாகிய மூன்றாம் வேற்றுமை அதனின் இயறல் முதலாக இன், ஆன் ஈறாக வரும் பதினொரு உட்பிரிவுகளும் அவை போல்வன பிறவுமாகிய அவற்றினடிப்படையில் தோன்றும். அதனால் அதுவாதல், அதற்கது தக்கது, அதன் வினைக்கு ஆட்படுதல், அதனால் ஆதல், அதனாற் கோடல், அதனொடு கலத்தல், ஒன்றொடு ஒன்றியமைந்த ஒருவினைக் கிளவி (உடனிகழ்ச்சி), ஒன்றொடு ஒன்று இயைந்து வேறுவினை கோடல், ஒன்றொடு ஒன்று ஒப்பல்லாதன இணைந்த ஒப்புரை, இன் என்றும், ஆன் என்றும் அமைந்து இங்கு கருவிப் பொருட்டாதல் என்பன பதினொன்று. இன் எனும் ஐந்தாம் வற்றேுமை உருபு, இங்கு ஏதுப் பொருளில் வரும் ஒட்டாகவுள்ளது. கல்வியால் சிறந்தான்.

**நான்காம் வேற்றுமை - குவ்வேற்றுமை**

குவ் வேற்றுமை எனப்படும் நான்காம் வேற்றுமை எப் பொருளாயினும் ஏற்றுக்கொள்ளுதலாகிய 'கோடல்' பொருளில் வரும்.

அதற்கு வினையுடைமை முதலாகவரும் பத்து உள் வகைகளும் அவை போல்வன பிறவுமாகிய பொருள் தொடர்கள் நான்காம் வேற்றுமைப் பாற்படும். ஒன்றற்குப் பயன்படுதல், ஒன்றற்கு உடம்படுதல், ஒன்றற்குப் பொருந்திய ஒன்றைச் சுட்டிச் சொல்லுதல், அதுவே அதுவாகும் கோடல்பொருள். ஒன்றற்கு இயைபுடைமை. அதற்கது காரணமாதல், நட்பு பகை காதல் சிறப்பு இவற்றை இதற்கு இது எனல் எனவரும் பத்தும் கோடல் பொருளின் வகைகளாகும். வென்றவனுக்குப் பரிசு கொடுத்தனர்.

ஐந்தாம் வேற்றுமை - இன் வேற்றுமை

இன் வேற்றுமை எனப்படும் ஐந்தாம் வேற்றுமை 'இதனின் இற்று இது' (இதனிலும் அல்லது இதனைப் போல இத்தன்மைத்து இது) என்னும் பொருளுடையது.

இன் வேற்றுமையின் பொருட் பாகுபாடுகளாக வண்ணம் முதலாக பற்றுவிடுதல் ஈறாக இருபத்தெட்டுப் பண்புகளும் செயல்களும் அவைபோல்வன பிறவும் அமையும். வண்ணம், வடிவம், அளவு, சுவை, தண்மை, வெம்மை, அச்சம், நன்மை, தீமை, சிறுமை, பெருமை, வன்மை, மென்மை, கடுமை, முதுமை, இளமை, சிறத்தல், இழித்தல், புதுமை, பழமை, ஆக்கம், இன்மை, உடைமை, நாற்றம், தீர்தல், பன்மை, சின்மை, பற்றுவிடுதல் என்பன அவை. பாலிற் பழம் இனிது.

ஆறாம் வேற்றுமை - அது வேற்றுமை

அது வேற்றுமை எனப்படும் ஆறாம் வேற்றுமை இதனது இது எனும் வாய்பாட்டுக் கிழமைப் பொருளுடையது. அது தன்னுடன் தொடர்புடைய தற்கிழமையும் பிறிதாக நிற்கும் பிறிதின் கிழமையும் ஆகிய இருதன்மையுடையது.

இயற்கையின் முதலாய பதினேழும் அவைபோலும் கிழமைப் பொருள்கள் பிறவும் இதன் உட்பாகுபாடுகளாகும். இயற்கை, உடைமை, உறவுமுறை, கிழமை (உரிமை), செயற்கை, முதுமை, வினை (செயல்), கருவி, துணை, கலம் (பத்திரம்), முதல், ஒருவழி உறுப்பு (சினை), குழு, மொழிப்படைப்பு, நிலை (பதவி முதலியன), வாழ்ச்சி (வசித்தல்), திரிந்து வேறுபடுவது என்பன பதினேழும் இவைபோல இப்பண்புடன் தோன்றும் பிற தொடர்களும் ஆறாம் வேற்றுமைப் பாற்படும். எனது வீடு, கம்பரது காப்பியம்.

**ஏழாம் வேற்றுமை - கண் வேற்றுமை**

கண் வேற்றுமை எனப்படும் ஏழாம் வேற்றுமை வினை நிகழ் சூழலும், இடமும் காலமும் எனும் அவ்வகைப்பட்ட பொருட்குறிப்பின் அடிப்படையில் தோன்றும். 'இடப்' பொருளே ஏழாம் வேற்றுமையாம்.

கண் வேற்றுமை இடப்பொருள்தரும் பல்வேறு சொற்களையே தன் உருபுகளாகக் கொண்டிலங்கும். இடப்பொருட் பாகுபாடுகளையும் அவ் வுருபுகளே விளக்கும். கண் முதலாக எண்ணப்படும் பத்தொன்பதும் அவை போல்வன பிறவும் ஏழாம் வேற்றுமைப் பாற்படும். கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், பின், சார், அயல், புடை, தேஎம், முன், இடை, கடை, தலை, வலம், இடம் என்பன அவை. மு.வ. அரங்கின்கண் விழா நடந்தது.

**வேற்றுமைத் தொகைகள் உருபும் பொருளுமாக விரிதல்**

வேற்றுமைப் பொருள் உருபுடன் தொக்கு நிற்பதுண்டு. மறைந்து நிற்கும் அப்பொருளை விரிக்கும்பொழுது, இறுதியில் நின்று நடக்கும் உருபும், பொருளுமாகத் தொக்கு நிற்பவை விரிந்து, பலவிதமாகப் பொருள் தந்து இசைக்கும். அங்ஙனம் பொருளுணர்த்த வல்ல அனைத்துச் சொற்களும் அதற்குரியவாம். இதனைப் பிற்காலத்தில் 'உருபும் பயனும் உடன் தொக்க தொகை' என்றனர். நூல் நயம் - நூலின் கண் உள்ள பொருள், தொடர், அணி முதலியவற்றின் நயம்.

## வேற்றுமையியல்

*வேற்றுமை வகைகள் – வேற்றுமை வகை ஏழு*

**வேற்றுமை தாமே ஏழென மொழிப** (546)

வேற்றுமையாவன ஏழென்று சொல்லுவர் புலவர்.

*எட்டாம் வேற்றுமை*

**விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே.** (547)

விளிகொள்ளும் பெயரின்கண் உள்ள விளிவேற்றுமையோடு கூட்ட வேற்றுமை எட்டாகும். விளிவேற்றுமைக்கு வேறு உருபில்லை; விளிகொள்ளும் பெயரே விளிவேற்றுமையாமென்பார், 'விளி கொள்வதன்கண் உள்ள விளி' என்றார்.

*வேற்றுமையின் பெயரும் முறையும்*

**அவைதாம்,**
**பெயர், ஐ ஒடு கு**
**இன் அது கண் விளிஎன்னும் ஈற்ற. (548)**

அவை பெயர்வேற்றுமை, ஐவேற்றுமை, ஒடுவேற்றுமை, குவ்வேற்றுமை, இன்வேற்றுமை, அதுவேற்றுமை, கண்வேற்றுமை, விளிவேற்றுமை என்னும் வகைமையின. ஈற்ற – வகைமையின.

*முதல் வேற்றுமை*

*எழுவாய் வேற்றுமை அல்லது பெயர் வேற்றுமை*

**அவற்றுள்**
**எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே. (549)**

அவற்றுள் எழுவாய் வேற்றுமை என்பது, பெயர்மட்டும் வெளிப்பட்டு நிற்கும் நிலையாகும். பெயர் தோன்றுநிலை – பெயர் வெளிப்பட்டு நிற்பதொன்றே அதன் இயல்பாகும்; வேறு உருபில்லை.

*எழுவாய் ஏற்கும் பயனிலைகள்*

**பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்**
**வினைநிலை உரைத்தல் வினாவிற்கு ஏற்றல்**
**பண்புகொள வருதல் பெயர்கொள வருதல்என்று**
**அன்றி அனைத்தும் பெயர்ப்பய னிலையே. (550)**

பெயர் எனப்பட்ட எழுவாய் வேற்றுமை பயனிலை கொண்டு முடியும். பொருளிதுவெனக் கூறும் பொருண்மை சுட்டல், ஏவல்பொருள் கொள்ளுதல், வினைநிலை கூறுதல், வினவுதலுக்குப் பொருந்துதல், பண்புணர்த்துவதற்கு வருதல், பெயரையே பயனிலையாகக் கொள்ளுதல் என்ற அறுவகையும் அவை தவிர, அவ்வாறான அனைத்தும் அப்பயனிலையாக வரும். மரம் உளது, மகனே வா. மாடு மேய்கிறது. அது யாது. காடு கரிது. அவன் முருகன்.

*பெயர்த்தொகைகளும் பயனிலை கொள்ளுதல்*

**பெயரி னாகிய தொகையுமா ருளவே**
**அவ்வும் உரிய அப்பா லான. (551)**

ஒரு பெயர் மட்டுமன்றிப் பெயர்பல தொடர்ந்து தொகைச் சொற்களாய் நிற்பனவுமுள. அவையும் எழுவாய் வேற்றுமையாய் நின்று பயனிலை கொண்டு

அத்தன்மைத்தாய் முடியும். பெயரினாகிய தொகை : பனைமரம், மதிமுகம், சோழன் நலங்கிள்ளி, பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி. இவை பெயர்பல தொடர்ந்து, ஒரே பொருளைக் குறிப்பன. மதிமுகம் அழகிது. உவமைத் தொகை எழுவாயானது. பிறவும் அன்ன.

*எழுவாயும் தோன்றா எழுவாயும்*

**எவ்வயின் பெயரும் வெளிப்படத் தோன்றி**
**அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப. (552)**

தன்மை முன்னிலை படர்க்கை ஆகிய அனைத்து இடப்பெயர்களும், வெளிப்படத் தோன்றிநின்று, அவ்வாறு பயனிலை பெற்று நிற்றல் அவற்றிற்குச் செவ்விதாகும் என்பர். எவ் வயின் பெயரும் - எவ் விடப்பெயரும். வெளிப்படத் தோன்றிநிற்றல் செவ்வித என்பதால், வெளிப்படத் தோன்றாது நிற்றலும் அவற்றிற்கு இயல்பு என்பது பெறப்படும். அவ்வியல் நிலையல்- முற்கூறியாங்கு பயனிலை கொண்டு முடியும் இயல்புகளில் நிற்றல். 'சாத்தா உண்டாயா' என்ற விடத்து 'உண்டேன்' என்ற மறுமொழியில் யான் எனும் எழுவாய் வெளிப்படத் தோன்றவில்லை. இச் சூத்திரம் பொதுவாக எழுவாய் வெளிப்பட, நன்கு அறிய நிற்றலின் சிறப்பைக் கூறுகிறது. தோன்றா எழுவாயும் உள என்ற குறிப்பையும் இதனாலறியலாம்.

*பெயரும் உருபுகளும்*

*உருபு பெயரில் நிற்குமிடம்*

**கூறிய முறையின் உருபுநிலை திரியாது**
**ஈறுபெயர்க் காகும் இயற்கைய என்ப. (553)**

முன்பு புணரியலுள் வேற்றுமை உருபுகள் இவையெனவும் (113) பெயருக்குப் பின் வேற்றுமையுருபுகள் நிற்குமெனவும் (116) கூறிய முறைமைப்படி, உருபுகள் தம் வடிவுநிலை திரியாமல் பெயர்களுக்கு இறுதியில் வந்துநிற்கும் இயல்பையுடையன என்று கூறுவர். உருபுகள் நிலை திரியாமல் பெயர்க்கு ஈறாகும் என்க. முருகனை - முருகன் + ஐ. தலைமையில் - தலைமை + இல்.

*பெயரின் இயல்பு*

**பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா**
**தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே. (554)**

பெயராக நிற்கும் இயல்புடைய எழுவாய் வேற்றுமைச் சொற்கள் காலம் தோன்றாவாய் நிற்கும். தொழில் நிலை ஒட்டாகிய ஒன்று – அதாவது வினையைச் சார்ந்துவரும் வினையாலணையும் பெயராகிய ஒருவகைத் தொழிற்பெயர் மட்டும் காலம் காட்டும். அஃதல்லாத யாவும் காலங்காட்டா என்பதாம். பெயரும், பெயர்த்தன்மை பெற்றனவும் எழுவாயாக வந்துநிற்றலின், எழுவாயைப் 'பெயர்நிலைக் கிளவி' என்றார். தொழிற்பெயர் – வினைப்பெயர்.

மணவாளன், மன்னன், வள்ளி, மலர், மரம் – பெயர்கள் காலம் காட்டா. படிப்பவன், நடித்தவன், நிற்கின்றவன் – வினையாலணையும் பெயர்களாகிய இவை காலம் காட்டின.

### *இரண்டாம் வேற்றுமை : ஐ வேற்றுமையும் பொருளும்*

**இரண்டா குவதே,**
**ஐஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;**
**எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு**
**அவ்விரு முதலின் தோன்றும் அதுவே. (555)**

இரண்டாம் வேற்றுமையாக அமைவது ஐ எனப் பெயர்கொண்ட வேற்றுமைச் சொல்லாகும். அது பலவகையாக வரும். எவ்விதமாக வந்தாலும் **வினையும் வினைக்குறிப்புமாகிய அவ்விரண்டின் நிலைக்களத்தில் அவ்வேற்றுமை தோன்றும்.** ஐ வேற்றுமை என்பதே பெயர். அஃது இரண்டாவதாக எண்ணப்படுவதால், இரண்டாம் வேற்றுமை எனப்பட்டது. ஐ உருபு இடைச்சொல்லாதலின் வேற்றுமைக் கிளவி என்றார். பெயர்ப்பொருளை வேறுபடுத்துவது அதுவேயாகும். எவ்வழிவரினும் – அடுத்த நூற்பாவில் அது வருமிடங்களை அடுக்கிக் கூறுகிறாராதலின், ஈண்டு அவ்வாறு எவ்விடத்து வரினும் என்றார். கருத்தா வினை செய்கிறது. அது எழுவாய் வேற்றுமை. அவ் வினை சென்று சேருமிடம் அல்லது அவ்வினை சென்று செயற்படுமிடம் செயப்படுபொருளாகும். **ஐ வேற்றுமைப் பொருள் செயப்படுபொருள்** என்றாலும், வினையின்றி அஃதில்லையாதலின் தெரிநிலை வினையையும் குறிப்பு வினையையும் சுட்டி, அம் முதலின் தோன்றும் – அவ் அடிப்படையில் அதாவது அவ்வினை நிமித்தமாக அவ்வேற்றுமை தோன்றுமென்றார். பந்தை அடித்தான். ஆங்கிலத்திலும் வினைச் சொல்லைக் கூறி, எது யார் எனக் கேட்டு வரும் விடையை எழுவாயாகவும் எதை, யாரை எனக் கேட்டு வரும் விடையைச் செயப்படுபொருளாகவும் கண்டுகொள்வதை ஒப்பு நோக்குக. அப்போதுதான் வினையின் அடிப்படையில் ஐ வேற்றுமை தோன்றுமென்ற தொல்காப்பிய

நுட்பம் புலப்படும். பொன்னை உடையான்; புகழை உடையான் என்பன குறிப்பு வினைமுற்றடிப்படையின.

### *ஐ வேற்றுமைப் பொருட் பாகுபாடுகள்*

**காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்**
**ஓப்பின் புகழின் பழியின் என்றா**
**பெறலின் இழவின் காதலின் வெகுளியின்**
**செறலின் உவத்தலின் கற்பின் என்றா**
**அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்**
**நிறுத்தலின் அளவின் எண்ணின் என்றா,**
**ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்**
**நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா**
**அன்ன பிறவும் அம்முதற் பொருள**
**என்ன கிளவியும் அதன்பால என்மனார். (556)**

காப்பின் முதலாக சிதைப்பின் ஈறாக இருபத்து எட்டும் அவை போல்வன பிறவுமாகிய அவற்றினடிப்படையில் (அவை காரணமாக), வினையும் வினைக் குறிப்புமென வருவனவெல்லாம் ஐ வேற்றுமை சார்ந்தன என நூற்புலவோர் கூறுவர். அம் முதற் பொருள – முற்சூத்திரத்தில் வினையும் வினைக்குறிப்புமாகிய 'அவ்விரு முதலின்' எனப்பட்டவை. அதன் பால – ஐ வேற்றுமைப் பால. காப்பின் என்பது 'ஊரைக் காத்தான்', 'நாட்டைக் காப்பாற்றினான்' என இவ்வாறு வரும். பொன்னை ஒப்பான், தேரை ஓட்டினான் எனச் சொல்லிப் பார்க்க. இழை – இழைத்தல், இயற்றுதல். ஓப்பின் – விரட்டுதல். கிளியை ஓப்பினாள். என்றா என்பது எண்ணிடைச்சொல். செறல் – சினத்தல். கற்பு – கற்றல். நிறுத்தல் – நிறுத்தலளவை. பொன்னை நிறுத்தான். அளவு – முகத்தலளவை. அரிசியை அளக்கும். எண் – எண்ணலளவை. காய்களை எண்ணும். செலவு – செல்லுதல். வழியைக் கடந்தான். கன்றல் – அடிப்படப் பழகுதல். சூதினைக் கன்றும் – அதிலேயே பழகிப் போனான் என்பதாம். கதிரை நோக்கும். கள்ளரை அஞ்சும். நாட்டைச் சிதைக்கும் என இவ்வாறு வரும். அன்ன பிறவும், என்ன கிளவியும் என்பன, இவை போல் வருவன அளவிறந்தன என்பதை உணர்த்தும். இவ் வினைச் சொற்களின் அடிப்படையில் செயப்படுபொருள் தோன்றலின், இவற்றை எண்ணிச் சொல்லியுள்ளார். பெயர் வினையுடன் சேரும் போது, அவ் வினைக் கேற்பப் பெயர், வேற்றுமை உருபேற்கும். தேரை ஓட்டினான், தேரின்கண் ஏறினான் என இவ்வாறு மாறி வரும். இவ்வாறு வேற்றுமைப் படுவன எல்லையற்றவை. அவற்றையும் ஒரு வகை தொகைப்படுத்திக் காட்ட முயல்வது வியப்பளிக்கிறது.

## மூன்றாம் வேற்றுமை
## ஒடு வேற்றுமையும் பொருளும்

**மூன்றாகுவதே,**
**ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;**
**வினைமுதல் கருவி அனைமுதற்று அதுவே. (557)**

மூன்றாம் வேற்றுமையாக அமைவது ஒடு எனப் பெயர் கொண்ட வேற்றுமைச் சொல்லாகும். வினைமுதலும் கருவியுமாகிய அவ்விரண்டு அடிப்படைகளையும் காரணமாகக் கொண்டு அஃதமையும், முதல் வேற்றுமை கருத்தாபற்றியும் இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருள் பற்றியும் அமைவனவெனின், மூன்றாம் வேற்றுமை கருவி பற்றியதாயமைகிறது. வினைமுதல் கருவியாகக் கூறப்படுதலுமுண்டு. அரசனால் கோயில் கட்டப்பட்டது, தச்சனால் செய்யப்பட்டது, கற்களால் கோயில் கட்டப்பட்டது போல்வன பல்வகைப்பட்ட கருவி பற்றியனவாகும். முன்பு ஒடு வேற்றுமைக்குச் செல்வாக்கு மிகுதி. ஆன், ஆல் உருபுகள் அதிக வழக்குப் பெறாத காலம் அது. கொடியொடு துவக்குண்டான் – கொடியால் சுற்றிக்கொள்ளப்பட்டான். 'வாளொடு என்பயன்?' – வாளால் என்ன பயன்? 'மனத்தொடு வாய்மை மொழியின்' – மனத்தால் உணர்ந்து உண்மை பேசினால். பிற்பாடு ஆன், ஆல், ஒடு, ஓடு என இவ்வுருபுகள் எண்ணப்பட்டன. இன் என்பதும் காரணப் பொருட்டாக வரும்போது இதில் சேர்ந்தது.

### ஒடு வேற்றுமைப் பொருட் பாகுபாடுகள்

**அதனின் இயறல் அதன்தகு கிளவி**
**அதன் வினைப் படுதல் அதனின் ஆதல்**
**அதனின் கோடல் அதனொடு மயங்கல்**
**அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி**
**அதனொடு இயைந்த வேறுவினைக் கிளவி**
**அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை**
**இன்ஆன் ஏது ஈங்கென வரூஉம்**
**அன்ன பிறவும் அதன்பால என்மனார். (558)**

அதனின் இயறல் – அதுவே அதுவாக ஆதல். மண்ணிற் செய்த குடம், மண்ணே குடமாயிற்று. இங்கு இன் உருபு வந்துள்ளது. 'அதனின்' எனச் சூத்திரத்திலேயே இன் உருபு கருவிப்பொருளில் வந்துளது காண்க. இது முதலாகப் பதினொரு வகையான கருவிப் பொருண்மைகளைக் கூறி, இவையும் இவை

போல்வன பிறவும் மூன்றாம் வேற்றுமைப் பாலன என்று கூறுவர் அறிஞர் என முடிக்கின்றார் தொல்காப்பியர்.

அதன்தகு கிளவி – அதற்கது தக்கதென்பது. உழைப்பால் சிறந்த உத்தமர். அதன் வினைப் படல் – அதனால் ஆனவினைக்கு ஆட்படுதல். வாளால் வெட்டப்படுதல். அதனின் ஆதல் – இன்ன காரணத்தால் ஆனதென்பது. வணிகத்தால் செல்வனாயினான். அதனிற் கோடல் – இன்னதால் கொள்ளப்பட்டதெனல். காசால் கிடைத்த நலம். அதனொடு மயங்கல் – ஒன்றொடு ஒன்று கலந்ததால் ஏற்பட்டது. பாலொடு தேன் கலந்தது. அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி – போரொடு மாவீரன் வந்தான். தந்தையொடு மகன் வந்தான். அதனொடு இயைந்த வேறுவினைக் கிளவி – குளத்தொடு கோயிலமைத்தான். ஒன்று காரணமாக மற்றொன்று அமைக்கப்பட்டது. அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை – பூவொடு சேர்ந்த நார் போலச் சிறப்புற்றான். பூவும் நாரும் தம்முள் ஒப்பில்லாதன இணைந்து, பிறிதொன்றற்கு ஒப்பானது ஒப்பல் ஒப்புரையாகும்.

அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவிக்கு, அரசரொடு படைகள் வந்தன என்று காட்டுவதை 'உடனிகழ்ச்சிப் பொருள்' என்பர். 'அதனொடு' எனவரும் நான்கும் உடனிகழ்ச்சியோடு ஒருபுடைத் தொடர்புடையனவாதல் காண்க.

இன் ஆன் ஏது – இவ்விடத்து அல்லது இக்காலத்து இதனின் இயன்றது இது என்றோ இதனான் இயன்றது இது என்றோ கூறும் காரணப்பொருட்டாய் அமைவன. ஏது – காரணம். காரணமும் ஒருகருவியாதலறிக. இன், ஆன் என்பன உருபுகளாகக் கருதப்பட்டன. ஆன் உருபே செல்வாக்கு மிக்கதாயிற்று. ஆல் என்பது உலக வழக்கு. இன் ஐந்தன் உருபு. இவண் காரணப் பொருட்டு.

### *நான்காம் வேற்றுமை*
### *குவ்வேற்றுமையும் பொருளும்*

**நான்கா குவதே,**
**கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;**
**எப்பொரு ளாயினும் கொள்ளும் அதுவே. (559)**

நான்காம் வேற்றுமையாக அமைவது 'கு' எனப் பெயர்கொண்ட வேற்றுமைச் சொல்லாகும். எப்பொருளாயினும் 'ஏற்றுக் கோடற்' பொருளில் அது வரும். 'பெயரிய' – எனத் தொடர்ந்து சுட்டுதலால் ஐ வேற்றுமை, ஒடுவேற்றுமை, குவ்வேற்றுமை எனப் பெயர்சுட்டுதலே ஆசிரியர் கருத்தாதல் அறியலாம். ஒன்றாகுவதே முதலானவை எண்ணிக்கைப் படுத்திச் சொல்ல வந்தனவே. பிற்காலத்தில் முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை என அவையே

பெயராயின. கொள்ளும் – ஏற்கும், ஏற்றுக்கொள்ளும். கண்ணகிக்குக் கோட்டம் கட்டினர்.

*குவ் வேற்றுமைப் பொருட்பாகுபாடுகள்*

**அதற்குவினை யுடைமையின் அதற்குடம் படுதலின்**
**அதற்குப்படு பொருளின் அதுவாகு கிளவியின்**
**அதற்குயாப் புடைமையின் அதன்பொருட் டாதலின்**
**நட்பின் பகையின் காதலின் சிறப்பின்என்று**
**அப்பொருட் கிளவியும் அதன் பால என்மனார். (560)**

அதற்கு வினையுடைமை முதலாக வரும் பத்துப் பொருளும் அவை போன்றமையும் பொருட்தொடர்களும் நான்காம் வேற்றுமைப் பால என்பர் புலவர். அதற்கு வினையுடைமை – ஒன்றற்குப் பயன்படு மாறமைதல். பட்டத்திற்குப் படித்தான். அதற்கு உடம்படுதல் – ஒன்றற்கு அல்லது ஒருவருக்கு உடம்படுதல். தலைமைதாங்குவதற்கு உடம்பட்டார். அதற்குப் படுபொருள் – ஒன்றற்குப் பொருந்திய தொன்றைச் சுட்டிச் சொல்லுதல். நிலவுக்குத் தண்மையும் ஞாயிற்றுக்கு வெம்மையும் போல. அதுவாகு கிளவி – ஏற்கும் பொருளும் ஏற்கப்படுவதும் ஒரே பொருளாதல். குடத்துக்கு மண், தாலிக்குப் பொன். அதற்கு யாப்புடைமை – ஒன்றற்கு இயைபுடைமை. பாட்டுக்கு இசைந்த பண், பிணிக்கு மருந்து. அதன் பொருட்டாதல் – அதற்கு அது காரணமாதல். பொருட்டு – காரணம், நிமித்தம். மழைக்குக் குடை பிடித்தல், கூழுக்குக் குற்றேவல் செய்தல், கம்பன் காசுக்குப் பாடினான், ஔவை கூழுக்குப் பாடினாள் என்பர். நட்பு – எனக்கு நண்பன். பகை – பாம்புக்குப் பகை கீரி. காதல் – அன்பு. எனக்கு அவள் காதலி. சிறப்பு – மன்னர்க்கு மன்னன். இன்யாவும் அசைநிலைகள்; எண்ணிக்கைப் பொருள்தருவனவும் ஆம். அப்பொருட் கிளவியும் அத்தகைய பொருள்தரும் சொற்கள் யாவும். எனக்கு மகன் எனவும் என் அத்தைக்கு இவர் கணவர் எனவும் உறவு கூறப்படும். இதுபோல 'இதற்கு இது' என வருவன யாவும் நான்காம் வேற்றுமையுள் அடங்கும். அதற்குடம்படுதல், அதற்கு யாப்புடைமை போல்வன உடம்பொடு புணர்த்தல் போல் அமைந்து, அவையே எடுத்துக்காட்டுப் போலவும் விளங்குதல் காண்க.

*ஐந்தாம் வேற்றுமை : இன் வேற்றுமையும் பொருளும்*

**ஐந்தா குவதே,**
**இன் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;**
**இதனின் இற்றுஇது என்னும் அதுவே. (561)**

ஐந்தாம் எண்ணிக்கைக்குரியதாக அமைவது 'இன்' என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல்லாகும். அதன் பொருள் 'இப்பொருள் போல இத்தன்மையுடையது இப்பொருள்' அல்லது 'இப்பொருளினின்றும் இத்தன்மையடைந்தது இது' என்பதாகும். இற்று - இத்தன்மைத்து. இதனின் - இற்று - இது. இதனைப் போலக் கருப்பு நிறமுடையது இது - காக்கையிற் கரிது களம்பழம்; இதனைவிடச் சிறப்புடையது இது - படிப்பிற் சிறந்தது பட்டறிவு; இதனின் நீங்கியது இது - காட்டின் நீங்கிய யானை என இவ்வாறு வருவன பலவும் அடங்க 'இதனின் இற்று இது' என்பது வாய்பாடாகக் கூறப்பட்டுள்ளது.

### *இன் வேற்றுமைப் பொருட்பாகுபாடுகள்*

**வண்ணம் வடிவே அளவே சுவையே**
**தண்மை வெம்மை அச்சம் என்றா,**
**நன்மை தீமை சிறுமை பெருமை**
**வன்மை மென்மை கடுமை என்றா,**
**முதுமை இளமை சிறத்தல் இழித்தல்**
**புதுமை பழமை ஆக்கம் என்றா,**
**இன்மை உடைமை நாற்றம் தீர்தல்**
**பன்மை சின்மை பற்று விடுதல்என்று**
**அன்ன பிறவும் அதன்பால என்மனார். (562)**

ஐந்தாவதாகிய இன் வேற்றுமையின் பொருள்களாக, வண்ணம் முதலிய இருபத்தெட்டுப் பண்புகளும் செயல்களும் அமைவனவாம். அவை போல்வன பிறவும் அவ்வேற்றுமைப் பால என்று நூற் புலவர் கூறுவர். வண்ணம் (நிறம்). காக்கையிற் கரிது - காக்கை போலக் கரியது. இதனிற் கூடுதல் இது என்பது அளவு. இதனிற் கொடியதிது என்பது அச்சம். தீயிற் கடிதவர் தீச்சொல் என்பது கடுமை. ஓதலிற் சிறந்தது ஒழுக்கமுடைமை - சிறத்தல். உலகிற் பழையது குமரிநாடு - பழைமை. இரும்பின் ஆன ஏணி (ஆக்கம்). அவனின் இவன் வறியன் - வறுமை. இதனின் மணக்கும் இது - நாற்றம். பழியின் நீங்குதல் - தீர்தல். பண்புடையாரிற் பலர் எளியவர்கள். இல்லறத்திற் பற்று நீங்கினான் - பற்று விடுதல். இதனின் இற்று இது என்ற வாய்பாட்டை ஒவ்வொன்றிலும் பொருத்திப்பார்க்க வேண்டும். என்றா என்பன எண்ணிடைச் சொற்கள். பிறவெல்லாம் இதனின் நன்று இது, இதனின் வலிது இது என இவ்வாறு சொல்லிப் பார்க்கத்தக்கன.

### ஆறாம் வேற்றுமை

### அது வேற்றுமையும் பொருளும்

**ஆறா குவதே,**
**அது எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;**
**தன்னினும் பிறிதினும் இதனது இதுஎனும்**
**அன்ன கிளவிக் கிழமைத் ததுவே. (563)**

ஆறாம் எண்ணிக்கையில் வருவது, அது எனப் பெயர்கொண்ட வேற்றுமைச் சொல்லாகும். அது 'இதனது இது' என்னும் உடைமைப் பொருளுடையது. அது தன்னுடன் ஒட்டிய பொருளானும் (தற்கிழமை), தன்னிற் பிறிதாகிய பொருளானும் (பிறிதின் கிழமை) 'இப் பொருளினது இப்பொருள்' என வரும். அத்தகைய வாய்பாட்டுச் சொற்களானமைந்த 'கிழமைப் பொருளை' (உடைமை, உரிமை) உடையது அது. விரலது நீளம் – தற்கிழமை. எனது மோதிரம் – பிறிதின் கிழமை.

'இதனின் இற்று இது' (5), 'இதனது இது' (6) என வாய்பாடாகக் கூறுவது, வேற்றுமைகளின் பன்மை நோக்கியது. எத்தனை விதமாகவும் கூறலாம்.

### அது வேற்றுமைப் பொருட்பாகுபாடுகள்

**இயற்கையின் உடைமையின் முறைமையின் கிழமையின்**
**செயற்கையின் முதுமையின் வினையின் என்றா,**
**கருவியின் துணையின் கலத்தின் முதலின்**
**ஒருவழி உறுப்பின் குழுவின் என்றா,**
**தெரிந்துமொழிச் செய்தியின் நிலையின் வாழ்ச்சியின்**
**திரிந்துவேறு படூஉம் பிறவும் அன்ன**
**கூறிய மருங்கில் தோன்றுங் கிளவி**
**ஆறன் பால என்மனார் புலவர். (564)**

இங்கு குறித்த பதினேழு பொருளும் பிறவுமாகிய, அத்தகைய 'இதனது இது' எனும் வாய்பாட்டின் வழித் தோன்றும் சொற்றொடர்கள் எல்லாம் ஆறாம் வேற்றுமைப் பால என்று புலவோர் கூறுவர். 'அன்ன கூறிய மருங்கில் தோன்றும் கிளவி' – அத்தகைய, முற்கூறிய 'இதனது இது' என்ற வாய்பாட்டின்படி தோன்றும் தொடர்கள். இயற்கை – இயல்பு. மாணவனது அறிவு, நாட்டது செல்வம். முறைமை – பிறப்புறவு. ஆவினது கன்று (உயர்திணையாயின் 'அது' கெட்டு குவ்வுருபு வருமென்பர். (578) எனக்கு மகன்) கிழமை – உரிமை. முருகனது நிலம். செயற்கை – மணியினது வடிவம். முதுமை – அறிவினது முதிர்ச்சி. வினை – முருகனது இசை. எனது வாள் (கருவி), எனது துணை. கலம் – ஓலை, பத்திரம்.

எனது கலம் அல்லது எனது வீட்டுப்பத்திரம். முதல் – முதலது கிழமை. எனது மாடு. ஒரு வழி உறுப்பு – ஒரு முதலின் பகுதியாகிய உறுப்பு. மாட்டது கொம்பு, கட்டிலதுகால். குழு – கூட்டம். மக்களது கூட்டம். தெரிந்து மொழிச் செய்தி – தெரிந்து மொழியாற் செய்யப்படும் செயல்; செய்யப்படும் செய்யும் (படைக்கப்படும் இலக்கியம்). கபிலரது பாட்டு. நிலை – நிலைமை. கண்ணனது இளமை. வாழ்ச்சி – வாழ்க்கை. கிணற்றது தவளை (கிணற்றில் வாழ்வது). திரிந்து வேறுபடும் பிற – ஒன்று திரிந்து ஒன்றாவன. எள்ளினது பொறி. இவ்வாறே கூறிப் பார்க்கத்தக்கன.

### *ஏழாம் வேற்றுமை*
### *கண்வேற்றுமையும் பொருளும்*

**ஏழா குவதே,**
**கண் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;**
**வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்**
**அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே. (565)**

ஏழாம் எண்ணிடத்தது கண் எனப் பெயர்கொண்ட வேற்றுமைச் சொல்லாகும். அது வினை நிகழிடமும் (சூழலும்) நிலமும் காலமும் எனும் அவ்வகைப்பட்ட பொருட்குறிப்பின் அடிப்படையில் தோன்றும். அனைவகைக் குறிப்பின் – அம் மூவகைக் குறிப்பின்படி. மழைக்கண் புறப்பட்டான் (வினைநிகழிடமாகிய சூழல்). வீட்டின்கண் இருந்தான் (நிலம்). தைக்கண் திருமணம் (காலம்).

### *கண் வேற்றுமை உருபுகள் அல்லது கண் வேற்றுமைப் பொருட்பாகுபாடுகள்*

**கண் கால் புறம் அகம் உள் உழை கீழ் மேல்**
**பின் சார் அயல் புடை தே வகை எனாஅ,**
**முன் இடை கடை தலை வலம் இடம் எனாஅ,**
**அன்ன பிறவும் அதன்பால என்மனார். (566)**

கண் முதலாக எண்ணப்பட்ட பத்தொன்பது இடப்பொருள் தரும் உருபுகளும், அவை போல்வன பிறவும் கண்வேற்றுமைப் பால என்பர் புலவர். கண் – அரங்கின்கண் கூட்டம் நிகழும். கால் – ஊர்க்கால் செய். புறம் – எயிற் புறத்திருந்தான். அகம் – எயிலகத்திருந்தான். உள் – காட்டினுள் சென்றான். என்னுழை வந்தான், படிக்கீழ் உளது, மலைமேல் மேய்ந்தது, தேர்ப்பின் நடந்தான். வலச்சார் ஓடும் வாய்க்கால், வழியயல் வளரும் மரம், மதிற்புடை ஏறினான். தே வகை – திசைப்பகுதிகள் எனக் கொண்டு வடக்கண் வேங்கடம், தெற்கண் குமரி என்பர். ஆயினும் தே என்பதையும் ஓர் உருபாகக் கொண்டு 'தோழி தேஎத்து' (தோழி இடத்தில்) என உதாரணம் காட்டுதலே பொருத்தமுடைத்து.

தேர்முன் சென்றான், அவையிடைக் காணப்பட்டான், ஊர்க்கடைப் போயினான், தேர்த்தலை அசையும் கொடி, கைவலத்துள்ளது, அவையிடம் முறையிட்டான். இவை தவிர வாய், இல், உழி, மாட்டு என இடப்பொருளில் வரும் சொற்கள் பலவும் கொள்ளப்படுதற்கு 'அன்ன பிறவும்' என்றார்.

*வேற்றுமைத் தொகைகள் உருபும் பொருளுமாக விரிதல்*

**வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை**
**ஈற்றுநின்று இயலும் தொகைவயின் பிரிந்து**
**பல்ஆ றாகப் பொருள்புணர்ந்து இசைக்கும்**
**எல்லாச் சொல்லும் உரிய என்ப. (567)**

வேற்றுமைப் பொருள் மறைந்து நிற்றலுண்டு. அதனை விரித்து, வெளிப்படுத்திச் சொல்லும் பொழுது உருபுகள் பெயரீற்றில் நின்று நடக்கும் தொகையிடத்தே இருந்து பிரியும். அவ்வாறு பிரிந்து பல முறைகளின்படி பொருள்தந்து இசைக்கும் அனைத்துச் சொற்களும் அங்ஙனம் விரித்தற்குரியவாம். ஈற்று நின்று இயலும் தொகை – பெயர் இறுதியில் நிலைபெற்று இயங்கும் உருபுதொக்க தொகை. மறைந்திருப்பினும் அதன் இயக்கம் உண்டு என்றபடி.

பிரிந்து – உருபுபிரிந்து பொருளுடன் புணர்ந்து இசைத்தல். உருபேயன்றியும் பொருள்கூட்டச் சொல்லவரும் சொற்களும் உள என்றவாறு. இதனைப் பிற்காலத்தே உருபும் பொருளும் உடன்தொக்க தொகை என்பர். மதுரைப் பதிப்பு என்றால் மதுரைக் கண் பதிப்பிக்கப்பட்ட பதிப்பு என விரிக்கவேண்டும். இதை மதுரைக்கண்பதிப்பு எனப் பொருள்தரும் சொல்லை விரிக்காமலும் கூறலாமாயினும் பல்லாறாகப் பொருள் புணர்ந்திசைக்கும் எல்லாச் சொல்லையும் விரித்தாற்றான் நன்குவிளங்கும். 'மதுரை காஞ்சிபுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கக்கடை' என்பதை எப்படி விரிப்பது? மதுரையின்கண் உள்ள, காஞ்சிபுரத்தைச் சார்ந்த பட்டு நெசவாளர்களது கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படுகின்ற கடை என விரிக்க வேண்டும். உருபும் பல்லாறாகப் பொருள் புணர்ந்து இசைக்கும் எல்லாச் சொல்லும் தொக்கு நிற்கின்றன – தொக்குநிற்கும் அவையனைத்தையும் விரித்துணர்ந்தால்தான் பொருள் விளங்கும். எனவே உருபும் பொருளுமாய அவையனைத்தும் தொக்கு நிற்பினும் அவ் வேற்றுமைக்கு உரிமையுடையன என்பது கருத்து.

வேற்றுமையை எட்டென்றது, அவற்றை முன் மாதிரியாய்க் காட்டி விளங்குதற்பொருட்டேயாம். எனினும் அவை கணக்கின்றிப் பொருளுணர்த்துதற் பொருட்டு விரிக்கற்பாலன என்பதை உணர்த்தவே, அவர் இவ்வாறு பட்டியலிட்டுக் கூறுகிறார்.

## 3. வேற்றுமை மயங்கியல்

**வேற்**றுமைகள் மிகப்பல என்பது மட்டுமன்றி, ஒன்றினொன்று மேவி வருவன. அவை நுட்பமாய் வேறுபடுவனவாதலின் உருபுகளும் சொல்லுருபுகளுமாய் நிற்பதுடன், அவை பல்வேறு உள்வகைப் பொருள்களாகவும் பரந்து விரிந்து செல்கின்றன. காட்டு யானையைக் காட்டின்கண் உள்ள யானை என்றும் காட்டினது யானை என்றும் இருவகையாகவும் விரிக்கமுடிகிறது. கம்ப ராமாயணம் என்பதைக் கம்பரால் எழுதப்பட்ட இராமாயணம் எனவும் கம்பரது இராமாயணம் எனவும் விரிக்க இடமுள்ளது. ஓர் உருபு நிற்கவேண்டிய இடத்தில் பிறிதோர் உருபு நின்று, முன்னைய பொருளையே தருவதுண்டு. 'கிழங்கு மணற்கு ஈன்ற முளை' என்பதில் மணற்கு என்பது, மணற்கண் என்பதேயாம். கண் உருபின் பொருளையே கு உருபு தருகிறது. எந்த உருபிற் கூறினாலும், பொருளுக்கேற்பவே வேற்றுமையை விரித்து உணர வேண்டும். இவ்வாறாக ஒரு வேற்றுமையின் பொருள் சிதையாமல் பிறிதொரு வேற்றுமையின் உருபு மயங்கிநிற்றல் கூடும். ஒரு வேற்றுமைப் பொருளையே, பிறிதொரு வகையாகக் கூறிப் பிறிதொரு வேற்றுமையுட் படுத்தியும் கூறலாம். வாளால் வெட்டியதை வாளைக் கொண்டு வெட்டியதாகவும் கூறலாம்தானே? இவ்வாறு இரண்டு வேற்றுமையுருபுகள் ஒரே பொருளைத் தருதலுமுண்டு. இங்ஙனம் மேவி வரும் இயல்புகளையே வேற்றுமை மயங்கியல் தொகுத்துரைக்கிறது. எழுவாய் வேற்றுமையாகிய பெயர், ஆகுபெயராய் நின்றும் வேற்றுமை ஏற்கும். உருபும் பொருளுமாக விரித்துப் பார்த்தால்தான் ஆகுபெயர் வகைகள் விளங்கும். ஆகவே ஆகுபெயர் இலக்கணத்தை வேற்றுமையொடு சார்த்திக் கூறும் நுட்பத்திறன் எண்ணிப் பார்த்தற்குரியதாகும்.

### இயல் கருத்து நிரல்

**இரண்டாம் வேற்றுமைக்குரிய இடத்தில் ஏழாம் வேற்றுமையுருபு வருதல்**

கருமமல்லாச் சார்புக்கு 'ஐ'யே அன்றி. கண் உருபும் உரிமையுடையதாகும். (ஒருவரைச் சார்ந்து வாழ்வது என்பதை ஒருவர்கட் சார்ந்து வாழ்வது எனவும் கூறலாம்.)

உறுப்புப் பெயர்கட்கு வினை முடிபு கொள்ளுதற்கண் ஐயும் கண்ணும்

ஒருபடித்தாக வரும். (முடியை வெட்டினான், முடியின்கண் வெட்டினான். வரக்கூடிய வினைகளுக்கே இது பொருந்தும்.)

இரண்டாம் வேற்றுமைப் பொருளவாய்க் குறிக்கப்பட்ட கன்றலும் செல்லுதலும் (556) வினைமுடிபு பெறுதற்கண், முன்பு குறிப்பிட்டதுபோலக் 'கண்' உருபும் பொருந்திவரும். (பாலைநிலத்தைக் கடந்து சென்றான். பாலை நிலத்தின்கண் கடந்து சென்றான்.)

## முதலும் சினையும் உருபேற்கும் விதம்

முதலும் சினையும் தொடர்ந்து வரும் தொடரில் முதற் பொருளுக்கு அது வரின் சினைக்கு ஐ வரும். (மரத்தினது கிளையை வெட்டினான்.)

அவ்வாறான தொடரில் முதற்பொருளுக்கு ஐ வரின், சினைக்கு கண் வருதல் தெளிவு தரும். (மரத்தைக் கிளைக்கண் வெட்டினான்.)

எது முதல், எது சினை என்பது ஒரே பொருளாயினும் இடம் நோக்கிக் குறிப்பாலுணரப்படும். மரத்தை நோக்கக்கிளை சினை. கொம்பு இலையை நோக்க முதல்.)

பிண்டமும் அதன் பகுதியும் பற்றிய தொடர்களும் முதலும் சினையும் பற்றிய தொடர்கள் போல்வே பழைய மரபு கெடாமல் வழங்கும். (குப்பையது மேட்டைக் குறைத்தான்.)

## 'ஒடு' வேற்றுமை மரபு

'ஒடு' உருபு வந்து, ஒரு வினை முடிபு கொள்ளும் தொடரில், அவ் 'ஒடு' உருபு உயர்பொருளுடன் இணைந்துவரும். (தந்தையொடு மகன் வந்தான் என்றே கூறவேண்டும். மகனொடு தந்தைவந்தான் எனல் மரபன்று.)

மூன்றாம் வேற்றுமையிலும் ஐந்தாம் வேற்றுமையிலும் ஏதுப் பொருட்டாய் வருமென முன்பு கூறியபடி (558) ஆக்கத்தைக் காரணத்தொடு கூறவந்த தொடரில் ஆனும் இன்னும் பொருள் நோக்கில் ஒரு தன்மைய வாகும். (உழைப்பான் வந்த உயர்வு; உழைப்பின் வந்த உயர்வு.)

இரண்டாம் வேற்றுமையில் வரும் 'நோக்கல்' எனும் பொருளில், 'நோக்கு அல் நோக்கம்' என்பதும் ஒன்று (வானை நோக்கி வாழும் குடி). இரண்டாம் வேற்றுமைக்குரிய அது, மூன்றற்கும் ஐந்தற்குமுரியதாகக் கூறப்பட்ட ஏதுப் பொருளிலும் வரும். (வானால் வரும் பயன் அல்லது வானின் பயன் நோக்கி வாழ்தல்.)

ஆறாம் வேற்றுமை உறவுமுறைப் பொருளில் வரும் போது உயர்திணைத் தொடராயின் 'அது' உருபு கெட கு உருபு வரும். (எனது மகன் என்பது எனக்கு மகன் என்றாகும்.)

### தடுமாறு தொழிற் பெயர்

பொருள் தடுமாறும் வினைச்சொல் தொடருக்கு இரண்டாம் வேற்றுமை உருபும் மூன்றாம் வேற்றுமை உருபும் இடம் நோக்கிப் பொருளுக்கேற்ப விரிக்கப்படும். புலியைக் கொன்ற யானை; புலியாற் கொல்லப்பட்ட யானை என விரியும். 'புலி கொல்யானை' என்பது பொருள்தடுமாறும் வினைச்சொல்.

முற்கூறிய 'தடுமாறு தொழிற் பெயருக்கு', இறுதியிலுள்ள பெயருக்குப் பிறகு, ஐயத்தை நீக்குமாறு வரும் வினைமுடிபுச் சொற்களைக் கொண்டு, இது இன்ன வேற்றுமைக் குரியதென உணரவல்லவர்கள் உணர்வார்கள். (புலி கொல் யானை ஓடியது என்றால் புலியைக் கொன்ற யானை ஓடியது என உணர்வோமல்லவா? புலி கொன்ற யானையாயின் அஃது ஓடாது அன்றோ?)

### ஐயும் ஆனும் ஒத்துவருதல்

இரண்டாம் வேற்றுமையில் கூறப்பட்ட காத்தல் போலும் ஓம்படைக் கிளவிக்கு (556) வேற்றுமைத் தொகையை விரிக்கும்போது ஐயும் ஆனும் ஒத்த உரிமையுடையவையாய் விரித்துணரப்படும். (தடைகளைப் பார்த்துப் போ; தடைகளான் வரும் துன்பத்தைப் பார்த்துப் போ.)

### அதுவும் கண்ணும் ஒன்றுபடுதல்

ஆறாம் வேற்றுமையில் வாழிடம் கூறும் கிழமைப் பொருளில் (564) ஏழாம் வேற்றுமையும் இடம் பெறும், அது உறையுமிடம் பற்றியதாதலின். (காட்டது யானை என்பதைக் காட்டின்கண் உள்ள யானை எனவும் கூறுவர்.)

### குவ்வும் அதுவும் ஒருதன்மைத்தாய் வருதல்

கொடையை ஏற்றுக்கொள்வதைக் குறிப்பிடும் நான்காம் வேற்றுமைத் தொடரில் 'கு' உருபு தொக்கு, அது உருபு வருதலுமுண்டு. (கருப்பருக்குப் பூசை என்பதைக் கருப்பரது பூசை எனவும் கூறலாம்.)

### ஐந்தும் இரண்டும் அச்சத்தைக் குறித்தல்

அச்சத்தைக் குறிப்பிடும் தொடரில் ஐந்தாம் வேற்றுமையும் இரண்டாம்

வேற்றுமையும் அமைந்து பொருள் தருவதில் ஒத்தனவாக அமையும். (படையும் பாம்பின் அஞ்சும்; படையும் பாம்பை அஞ்சும்.)

### உருபும் பொருளும் மரபுவழி மாறி இடம் பெறல்

இங்ஙனம் உருபும் பொருளும் தம்முள் ஒன்றுடன் ஒன்று தடுமாறி, இருவிதமாகவும் அமையுமெனப்பட்ட வேற்றுமைகளும், இவை போல்வனவும், அங்ஙனம் தொன்மையான வழக்காறு தப்பாமல் வருவதால், திரிபுடையன எனக் கருதப்படமாட்டா.

### பெயர் உருபேற்று முடியும் சில மரபுகள்

சொல்தோறும் உருபு தொடர்ந்து, ஒருசொல் நடையில் வரும் வேற்றுமைத்தொடர், பொருளுணர்த்துவதில் ஒரே வினைமுடிபு பெற்று முடியும். (விளக்கினது துணையால் இருளின்கண் பாதையைக் கடந்தான்.)

வேற்றுமைத் தொடர்களில் உருபேற்ற பெயர்கள் தொடரின் இடையிலோ இறுதியிலோ, செவ்விதாகப் பொருள் தருவதற்கேற்ப இடம் பெறும். (கண்டேன் சீதையை; சீதையைக் கண்டேன்.)

பெயர்கள் பொருளுணர்த்துதற்கேற்ப வெவ்வேறு உருபுகளை ஏற்றுவருதலும், அவ்வுருபுகள் மறைந்து நிற்றலும் அடிப்பட வழங்கிய வழக்காற்றுவழியின என்பர். ( மதுரை வண்டி – மதுரைக்குப் போகும் வண்டி, மதுரையிலிருந்து வரும் வண்டி, மதுரைக் கண் செய்தவண்டி – இவ்வாறு இடம் நோக்கி அமையும்).

ஐயும் கண்ணும் மட்டுமே தொடர் இறுதியில் உருபுதொக்கு நிற்கும். அவை தவிர்த்த ஆல், கு, இன், அது நான்கும் தொடர் இறுதிக்கண் தொக்கு நிற்கமாட்டா. (கட்டினான் கோயில் எனலாம், கட்டினான் கோயிலை – என்பதில் ஐ தொக்கது. புத்தகம் எனது என்பதில் அது தொக்குநின்று – புத்தகம் என் எனில் பொருள் தராது.

எந்த ஓர் உருபிற் கூறப்பட்டதாயினும், எப்பொருள் பற்றி அத்தொடர் அமைகிறதோ, அப்பொருளையே அவ்வுருபு உணர்த்தும். (உருபுக்காக பொருள் வேறுபடாது. அதாவது பொருள் செல்லும் வழியில் உருபு செல்லும் என்பதாம்.)

### எதிர்மறைப் பொருளில் வேற்றுமை உருபுகளின் நிலை

வேற்றுமைத் தொடர்கள் எதிர்மறையாக வரினும், அவை தத்தமக்கோதிய

செய்யப்படுபொருள் முதலாய பொருள் நிலையினின்றும் வேறுபடா. (பூவைத் தொடாதே)

**சில உருபுகள் அகரச் சாரியை பெறுதல்**

பெயரின்பின் வரும் கு ஐ ஆன் உருபுகள், செய்யுளில் அகரச் சாரியை பெறும்.

கு ஐ இரண்டும் அஃறிணைப் பெயர்களின் பின் முற்கூறிய அகரச் சாரியை பெறா. (அவை உயர்திணையில் மட்டும் அகரம் பெறும். ஆன் இருதிணையிலும் அகரம் பெறும் என்பதாம்.) வழக்கத்தான் - வழக்கத்தான. இறுதியில் தான் + அ. அகரம் சாரியை.

**ஒரு வேற்றுமையே நின்று பல வேற்றுமைப் பொருளை உணர்த்துதல்**

நான்காம் வேற்றுமை உருபு மூலம் பிறபல வேற்றுமைப் பொருள்கள் தொன்றுதொட்டு உணர்த்தப்பட்டு வருகின்றன. 'இதனதாகிய இது இற்று' எனும் ஆறாம் வேற்றுமையையும் 'இதனால் கொண்டது இது' என வரும் மூன்றாம் வேற்றுமையையும் ஒன்றைச் செய்தற்குத் தகுதி உடையதெனப்படும் மூன்றாம் வேற்றுமையையும் உறவு முறையைக் குறிக்கும் பெயர்த்தெடராகிய ஆறாம் வேற்றுமையையும் எல்லை வரைந்து கூறும் ஐந்தாம் வேற்றுமையையும் இதனின் இது இற்று எனும் பண்பு வேறுபாட்டைச் சுட்டும் ஐந்தாம் வேற்றுமையையும் காலத்தைச் சுட்டும் ஏழாம் வேற்றுமையையும் பற்றுவிடு தலையும் நீங்கிப் போதலையும் சுட்டும் ஐந்தாம் வேற்றுமையையும் அவைபோல்வன பிறவற்றையும் நான்காம் வேற்றுமையுருபுடனும் கூறுதல் தொன்றுதொட்டு வரும் வழக்காறாகும். (காசால் வாங்கியதைக் காசுக்கு வாங்கிய காய் என நான்காம் வேற்றுமையாக்கிச் சொல்வர். அவனால் முடியும் – அவனுக்கு முடியும்.)

நான்காம் வேற்றுமை போல, ஏனைய உருபுகளும் பிற வேற்றுமைப் பொருள்களையும் குறிக்கும் மரபுடையன. அத்தகைய சொல்வழக்காற்றில் குறையெதுவுமில்லை.

**வேற்றுமைப் படுத்தவரும் வினைச்சொல் உணர்த்தும் பொருள்கள்**

பெயர்ப்பொருளை வேறுபடுத்த வருவது வினைச்சொல்லேயாதலின், அஃதுணர்த்தும் பொருள்கள் இன்றியமையாதனவாகின்றன. வினை (செயல்) இதுவென உணர்த்தும்; செய்வதாகிய எழுவாய்,

செயப்படுபொருள், நிகழிடம், காலம், கருவி என்பனவற்றையுணர்த்தும். இவை ஆறும் தவிர இன்னதற்காக எனவும் இதுபயன் ஆக எனவும் காரணத்தையுணர்த்தும் பயனையும் கூட்டி, எட்டுப் பொருள்களையும் வினைச்சொல் உணர்த்தும். வரைந்தான் – வரைதல் செயல், ஓவியன், வரையப்பட்ட ஓவியம், தாள், தூரிகை, எனப்பலவும் உணரப்படும்.

அவற்றுள் வழக்காற்றின்கண் சிற்சில குன்றியும் வரும். (எட்டையும் உணர்த்த வேண்டுமென்பதில்லை.)

## ஆகுபெயரும் வேற்றுமைகளும்

ஆகுபெயர் வினைமுடிபேற்று வேற்றுமைத் தொடராய் விரிக்கப்படும். குறிப்பால் பொருள் தரும் ஆகுபெயர்த் தொடர்களை விரிக்கும் காலத்து, அவை வேற்றுமையடிப்படையுடையன என உணரப்படும். 'பலா' பழத்தைக் குறிக்கும் போது முதலாகுபெயர். பலா சுவையானது என்றால் பலாமரத்தினது பழம் சுவையானது என ஆறாம் வேற்றுமையாக விரிக்க வேண்டும். இவ்வாறு ஆகுபெயர்ச் சொற்கள் அனைத்தும் வேற்றுமைத் தொடராய் விரிக்கப்படும். முதலைக் கூற, சினையை உணர்த்தும் சொற்களும் (முதலாகுபெயர்), சினையைக் கூறி முதலை யுணர்த்துவனவும் (சினையாகுபெயர்), பிறந்த இடத்தாற் சுட்டப்படுவனவும் (இடவாகுபெயர்), பண்பைக் கூற அப்பண்பையுடையதை உணர்த்துவனவும் (குணவாகுபெயர்), காரியத்தைக் காரணத்தால் கூறலும் (கருவியாகு பெயர்), இருபெயரொட்டாகுபெயரும், வினை முதலால் அவன் செய்ததை உணர்த்தும் கருத்தா ஆகுபெயரும் அவைபோல்வன பிறவும் ஆகுபெயர்களாகும்.

அவ்வாகுபெயர்கள் தத்தம் பொருளுடன் தாம் ஒட்டுதலுடையனவும், ஒத்துடைமை இல்லாப் பிற பொருள்களைச் சுட்டிக் கூறுவனவும் என இருதிறத்தனவாகும். (தற்கிழமையும் பிறிதின் கிழமையுமாய் ஆகுபெயர்கள் வரும்.) (தாமரைக் கொடி பூவைக் குறிப்பது, தன்னொடு பொருந்திய ஒன்றைக் குறிப்பது. பாவை வந்தாள் பெண்ணைக் குறிப்பது ஒப்புமையால் தன்னொடு பொருந்தியதைக் குறிப்பது. கூறைநாடு வாங்கினேன். – உறவும் ஒப்பும் இல்லாமல், தோன்றிய இடத்தால் பட்டைக்குறிப்பது பிறிதுபொருள்சுட்டல் ஆகும்.)

பெயர்கள் ஆகுபெயர்களாவதை, வேற்றுமைகளின் பக்கலில் வைத்தே போற்றி, இன்ன ஆகுபெயரென அறியவேண்டும்.

முகத்தலளவை நிறுத்தலளவைப் பெயர்களை முன் சொன்ன ஆகுபெயர்களுடன் சேர்த்துப் பார்க்குமிடத்து, அவையும் ஆகுபெயர்களாதற்குரியனவாம். இவ்வாறு அளவைப் பெயர்கள் எல்லாம் அளக்கப்படும் பொருளை உணர்த்துமிடத்து ஆகுபெயர்களாகும். (நாழி கொடு, ஒரு கிலோ கொடுத்தேன்.)

## ஆகுபெயர்கட்குப் புறனடை

முற்கூறியவை அல்லாத வேறு பிற ஆகுபெயர்கள் தோன்றினாலும், முன்னர் விளக்கிய முறைகளின்படி அறிந்து, அவற்றை விளங்கிக் கொள்ளவேண்டும்.

# வேற்றுமை மயங்கியல்

*கருமமல்லாச் சார்புச்சொல்*
*'ஐ' அன்றிக் 'கண்'ணுருபும் பெறுதல்*

**கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்கு**
**உரிமையும் உடைத்தே கண் என் வேற்றுமை. (568)**

ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை 'சார்தல்' என்ற பொருளிலும் வரும் என்றார் (556). அஃது இரண்டு வகைப்படும் : கருமச்சார்பு, கருமமல்லாச் சார்பு என. தூணைச் சார்ந்தான் என்பது கருமச்சார்பு. அங்கு செயல் நேரே நிகழ்கிறது. அரசரைச் சார்ந்தான் என்னும் போது, அரசர்க்கு வேண்டியவன் ஆயினான் எனக் குறிப்புப் பொருள் பெறப்படுகிறது. முன்னையது போல் இது வினை நிகழ்ச்சி நடப்பதைக் குறிப்பதன்று. இது கருமமல்லாச் சார்பு எனப்படும். இங்ஙனம் 'கருமமல்லாச் சார்பு' ஆகிய தொடர்க்கண் 'ஐ'யே அன்றி கண் என்னும் வேற்றுமையும் உரிமை உடைத்தாம். அரசரைச் சார்ந்தான், அரசர்கட் சார்ந்தான். இன்று 'அவன் இக்கட்சியைச் சார்ந்தான்' என்பர்.

*உறுப்புப் பெயர்களில் ஐயும் கண்ணும் ஒத்துவருதல்*

**சினைநிலைக் கிளவிக்கு ஐயும் கண்ணும்**
**வினைநிலை ஒக்கும் என்மனார் புலவர். (569)**

உறுப்பைச் சுட்டிக் கூறும் சொல்லுக்கு ஐ உருபும் கண் உருபும் வினை முடிபை ஏற்றற்கண் ஒத்துவரும் என்பர் புலவோர். கண்ணைக் குத்தினான், கண்ணுட் குத்தினான். கிளையை வெட்டினான், கிளைக்கண் வெட்டினான்.

*இரண்டாம் வேற்றுமையிடத்தில் ஏழாம் வேற்றுமையும் வருதல்*

**கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே. (570)**

கன்றல், செல்லுதல் என இரண்டாம் வேற்றுமைப் பொருளவாய் முன்பு குறிக்கப்பட்டவை (556), வினை முடிபு பெறுதற்கண், முன்னைச் சூத்திரத்தில் குறித்தவாறு 'கண்' எனும் உருபும் பொருந்தி வரும். ஒன்றும் – சமமாக ஒத்துவரும். சூதினைக் கன்றினான், சூதின்கட் கன்றினான். வழியைக் கடந்தான், வழிக்கண் கடந்தான்.

*முதலும் சினையும் வேற்றுமை ஏற்கும் விதம் : முதலுக்கு அது வரின் சினைக்கு ஐ வரும்*

**முதற்சினைக் கிளவிக்கு அது என் வேற்றுமை**
**முதற்கண் வரினே சினைக்கு ஐ வருமே. (561)**

'முதற்' சொல்லும் 'சினைச்' சொல்லும் தொடர்ந்து வந்த வாக்கியத்தில், 'முதல்' சொல்லுக்கு அது வேற்றுமை வரின், 'சினைச்' சொல்லுக்கு ஐ வேற்றுமை வரும். 'மரத்தைக் கிளையை வெட்டினான்' என ஒரு தொடரில் இரண்டிடத்தும் ஒரே வேற்றுமையுருபு வரின் தெளிவுபடாது. எனவே மரத்தினது கிளையை வெட்டினான் என முதலுக்கு அதுவும் சினைக்கு ஐயும் சேர்த்துக் கூறவேண்டும் என்பதாம். 'முதற்கண்' – முதலாகிய மரம் என்ற சொற்கண்; முதலிலுள்ள சொல்லில் என்றுமாம்.

*முதலுக்கு ஐ வரின் சினைக்குக் கண் வரும்*

**முதல்முன் ஐ வரின் கண் என் வேற்றுமை**
**சினைமுன் வருதல் தெள்ளி தென்ப. (572)**

இவை மாறிநின்று, முதல் சொல்லுக்கு ஐ வரின் சினைச் சொல்லுக்குக் கண் வேற்றுமை வருதல் தெளிவுடைத்தாகும் என்பர். மரத்தைக் கிளைக்கண் வெட்டினான்.

*முதலும் சினையும் இடம்நோக்கி உணரப்படும்*

**முதலும் சினையும் பொருள்வேறு படாஅ;**
**நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே. (573)**

முதல் என்பதும் சினை என்பதும் வெவ்வேறல்ல. எது முதல் எது சினை என்பதைச் சொல்லுமிடத்து, அவ்வாறு சொல்லப்படும் சொல்லை வைத்துக் குறிப்பால் உணரப்படும். மரம் முதலாகும் போது கிளை சினையாகும்; கிளை முதலாகின் கொம்பு அதன் சினையாகும். குறிப்பு – எதற்கு எதுமுதல், எது சினை என்ற சொற்குறிப்பு.

*பிண்டப் பெயரும் உறுப்பும் முதலும் சினையும் போல் அமையும்*

**பிண்டப் பெயரும் ஆயியல் திரியா**
**பண்டியல் மருங்கின் மரீஇய மரபே. (574)**

பல் பொருட் தொகுதியாகிய பிண்டப் பெயரும், முற்கூறிய அவ்வியல்பில் மாறாது, பிண்டமும் அதன் உறுப்பும் முதலும் சினையும்போல் உருபேற்குமென்பதாம் (571, 572). இது தொன்றுதொட்டு வழங்கிவரும் மரபு பற்றியதாகும். சூளையது செங்கல்லை எடுத்தான். குப்பையை ஓரத்தின்கண் சிதறினான்.

### *ஒடுச்சொல் உயர்பொருளுடன் சேர்ந்து வரும்*

**ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே. (575)**

மூன்றாம் வேற்றுமையில், முன்பு 'அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி' எனப்பட்ட (558), ஒரு வினை ஒடுச்சொல், உயர்பொருளில் வரும் பெயரை அடுத்துவரும். 'ஆசிரியனொடு மாணாக்கர் வந்தார்'. 'ஒடு'ப் பெற்று ஒரே வினைகொள்ளும் தொடர்ச்சொற்களில் முன்னது உயர்புடையதாக வரவேண்டும் என்பதாம். அமைச்சரொடு அரசுச் செயலர் வந்தார் என்றே குறிப்பிட வேண்டும். மாற்றிக் கூறின் மரபுப் பிழையாகும்.

### *மூன்றும் ஐந்தும் (ஆனும் இன்னும்) ஏதுப்பொருளில் ஒன்றுடன் ஒன்று மயங்குதல்*

**மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய**
**ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி**
**நோக்கோ ரனைய என்மனார் புலவர். (576)**

மூன்றாம் வேற்றுமையிலும் ஐந்தாம் வேற்றுமையிலும் ஏதுப்பொருட்டாய் வருமென முன்பு கூறியபடி ஆக்கத்தைக் காரணத்தோடு கூறவரும் தொடரில், அவ்வீருருபும் பொருள் நோக்கில் ஒரு தன்மையவாகும் என்பர் புலவர். வாணிகத்தாற் செல்வன் ஆயினான். வாணிகத்திற் செல்வன் ஆயினான். முன்பு வேற்றுமையியலில் 'இன் ஆன் ஏது' (558) எனக் கூறியதன் தொடர்ச்சி இது. இவை இரண்டு உருபுகளும் ஏதுப் பொருட்டாய் வரும்போது ஒன்றுடன் ஒன்று மயங்கும் என்பதும் கருத்து.

### *நோக்கு அல் நோக்கமும் இரண்டில் ஏதுப் பொருட்டாகும்*

**இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கம்அவ்**
**விரண்டன் மருங்கின் ஏதுவு மாகும். (577)**

இரண்டாம் வேற்றுமையில் 'நோக்கலின்' என ஓரடிப்படை கூறப்பட்டது (556). கதிரை நோக்கும் என்பது காட்டு. அது கண்ணால், நோக்குவது. அதன்கண் 'நோக்கு அல் நோக்கம்' எனவும் ஒன்றுளது, கருமமல்லாச் சார்பு போல. அது

மனத்தால் நோக்குவது. வானை நோக்கி வாழும்குடி என்றால், வானத்தை நேரே பார்ப்பது அன்று - மழையை எதிர்பார்த்து வாழ்வது. இதை மழையான் வரும் பயன்நோக்கி; மழையின் பயன் நோக்கி எனவும் விரிக்கலாம். இவையே நோக்கு அல்நோக்கம் எனப்பட்டன. இரண்டாம் வேற்றுமைக்கண் கூறப்பட்ட நோக்கல் நோக்கம், முற்கூறிய மூன்றும் ஐந்துமாகிய இரண்டு வேற்றுமைக்கண் உள்ள ஏதுப்பொருட்டாகவும் ஆகும். அவ் இரண்டு - முற்கூறிய மூன்றாம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும். வானை நோக்குவது வானின் பயனோக்கியாதலின் இவை அனைத்தும் ஏதுப்பொருட்டாயின.

*உயர்திணை உறவுமுறைப் பெயரில் அது கெட்டு கு தோன்றும்*

**அதுஎன் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்**
**அதுஎன் உருபுகெடக் குகரம் வருமே. (578)**

ஆறாம் வேற்றுமை 'முறைமை'ப் பொருளில் வருதல் முற்கூறப்பட்டது (564). இன்றும் 'உறவு முறை' கூறுகிறோமல்லவா? அம் முறைமைப் பொருள் உயர்திணைக்கண் அமையும் ஆறாம் வேற்றுமைத் தொகையை விரிக்குங் காலத்து, அது என்னும் அதற்குரிய வேற்றுமையுருபு கெட, நான்காம் வேற்றுமைக்குரிய குகரம் வரும். எனக்கு மகன், நம்பிக்குத் தந்தை, 'கெட' என்றதனால், 'எனது மகன்' என நின்று, கெட்டமை பெறப்படும். இடைக்காலத்தில் 'அரனது தோழன்; 'நினது அடியாரொடல்லால்' என்பது போல் இது ஏற்கப்பட்டது என்பர் ஆறுமுகநாவலர்.

*பொருள்தடுமாறும் வினைச் சொல்தொடரை*
*இரண்டும் மூன்றுமாகப் பொருள் நிலைக்கேற்ப விரிக்கப்படும்*

**தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்**
**கடிநிலை யிலவே பொருள்வயி னான. (579)**

'புலிகொல் யானை' என்றால் புலியைக் கொன்ற யானையா? புலியாற் கொல்லப்பட்ட யானையா? எனத் தடுமாறுகிறதல்லவா? இதனையே தடுமாறு தொழிற்பெயர் என்றார். இங்ஙனம் பொருள் தடுமாறி வரும் வினைச்சொற்களுக்கு இரண்டாம் வேற்றுமையுருபும் மூன்றாம் வேற்றுமையுருபும் அவ்வப் பொருளுக்கேற்ப விரிக்கப்படுதல் நீக்கும் நிலைமை இன்று. பொருள் வயின் - அப் பொருள்படுதற்கண். கடிநிலை இல - இரண்டும் அவ்விடம் நோக்கி ஒக்கும் என்பதாம்.

*பொருள்தடுமாறும் வினைச் சொல்தொடர்கள் தெளிவுதரும் வினை முடிபு கொண்டு வேறுபாடறியப்படும்*

**ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்**
**வேற்றுமை தெரிய உணரு மோரே. (580)**

முற்கூறிய 'புலி கொல் யானை' என்பது போன்று தடுமாறு தொழிற் பெயர்த் தொடர்களில், இறுதியிலுள்ள பெயருக்குப் பிறகு, ஐயத்தை நீக்குமாறு வரும் சொற்களைக் கொண்டு, உணரவல்லவர்கள் இது இன்ன வேற்றுமைக்குரியது எனத் தெளிவர். மெய் அறி பனுவல் – ஐயமகற்றுமாறு வரும் கூற்று. உணருமோர் – சொல்வானது குறிப்பை உணரவல்லவர்கள். புலி கொல் யானை ஓடுகின்றது. புலியைக் கொன்றது யானை என உணரலாம். புலி கொல் யானைத்தந்தமிது. புலியாற் கொல்லப்பட்டது யானை என அறியலாம்.

*ஓம்படை கூறும் தொடர்களில் ஐயும், ஆனும் ஒருதன்மைத்தாய் வரும்*

**ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும்**
**தாம்பிரி விலவே தொகவரு காலை. (581)**

காத்தல் போற்றல் முதலிய ஓம்படைச் சொல்லுக்கு (556) வேற்றுமையுருபு தொக்கு வருமிடத்து, ஐ உருபாகவும், ஆன் உருபாகவும் பிரிவிலவாய் அதாவது ஒத்தகிழமையவாய் விரித்துணரப்படும். 'வழி பார்த்துப் போ' என்றால் வழியைப் பார்த்துப் போ என்றும் 'வழியான் வரும் ஏதம் பார்த்துப் போ' என்றும் இருவகையாகவும் விரிக்கலாம். இரண்டும் பொருந்தும். ஐ உருபுடன் ஆன் மயங்குமென்பதாம். வேற்றுமைகள் என்பன பெயர்ப்பொருளை வேறுபடுத்தி உணர்த்துவன. எவ்விதம் விரித்தால் பொருள் தெளிவு படுமென்பதே முக்கியமானது.

*வசிப்பதால் வரும் ஆறன் உருபு ஏழன் உருபாதலும் உண்டு*

**ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்கு**
**ஏழும் ஆகும் உறைநிலத் தான. (582)**

ஆறாம் வேற்றுமையில் வாழ்ச்சி எனவும் ஒரு பொருள் கூறப்பட்டது (564). வாழ்ச்சி – வாழ்க்கை, வாழ்தல், வசித்தல். காட்டில் வசிக்கும் யானையைக் 'காட்டது யானை' என்பர். 'காட்டு யானையை' இவ்வாறு காட்டது யானை என ஆறாவதாக விரித்தல் மட்டுமன்றி, ஏழாவதாக (காட்டுள் யானை), காட்டின்கண் வாழும் யானை எனவும் விரிக்கலாம். ஏனெனில் உறையும் நிலமாகலான் அதுவும் பொருந்தும் என்பதாம். உறை நிலத்தான – உறைநிலமாதலான்.

*கொடை ஏற்கும் தொடரில் கு தொக்கு அது வருதலுண்டு*

**குத்தொக வரூஉம் கொடையெதிர் கிளவி**
**அப்பொருள் ஆறற்கு உரித்து மாகும். (583)**

கொடையை ஏற்றுக் கொள்ளுதலைக் குறிக்கும் கொடை எதிர் கிளவியில், நான்காவதன் உருபாகிய 'கு' தொக்குவருதலை விரிக்குமிடத்து, அப்பொருள் ஆறாம் வேற்றுமைக்கு உரித்தாகவும் வரும். 'கருப்பர் பூசை' – கருப்பருக்குப் பூசை என விரிக்கவேண்டும். இது 'குத்' தொக வரும் கொடை எதிர்கிளவி. கொடை எதிர்தல் – பத்திமையுடன் கொடை நேர்ந்து படைத்தல். 'கருப்பரது பூசை' என விரித்தற்கும் உரியது அது என்பதே இச் சூத்திரப் பொருளாகும். ஏனெனில் அப்பூசை, கருப்பருக்கு உரிமையுடையதுமாகும்.

*அச்சத்தைக் குறிக்கும் தொடரில் ஐந்தும் இரண்டும் மயங்கி வரும்*

**அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும்**
**எச்சம் இலவே பொருள்வயி னான. (584)**

அச்சக் கிளவி என்பது அச்சப் பொருள் தரும் வேற்றுமைத் தொடர். இது இரண்டாம் வேற்றுமையில் 'அஞ்சலின்' என்றும் (556), ஐந்தாம் வேற்றுமையில் 'அச்சம்' என்றும் (562) கூறப்பட்டுள்ளது. எனவே கள்ளரை அஞ்சும் என்றும் கள்ளின் அஞ்சும் என்றும் இரண்டுவிதமாகவும் விரிக்கலாம். பொருள் தருவதில் இவை இரண்டுமே ஒத்தனவாகும். எச்சம் இல – குறைபடுதல் இல. அச்சத்தை உணர்த்தும் தொடரின்கண், பொருள்தருமிடத்தே, ஐந்தாம் வேற்றுமையும் இரண்டாம் வேற்றுமையும் தம்முள் குறைபடுவன அல்ல; இரண்டும் ஒப்பவரும் என்பதாம்.

*உருபும் பொருளும் இங்ஙனம் மயங்குவன தொன்றுதொட்டு வழக்காற்றில் வருவன*

**அன்ன பிறவும் தொன்னெறி பிழையாது**
**உருபினும் பொருளினும் மெய்தடு மாறி**
**இருவயின் நிலையும் வேற்றுமை எல்லாம்**
**திரிபிடன் இலவே தெரியு மோர்க்கே. (585)**

ஓர் உருபுக்குப் பதிலாக மற்றொன்றும் வருதல், ஒரே பொருளைப் பிறிதோர் உருபும் தருதல் என இவ்வாறு உருபும் பொருளும் தம்முள் ஒன்றுடன் ஒன்று தடுமாறி, இரண்டு விதமாகவும் வருமெனப்படும் வேற்றுமைகள், முற்கூறப்பட்டனவேயன்றி, அன்னன பிறவும் மிகப் பலவாகும்.

அவையனைத்தும் தொன்று தொட்டுவரும் வழக்காற்று நெறிப்படி, தவறின்றி வருவனவாகும். ஆராய்ந்து அறிந்தோர்க்கு, அவை திரிந்துவந்தன என்று கொள்ளப்படா. அவை தொன்னெறி பிழையாது வழங்கிவருவன. எனவே நாமாகத் திரித்துவழங்குதல் கூடாதென்பதாம். வேற்றுமைகள் சொல்வோன் குறிப்பின்வழி யெல்லாம் செல்லும் எல்லையற்ற வேறுபாடுடையன. அவற்றை எட்டாகவும், உள்வகைகளாகவும் பகுத்து, எல்லைக்குட்படுத்திப் பார்க்க முயலுதல் இலக்கண நெறியாகும். இதனை முன்னுதாரணமாகக் கொண்டு வழக்குவழிப்பட்ட அனைத்தையும் உணரவேண்டுமே தவிர, பிழைபட்டன எனத் தவறுதலாக எண்ணி விடுதல் கூடாதென்பதாம். "உருபினும் பொருளினும் மெய்தடுமாறி என்பது யாண்டு உருபு சென்றது ஆண்டுப் பொருள்சென்றது எனப்படும். யாண்டுப் பொருள் சென்றது ஆண்டு உருபு சென்றது எனப்படும்" என்ற இளம்பூரணர் விளக்கம் சிந்தித்தற்குரியது. மெய்தடுமாறி - வடிவம் தடுமாறி, வடிவம் மாறினும் பொருள் மாறாது.

### *உருபுகள் அடுக்கிவரும் தொடரின் முடிவு*

**உருபுதொடர்ந்து அடுக்கிய வேற்றுமைக் கிளவி**
**ஒருசொல் நடைய பொருள்செல் மருங்கே. (586)**

சொல்தோறும் உருபுகள் தொடர்ந்து அடுக்கிவரும் வேற்றுமைத் தொடர்கள் பொருளுணர்த்தும் பாங்கில், ஒரு முடிக்கஞ் சொல்லினால் முற்றுப்பெறும் நடையினையுடையவாம். ஒருசொல் நடைய - ஒரே தொடராய் ஒரு முடிக்கஞ் சொல்லால் நடந்து முடிவன. யானையது தந்தத்தை நுனிக்கண் வெட்டினான்.

### *தொடரின் இறுதியிலோ இடையிலோ உருபேற்ற பெயர்கள் நிற்கும்*

**இறுதியும் இடையும் எல்லா உருபும்**
**நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார். (587)**

வேற்றுமைத் தொடர்களில், உருபேற்ற சொற்கள் யாவும் செவ்விதாகப் பொருள்படுதற்கண், தொடரின் இறுதியிலோ, இடையிலோ நிற்றலை நீக்கமாட்டார்கள். எங்கு நின்றால் பொருள் சிறக்குமோ, அங்கு நிற்குமென்பது கருத்து. நெறிபடு பொருள் - முறைப்படி செவ்விதாகப் பொருள் தருமிடங்கள். உருபு - உருபேற்ற பெயர்கள். இறுதியில் நிலவுதலும் உண்டு; இடையில் நிலவுதலும் உண்டு; இங்குதான் என வரைந்து கூறமாட்டார்கள் என்பதாம். கண்டேன் சீதையை. கண்களால் கண்டேன். உருபு பெயரின் இறுதியிலேதான் நிற்குமென்ப்து முன்பு கூறப்பட்டது (553). உருபேற்ற பெயர் தொடரின் முன்பின்னாகப் பொருட் சிறப்புக்கேற்ப நிற்குமென்பது இங்குக் கூறப்பட்டது.

*வெவ்வேறு உருபுகள் வருதலும் தொக்குநிற்றலும் நெறிவழி வழங்கும் வழக்காற்றிடத்தன*

**பிறிதுபிறிது ஏற்றலும் உருபுதொக வருதலும்**
**நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப. (588)**

வேற்றுமை உருபேற்கும் பெயர்கள். பொருளுணர்த்தற்கேற்ப வெவ்வேறு உருபுகளை ஏற்று வருதலும், உருபு மறைந்து நின்று அவ்வேற்றுமைப் பொருளை உணர்த்தலும் என்ற இவை, முறைப்பட வழங்கிவரும் வழக்காற்று நெறியின என்பர். காட்டுயானை என்பதை உடைமைப் பொருளில் விரிப்பின் காட்டது யானை ஆகும்; வாழ்ச்சியாகிய இடப் பொருளில் விரிப்பின் காட்டின்கண் யானை ஆகும். காட்டுக்கு யானை, காட்டை யானை என்றெல்லாம் விரிப்பிற் பொருள்படா. எனவே பொருளுணர்த்தற்கேற்ப உருபும் பொருளும் விரியும் எனலாம். அதற்கு அடிப்பட வழங்கிவரும் வழக்காற்று மரபே அடிப்படையாகும். இலக்கணத்தைவிட, வழக்காறே இலக்கணமாக உருப்பெறுதலின் அவ்வழக்காற்றுக்கே தொல்காப்பியர் சிறப்பிடம் தருவதை இந்நூற்பாக்களால் அறியலாம். நெறிபட வழங்கிய வழிமருங்கு - முறைப்படி மரபு மாறாமல் வழங்கி வந்த உலகவழக்கு.

*ஐயும் கண்ணும் தவிர்த்தவை தொடரிறுதியில் தொக்கு வாரா*

**ஐயும் கண்ணும் அல்லாப் பொருள்வயின்**
**மெய்யுருபு தொகாஅ இறுதி யான. (589)**

ஐயும் கண்ணும் அல்லாத ஏனைய ஆல், கு, இன், அது என்ற வேற்றுமைப் பொருள்களிடத்து, அவ்வேற்றுமையைக் காட்டும் வடிவங்களான அவ் உருபுகள், தொடர் இறுதிக்கண் தொக்குவாரா. முன்பு உருபு தொடர்ந்த பெயர்கள் நிலத்தைக் கடந்தான் என இடையிலும் கடந்தான் நிலத்தை என இறுதியிலும் வருமென்றார் (587). தொக்கு வருதலும் உண்டென்றார்(588), இங்கு ஐயும் கண்ணும் மட்டும் தொடர் இறுதியில் உருபுதொக்கு வருமென்றும் அவை அல்லாத பிற உருபுகள் அவ்வாறு வாரா எனவும் தெளிவுபடுத்துகிறார். கடந்தான் நிலம், இருந்தது குன்றத்து என வரலாம். வந்தான் சாத்தனொடு என்பதை வந்தான் சாத்தன் என 'ஒடு' உருபு தொகக் கூறினால் பொருள் வேறுபட்டுவிடும். 'முன்னேறினான் முயற்சியால்' என்பதை அவ்வாறே, உருபு தொகுத்து, 'முன்னேறினான் முயற்சி' என்றால் அப்பொருள் படாது வேறாகும்.

*பொருள்வழியேதான் உருபுசெல்லும்*

**யாதன் உருபிற் கூறிற் றாயினும்**
**பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும். (590)**

எந்த ஓர் உருபினாற் கூறப்பட்டதாயினும் அவ்வுருபின் பொருளே வேண்டுமென்பதில்லை; அத்தொடரான் எப்பொருள் உணரப்படுகிறதோ, அப்பொருளையே அவ் வேற்றுமையுருபு உணர்த்தும். பொருள் போகும் வழியிலேயே உருபு போகுமே தவிர, உருபுக்குரியதிப் பொருள் என, உருபுவழியில் பொருள்செல்லாது என்பதாகும். 'மணற்கீன்றமுளை' என்பதில் 'மணலின்கண் ஈன்ற முளை' என்ற பொருளே பெறக்கிடப்பதால், நான்காம் வேற்றுமையுருபு ஈண்டு இடப்பொருள் தருதல் காணலாம். உருபுகள் பொருள்செல்லும் வழியில் செல்கின்றன எனலாம். அல்லாது உருபுகள் செல்லும்வழி பொருளுக்கு இயைபுடையதாக நெகிழ்ச்சிபெறும் எனவும் கூறலாம்.

*எதிர்மறையாகக் கூறினும் வேற்றுமையுருபு மாறாது*

**எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபின்**
**பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே. (591)**

வேற்றுமைத் தொடர்களின் வினைமுடிபுகளை எதிர்மறுத்துச் சொன்னாலும், அவ் வேற்றுமைச் சொற்கள் தத்தமக்கோதிய 'செயப்படு பொருள்' முதலாய பொருள்நிலையினின்றும் திரியா என்பதாம். தத்தம் மரபின் பொருள் நிலை – வேற்றுமைகட்கோதிய பொருள்நிலைகள். மரத்தை வெட்டிலன்; கத்தியால் குத்திற்றிலன்.

*செய்யுளில் கு ஐ ஆன் உருபு இறுதி அகரம் பெறுதல்*

**கு ஐ ஆன் என வரூஉம் இறுதி**
**அவ்வொடும் சிவணும் செய்யு ளுள்ளே. (592)**

பெயரின் பின்வரும் கு ஐ ஆன் என்ற வேற்றுமை உருபுகளின் இறுதி செய்யுளுள் வரும்போது, அகரத்தொடும் பொருந்தும். கடிநிலை இன்றே ஆசிரியர்க்க (389). ஆசிரியர்க்கு எனற்பாலது அகரம் பெற்று ஆசிரியர்க்க என வந்துளது. 'காவலோனைக் களிறஞ்சும்மே' என்பது, செய்யுளில் 'காவலோனக்களிறஞ்சும்மே' என்றும் வரும். இதில் ஐ, 'அ' ஆயிற்று. 'ஒல்வழி அறிதல் வழக்கத் தான' (246). ஆன் – ஆன என ஆயிற்று.

*அஃறிணைப் பெயர்களில் குவ்வும் ஐயும் இறுதி அகரம் பெறாமை*

**அ எனப் பிறத்தல் அஃறிணை மருங்கின்**
**குவ்வும் ஐயும் இல்லென மொழிப. (593)**

முற்கூறிய மூன்று உருபுகளில் குவ்வும் ஐயும் அஃறிணைப் பெயர்க்கண் ஈறாகநின்று, 'அ' கரம் பெறுதல் இல்லை என்பர். உயர்திணையில் மட்டுமே அவை

அகரம் பெறும் என்புதாம். எனவே ஆன் உருபு மட்டும் உயர்திணையிலும் அஃறிணையிலும் அகரம் பெறும் என்பதாயிற்று.

### *நான்காம் வேற்றுமை உருபு பல வேற்றுமைப் பொருள்களிலும் மயங்கி வருதல்*

**இதனது இதுஇற்று என்னுங் கிளவியும்**
**அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்,**
**அதனாற் செயற்படற்கு ஒத்த கிளவியும்,**
**முறைக் கொண்டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்,**
**பால்வரை கிளவியும், பண்பின் ஆக்கமும்,**
**காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்,**
**பற்றுவிடு கிளவியும், தீர்ந்துமொழிக் கிளவியும்,**
**அன்ன பிறவும் நான்கன் உருபில்**
**தொன்னெறி மரபின தோன்றலாறே. (594)**

பல வேற்றுமைகளை நான்காம் வேற்றுமையாகக் கூறும் மரபு தொன்றுதொட்டுக் காணப்படுவதை இந் நூற்பா விளக்குகிறது. 'இதனது இது இற்று' என்பது தொடங்கி ஒன்பது வேற்றுமைகள் நான்காம் வேற்றுமையாகவும் சொல்லப்படுதலைத் தொல்காப்பியர் கூறி, அவை போல்வன பிறவும் பழமையான மரபுநெறிப்பட்டு வழங்கிவருவன என முடிக்கிறார். நான்காம் உருபில் தோன்றலாறு தொன்னெறி மரபின என முடிக்க. இதனது இது இற்று – யானையது கோடு கூரிது. ஆறாகிய இதை யானைக்குக் கோடு கூரிது என நான்காம் வேற்றுமையிலும் வழங்குவர். அதனைக் கொள்ளும் பொருள் வயினானும் – 'அதனின் கோடல்' என, (ஒன்றை அதனாற் கொள்ளும் என) வரும் மூன்றாம் வேற்றுமையை, நான்காகச் சொல்லுவதிது. காசால் வாங்கிய காயை, காசுக்கு வாங்கிய காய் எனல். அதனாற் செயற்படற்கு ஒத்த கிளவி – ஒன்றனாற் செய்தற்குத் தகுதியுடையதெனப்படும் மூன்றாம் வேற்றுமைத் தொடர். அவனால் செய்ய இயலும் என்பதை அவனுக்குச் செய்ய இயலும் என்பர். உறவு முறையைக் குறிக்கத் தோன்றிய பெயர்ச்சொல் குட்டியது தாய் என்பதைக் குட்டிக்குத் தாய் எனவும் கூறுதல். பால்வரை கிளவி நிலத்தை எல்லை வரைந்து கூறுவது. மதுரையின் தெற்கே என்பதை மதுரைக்குத் தெற்கே என்பர். பண்பின் ஆக்கம் – ஐந்தாலாகிய சாத்தனின் நெடியன் என்பது சாத்தனுக்கு நெடியன் என வருவது. ஏழாவதாகிய காலத்தைச் சுட்டும் வேற்றுமைத் தொடர் நான்காகக் கூறப்படுவதுண்டு. தக்க சமயத்தின்கண் வந்தான், தக்க சமயத்திற்கு வந்தான். பற்றுவிடுதலையும் தீர்ந்து நீங்குதலையும் குறிக்கும் ஐந்தாம் வேற்றுமைகளும்

நான்காக வழங்கி வரும். ஆசையின் பற்றுவிட்டான் – ஆசைக்குப் பற்றுவிட்டான். வீட்டின் வெளிப்பட்டான் – வீட்டுக்கு வெளிப்பட்டான்.

### *ஏனைய உருபுகளும் அங்ஙனம் மயங்கி வருமெனல்*

**ஏனை உருபும் அன்ன மரபின;**
**மான மிலவே சொல் முறையான. (595)**

நான்காம் உருபு தவிர, ஏனைய உருபுகளும், பிற வேற்றுமைப் பொருள்களைக் குறிக்கும் மரபுடையனவாம். அத்தகு சொல் வழக்காற்றில் குறையெதுவுமில்லை. நூலை ஆராய்ந்தான் என்பது நூலால் ஆராய்ந்தான், நூலுள் ஆராய்ந்தான் எனவும் சொல்லப்படும். இரண்டாம் வேற்றுமையாகச் சொல்லவேண்டியதை, மூன்றாகவும் ஏழாகவும் சொல்லினும் பொருள் பொதுப்பட ஒத்துவருதல் காண்க.

### *வேற்றுமைக்கு அடிப்படையான வினைச்சொல் உணர்த்தும் பொருள்கள்*

**வினையே செய்வது செயப்படு பொருளே**
**நிலனே காலம் கருவி என்றா**
**இன்னதற்கு இதுபயன் ஆக என்னும்**
**அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ**
**ஆயெட் டென்ப தொழில்முதல் நிலையே. (596)**

வினைச் சொல்லே பெயர்ப் பொருளை வேறுபடுத்த அடிப்படைக் காரணமாகிறது. எனவே அவ்வினைச் சொல் எவ்வெவற்றை விளக்கவல்லதென்பது இங்கு தொகுத்துக் கூறப்படுகிறது. தொழில் முதல்நிலை – வினைச்சொல்லின் அடிப்படையான தன்மை. ஆய் எட்டு என்ப – அவ் வெட்டு வகையின என்று கூறுவர். அவையாவன : வினையே – செயல் இதுவென உணர்த்தல். கற்றான். கல்வி கற்றலென்ற செயல் உணரப்படும். செய்வது – செய்ததாகிய ஒன்றுண்டு (எழுவாய்). இங்கு அது மாணவன் என்பதை உணர்த்தும். செயப்படுபொருள் – கல்வியை, நூலை என உணரப்படும். நிலன் – நிகழுமிடம். பள்ளி அனையதொன்று. காலம் – வாயால் வாசித்து, கரும்பலகையில் எழுதி எனக் கருவியும் உணரப்படும். இன்னதற்கு ஆக – பட்டம் பெறுதற்காக. இதுபயன் ஆக – அறிவை வளர்த்துக்கோடல், திறமையை வளர்த்துக் கோடலுக்காக. இறுதியில் கூறிய இரண்டுடன் கூட்டி எட்டுக் கூறுகளும் வினையால் உணரப் படுவனவாம். இவ் வினைப் பயன்களை உணர்த்தவே வேற்றுமைகள் தோன்றுகின்றன.

*எட்டுப்பொருள்களில் சிற்சில குறைந்தும் வரலாம்*

**அவைதாம்,**
**வழங்கியல் மருங்கின் குன்றுவ குன்றும். (597)**

அவற்றுள், வழக்காற்றின்கண் எட்டும் தெரிதல் வேண்டுமென்ற கடப்பாடில்லை. சிற்சில குறைந்தும் வரும். சில வெளிப்படையாகவும் மற்றும் சில குறிப்பாகவும் உணரப்படுதலும் கூடும். குன்றுவ குன்றும் - குறைவன குறையும்.

*வேற்றுமைத் தொடர்களாய் விரியும் ஆகுபெயர் இலக்கணம்*

**முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்,**
**சினையிற் கூறும் முதலறி கிளவியும்,**
**பிறந்தவழிக் கூறலும், பண்புகொள் பெயரும்,**
**இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்**
**வினைமுதல் உரைக்கும் கிளவியொடு தொகைஇ**
**அனைமர பினவே ஆகுபெயர்க் கிளவி. (598)**

ஆகுபெயர்ச் சொற்கள் குறிப்பால் பொருள் தருவன. இங்கு பெயர்கள், ஆகுபெயர்களாய் நின்று விரிக்கப்படும்போது, பல்வேறு வேற்றுமைத் தொடர்களாய் விரிதலால், இவ் ஆகுபெயர் இலக்கணம் வேற்றுமை மயங்கியலில் கூறப்பட்டுள்ளது. பலா இனிக்கும்; பலாவினது பழம் இனிக்கும் என ஆறாம் வேற்றுமையாக விரிக்க வேண்டும். காஞ்சிபுரம் எடுத்தோம். காஞ்சிபுரத்தின்கண் நெய்த பட்டு எடுத்தோம். இவ்வாறு ஆகுபெயர்கள் வேற்றுமைத்தொடர்களாய் விரித்துப் பொருளுணரப்படும்.

முதலிற் கூறும் சினை அறி கிளவி - முதலால் சினையை அறியும் சொல். பலா சுவையாகவுள்ளது. பலாப்பழத்தைக் குறித்தது. சினையிற் கூறும் முதலறிகிளவி - சினையால் முதலை அறியும் சொல். தலைக்குப் பத்து ரூபாய் கொடுத்தார்கள். பிறந்த வழிக்கூறல் - ஒன்று தோன்றிய இடத்தால் அப்பொருளை உணர்த்தல். காஞ்சிபுரம் வாங்கினோம். பண்புகொள் பெயர் - பண்பினால் அப் பொருளுக்குப் பெயர் கூறல். பசுமைப் புரட்சி (பயிர்வளம்). இயன்றது மொழிதல் - காரியத்தை அஃதியன்ற காரணத்தால் மொழிதல். மின்வெட்டு நீடிக்கும். (மின்சார நிறுத்தம். வெட்டு - காரணம், அதனால் நின்றமை காரியம்.) இருபெயரொட்டு - அடையும் பெயருமாய் இணைந்து நிற்கும் சொற்கள். தென்னம்பால் இனியது (தென்னையின் பாலனைய கள்). வினை முதல் உரைக்கும் கிளவி - வினை முதலால் அவன் செய்த பொருளை உணர்த்தல். கம்பரைக் கற்கவேண்டும் (கம்பர் செய்த காப்பியத்தை). அத்தகைய மரபினவாய் வருவன ஆகுபெயர்ச் சொற்களாகும்.

*அவை தற்கிழமையாயும் பிறிதின் கிழமையாயும் வருதல்*

**அவைதாம்,**
**தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்**
**ஒப்பில் வழியான் பிறிதுபொருள் சுட்டலும்**
**அப்பண் பினவே நுவலுங் காலை. (599)**

அவ் வாகுபெயர்கள் தத்தம்மோடு உறவும் ஒட்டுதலுமுடைய பொருள்களுடன் பொருந்தி வருதலும் ஒத்துடைமையில்லாத பிற பொருள்களைச் சுட்டிக்கூற வருதலும் என அவ்விரண்டு பண்புகளையுடையன. நுவலுங்காலை – விளக்கிச் சொல்லுமிடத்து. பலா இனிக்கிறது – பலாப் பழத்தைச் சுட்டுதல் உறவுடையதற்கு ஆகி வந்ததாகும். கூறைநாடு உடுத்தாள் – இடத்தொடர்பன்றி, வேறு ஒட்டுதல் இல்லை.

*வேற்றுமை வழியில்வைத்து ஆகுபெயர்களை விரித்துணர வேண்டும்*

**வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும். (600)**

பெயர்கள் ஆகுபெயர்களாவதை வேற்றுமைகளை வைத்தே உணரவேண்டி யிருப்பதால், அவ் வேற்றுமையின் பக்கலில் வைத்து ஆகுபெயர்களாவதைப் போற்றி அறிதல் வேண்டும். 'தண்ணீரை இறக்கு' என்றால் தண்ணீர் கொண்டு வந்த குடத்தை இறக்கு என விரிக்க வேண்டும். பலா இனிது என்றால் பலாமரத்தினது பழம் இனிது என விரித்தல் வேண்டும். காஞ்சிபுரம் வாங்கினோம் என்றால் காஞ்சிபுரத்தின்கண் நெய்யப்பட்ட பட்டினை வாங்கினோம் என விரியும். கம்பரைப் பயில்க என்றால் கம்பரால் எழுதப்பட்ட காப்பியத்தைப் பயில்க என்றாகும். அதனால்தான் ஆகு பெயர்களை வேற்றுமை மருங்கில் போற்றியறியவேண்டும் என்றார் தொல்காப்பியர். வேற்றுமை மயங்கியலுள் ஆகுபெயரிலக்கணம் வந்ததன் நுட்பத்தையும் நோக்கியுணர்தல் வேண்டும்.

*அளவைப் பெயர்களெல்லாம் ஆகுபெயர்களாதல்*

**அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி**
**உளவென மொழிப உணர்ந்திசி னோரே. (601)**

முகத்தலவைப் பெயர்களும் (நாழி, உழக்கு), நிறுத்தலளவைப் பெயர்களும் (தொடி, கழஞ்சு), முன்சொன்ன ஆகுபெயர்களுடன் சேர்த்துப் பார்க்குமிடத்து, ஆகுபெயராதற்குரியனவாம் என்பர், நன்கு கற்ற அறிஞர்கள்.

ஒரு நாழி கொடு என்பது நாழி அளவுள்ள பொருளை, ஒரு கிலோ கொடு என்பது, கிலோ அளவுள்ள பொருளை. இவ்வாறே நீட்டல், எண்ணலளவைப் பெயர்கள் யாவும் ஆகுபெயராதற்குரியன.

### ஆகுபெயர்கட்குப் புறனடை

**கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்**
**கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே. (602)**

முன்பு கூறப்பட்டனவல்லாத பிற ஆகுபெயர்களும் தோன்றுவன உள. அவற்றை மேற் சொல்லப்பட்ட இலக்கணத்தால் அறிந்து கொள்க என்பதாம். பாவை போல்வாளைப் பாவை என்பது உவமையாகுபெயர். யாழ் கேட்டான் என்றால் யாழில் எழும் இசை கேட்டான் என்பதாம். இவ்வாறு ஆகு பெயர்கள் மிகப் பலவாக விரிந்து கொண்டே செல்லும்.

# 4. விளிமரபு

முருகன் என்பது பெயர்ச்சொல். அணிமையிலுள்ள அவனை 'முருகன்!' என்று அழைப்பது அதனின்றும் வேறுபட்டது. இங்ஙனம் படர்க்கைப் பெயரைத் தன்முகமாக அழைக்கும் குறிப்புள்ளதனை விளிவேற்றுமை கொண்டதென்பர். முருகனே, முருகா, முருக என்றெல்லாம் விளி ஏற்கும்போது ஏற்படும் பெயர் இறுதி மாற்றங்களையே, விளி வேற்றுமை உருபுகள் என்பதுண்டு. ஈறு திரிதல், ஈற்றயல் நீடல், பிறிது வந்தடைதல், இயல்பாதல் என்பன பெயர்கள் விளியேற்குங்கால் ஏற்படும் மாற்றங்களாகும். இம் மாற்றங்களை இவ்வியல் விளக்குகிறது. இவை சொல்மரபுகளாய்க் காலந்தோறும் மாறியும் பழைய மரபை நிலைநிறுத்தியும் புதிய மரபுகளை ஏற்றும் உலகில் வழங்கி வருவனவாதலின், இவற்றின் இலக்கணம் கூறும் இவ்வியலை 'விளி மரபு' எனச் சுட்டினார் தொல்காப்பியர். விளியேற்கும் பெயர்களைச் சுட்டிய அவர் விளியேலாப் பெயர்கள் என ஒரு வகை இருப்பதை எடுத்துக்காட்டியுள்ளார். உயர்திணைப் பெயர்களுக்கு விளியேற்கும் மரபினை விரிவாக முதலிற்கூறி, விரவுப் பெயர்களுக்கும் அஃறிணைப் பெயர்களுக்கும் சுருக்கமாக இறுதியில் கூறியுள்ளார். உயிரீறு, மெய்யீறு வரிசையில், நான்கும் நான்குமாக எட்டு ஈறுகளை வரன்முறைப் படுத்தி, இவையிவை விளியேற்கும் எனவும் இவையிவை விளிஏலா எனவும் அவர் கூறும் நெறிமுறை ஆய்வுத்திறனுடன் அமைந்திருப்பதைக் காணலாம்.

### இயல் கருத்து நிரல்

**விளிவேற்றுமை இலக்கணம்**

விளிவேற்றுமை எனப்படுபவை, அவ்விளியை ஏற்கும் பெயர்களோடு தெளிவுறத் தோன்றும் இயல்பை உடையனவாகும்.

அவை இவை என அறியுமாறு, வழக்கில் வைத்து விளக்கிக் கூறுவர்.

**உயிர் ஈறுகள் உயர்திணைப் பெயர்களில் விளியேற்றல்**

அவையாவன, உயர்திணையிடத்து, அத்திணைக்குரிய பொருளைச் சுட்டி விளிகொள்ளும் பெயர்களாய், இ . உ ஐ ஓ என்னும் உயிர் இறுதிகளையுடைய அப்பகுதிப் பட்ட நான்கு வகையினவாகும்.

**இ, ஐ ஈறுகள்**

அவற்றுள் இ ஈறு ஈ ஆகும்; ஐ ஈறு ஆய் ஆகும், விளியேற்கும் போது. செல்வி – செல்வீ! நங்கை – நங்காய்!

**ஓ, உ ஈறுகள்**

ஓ ஈறும் உ ஈறும் ஏகாரம் பொருந்தும். கோ – கோவே! முருகு – முருகே!

**உ : குற்றியலுகர ஈறு**

முன்னர் உகரம் எனப்பட்டது குற்றியலுகர ஈறாகும். மருது, சுப்பு, வேந்து என இவை குற்றியலுகர ஈறுகளாகும். இவை முறையே மருதே, சுப்பே, வேந்தே என விளிக்கப்படும்.

**விளியேலாப் பெயர்கள்**

உயர்திணையில் ஏனைய உயிரீற்றுப் பெயர்கள் விளிஏலா என்பர் புலவர்.

**அளபெடையில் இகர ஈற்றுப் பெயர்கள்**

அளபெடையிலும் மிகுமாறு மிகநீண்டு நான்கு, ஐந்து மாத்திரை அளவு ஒலிக்கும் இகர ஈற்றுப்பெயர்கள் இயல்பாய் விளியேற்கும் செய்கையையுடையன என்று கூறுவர் ஆசிரியர். (செல்வீஇஇ

**முறைப்பெயர்களில் ஐ ஈறு**

முறைப்பெயர்களில் ஐ இறுதி ஆய் ஆகாது ஆ வொடு முடிந்து நிற்றற்கு உரியவும் உள. (அன்னை – அன்னா.)

**அண்மை விளியில் உயிர் ஈறுகள்**

முற்கூறிய நான்கு உயிரீற்றுப் பெயர்களும் அண்மை விளிச் சொற்களாய் நிற்கும் போது இயல்பாகும். (செல்வி! கனகு!)

**மெய்யீறுகள் உயர்திணைப் பெயர்களில் விளியேற்றல்**

ன ர ல ள என்னும் நான்கு மெய்யீறுகளையுடையனவே, புள்ளி ஈற்று உயர்திணைப் பெயர்களில் விளியேற்கும் பெயர்களாகும்.

**விளியேலாப் பெயர்கள்**

ஏனைய புள்ளி ஈற்றுப் பெயர்கள் விளி கொள்ளமாட்டா.

**அன் ஈறு**

அவற்றுள் னகர மெய்யீற்றில் ஒன்றாகிய அன் என்னும் இறுதி 'ஆ' ஆகும். (கண்ணன் – கண்ணா!)

**அண்மை விளியில் அன் ஈறு**

அவ் அன் ஈறு அண்மைவிளிச் சொற்களில் அகரமாய் முடியும். மன்னன் – மன்ன! சேரன் – சேர!

**ஆன் ஈறு**

ஆன் ஈற்று உயர்திணைப் பெயர்கள் இயல்பாய் நின்று விளியேற்கும். கருத்தான்! பொய்சொல்லான்! நல்லான்!

**ஆன் ஈற்று வினையாலணையும் பெயர்கள்**

வினைச் சொல்லாற் கூறும் 'ஆன்' என்னும் ஈற்று வினையாலணையும் பெயர்கள், விளியேற்கும்போது ஆய் ஆகும். (அருளினான் – அருளினாய்!) தொல்காப்பியர் வினையாலணையும் பெயர்களை எல்லாம் 'தொழிற்பெயர்' என்றே குறிப்பிடுகிறார்.

**ஆன் ஈற்றுப் பண்புகொள் பெயர்கள்**

ஆன் ஈற்றுப் பண்புகொள் பெயர்களும், முற்கூறிய வினையாலணையும் பெயர்கள் போல, இறுதி 'ஆன்', 'ஆய்' ஆகும். (நல்லான் – நல்லாய்!)

**ஆன் ஈற்று அளபெடைப் பெயர்கள்**

ஆன் ஈற்று அளபெடைப் பெயர்கள், முற்கூறிய இகர ஈற்று அளபெடைப் பெயர்கள் போல (610), மூன்று மாத்திரையின் நீண்டு, இயல்பாய் விளியேற்கும் (பெம்மாஅன்!)

**னகர ஈற்று முறைப் பெயர்கள்**

னகர ஈற்று முறைப் பெயர்ச் சொற்கள் ஏகாரம் பெற்று விளியேற்கும். (மகன் – மகனே!)

**விளியேலாப் பெயர்கள்**

தான் என்னும் விரவுப் பெயரும் அவன் இவன் உவன் என்னும் சுட்டு முதற் பெயர்களும் யான் என்னும் பெயரும் யாவன் என்னும் வினாப் பெயரும் அத்தகையன அனைத்தும் விளிஏற்கமாட்டா.

**ரகர ஈறு**

**ஆர், அர் ஈறுகள்**

ரகர மெய்யீற்றுப் பெயர்களுள் ஆர், அர் ஈற்று உயர்திணைப் பெயர்கள், விளி ஏற்குங்கால், இறுதியில் 'ஈர்' ஆகத் திரியும். (நண்பர் – நண்பீர்!)

அவ்விரண்டு ஈறுகளும் வினைப் பெயர்களாயின், முற்கூறிய 'ஈர்' உடன், ஏகாரம் பெறுதலும் குற்றமின்று என்பர், விளங்கிய அறிவினையுடையார். (கண்டார் – கண்டீர் – கண்டீரே)

அவை இரண்டும் பண்புப் பெயர்களுக்கு ஈறாய் வருமாயின், அவ் ஈற்று வினையாலணையும் பெயர்களுக்கு ஓதிய இலக்கணப்படி விளியேற்கும்போது, ஈர் ஆகத் திரிந்தும், ஈரொடு ஏகாரம் பெற்றும் முடியும் என்பதாம். (பெரியர் – பெரியீர் – பெரியீரே, பெரியரே!)

**ரகர ஈற்று அளபெடைப் பெயர்கள்**

ரகர ஈற்று அளபெடைப் பெயர்கள், னகர ஈற்று அளபெடைப் பெயர்கள் போல, மூன்று மாத்திரையின் நீண்டு இயல்பாய் விளியேற்கும். (பெரியீஇர்)

**ரகர ஈற்றுச் சுட்டுமுதற் பெயர்கள் விளிஏலாமை**

ரகர ஈற்றுச் சுட்டுமுதற் பெயர்கள் (அவர் இவர் உவர்), னகர ஈற்றுச் சுட்டுமுதற் பெயர்கள் போல விளி ஏற்கமாட்டா.

**விளியேலாப் பெயர்கள்**

நும் என்பது திரிந்த நீயிர் என்னும் பெயர், யாவர் என்னும் வினாப் பெயர் ஆகிய அவை இரண்டும் முற்கூறிய சுட்டுப் பெயர்களின் இயல்புப்படி நடக்கும். அதாவது விளி ஏலா.

**ல, ள ஈறுகள்**

கூறாது எஞ்சியுள்ள ல, ள ஈற்றுப் பெயர்கள், ஈற்றயலில் நின்ற எழுத்துக்கள் நீண்டு விளியேற்கும். (அண்ணல் – அண்ணால், மக்கள் – மக்காள்!)

அவ்விரண்டு மெய்யீற்றுப் பெயர்களும், ஈற்றயல் நெட்டெழுத்தாக இருப்பின், இயல்பாக நின்று விளியேற்கும். (மீனாள்! சிட்டாள்! ஒப்பிலாள்!)

**ஆள் ஈறு**

வினைப் பெயர், பண்புப் பெயர் இரண்டிலும் வரும் ஆள் இறுதி விளியேற்கும் போது ஆய் ஆகும். (கண்டாள் - கண்டாய்! நல்லாள் - நல்லாய்!)

**ளகர ஈற்று முறைப் பெயர்கள்**

ளகர ஈற்று முறைப்பெயர்ச் சொல் னகர ஈற்று முறைப் பெயர்ச் சொல் போல (621), ஏகாரம் பெற்று விளி ஏற்கும். (மகள் - மகளே)

**ளகர ஈற்று விளியேலாப் பெயர்கள்**

ளகர ஈற்றுச் சுட்டு முதலாகிய பெயர்களும் (அவள் இவள் உவள்), ளகர ஈற்று வினாப் பெயரும் (யாவள்) முற்கூறியவாறு (622, 627) விளி ஏலா.

**ல, ள ஈற்று அளபெடைப் பெயர்கள்**

ல, ள ஈற்று அளபெடைப் பெயர்கள் முற்கூறிய அளபெடைப் பெயர்கள் போல (610, 620, 626), மாத்திரை அளபு நீண்டு இயல்பாய் நின்று விளியேற்கும், (வேளஎல்! சிட்டாஅள்!)

**அஃறிணை விரவுப் பெயர்கள் விளியேற்றல்**

முன்பு கூறிய உயிரீறு நான்கையும் மெய்யீறு நான்கையும் உடைய அஃறிணை விரவுப் பெயர்கள் விளியேற்கும் போது அவ் உயர்திணைப் பெயர்களுக்குக் கூறிய நெறிமுறைகளையே உடையனவாகும். (சாத்தீ! மருதே!) இவை மாடுகளையும் குறிப்பதால் விரவுப் பெயர்கள்.

**அஃறிணைப் பெயர்கள் விளியேற்றல்**

முற்கூறிய புள்ளிகளையும் உயிர்களையும் ஈறாகவுடைய அஃறிணைப் பெயர்களனைத்தும், விளித்துக் கூப்பிடும் காலம் தோன்றும் போது, ஏகாரம் பெறுதலைத் தெளிவு பெற உடையனவாகும். (மானே, மரகதமே, மாமயிலே)

**சேய்மை விளியில் மூவகைப் பெயர்களும்**

விளியேற்கும் என்ற, மூவகையான (உயர்திணைப் பெயர், அஃறிணை விரவுப் பெயர், அஃறிணைப் பெயர்) அனைத்துப் பெயர்களும் சேய்மையிடத்தே கூப்பிடும் உலக வழக்கின்கண், விளியேற்கும் போது தமக்குரிய மாத்திரையளபைக் கடந்து ஒலிப்பனவாகும். (சேராஅஅ, காடனேஎஎ, நாராஅஅய்)

### அம்ம எனும் உரையசைச்சொல் விளியாதல்

அம்ம என்ற உரையசைச்சொல் நீண்டு அம்மா எனவும் உரையாடலிடையே தன் முகமாக அழைக்க வரும். அது 'அம்மா' என்ற முறைப்பெயருடன் பொருந்தாதாயினும், அதனை விளியேற்கும் பெயர்களுள் ஒன்றாகக் கொள்வர், தெளிவுடைப் பெரியோர் (காதலியை என்னம்மா! கண்ணு!).

### விளியேலாத உறவுமுறைப் பெயர்கள்

த ந நு எ என அவ்வெழுத்துக்களை முதலாகக் கொண்டு தொடங்கி, னரள என முடியும், தம்மைச் சார்ந்தவர்களைக் குறிக்கும் முறைச் சொற்களும் (தமர், நமர், நுமர், எமர்) அவை போல்வன பிறவும் பெயர்த்தன்மை பெற்று விளங்கும் காலத்தே, விளியொடு பொருந்துதல் இல்லையாம்.

## விளி மரபு

*விளிவேற்றுமை இலக்கணம்*

**விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு**
**தெளியத் தோன்றும் இயற்கைய என்ப. (603)**

விளிவேற்றுமை என்பன, தம்மை ஏற்கும் பெயரொடு தெளிவாகத் தோன்றும் இயல்பினை உடையன என்பர் புலவோர். சிலர் விளியை வேற்றுமை அன்று என்பர். அவர்களை மறுத்துத் தெளியத்தோன்றும் என்று உறுதிபடக் கூறுகிறார். தனி உருபு இல்லை; விளியை ஏற்கும் பெயரிலேயே தோன்றும் என்பதாம். ஈறு திரிதல், ஈற்றயல் நீடல், பிறிது வந்தடைதல், இயல்பாதல் என நான்கு பகுதிய எனப் பெயரொடு தோன்றும் நிலையை இளம்பூரணர் விளக்கிக் கூறுவார். கொள்ளும் பெயர் – விளியேற்கும் பெயர்.

*தனித்து விரித்து விளக்கத்தக்கவை அவை*

**அவ்வே,**
**இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப. (604)**

அங்ஙனம் விளி கொள்ளும் பெயர்களை, அவை இவை என அறியுமாறு, வழக்கின்கண் வைத்து விளக்கிக் கூறுவர். மெய் பெற – வழக்குத் தோன்ற. கிளப்ப – விளக்கிக் கூறுவர். பிறவேற்றுமைகள் போலாது தனி இயலில் விளக்குதலால் இங்ஙனம் தொடங்குகிறார்.

*உயிர் ஈறுகள் விளியேற்றல் உயர்திணைப் பெயர்கள்*

**அவைதாம்,**
**இ உ ஐ ஓ என்னும் இறுதி**
**அப்பால் நான்கே உயர்திணை மருங்கில்**
**மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே. (605)**

அவையாவன, இ உ ஐ ஓ என்னும் உயிர் ஈறுகளையுடைய அப்பகுதிப்பட்ட நான்கு வகையினவாய், உயர்திணையிடத்து அத்திணைக்குரிய பொருள்களைச் சுட்டி விளி ஏற்கும் பெயர்கள் ஆகும். மெய்ப்பொருள் சுட்டிய – உயர்திணையிடத்தவாகிய பொருளைக் குறித்து வருவன. உயர்திணைப் பெயர்களேயன்றி, ஆகுபெயர் அன்மொழித் தொகைகளாய் உயர்திணை சுட்டிவருவனவும் அடங்க அப் 'பொருள்சுட்டிய' என விதந்து கூறியுள்ளார்.

*இ, ஐ ஈறுகள் விளியேற்றல்*

**அவற்றுள்**
**இ ஈ ஆகும் ஐ ஆய் ஆகும். (606)**

அவ் உயிரீறுகளுக்குள், இகர ஈறு ஈகாரமாகும்; ஐ ஈறு ஆய் ஆகும். மாதவி – மாதவீ! பூங்கொடி – பூங்கொடீ! மங்கை – மங்காய்!

*ஓ, உகர ஈறுகள் விளியேற்றல்*

**ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும். (607)**

ஓ ஈறும் உ ஈறும் ஏகாரத்தோடு பொருந்தும். இளங்கோ – இளங்கோவே! வேந்து – வேந்தே! மருது – மருதே!

*உகரம் குற்றியலுகர ஈறு எனல்*

**உகரம் தானே குற்றிய லுகரம். (608)**

மேலே உகர ஈறு எனப்பட்டது குற்றியலுகர ஈறாகும். வேந்து, மருது, சேது, என யாவும் குற்றியலுகர ஈறுகளாகும். திரு – திருவே எனச் சிறுபான்மை முற்றியலுகர ஈறுகளும் விளி ஏற்குமென்பர்.

*ஏனைய உயிர்கள் உயர்திணையில் விளியேலாமை*

**ஏனை உயிரே உயர்திணை மருங்கில்**
**தாம்விளி கொள்ளா என்மனார் புலவர். (609)**

முற்கூறிய நான்குமல்லாத ஏனைய உயிர்ஈறுகள் உயர்திணைப் பெயர்களில் விளிஏற்கமாட்டா என்று இலக்கணப் புலவர் கூறுவர்.

*இகர ஈற்று அளபெடைப் பெயர்கள் விளியேற்கும் முறை*

**அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்**
**இயற்கைய வாகும் செயற்கைய என்ப. (610)**

அளபெடையிலும் மிகுமாறு மிக நீண்டு நான்கு அல்லது ஐந்து மாத்திரையளவு ஒலிக்கும் இகர ஈற்றுப் பெயர்கள் (முற்கூறியவாறு இ – ஈ ஆகாது) இயல்பாய் விளியேற்கும் செய்கையை உடையன என்று கூறுவர் ஆசிரியர். தோழி – தோழீஇ – தோழீஇஇ – தோழீஇஇஇ. இவை தோழி என்பது அளபெடுத்தற்காக தோழீஇ ஆனதால் ஈ எனத் திரிதல் இல்லை என்றபடி. அளபெடுத்ததே அழைப்பதாயிற்று.

*முறைப்பெயர் ஐ ஈறு ஆவுமாதல்*

**முறைப்பெயர் மருங்கின் ஐ என் இறுதி**
**ஆவொடு வருதற் குரியவும் உளவே. (611)**

முறைப் பெயர்களிடத்து ஐ ஈறு ஆய் ஆகாது, ஆ என முடிந்து நிற்றற்கு உரியவும் உள. அன்னை - அன்னாய் - அன்னா. தங்கை - தங்காய் - தங்கா! அம்மை - அம்மா!

*அண்மை விளி உயிரீறுகள் இயல்பாதல்*

**அண்மைச் சொல்லே இயற்கை யாகும். (612)**

முற்கூறிய நான்கு ஈறுகளும் அண்மை விளியாய் வரும்போது, இயல்பாகும். பரிதி வருக! சிந்து கேள்! மங்கை பார்! பொற்கோ வாழ்க!

*புள்ளி ஈறுகள் விளியேற்றல் - உயர்திணைப் பெயர்கள்*

**ன ர ல ள என்னும் அந்நான் கென்ப**
**புள்ளி இறுதி விளிகொள் பெயரே. (613)**

புள்ளி ஈறாக நின்று விளியேற்கும் உயர்திணைப் பெயர்கள் ன ர ல ள என்னும் அந்நான்கு ஈற்றினையுடையவை என்பர் ஆசிரியர்.

*ஏனைய புள்ளி ஈறுகள் விளியேலாமை*

**ஏனைப் புள்ளி ஈறுவிளி கொள்ளா. (614)**

ஏனைய புள்ளியீற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்க மாட்டா.

*னகர மெய்யீறு விளியேற்றல்*

**அவற்றுள்,**
**அன் என் இறுதி ஆவா கும்மே. (615)**

அவற்றுள் அன் ஈறு ஆ ஆகி விளியேற்கும். முருகன் - முருகா! பாண்டியன் - பாண்டியா!

*னகர மெய்யீறு அண்மைவிளியேற்றல்*

**அண்மைச் சொல்லிற்கு அகரம் ஆகும். (616)**

அது அண்மைவிளியில் அ கரமாகும். முருகன் - முருக! ஊரன் - ஊர! நண்பன் - நண்ப!

*ஆன் ஈறு விளியேற்றல்*

**ஆன் என் இறுதி இயற்கை யாகும். (617)**

ஆன் ஈறு இயல்பாய் நின்று விளியேற்கும். நல்லான், கோமான், பார்ப்பான் என்றே கூவி அழைக்கவும் கூடும்.

*ஆன் ஈற்று வினையாலணையும் பெயர் விளியேற்றல்*

**தொழிலிற் கூறும் ஆன் என் இறுதி**
**ஆய் ஆகும்மே விளிவயி னான. (618)**

வினைச் சொல்லாற் கூறும் 'ஆன்' ஈற்று வினையாலணையும் பெயர்கள், விளியேற்கும் போது, இறுதி ஆன் 'ஆய்' ஆகும். ஆண்டான் – ஆண்டாய். கொண்டான் – கொண்டாய்.

*ஆன் ஈற்றுப் பண்புப் பெயர் விளியேற்றல்*

**பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே. (619)**

ஆன் ஈற்றுப் பண்புகொள் பெயர்கள் (கரியான், நல்லான், தீயான்) முற்கூறிய அவ் ஈற்று வினையாலணையும் பெயர்போல, இறுதி ஆன் 'ஆய்' ஆகும், கரியான் – கரியாய்! பெரியான் – பெரியாய்! நல்லான் – நல்லாய்.

*ஆன் ஈற்று அளபெடைப் பெயர் விளியேற்றல்*

**அளபெடைப் பெயரே அளபெடை இயல. (620)**

ஆன் ஈற்று அளபெடைப் பெயர்கள் இகர ஈற்று அளபெடைப் பெயர்கள் போல (610) மூன்று மாத்திரையின் நீண்டு, இயல்பாய் விளியேற்கும். கோமாஅன்! பொருமாஅன்! அளபெடுத்தலே விளிக்கவுமாயிற்று.

*னகரமெய் ஈற்று முறைப்பெயர் விளியேற்றல்*

**முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே. (621)**

னகர ஈற்று முறைப்பெயர்ச்சொற்கள் (மகன், தமையன்) ஏகாரம் பெற்று விளியேற்கும். மகனே! தமையனே!

*விளி ஏலாத னகர மெய்யீற்றுப் பெயர்கள்*

**தான் என் பெயரும் சுட்டுமுதற் பெயரும்**
**யான் என் பெயரும் வினாவின் பெயரும்**
**அன்றி அனைத்தும் விளிகோள் இலவே. (622)**

தான் என்னும் விரவுப்பெயரும் அவன் இவன் உவன் என்னும் சுட்டெழுத்தை முதலாகவுடைய சுட்டுப் பெயர்களும் யான் என்னும் தன்மை

ஒருமைப்பெயரும், யாவன் என்னும் வினாப் பொருளை உணர்த்தும் பெயரும் அத்தகையன அனைத்தும் னகர ஈறேயாயினும் விளிகொள்ளமாட்டா. அன்றி அனைத்தும் – அவ்வனைத்தும்.

*ரகர மெய்யீறு விளியேற்றல்*

**ஆரும் அருவும் ஈரொடு சிவணும். (623)**

ரகர மெய்யீற்றுப் பெயர்களுள் ஆர், அர் ஈற்று உயர்திணைப் பெயர்கள், விளி ஏற்குங்கால், இறுதியில் 'ஈர்' ஆகத் திரியும். பார்ப்பார் – பார்ப்பீர்! பெரியர் – பெரியீர்! நண்பர் – நண்பீர்!

*ரகர மெய்யீற்று வினையாலணையும் பெயர் விளியேற்றல்*

**தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்**
**வழுக்கின்று என்மனார் வயங்கி யோரே. (624)**

மேற்கூறிய இரண்டு ஈறுகளும் வினையாலணையும் பெயர்களுக்கு ஈறாய் வருமாயின், மேற்கூறிய 'ஈர்' உடன் ஏகாரம் பெறுதலும் தவறின்று என்று கூறுவர் விளங்கிய அறிவினையுடையார். வாழ்வார் – வாழ்வீர்! வாழ்வீரே!

*ரகர மெய்யீற்றுப் பண்புப் பெயர் விளியேற்றல்*

**பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே (625)**

மேற் கூறிய இரண்டும் பண்புப் பெயர்களுக்கு ஈறாய் வருமாயின், அவ்வீற்று வினையாலணையும் பெயர்களுக்கு ஓதிய இலக்கணப்படி, விளியேற்கும்போது ஈர் ஆகத்திரிந்தும் ஈரொடு ஏகாரம் பெற்றும் முடியும் என்பதாம். கரியர் – கரியீர்! கரியீரே! வல்லார் – வல்லீர்! வல்லீரே!

*ரகர மெய்யீற்று அளபெடைப் பெயர் விளியேற்றல்*

**அளபெடைப் பெயரே அளபெடை இயல. (626)**

ரகர ஈற்று அளபெடைப்பெயர்கள் னகர ஈற்று அளபெடைப் பெயர்கள் போல, மூன்று மாத்திரையின் நீண்டு, இயல்பாய் விளியேற்கும். சிறாஅர்! மகாஅர்! (610, 620)

*ரகர மெய்யீறுகளுள் விளியேலாதவை*
*சுட்டு முதலாகவரும் பெயர்கள்*

**சுட்டுமுதற் பெயரே முற்கிளந் தன்ன. (627)**

அவர் இவர் உவர் என்னும் ரகர ஈற்றுச் சுட்டு முதற் பெயர்கள், னகர ஈற்றுச் சுட்டுமுதற் பெயர்கள் போல விளியேற்கமாட்டா. (622)

*நீயிர், யாவர் என்பன*

**நும்மின் திரிபெயர் வினாவின் பெயர்என்று**

**அம்முறை இரண்டும் அவற்றியல் பியலும். (628)**

நும் என்பதன் திரிபாகிய நீயிர் என்னும் பெயர், யாவர் என்னும் வினாப்பெயர் ஆகிய அவ்விரண்டும் முற்கூறிய சுட்டுப்பெயர்கள் போல விளி ஏலா.

*லகர ளகர மெய்யீறுகள் விளியேற்றல்*

**எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே**

**நின்ற ஈற்றயல் நீட்டம் வேண்டும். (629)**

முன்பு கூறாது எஞ்சியுள்ள ல, ள இரண்டு புள்ளிகளையும் இறுதியாக உடைய பெயர்கள், ஈற்றயலில் நின்று எழுத்துக்கள் நீண்டு விளியேற்கும். தோன்றல் – தோன்றால்! மக்கள் – மக்காள்!

*அவற்றுள் ஈற்றயல் நெடிலாக வருவன*

**அயல்நெடி தாயின் இயற்கை யாகும். (630)**

அவ்விரண்டு மெய் ஈற்றுப் பெயர்களும் ஈற்றயல் நெட்டெழுத்தாக இருப்பின், இயல்பாக நின்று விளியேற்கும். ஆண்டாள்! திருமால்!

*ளகர ஈற்று வினைப்பெயரும் பண்புப் பெயரும் விளியேற்றல்*

**வினையினும் பண்பினும்**

**நினையத் தோன்றும் ஆள் என்இறுதி**

**ஆய் ஆ கும்மே விளிவயி னான. (631)**

வினையாலணையும் பெயரிலும் பண்புப் பெயரிலும் எண்ணிப் பார்க்குமாறு தோன்றும் 'ஆள்' என்னும் இறுதி, விளி ஏற்றற்கண் ஆய் ஆகும். வென்றாள் – வென்றாய்! செய்யாள் – செய்யாய்!

*ளகர ஈற்று முறைப்பெயர் விளியேற்றல்*

**முறைப்பெயர்க் கிளவி முறைப்பெயர் இயல. (632)**

ளகர ஈற்று முறைப்பெயர் னகர ஈற்று முறைப்பெயர்போல (621) ஏகாரம் பெற்று விளி ஏற்கும். மகள் – மகளே!

*ளகர ஈற்றுப் பெயர்களுள் விளி ஏலாதன*

**சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரும்**

**முற்கிளந் தன்ன என்மனார் புலவர். (633)**

ளகர ஈற்றுச் சுட்டுமுதற் பெயர்களும் (அவள் இவள் உவள்); ளகர ஈற்று

வினாப்பெயரும் (யாவள்) முற்கூறிய சுட்டு முதற்பெயரும் வினாப்பெயரும் போல (622, 627) விளிஏலா.

*ல, ள ஈற்று அளபெடைப் பெயர்கள் விளியேற்றல்*

**அளபெடைப் பெயரே அளபெடை இயல. (634)**

ல, ள, ஈற்று அளபெடைப் பெயர்கள் முற்கூறிய அளபெடைப் பெயர்கள் போல (610, 620, 626) அளபு நீண்டு இயல்பாய் நின்று விளியேற்கும். மாஅஅல், வேண்மாஅஅள்.

*விரவுப் பெயர்கள் விளியேற்றல்*

**கிளந்த இறுதி அஃறிணை விரவுப் பெயர்**
**விளம்பிய நெறிய விளிக்குங் காலை. (635)**

மேலே கூறிய உயிரும் மெய்யுமான எட்டு ஈற்றினையுடைய, உயர்திணையுடன் அஃறிணை விரவும் விரவுப்பெயர்களை விளித்துக் கூறுமிடத்து, முன்பு உயர்திணைப்பெயர்களுக்கு ஓதிய நெறிமுறைகளையே உடையனவாகும். சாத்தி என்று முன்பு பசுவுக்கும் பெயர் வைத்து அழைத்தனர். சாத்தீ! என்று ஒரு பசுவையும் அழைக்கலாம். உயர்திணைப் பெண்பாலைக் குறிக்கும் 'சாத்தி'எனும் பெயர், அஃறிணையாம் மாட்டையும் குறிப்பது அஃறிணை விரவுப் பெயர் ஆகும். இன்று பாண்டியன் சோழன் என்று பேருந்துகளைக் குறிப்பது அஃறிணை விரவுப் பெயர்களாகும்.

*அஃறிணைப் பெயர்கள் விளியேற்றல்*

**புள்ளியும் உயிரும் இறுதி யாகிய**
**அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்**
**விளிநிலை பெறூஉங் காலம் தோன்றின்**
**தெளிநிலை உடைய ஏகாரம் வரலே. (636)**

புள்ளியையும், உயிரையும் ஈறாகவுடைய, அஃறிணை சார்ந்த எல்லாப் பெயர்களும், விளியேற்று அழைக்கும்படியான காலம் தோன்றும்போது, ஏகாரம் பெறுதலைத் தெளிவுபெற உடையனவாகும். மரமே! அணிலே! மாடே! கிளியே!

*புறனடை*

*மூவகைப் பெயரும் சேய்மை விளியேற்றல்*

**உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்**
**அளபிறந் தனவே விளிக்குங் காலைச்**
**சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான. (637)**

விளியேற்குமென்று முற்கூறிய மூவகைப்பட்ட எல்லாப் பெயர்களும் சேம்மையிடத்தே கூப்பிடும் உலக வழக்கின்கண் தம் மாத்திரையைக் கடந்து

ஒலிப்பனவாகும். நம்பீஇஇ! நங்காஅஅய்! எல்லாப் பெயரும் – உயர்திணைப் பெயர், விரவுப் பெயர், அஃறிணைப் பெயர் ஆகிய மூன்றும். சேய்மையின் இசைக்கும் – சேய்மை இடத்தே கூப்பிடும்.

### *'அம்ம' இடைச்சொல் விளியேற்றல்*

**அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்**
**அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்**
**விளியொடு கொள்ப தெளியு மோரே. (638)**

'அம்ம' தன்முகமாக அழைக்கும் குறிப்புள்ள உரையசைச் சொல். 'அம்ம கொற்றா!' என்றால் 'கொற்றா! இதைக் கேள்' என்பதாம். இவ் 'அம்ம' என்னும் உரையசைச் சொல் நீண்டு 'அம்மா' என ஆவதுமுண்டு. 'அம்மா' என்னும் அதனோடொத்த முறைப் பெயரும் இதுவும் வேறுபட்டவை. அம்முறைப்பெயரோடு இது பொருந்தாதாயினும், தெளிவுடைப் பெரியோர், இதனை (அம்ம, அம்மா என்ற உரையசைச் சொல்லை) விளியேற்ற பெயர்களுள் ஒன்றாகக் கருதுவர். 'அம்ம' என்பது உரையாடலிலேயே வரும் அசைச்சொல். கணவனிடம் பேசும்போது, அன்புடை மனைவி இன்றும் "என்னம்மா! ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?" என வினவப் பார்க்கிறோம். தன்முகமாக அழைக்கும் குறிப்பே, அவ் அசைச்சொல்லில் உளது; மற்றபடி அது பொருளற்றது. தாயை 'அம்மா' என்பதற்கும் இதற்கும் வேறுபாடுண்டு. எனவே இதனை விளியேற்ற பெயர்களுள் ஒன்றெனக் கொள்ளுதல் தகும் என்பதாம். சிவணாதாயினும் - பொருந்தாதாயினும்.

### *உயர்திணைப் பெயர்களுள் விளியேலாதவை*

**த ந நு எ என அவைமுத லாகித்**
**தன்மை குறித்த ன ர ள என் இறுதியும்**
**அன்ன பிறவும் பெயர்நிலை வரினே**
**இன்மை வேண்டும் விளியொடு கொளலே. (639)**

த ந நு உயிர்மெய்கள் எ உயிர் இவற்றை முதலாகவுடையனவும் ன ர ள என்னும் இறுதிகளையுடையனவும் ஆன தம்மைச் சார்ந்தவர் என்னும் முறைமையைக் குறிக்கும் சொற்களும் அவை போல்வனவுமாகிய பெயர்த்தன்மையுடையவை விளியோடு பொருந்துதல் இல்லையாம். தமன் தமர் தமள்; நமன் நமர் நமள்; நுமன் நுமர் நுமள்; எமன் எமர் எமள்! பிறன் பிறர் பிறள் முதலியனவும் இவை யாவும் விளி ஏலா.

# 5. பெயரியல்

**கி**ளவியாக்கத்துள் அல்வழித் தொடர் பற்றியும் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகியவற்றுள் வேற்றுமைத் தொடர் பற்றியும் இலக்கணம் கூறிய ஆசிரியர் இவ்வியல் தொடங்கி, அத்தொடர் மொழிகளுக்குறுப்பாகிய தனிமொழி இலக்கணம் கூற முற்படுகிறார். தனிச் சொற்கள் பெயர் வினை எனத் தலைமை வாய்ந்த இரண்டாயும், அவற்றிடைக்கலந்து வழங்குதலன்றித் தமக்கெனத் தனிநிலை இல்லாத இடை உரி எனும் துணைமை நிலையினவான இரண்டாயும் அடங்கும் நான்கு வகையினவாகும். பெயர் பொருளைக் குறிக்கும். அப்பொருளது புடை பெயர்ச்சியை வினை குறிக்கும். பெயருக்கும் வினைக்கும் இடையே அமைந்து அவற்றின் பொருளை வேறுபடுத்தியும் சிறப்பித்தும் வருவன இடைச்சொல்லெனப்படும். பெயர் வினைகளின் குணப்பண்பையும் தொழிற்பண்பையும் உணர்த்துஞ் சொற்களாய், அடிச்சொல் அளவில் நின்று அடைமொழிகளாய் வந்து அவற்றைச் சிறப்பிப்பன உரிச்சொல் எனப்படும். எனவே இவற்றுள் தலைமை வாய்ந்த பெயர்ச்சொல்லின் இலக்கணத்தை முதற்கண் கூறுகிறார்.

சொல்லின் பொது இலக்கணம், சொல்வகை, உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள், விரவுப் பெயர்கள் என நிரலே வகுத்து, இவ்வியல் பெயரிலக்கணம் கூறுகிறது.

**அன்ன பிறவும் உயர்திணை மருங்கில்**
**பன்மையும் ஒருமையும் பால்அறி வந்த**
**என்ன பெயரும் அத்திணை யவ்வே (651)**

**அன்ன பிறவும் அஃறிணை மருங்கில்**
**பன்மையும் ஒருமையும் பால்அறிவந்த**
**என்ன பெயரும் அத்திணை யவ்வே (655)**

இவ்விரு சூத்திரங்களையும், அவை வந்துள்ள சூழலுடன் வைத்து ஒப்பிட்டு நோக்குவார்க்குத் தொல்காப்பியர்தம் புலப்பாட்டு நெறி புலனாகும். அவர் இயைபு முறைப்படி இலக்கணங்கூறிப் போவது, இன்றைய அறிவியல் – ஆங்கில –

ஆய்வாளரும் கண்டு போற்றும் தகுதியுடையதாகும். தொல்காப்பியர் இங்ஙனம் இலக்கணங் கூறிப்போகும் அமைப்பையும் இயைபையும் திட்டத்தையும் கலைச்சொல்லாட்சியையும் விளங்கிக் கொண்டால்தான், தொல்காப்பியம் முழுமையாக விளங்கும். இக்கட்டமைப்பை முன்னதாக விளங்கிக் கொள்வார், அப்பெருநூலைச் செம்பாதிக்குமேல் விளங்கிக் கொண்டவர் ஆவர்.

## இயல் கருத்து நிரல்

### சொல்லின் பொது இலக்கணம்

சொற்கள் எல்லாம் பொருள் குறித்து வருவனவேயாம்.

சொல்தரும் பொருளை அறிதலும் அச்சொல்லின் தன்மையையே அறிதலும் என்ற இரண்டும் சொல்லினால் ஆகும் என்பர் புலவர்.

அவற்றுள் பொருளை அறிதல் என்பது, சொல் தனித்த ஒரு பொருளை விளக்கி நிற்றலும் சூழலால் குறிப்புப் பொருள் ஒன்றைத் தோற்றுவித்தலும் ஆகிய இரண்டு வகைப்படும் என்பர்.

### சொல்வகைகள்

சொல்லென்று சிறப்பித்துச் சொல்லப்படுபவை பெயர்ச்சொல், வினைச் சொல் என்ற அவ்விரண்டுமே என்பர் அறிஞர்.

இடைச்சொல் என்பதும் உரிச்சொல் என்பதும் முற்கூறிய பெயர்,வினைகளின் அடிப்படையில், அவற்றைச் சார்ந்து தோன்றும் என்பர்.

### பெயர்ச்சொல்வகை

அவற்றுள், பெயர்ச்சொல் என்று சொல்லப்படுபவை, ஆராயுங் காலத்து, உயர்திணைக் குரிமையுடையவையும் அஃறிணைக்குரிமை யுடையவையும் அவ்விரண்டு திணைக்கும் ஒத்த உரிமையுடையவையும் என மூன்று வடிவினை உடையன, அவை தோன்று நெறிக்கண்.

பெயர்ச்சொற்களுள் இருதிணை ஐம்பாலை உணர்த்துதற்குரிய இயல்புடைய சொற்கள் மட்டுமே, அங்ஙனம் பிரிந்து திணை பால் வேறுபாட்டை உணர்த்துதற்குரியனவாம். அல்லாதவை திணை, பால் பிரிவை உணர்த்தமாட்டா என்பதாம். வினைச் சொற்களாயின் அனைத்துச் சொற்களும் இருதிணைப் பிரிந்த ஐம்பாலையும் உணர்த்தும் ஆற்றலுடையனவாகும்.

**உயர்திணைப் பெயர்வகை**

அவன் இவன் உவன் எனவரும் பெயர்களும் அவள் இவள் உவள் எனவரும் பெயர்களும் அவர் இவர் உவர் எனவரும் பெயர்களும் யான் யாம் நாம் எனவரும் பெயர்களும் யாவன் யாவள் யாவர் என்னும் மூன்று வினாப் பெயர்களும் ஆக இப் பதினைந்து பெயர்களும் ஆண், பெண், பலர் என்னும் முப்பாலையும் உணர்த்தும் உயர்திணைப் பெயர்களாகும்.

'ஆண் மகன்' என்னும் சொல்லும் 'பெண்மகள்' என்னும் சொல்லும் 'பெண்டாட்டி' எனும் இகர இறுதிச் சொல்லும் நம்பி, நங்கை என்னும் 'நம்' ஊர்ந்துவரும் இகர ஐகார இறுதிப் பெயர்ச்சொற்களும் உறவு முறைமையைக் குறிக்காமல், பொதுவாக மனிதரைக் குறிக்கவரும் மகன், மகள் என்ற சொற்களும் மாந்தர், மக்கள் எனும் பன்மை உணர்த்தும் சொற்களும் ஆடூஉ மகடூஉ எனும் பெயர்களும் அன்னன், அன்னான், இன்னன், இன்னான் என்றாற்போலும் சுட்டுமுதலாகிய சொற்களும் அச்சுட்டுமுதலாகிய பெண்பாற் சொற்களும் (அன்னள், அன்னாள்) ஒப்புமைப்படுத்தும் பொருளை அடுத்துவரும் அத்தகைய பெயர்களும் (பொன்னன்னன், கண்ணன்னாள்) ஆகிய அப் பதினைந்து வகைச் சொற்களும் மேற்கூறியனபோல முப்பாலை உணர்த்தும் உயர்திணைப் பெயர்களாகும்.

எல்லாரும் எல்லீரும் என்ற பெயர்த்தன்மையுடைய சொற்களும் 'பெண்மகன்' என வட்டார வழக்காய்ப் பெண்மகளைக் குறிக்க வழங்கும் சொல்லும் அவ்வாறே உயர்திணையில் இன்னபால் என உணரநின்றன என்பர் புலவர்.

பால் இதுவென அறியும்படிவந்த முற்கூறிய உயர்திணைப் பெயர்கள் போல, இங்குக் குறிக்கப்படுவனவும் இன்ன பால்எனக் காட்டும் இயல்புடைய பெயர்களாகும்: வாழும் நிலத்தான் வரும் பெயர் - சென்னையான், பட்டணத்தான், பட்டிக்காட்டான், பிறந்த குடியால் வரும் பெயர் - சேரன், சோழன். தொடர்புடைய குழுவால் அமையும் பெயர் - மன்றத்தான், பேராயத்தான். செய்யும் தொழிலால் (வினையால்) அமைவன - தச்சன், கொல்லன். உடைமையால் வருபெயர் : பொன்னன், செல்வன். பண்பு அடிப்படைப்பெயர் : செய்யன், நல்லன். உறவு முறையைக் குறிக்கும் பலர்பாற் பெயர் : தாயர், தன்னையர், தமக்கையர். சினை (உறுப்பு) காரணமாக அமையும் பலர்பாற் பெயர்: நெடுஞ்செவியர், பெருந்தோளர். திணைநிலைப் பெயர்கள் பலர்பாலாய் வருவன - ஆயர்,

வேட்டுவர். கூடிவருவழக்கின் ஆடியற் பெயர் - கூடி விளையாடும் விளையாட்டில் இளையோர் பகுதிப்படப் பிரிந்து நின்று, தத்தமது குழுவிற்கு இட்டுவழங்கும் ஆட்டப் பெயர்கள். மல்லிகையார், முல்லையார், வெள்ளணியர், செவ்வணியர். இன்றிவர் என்னும் எண்ணியற்பெயர் - இத்தனையர் என எண்ணுடன் கூடிவரும் பெயர்கள், இருவர், மூவர், நால்வர்.

மேற்கூறியவை போல்வன பிறவும் உயர்திணையிடத்து ஒருமையும் பன்மையுமாகிய பால் அறியும் வண்ணம் வந்த அனைத்து பெயர்களும் அவ்வுயர் திணைப்பாற்படும்.

## அஃறிணைப்பெயர் வகை

அது இது உது என வரும் பெயர்களும் அச்சுட்டுகள் முதலாக வரும் ஆய்தப் பெயர்களும் (அஃது இஃது உஃது) அவை இவை உவை என வரும் பெயர்களும் அச்சுட்டுகள் முதலாகவரும் வகர மெய்யீற்றுப் பெயர்களும் (அவ் இவ் உவ்) யாது யா யாவை எனும் மூன்று வினாப்பெயர்களும் ஆக அப் பதினைந்தும் ஒன்றன்பால் பலவின்பால் எனப் பாலறியப்பட்ட அஃறிணைப் பெயர்களாகும்.

பல்ல பல சில எனும் பெயர்களும் உள்ள, இல்ல என்னும் பெயர்களும் வினையாலணையும் பெயர்களும் (உழுதது, பறந்தது) பண்புப் பெயர்களும் (கரியது, நல்லது) இத்தனை எனக் குறிக்கும் எண்ணுப் பெயர்ச் சொற்களும் (ஆயிரம், நூறு) ஒப்புமை பற்றி வரும் பெயர்களும் (பொன்னனையது) என்ற அவை ஒன்பதும் முன்பு கூறியதுபோல் பால் வேறுபாடறியப்பட்ட அஃறிணைப் பெயர்களாகும்.

'கள்' ஈற்றொடு பொருந்தி, அவ்வஃறிணைப் பொருள் மேல் வரும் இயற்பெயர்கள், அஃறிணைப் பலவின்பாற் சொற்களாகக் கொள்ளும் இடனுடையன.

மேற்கூறியன போல்வனபிறவும் அஃறிணையிடத்து ஒருமையும் பன்மையுமாகிய பால்அறியும் வண்ணம் வந்த எல்லாப் பெயர்களும் அவ்வஃறிணைப் பாற்படும்.

அவ்வஃறிணை இயற்பெயர்கள் வினையொடுவரும் போதுதான் ஒருமையா, பன்மையா என்ற வேறுபாடு தெரியவரும் நிலையை யுடையன்வாகும். (மாடு மேய்ந்தது, மாடு மேய்ந்தன, பூ பூத்தது, பூ பூத்தன.)

**விரவுப் பெயர் இயல்பு**

இருதிணைச் சொல்லாதற்கும் ஒத்த உரிமையுடையவாய் அமைந்து, ஒருகால் உயர்திணையாகவும் ஒருகால் அஃறிணையாகவும் திரிந்து வேறுபடும் எல்லா விரவுப் பெயர்களும், ஆராயுங் காலத்து, தத்தமக்குரிய மரபுவழியான வினைகளுடனல்லது பால் தெரிதல் இல. (சாத்தி என்பது முன்பு பசுவுக்கும் பெயராகும் ஒரு விரவுப் பெயர். 'சாத்தி வந்தாள்' என்ற வினையால் உயர் திணைப் பெண்பால் என அறிகிறோம். சாத்தி மேய்ந்தது எனில் அஃறிணை ஒன்றன்பால் என்பது சொல்லாமலே பெறப்படு கிறதன்றோ?)

நிகழுங் காலத்தைக் குறிக்கும், பால்வேறுபாடு காட்டாத 'செய்யும்' என்னும் வினைமுற்றில் முடியும் போது, விரவுப் பெயர்கள், அவை உயர்திணை என அறியத் தகும். அத்தகைய மரபினையுடைய தொழில் பற்றிய வினையுடன் வருங்காலத்து உயர்திணை ஒருமை என்பது விளங்கித் தோன்றலுமுண்டு. சோழன் பயணத்திற்கு இனிமைதரும். சோழன் பழகுதற்கு இனிமைதரும். இவை 'தத்தம் மரபின் வினையொடு' வந்து அஃறிணை, உயர்திணை என உணரப்படுதல் காண்க.

**விரவுப் பெயர்வகை**

இட்டு வழங்கும் இயற்பெயர்கள் (மருதி - பெண்ணுக்கும் பசுவுக்கும்); சினையால் (உறுப்பால்) அமையும் பெயர்கள் (முடவன், முடத்தி); சினையும் முதலும் இணைந்த பெயர்கள் (கொடும்புற மருதி - வளைந்த முதுகையுடைய மருதி); அம்மா, அப்பா என்ற உறவு முறைப்பெயர்கள்; தாம் தான் எல்லாம் நீயிர் நீ என்னும் பெயர்கள். இங்ஙனம் எடுத்துச் சொல்லப்பட்டனவும், இங்குக் குறிக்கப்பட்டனவல்லாத பிறவும் அத்தகைய தன்மையுடையவாய்த் தோன்றுமாயின் அவையனைத்தும் விரவுப் பெயர்களாகக் கொள்ளப்படும்.

**விரவுப் பெயர் உள்வகைகள்**

அவ் விரவுப் பெயர்கள் இயற்பெயர்கள் நான்கு; சினைப்பெயர்கள் நான்கு; சினைமுதற்பெயர்கள் நான்கு; முறைப்பெயர்ச் சொற்கள் இரண்டு என்ற வகைகளை உடையனவாகும். ஏனைய தாம் தான் எல்லாம் நீயிர் நீர் என்பன தனித்தனியே ஒவ்வொன்றாய் நிற்கும் தத்தமது மரபினை உடைய்னவாகும்.

விரவுப்பெயர்களும் இயற்பெயர் என்பன பெண்மை குறிக்கும் இயற்பெயர்; ஆண்மை குறிக்கும் இயற்பெயர்; பன்மை குறிக்கும் இயற்பெயர்; ஒருமை குறிக்கும் இயற்பெயர் என்று அந்நான்கு வகைகள் ஆகும் என்பர். சாத்தன், சாத்தி, மருதியர்.

விரவுப் பெயர்களுள் சினைப்பெயர் என்பன பெண்மைச் சினைப்பெயர், ஆண்மைச் சினைப்பெயர், பன்மைச் சினைப்பெயர், ஒருமைச் சினைப்பெயர் என்று அந்நான்கு வகையினவாகும் என்பர். முடத்தி, முடவன், முடவர்.

விரவுப் பெயர்களுள் ஒருவகையினவான சினை முதற் பெயர்கள் பெண்மையைக் குறிக்கும் சினை முதற் பெயர், ஆண்மையைக் குறிக்கும் சினைமுதற் பெயர். பன்மையைக் குறிக்கும் சினைமுதற்பெயர், ஒருமையைக் குறிக்கும் சினைமுதற்பெயரென்று அந்நான்கு கூறுபாடுகளை உடையனவாகும் என்பர். கொடும்புற மருதி, கொடும்புற மருதன், கொடும்புற மருதர்.

விரவுப் பெயர்களுள் உறவுமுறைப் பெயர்கள் பெண்மைபற்றிய முறைப்பெயர், ஆண்மை பற்றிய முறைப்பெயர் என்று அவ்விரு வகையினவாகும். அம்மா பால் கொடுத்தாள்; கொடுத்தது போல்வன.

## விரவுப்பெயர்களில் இவையிவை விரவிவரும் எனல்

முன்பு வகைப்படுத்தப்பட்ட பெண்மைசுட்டி வரும் இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர் அனைத்தும் அஃறிணையில் ஒன்றனையும் உயர்திணையில் ஒருத்தியையும் குறிக்கப் பொருந்தி வரும். விரவுப் பெயர்களில் இன்ன பால், திணை விரவிவருமென இதுமுதல் நான்கு நூற்பாக்களில் கூறுகிறார்.

ஆண்மை சுட்டி வரும் இயற்பெயர், சினைப்பெயர், சினை முதற்பெயர், முறைப்பெயர் அனைத்தும் அஃறிணையில் ஒன்றனுக்கும் உயர்திணையில் ஒருவனுக்கும் பொதுவாகப் பொருந்திவரும்.

முன்பு கூறிய இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற் பெயர்களில், பன்மை குறிக்கும் எல்லாப் பெயரும் அஃறிணை ஒன்றன்பாலுக்கும் பலவின் பாலுக்கும் உயர்திணைப் பலர்பாலுக்கும் என்று இம் மூன்றுபாலுக்கும் பொதுவாய் ஒருதன்மையுடன் பொருந்திவரும்.

முன்பு வகைப்படுத்திய இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற் பெயர்களில், ஒருமை குறிக்கும் எல்லாப் பெயரும் அஃறிணையில் ஒன்றனுக்கும் உயர்திணையில் ஆண்பால், பெண்பாலுக்கும் பொருந்திவரும் பொதுத்தன்மையுடையனவாகும்.

'தாம்' என்னும் விரவுப் பெயர்ச்சொல் அஃறிணைப் பன்மைக்கும் உயர்திணைப் பன்மைக்கும் உரிமையுடையதாய் வரும்.

'தான்' என்னும் விரவுப் பெயர்ச்சொல் அஃறிணை ஒருமைக்கும் உயர்திணை ஒருமைக்கும் உரிமையுடையதாய் வரும்.

'எல்லாம்' என்னும் பெயர்த்தன்மையுடைய பொதுச்சொல், பன்மைப் பாலைக் கருதிய தன்மையுடையதாகும்.

இஃது உயர்திணையுடன் விரவிவரும்போது தன்னை உள்ளிட்ட பன்மையாகிய – உளப்பாட்டுத்தன்மைப் பன்மையில் மட்டுமே விரவி வரும். பிறவாறு உயர்திணையிடத்து மிகுதியும் செல்வாக்குடன் விரவி வருதலில்லை.

**நீயிர், நீ எனு விரவுப் பெயர்கள்**

நீயிர், நீ என வரும் முன்னிலை விரவுப் பெயர்ச் சொற்கள் உயர்திணை இருபாலையும், இரு திணையையும் ஒருங்கு மொழியும் பொருளை யுடையன. அவை பால், திணை தெரியவருவன அல்ல.

அவற்றுள் நீ என்னும் சொல், திணை காட்டாதாயினும் இருதிணையிலும் ஒருமைக்கு உரியதாகும்.

ஏனைய நீயிர் என்னும் சொல் இருதிணையிலும் பன்மைக்கு உரித்தாய் வரும்.

**'ஒருவர்' – விரவுப் பெயர்**

'ஒருவர்' எனப் பன்மை வடிவாற்கூறும் பெயர்த் தன்மையுடைய சொல், ஆராயுமிடத்து இடம் நோக்கி, ஆணையும் குறிக்கும்; பெண்ணையும் குறிக்கும். இங்ஙனம் இரண்டு பாலுக்கும் பொதுமையுடையதாய் வரும்.

அவ் 'ஒருவர்' என்னும் சொல்லின் தன்மையைக் கருதுமிடத்து, அது (தன் வடிவிற்கேற்பப்) பன்மை வினையை ஏற்று முடியும்.

நீயிர், நீ, ஒருவர் என்று சொல்லப்பட்ட இப்பெயர்கள், இன்னதிணை, பாலுக்குரியன என அறிய வேண்டின், சொல்லுவானது குறிப்பொடு சேர்த்து, வழக்காற்று முறையானே தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

**'பெண்மகன்' எனும் சொல்**

பெண்பாலிடமாகப் பால் திரிந்து வழங்கம் பெண்மகன் என்னும் சொல், வினைகொள்ளுமிடத்து, பெண்பால் இயல்பாய் முடியும். (பெண்மகன் வந்தாள்.)

**ஈற்றயல் ஆ, ஓ ஆதல்**

ஆன் ஆள் ஆர் எனும் பெயர் ஈறுகளில் உள்ள ஆ, ஓவாக மாறும் பெயர்களும் உள.

அவ்வாறாகுமிடங்கள் இவையெனச் செய்யுள் வழக்கில் கண்டறிந்து கொள்ளுக. (தொடியோள், நல்லோர்.)

**செய்யுளில் இடம்பெறும் விரவுப் பெயர்கள்**

அகத்திணைச் செய்யுளுள் உயிரினக் கருப்பொருளாம் இறைச்சிப் பொருளில் கூறப்படும் விரவுப் பெயர்களான இயற்பெயர்ச் சொற்கள், அந்நிலத்துக் கருப்பொருளடிப்படையில் தோன்றி வழங்கும் காரணத்தால், உயர்திணையைச் சுட்டா; அவை அக் கருப்பொருள் உயிரினங்களாம் அஃறிணையையே குறிக்கும் என்பதாம். (கடுவன், வன்பறழ்க்குமரி.)

**பிற திணைவழிப் பெயர்கள்**

அவ்வத் திணை சார்ந்து, ஐந்திணைக் கண்ணும் அடிப்படப் பழகிய மீளி, விடலை, காளை என உயர்திணையைக் குறிக்க வழங்கும் பெயர்களல்லாதனவே, முற்கூறியவாறு அஃறிணை உயிரினங்களைக் குறிப்பனவாகும்.

## பெயரியல்

*சொற்களின் பொது இயல்பு*

**எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே. (640)**

சொற்கள் என்பன அனைத்தும் பொருள் குறித்து வருவனவேயாம்.

**சொல் தன்னையும் பொருளையும் உணர்த்துதல்**

**பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்**
**சொல்லின் ஆகும் என்மனார் புலவர். (641)**

சொல்லுணர்த்தும் பொருளின் தன்மையை அறிதலும் அச்சொல்லின் தன்மையையே அறிதலும் சொல்லினாலாகும் என்று கூறுவர் புலவர். பண்பெலாம் அமைந்தாரைச் 'சான்றோர்' எனல் பொருண்மை தெரிதல்; அச்சொல் உயர்திணைப் பலர்பால் என அறிதல் சொன்மை தெரிதல். தொல்காப்பியர் 'செய்தென் எச்சம்' 'கடிஎன் கிளவி' என்று குறிப்பன சொன்மை தெரிதலாகும். பொருண்மை, சொன்மை என்பன சொல்லின் இரு பண்புகள்.

*சொல் வெளிப்படையாகவும் குறிப்பாகவும்*
*பொருளுணர்த்துதல்*

**தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்**
**இருபாற் றென்ப பொருண்மை நிலையே. (642)**

சொல்லினால் உணர்த்தப்படும் தனித்ததொரு பொருளை விளக்கிநிற்றலும் சொல்லினால் மட்டுமன்றிச் சூழலால் குறிப்புப் பொருளைத் தோற்றுவித்தலும் எனப் பொருளுணர்த்தும் நிலை இருபகுதிப்பட்டதாகும். தெரிபு வேறுநிலையல் – சொல்லினால் உணர்த்தப்படும் தனித்ததொரு பொருள் விளங்கிநிற்றல். குறிப்பின் தோன்றல் – முன்னதன் அடிப்படையில் குறிப்பால் ஒரு பொருள் தோன்றுதல். 'நீ மிகவும் பெரியவன்' என ஒருவனை நகையாடும் பொழுது, எள்ளல் என்னும் குறிப்புப் பொருள் தோன்றுகிறது. முதற் பொருளை 'நிலையல்' என்றும் குறிப்புப் பொருளைத் 'தோன்றல்' என்றும் கூறிய நுட்பங்கள் உணர்தற்பாலன.

### *சொற்களின் பாகுபாடு*
### *பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும்*

**சொல்லெனப் படுப பெயரே வினை என்று**
**ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே. (643)**

'சொல்' என்று சிறப்பித்துக் கூறப்படுவன பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் என்ற அவ்விருவகையினவாகுமென அறிஞர் கூறுவர். பெயர் பொருளைக் குறிக்கும்; வினை அப் பொருளின் புடைபெயர்ச்சியைக் குறிக்கும்.

### *இடைச்சொல்லும் உரிச்சொல்லும்*

**இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்**
**அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப. (644)**

இடைச்சொல் என்னும் சொல்லும் உரிச்சொல் என்னும் சொல்லும் முற்கூறிய பெயர்வினைகளைச் சார்ந்தது. அவற்றை இடமாகக் கொண்டு தோன்றும் என்பர் ஆசிரியர். தனித்து நின்று பொருள்தாராது பெயர் வினைகளிடையே தோன்றிப் பொருள்தரலால் 'இடைச்சொல்' என்றும், குணப்பண்பும் தொழிற் பண்பும் பற்றிய அடிச்சொல்லாயும் அடைமொழியாயும் பெயர் வினைகட்கு உரிமைபூண்டு பெரிதும் செய்யுட்கு உரியனவாய் வரலின் 'உரிச்சொல்' என்றும் இவை பெயர்பெற்றன. அவற்று வழி மருங்கின் – அவற்றின் அடிப்படையில், அவற்றை இடமாகக் கொண்டு.

### *திணை அடிப்படையில் பெயர்ச்சொல் வகை*

**அவற்றுள்,**
**பெயர்எனப் படுபவை தெரியுங் காலை**
**உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்**
**ஆயிரு திணைக்குமோ ரன்ன உரிமையும்**
**அம்மூ உருவின தோன்ற லாரே. (645)**

அவற்றுள், பெயர்ச்சொல் என்று சொல்லப்படுபவை, ஆராயுங் காலத்து, உயர்திணைக்குரிமையுடையவும் அஃறிணைக்குரிமையுடையவும் அவ்விரண்டு திணைக்கும் ஒத்த உரிமையுடையவும் என அம்மூன்று வடிவினையுடையவாம், அவை வெளிப்பட்டுப் பொருள்தரும் நெறிக்கண் என்றவாறு. ஓரன்ன உரிமை – ஒரே சமயத்தில் இருதிணையையும் உணர்த்தாது; ஒருகால் உயர்திணையைச் சுட்டுவது போலவே மறுகால் அஃறிணையையும் உணர்த்தி நிற்கும் என்பதாம். மூஉருவின – மூன்று வடிவின. வடிவாவது ஈண்டு வகைமையாகும். சொல்வடிவமே பொருளை வேறுபடுத்துகிறது.

*பெயர்களில் தாமே நின்று ஐம்பால் உணர்த்துவன*

**இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்**
**உரியவை உரிய பெயர்வயி னான. (646)**

வினைச்சொற்கள் தத்தம் ஈறுகளான் இருதிணை ஐம்பாலாய்ப் பிரிந்து பொருளுணர்த்த வல்லன. பெயர்ச்சொற்கள் அனைத்தும் அங்ஙனம் இருதிணை, ஐம்பாலாய்ப் பிரிந்து பொருளுணர்த்தவல்லன அல்லவெனினும், அங்ஙனம் பிரிந்துணர்த்தற்கு உரியன, அவ்வாறுணர்த்தும் இயல்புடையனவாம். அவன் அவள் அவர் அது அவை என இருதிணை ஐம்பாலை உணர்த்தவுரியன காண்க. நம்பி, பெண்டாட்டி, முள்ளி என்பன இகர ஈறு பெற்று ஆண்பால் பெண்பால் அஃறிணை ஒன்றன்பால் எனத் தத்தமது பொருள் வலிமையாலேயே திணை, பால் உணர்த்துகின்றன. எனவேதான் ஈறுகளால் பாலுணர்த்தும் வினைபோலாது, ஈண்டுப் பெயரில் ஐம்பால் உணர்த்தவல்லன மட்டுமே உரிய என விதந்தோதியுள்ளார்.

*உயர்திணைப் பெயர்வகை*
*ஒரு சார்பு பற்றியன*

**அவ்வழி,**
**அவன் இவன் உவன் என வரூஉம் பெயரும்**
**அவள் இவள் உவள் என வரூஉம் பெயரும்**
**அவர்இவர் உவர் என வரூஉம் பெயரும்**
**யான்யாம் நாம்என வரூஉம் பெயரும்**
**யாவன் யாவள் யாவர் என்னும்**
**ஆவயின் மூன்றொடு அப்பதி னைந்தும்**
**பால்அறி வந்த உயர்திணைப் பெயரே. (647)**

அவன் இவன் உவன் எனவரும் பெயர்களும் அவள் இவள் உவள் எனவரும் பெயர்களும் அவர் இவர் உவர் எனவரும் பெயர்களும் சுட்டுப்பெயர்களாகும். யான் யாம் நாம் என்பன தன்மைப் பெயர்களாகும். யாவன் யாவள் யாவர் என்பன வினாப் பெயர்களாகும். இறுதியிற் கூறிய அவ் வினாப் பெயர் மூன்றொடும் சேர்த்து, அப் பதினைந்து பெயர்களும் ஆண், பெண், பலர் என்னும் மூன்று பாலினையும் அறியவந்த உயர்திணைப் பெயர்களாகும். யான் யாம் நாம் என்னும் தன்மைப் பெயர்கள் உயர்திணையையே குறிக்கும். அஃறிணையாயின் அங்ஙனம் குறித்தல் இயலாதென்று கருதினர். ஆனால்

முன்னிலையில் நீ, உன் என அஃறிணை உயிர்களைக் குறித்தல் இயலுமெனவும் கொண்டனர். அதனால் முன்னிலைப் பெயர், வினைகளைப் பொதுவென விதிவகுத்தனர்.

*உயர்திணைப் பெயர்வகை*
*பிறிதொரு சார்பு பற்றியன*

**ஆண்மை அடுத்த மகன்என் கிளவியும்**
**பெண்மை அடுத்த மகள்என் கிளவியும்**
**பெண்மை அடுத்த இகர இறுதியும்**
**நம்ஊர்ந்து வரூஉம் இகர ஐ காரமும்**
**முறைமை சுட்டா மகனும் மகளும்**
**மாந்தர் மக்கள் என்னும் பெயரும்**
**ஆடூஉ மகடூஉ ஆயிரு கிளவியும்**
**சுட்டுமுத லாகிய அன்னும் ஆனும்**
**அவைமுத லாகிய பெண்டுஎன் கிளவியும்**
**ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ**
**அப்பதி னைந்தும் அவற்றோ ரன்ன.** **(648)**

இங்கு கூறப்படும் பதினைந்து பெயர்ச் சொற்களும், முற்கூறியவை போல உயர்திணை மூன்றுபால்களையும் உணர்த்தி நிற்பனவாகும். ஆண்மை அடுத்த மகன் என்னும் சொல் 'ஆண்மகன்'. பெண்மை அடுத்த மகள் என்னும் சொல் 'பெண்மகள்'. பெண்மை அடுத்த இகர இறுதிச் சொல் 'பெண்டாட்டி'. நம் ஊர்ந்து வரூஉம் இகர ஐகாரம் – நம்முடன் சேர்ந்து வரும் இகர இறுதிப் பெயர் – நம்பி. நம்முடன் சேர்ந்து வரும் ஐகாரஇறுதிப் பெயர் – நங்கை. முறைமை சுட்டாது மனிதரைப் பொதுவாகக் குறிக்குமுகத்தான் வரும் மகன், மகள் என்ற சொற்கள். மாந்தர், மக்கள் என்னும் பன்மை உணர்த்தும் பெயர்கள். ஆடூஉ, மகடூஉ என்னும் பெயர்கள். சுட்டு முதலாகிய அன், ஆன் ஈற்றுப்பெயர்கள்: அன்னன், அன்னான்; அத்தன்மையன், அத்தன்மையான் முதலியன. திருக்குறளில் இன்னான் எனப்படும் சொல் என வருதல் காண்க (453). அச்சுட்டெழுத்துக்களை முதலாகவுடைய பெண்டு என்னும் சொற்கள் : அன்னள், அன்னாள், முதலியன. அவை முதலாகிய பெண்டு – சுட்டு முதலாகிய பெண்மையைக் குறிப்பன. ஒப்பொடுவரூஉம் கிளவி – உவமிக்கப்படும் பொருளையடுத்துவரும் பெயர்கள் : கண்ணன்னன், கண்ணனன்னான். பொன்னன்னன், பொன்னன்னான் என இவ்வாறு வருவன. இவை அனைத்தும் ஈறாலும் வழக்குப் பயிற்சியாலும் பொருளாலும் ஆண், பெண், பலர் என உணர நின்றன.

### *உயர்திணையில் பால்வேறுபாடு காட்டும் பெயர்கள் ஒருவகை*

**எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்**
**எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்**
**பெண்மை அடுத்த மகன்என் கிளவியும்**
**அன்ன இயல என்மனார் புலவர். (649)**

எல்லாரும் என்னும் பெயர்த்தன்மையுடைய சொல்லும் எல்லீரும் என்னும் பெயர்த்தன்மையுடைய சொல்லும் பெண் என்பதை அடுத்த மகன் (பெண் மகன்) என்னும் சொல்லும் அவ்வாறு பால் விளங்க வந்த உயர்திணைப் பெயர்களாகும். புறத்தே போய் விளையாடும் பருவத்துப் பெண்ணை முன்பு பெண்மகன் என அழைப்பதுண்டு. இதனை ஒரு வட்டார வழக்கு என்பர் உரையாளர். எல்லாரும், எல்லீரும் என்பன உயர்திணைப் பலர்பால் என உணர நின்றன. பெண் மகன் என்பது அன் ஈறு பெறினும் பெண்ணெனவே உணர நின்றது.

### *உயர்திணையில் பால்வேறுபாடு காட்டும் பெயர்கள் பிறிதொரு வகை*

**நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே**
**வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே**
**பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே**
**பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே**
**பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே**
**கூடிவரு வழக்கின் ஆடியல் பெயரே**
**இன்றிவர் என்னும் எண்ணியல் பெயரொடு**
**அன்றி அனைத்தும் அவற்றியல் பினவே. (650)**

இங்கும் பால்விளங்கவந்த உயர்திணைப் பெயர்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். இங்குக் கூறியனவும், இவை போல்வன பிறவும் முற்கூறிய பால்விளங்கவந்த உயர்திணைப் பெயர்களின் இயல்பை உடையனவாம். நிலப்பெயர் – சோணாட்டான், மதுரையான். குடிப்பெயர் – சேரன், சோழன், பாண்டியன். குழுவின் பெயர் – அவையத்தான், மன்றத்தான், சங்கத்தான், சார்ந்த குழுவினால் வருபெயர் இது. அவையத்தார் எனக்குழுவைக் குறிப்பதும் அடங்கும். வினைப்பெயர் செய்யும் தொழில் பற்றியது : தச்சன், கொல்லன். உடைப்பெயர் உடைமைப் பொருள்பற்றி அதனை உடையார்க்கு வழங்குவது : செல்வன், பொன்னன், வேலன், வில்லன். பண்புகொள் பெயர் – கரியன், செய்யன், நல்லன்,

தீயன். பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயர் – பலரைக் குறிக்கும் உறவுமுறைத் தன்மையைக் குறிக்கும் பெயர். தாயர், தன்னையர், தந்தையர் என வருவன. பல்லோர்க்குறித்த சினைநிலைப் பெயர் – சினை(உறுப்புக்) காரணமாகப் பலரைக் குறிக்கும் பெயர். குருடர், செவிடர், பெருந்தோளர் என வழங்குவன. பல்லோர்க்குறித்த திணைநிலைப் பெயர் – திணை பற்றிப் பலரைக் குறிக்கும் பெயர். ஆயர், வேட்டுவர், மலைநாடர் என இலக்கியத்துள் வருவன. வெட்சியார், வஞ்சியார் என்றார் போல்வனவே இங்கு குறிக்கப்படுவன என்பர் பாவலரேறு ச.பாலசுந்தரனார். கூடிவரு வழக்கின் ஆடியற்பெயர் – கூடி விளையாடும் விளையாட்டின்கண் இளையோர் பகுதிப்படப் பிரிந்துநின்று, தத்தமது குழுவிற்கு என இட்டுவழங்கும் பெயர்கள். இன்றும் விளையாடும் அணிகளுக்குப் பெயரிட்டழைப்பக் காணலாம். செவ்வணியர், வெள்ளணியர் எனப் பிரிந்துவிளையாடுப. இன்றிவர் என்னும் எண்ணியற் பெயர் – இத்தனையர் என எண்ணும் எண்ணிகையளவான் வரும்பெயர். இருவர், பதின்மர், ஆயிரவர் என வருவன. அன்றி அனைத்தும் – அவ்வனைத்தும்.

*உயர்திணையில் பாலறிவந்த பெயர்களுக்கு ஒரு புறனடை*

**அன்ன பிறவும் உயர்திணை மருங்கில்**
**பன்மையும் ஒருமையும் பால்அறி வந்த**
**என்ன பெயரும் அத்திணை யவ்வே. (651)**

அவை போல்வன பிறவும் உயர்திணையிடத்து, ஒருமையும் (ஒருமையுள் ஆணும் பெண்ணும் அடங்கும்), பன்மையும் ஆகிய பாலறியவந்த எல்லாப் பெயர்களும் அவ் உயர்திணைப் பாற்படும். என்ன பெயரும் – எல்லாப் பெயரும். ஆண்பால், பெண்பால், பலர்பால் என அறியவந்தவையனைத்தும் உயர்திணைப் பாற்படும் எனக் கூறாதவற்றுக்கும் சேர்த்து, முடிபு கூறப்பட்டவாறு காண்க.

*அஃறிணைப் பெயர்வகை*
*ஒருசார்பு பற்றியன*

**அதுஇது உதுஎன வரூஉம் பெயரும்**
**அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்**
**அவைஇவை உவைஎன வரூஉம் பெயரும்**
**அவைமுத லாகிய வகரப் பெயரும்**
**யாதுயா யாவை என்னும் பெயரும்**
**ஆவயின் மூன்றொடு அப்பதி னைந்தும்**
**பால்அறி வந்த அஃறிணைப் பெயரே. (652)**

அஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் எனப் பால் வேறுபாடு அறியவந்த பெயர்கள் பதினைந்து எனப் பட்டியலிட்டுக் காட்டப்படுகின்றது. அது இது உது எனவரும் பெயர். அவை முதலாகிய ஆய்தப் பெயர் - அச்சுட்டுகள் முதலாகவரும் அஃது, இஃது, உஃது என்பன. அவை இவை உவை என வரும் பெயர். அவை முதலாகிய வகரப் பெயர் – அவ் இவ் உவ் என்பன. யாது, யா, யாவை என்னும் பெயர். முன்பு கூறிய சுட்டுப் பெயர்கள் பனிரண்டுடன், இறுதியில் கூறிய வினாப்பெயர்கள் மூன்றையும் கூட்டி, அப் பதினைந்தும் அஃறிணைப் பெயர்களாம்.

*அஃறிணைப் பெயர்வகை*
*பிறிதொரு சார்பு பற்றியன*

**பல்ல பலசில என்னும் பெயரும்**
**உள்ள இல்ல என்னும் பெயரும்**
**வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள பெயரும்**
**இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்**
**ஒப்பி னாகிய பெயர்நிலை உளப்பட**
**அப்பால் ஒன்பதும் அவற்றோ ரன்ன. (653)**

இந்நூற்பாவும் 'பாலறிய வந்த அஃறிணைப் பெயர்கள்' ஒன்பது எனப் பிறிதொரு பட்டியலிடுகிறது. பல்ல, பல, சில என்னும் பெயர்கள்; உள்ள, இல்ல என்னும் பெயர்கள்; வினையாலணையும் பெயர்கள் (உழுதது, வந்தது); பண்புப் பெயர்கள் (கரியது, நல்லது); இனைத்து எனக் கிளக்கும் எண்ணுக் குறிப்பெயர் - இத்தனை எனச் சொல்லும் எண்ணிக்கையைக் குறிக்கும் பெயர்கள் (ஆயிரம் தந்தான், நூறு அடி நடக்க வேண்டும்); எண்ணலளவைப் பெயர்களும் இதிலடங்கும். ஒப்பின் ஆகிய பெயர்நிலை – பொன்னனையது, கண் போன்றது.

*பலவின்பால் அஃறிணை இயற்பெயர்கள்*
*கள் விகுதி பெறுதல்*

**கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே**
**கொள்வழி யுடைய பலஅறி சொற்கே. (654)**

கள் ஈற்றொடு பொருந்தி, அவ் அஃறிணைப் பொருள்மேல் வரும் இயற்பெயர்கள், பலவறி சொற்களாகக் கொள்ளும் இடனுடையன. பறவைகள், காடுகள், 'கொள்வழி உடைய' என்பதால், இவை அன்று அருகி வழங்கத் தொடங்கியமை அறியப்படும். பறவை, குயில், யானை, பலா, மரம் என்றாற்போல்வனவற்றை 'அஃறிணை இயற்பெயர்' எனக் குறிப்பிட்டாள்கிறார் தொல்காப்பியர். இவை கள்விகுதி பெறும்.

*அஃறிணையில் பாலறிவந்த பெயர்களுக்கு ஒரு புறனடை*

**அன்ன பிறவும் அஃறிணை மருங்கில்**
**பன்மையும் ஒருமையும் பால்அறி வந்த**
**என்ன பெயரும் அத்திணை யவ்வே. (655)**

அவைபோல்வன பிறவும் அஃறிணையிடத்து ஒருமையும் பன்மையும் (ஒன்றன்பாலும் பலவின்பாலும்) அறிய வந்த அனைத்துப் பெயர்களும் அவ்வஃறிணைப் பாற்படும். முன்னைய 651ஆம் நூற்பாவை ஒப்புநோக்குக. இவை முறையே உயர்திணைக்கும் அஃறிணைக்கும் உரியவை அனைத்தையும் குறிக்கும் நூற்பாக்களாய், ஒரே நடைத்தாய் உள்ளன.

*'கள்' விகுதி பெறாத அஃறிணை இயற்பெயர்கள்*
*வினைச்சொல் முடிபால் பாலுணர்த்துதல்*

**தெரிநிலையுடைய அஃறிணை இயற்பெயர்**
**ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே. (656)**

அவ் அஃறிணை இயற்பெயர்கள், வினையொடு வரும்போது, ஒருமையும் பன்மையும் தெரிநிலையுடைய. மாடு, குயில், மயில் என்றித் தொடக்கத்தனவாக அஃறிணை இயற்பெயர்கள், வினைச்சொல்லோடு சேர்ந்து வந்தால்தான் ஒருமையா பன்மையா என்ற வேறுபாடறியப்படும். தெரிநிலையுடைய – பால் அறியப்படும் தன்மையையுடைய. மயில் பறந்தது ஒருமை; பூங்குயில் கூவின பன்மை. வினையால் வேறுபாடறியப்படுதல் காண்க.

*விரவுப் பெயர் இயல்பு*
*விரவுப் பெயர்கள் தத்தம் வினைமுடிபால்*
*திணை, பால் உணர்த்தும் முறை*

**இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்**
**திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்**
**நினையுங் காலைத் தத்தம் மரபின்**
**வினையோ டல்லது பால்தெரி பிலவே. (657)**

உயர்திணைச் சொல்லுக்கும் அஃறிணைச் சொல்லுக்கும் ஒத்த உரிமையுடையவாய் அமைந்து, அதினின்று பிரிந்து வேறுபட்டு ஏதேனும் ஒரு திணையை உணர்த்தவரும் எல்லாப் பெயரும், ஆராயுங்காலத்து, தத்தமக்குரிய வினையுடன் கூடியல்லது, பால் (திணை) வேறுபாடு அறிதல் இயலாது. திரிபு வேறு படூஉம் – பொதுமையினின்றும் திரிந்து வேறுபடும்; அதாவது ஒரு திணையை

உணர்த்த முற்படும். சாத்தி வந்தாள்; சாத்தி வந்தது (பசுவுக்குச் சாத்தி எனப் பெயரிட்டழைத்தல் பழம் மரபு). பாண்டியன் வந்தான், பாண்டியன் வந்தது.

### *விரவுப் பெயர்கள் பொதுவினையாலும் திணை, பால் அறியப்படுதல்*

**நிகழூஉ நின்ற பால்வரை கிளவியின்**
**உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே**
**அன்ன மரபின் வினைவயி னான. (658)**

விரவுப் பெயர்கள், நிகழ்காலத்தை உணர்த்துகின்ற, பால் வேறுபாடு புலப்படுத்தாத, செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்களால் முடியும் போது, அவை பொருந்திய மரபினையுடைய தொழில் பற்றிய வினையுடன் வருங்காலத்து, உயர்திணை ஒருமை என்பது விளங்கித் தோன்றலு முண்டு. சாத்தி புல்மேயும் என்னாது, சாத்தி சாந்தரைக்கும், சாத்தன் இசைபாடும் என்றால் 'அன்ன மரபின் வினை' காரணமாக, அவை உயர்திணை என உணரப்படும். நிகழூஉ நின்ற - நிகழ்காலம் குறித்த செய்யுமென்னும் முற்று எதிர்காலத்தையும் குறிக்குமாதலின் இங்கு நிகழ்காலம் குறிக்கும் வினை என்றார். பால்வரை கிளவி - தன்னியல்பால் பால்தோற்றாத சொல். வரும், போகும், செய்யும் என்பன தம்மளவில் திணை, பால் உணர்த்துவதில்லை. 'சாந்தரைக்கும்' என்பதைக் கொண்டு, சாத்தி என்பது பசுவன்று உயர்திணைப் பெண்பால் என அறியமுடிகிறது. பாண்டியன் நன்கு கற்கும் என்றால் உயர்திணை என்றும் பாண்டியன் இவ்வழித்தடத்தில் போகும் என்றால் அஃறிணை என்றும் இன்று அறிகிறோமல்லவா?

### *விரவுப் பெயர் வகை*

**இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற் பெயரே,**
**முறைப்பெயர்க் கிளவி, தாமே, தானே**
**எல்லாம், நீயிர், நீ எனக் கிளந்து**
**சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்கு**
**அன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே. (659)**

இயற்பெயர் முதலியனவாகக் கிளந்து சொல்லப்பட்டன விரவுப் பெயர்களாகும். அங்ஙனம் சொல்லியனவல்லாத பிறவுமாகிய அத்தன்மையுடைய பெயர்ச் சொற்கள் காணப்படுமாயின் அவற்றையும் அவ்வஃறிணை விரவுப் பெயர்களோடு ஒருங்கு கூட்டிக் கொள்ளுதல் வேண்டும்.

அவை வருமாறு: இயற்பெயர் - ஒரு பொருளுக்கு இடப்பட்டு இடுகுறியாய் வழங்கும் பெயர். மனிதப் பெயர்களைப் பிற உயிரினங்கட்கும் பொருள்கட்கும்

இட்டு வழங்குவதிது. சாத்தன், சாத்தி, பாண்டியன், இராணி மங்கம்மாள் முதலியன. சினைப்பெயர் – உறுப்பால் வரு பெயர். செவியன், முடவன், முடத்தி என்பன. சினை முதற் பெயர் – சினையும் முதலும் இணைந்த பெயராய் வழங்குவன. நெடுஞ் செவிச் சாத்தன், கொடும்புற மருதி என்பன. செவியாகிய உறுப்பும் அச்சினையுடைய முதலாகிய சாத்தனும் இணைந்து ஒரேபெயராய் 'செவிச் சாத்தன்' என வருதலால் இது சினைமுதற் பெயரெனப்படும். முறைப் பெயர்க்கிளவி – உறவுமுறைப் பெயர்களும் இருதிணைக்கும் பொதுவான விரவுப் பெயர்களே. அம்மா, அப்பா, தந்தை, மகவு என வருவன அஃறிணையிலும் கூறப்படுவதுண்டு. தாம், தான், எல்லாம், நீயிர், நீ என்பனவும் விரவுப் பெயர்களேயாம்.

*விரவுப் பெயர்ப் பாகுபாடு*

**அவற்றுள்,**
**நான்கே இயற்பெயர்; நான்கே சினைப்பெயர்;**
**நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே;**
**முறைப்பெயர்க் கிளவி இரண்டா கும்மே;**
**ஏனைப் பெயரே தத்தம் மரபின.** **(660)**

அவ் விரவுப் பெயர்களுள் இயற்பெயர், சினைப்பெயர், சினை முதற்பெயர் என்ற மூன்றும் தனித்தனி நான்கு கூறுகளை உடையனவாகும். முறைப் பெயர்ச்சொற்கள் இரண்டு கூறாகும். ஏனைய தாம், தான், எல்லாம், நீயிர், நீ என்பன தனித்தனியே ஒவ்வொன்றாய் நிற்கும் மரபினையுடையனவாம்.

*நான்குவகை இயற்பெயர்கள்*

**அவைதாம்,**
**பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்**
**பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயர் என்று**
**அந்நான்கு என்ப இயற்பெயர் நிலையே.** **(661)**

முற்கூறிய விரவுப்பெயர் வகைகளுள், இயற்பெயர் என்பன பெண்மை இயற்பெயர், ஆண்மை இயற்பெயர், பன்மை இயற்பெயர், ஒருமை இயற்பெயர் என அந் நான்கு வகைப்படும் என்பர். முன்பு ஆடு மாடு மான் நாய் முதலியவற்றையும் மணி, சாத்தன், சாத்தி, கொற்றன், கொற்றி எனப் பெயரிட்டு அழைத்தனர். அதுபோல் மா, பலா, முல்லை, குயில், ஆ, மான் என இவ்வாறு அழைப்பனவும் தொல்காப்பியரால் அஃறிணை இயற்பெயர் என்று குறிக்கப்படுகின்றன. எனவே சாத்தி வந்தாள், சாத்தி வந்தது என்றால் இப்

பெண்மை இயற்பெயர் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாகி விரவுப் பெயராதல் காண்க. பாண்டியன் வந்தான், பாண்டியன் வந்தது என்றால் ஆண்மை இயற்பெயர் அங்ஙனம் பொதுப் பெயராதல் அறிக. நல்லமணி வந்தது, நல்லமணி வந்தன, நல்லமணி வந்தார் (ஆணையோ பெண்ணையோ குறிக்கும்) என இயற்பெயர்கள் இம் மூன்று பாலுக்கும் பொதுவாய் வருமிடத்தே, விரவிவரும் பன்மை இயற்பெயர் எனப்படும். பாண்டி வந்தது, பாண்டி வந்தான், பாண்டி வந்தாள் என இம் மூன்று பாலுக்கும் பொதுவாய் வருவன விரவி வரும் ஒருமை இயற்பெயர்களாகும். இவை இவ்வாறு வருமென்பது பின்வரும் நூற்பாக்களில் (665, 666, 667, 668) விதந்துரைக்கப்படும். இவ் விரவுப் பெயர்கள் இங்ஙனம் தத்தம் ஈறுகளானன்றி சூழலாலும், வினையாலும் உணரப்படுகின்றன. அதனால் இவை விரவிவரும் பாங்கும் இடம் நோக்கிப் பலவாறமையும்.

### *நான்குவகைச் சினைப்பெயர்கள்*

**பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப் பெயர்**
**பன்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயர் என்று**
**அந்நான்கு என்ப சினைப்பெயர் நிலையே. (662)**

முற்கூறிய விரவுப்பெயர் வகைகளுள், சினைப்பெயர் என்பன பெண்மைச் சினைப் பெயர், ஆண்மைச் சினைப்பெயர், பன்மைச் சினைப் பெயர், ஒருமைச் சினைப் பெயர் என அந்நான்கு வகையினவாகும் என்பர். குருடன், முடவன், நெடுங்கழுத்தி என்றாற் போல்வன சினையால் (உறுப்பால்) குறிக்கப்படும் சினைப்பெயர்கள்.

பெண்மைச் சினைப்பெயர் - முடத்தி வந்தது, முடத்தி வந்தான்.
ஆண்மைச் சினைப்பெயர் - முடவன் வந்தது, முடவன் வந்தான்
பன்மைச் சினைப்பெயர் - முடம் வந்தது, முடம் வந்தன, முடம் வந்தார் (ஆணையோ, பெண்ணையோ குறிக்கும்.)
ஒருமைச் சினைப்பெயர் - குருடு வந்தது, குருடு வந்தான், குருடு வந்தாள்.

### *நான்குவகைச் சினைமுதற் பெயர்கள்*

**பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே**
**ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே**
**பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே**
**ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரென்று**
**அந்நான்கு என்ப சினைமுதற் பெயரே. (663)**

முற்கூறிய விரவுப் பெயர் வகைகளுள், சினைமுதற் பெயர் என்பனவும் பெண்மைச் சினைமுதற்பெயர், ஆண்மைச் சினைமுதற்பெயர், பன்மைச் சினைமுதற்பெயர், ஒருமைச் சினைமுதற்பெயர் என்று அந்நான்கு வகைப்படுமென்பர். பெண்மை சுட்டிய – பெண்மையைக் குறித்த.

பெண்மைச் சினை முதற்பெயர் – கொடும்புற மருதி வந்தது, வந்தாள்.

ஆண்மைச் சினை முதற்பெயர் – கொடும்புற மருதன் வந்தது, வந்தான்.

பன்மைச் சினை முதற்பெயர் – செங்கண் அரிமா வந்தது, வந்தன, வந்தனர்.

ஒருமைச் சினை முதற்பெயர் – கொடும்புறமருது வந்தது, வந்தான், வந்தாள்.

### *இருவகை முறைப்பெயர்கள்*

**பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப்பெயர் என்று**
**ஆயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே. (664)**

அவ் விரவுப் பெயர்வகைகளுள் உறவு முறைப்பெயர்கள் பெண்மை முறைப்பெயர், ஆண்மை முறைப்பெயர் என இருவகையாகுமென்பர். அம்மா பால் கொடுத்தது, அம்மா பால் கொடுத்தாள். தந்தை அழைத்தது, தந்தை அழைத்தான்.

### *விரவுப் பெயர்களில் இவையிவை விரவி வரும் எனல்*
### *பெண்மை சுட்டிய விரவுப் பெயர்களில் விரவி வருவன*

**பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்**
**ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே. (665)**

மேலே பெண்மைசுட்டிய விரவுப் பெயரெனப்பட்ட அனைத்தும் அஃறிணை ஒன்றன்பாலுக்கும் உயர்திணைப் பெண்பாலுக்கும் பொருந்தி வருவனவாம். விரவுதலென்பது இங்கு அஃறிணையில், ஒன்றன்பாலுடன் உயர்திணைப் பெண்பால் விரவுதல் பற்றியதாகும். இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், உறவுப் பெயர் எல்லாம் அடங்க எல்லாப் பெயரும் என்றார். இது முதல் நான்கு நூற்பாக்களில் விரவுப் பெயர்கள் இன்ன பால், திணைக்குப் பொதுவாய் விரவுமென்று கூறுகிறார்.

### *ஆண்மை சுட்டிய விரவுப் பெயர்களில் விரவிவருவன*

**ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்**
**ஒன்றற்கும் ஒருவருக்கும் ஒன்றிய நிலையே. (666)**

முன்பு ஆண்மை சுட்டிய விரவுப் பெயரெனப்பட்ட அனைத்தும் அஃறிணை ஒன்றன்பாலுக்கும் உயர்திணை ஆண்பாலுக்கும் பொருந்தி வருவனவாம். அஃறிணையில் ஆண், பெண், பால்கள் பகுத்துக் கூறல் வழக்காற்றில் மிகுதியும் இல்லை.

*பன்மை சுட்டிய விரவுப் பெயர்களில் விரவி வருவன*

**பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்**
**ஒன்றே பலவே ஒருவர் என்னும்**
**என்றுஇப் பாற்கும் ஓரன் னவ்வே. (667)**

பன்மையைக் குறிக்கும் எல்லா விரவுப் பெயர்களும் அஃறிணையில் ஒன்றன்பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொதுவாக வருவதுடன், உயர்திணையில் ஆண் பெண் என்னும் இருபாலையும் குறிக்கும் பன்மைக்கும் உரிமையுடையவாய் வருவனவாம். ஒருவர் என்னும் – உயர்திணையில் ஆண், பெண் என்னும் இரண்டற்கும் பொதுவான பன்மையாகிய ஒருவர் என்னும். என்று இப்பாற்கும் – என்ற மூன்று பாலுக்கும். அஃறிணையில் ஒருமை பன்மைக்குப் பொதுவாதலும் அவை உயர்திணைப் பலர்பாலுடன் (ஆண், பெண்ணுக்குப் பொது) பொதுவாதலும் உண்டு.

*ஒருமை சுட்டிய விரவுப் பெயர்களில் விரவி வருவன*

**ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்**
**ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே. (668)**

ஒருமையைக் குறித்து வரும் எல்லாப் பெயர்களும் அஃறிணை ஒன்றன்பாலுக்கும் உயர்திணை ஆண்பால், பெண்பாலுக்கும் பொருந்தி வருவனவாம். இவற்றிற்கான காட்டுக்கள் முன்பே அவ்வந் நூற்பாக்களில் காட்டப்பட்டன.

*தாம் என்னும் விரவுப் பெயர் இயல்பு*

**தாம் என் கிளவி பன்மைக் குரித்தே. (669)**

'தாம்' என்னும் விரவுப் பெயர் இருதிணை சார்ந்த பன்மைக்கும் உரிமை உடையதாகும். தாம் வந்தார், தாம் வந்தன.

*தான் என்னும் விரவுப் பெயர் இயல்பு*

**தான் என்கிளவி ஒருமைக் குரித்தே. (670)**

தான் என்னும் விரவுப் பெயர் இருதிணை சார்ந்த ஒருமையைக் குறித்து வரும். தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது.

### *'எல்லாம்' என்னும் விரவுப் பெயர் இயல்பு*

**எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளிவி**
**பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே. (671)**

எல்லாம் என்னும் பெயர்த்தன்மையுடைய பொதுச்சொல், பன்மைப் பாலைக் கருதிய தன்மைத்தாகும். பெயர்நிலைக் கிளவி – பெயர்த் தன்மையுடைய சொல். பல்வழி நுதலிய – பன்மை கருதிய, பலவழியாகக் கருதிய எனலுமாம்.

எல்லாரும் எல்லீரும் என்பன உயர்திணை சுட்டுவன என்பது முன்னர்க் கூறப்பட்டது (649). நாங்கள் எல்லோரும், நீங்கள் எல்லீரும், அவர்கள் எல்லாரும் என்பன உயர்திணையாயின. எல்லாம் என்பது அஃறிணைப் பன்மை பற்றியதேயாம். எனினும் அது விரவுப் பெயராக ஆளப்படுமிடங்களும் உள என்பதே இந்நூற்பாக் கருத்து. உயர்திணையில் 'நாமெல்லாம்' என விரவி வருமிடமே அது. அஃறிணையில் ஆக்கள் எல்லாம், காளைகளெல்லாம், ஆடுகள் எல்லாம், மரங்கள் எல்லாம், குளமெல்லாம், காடெல்லாம் எனப் பலவழியாலும் நுவலப்படும். மேலும் அஃறிணையில் நீங்கள் எல்லாம் வந்தீர், அவைகள் எல்லாம் வந்தன என்று கூறுவர். நாம் கொடுத்தோம், யாம் வந்தேம் எனில், அவை உயர்திணையையே குறிக்கும் என்பது முன்னர்க் கூறப்பட்டது (647). அதற்குக் காரணம் அஃறிணை உயிர்கள் அங்ஙனம் தன்மையிடத்தில் கூறுதல் இயலாது எனக் கருதினர். எனவே எல்லாம் என்பது அஃறிணையில் முன்னிலை, படர்க்கையிலும், படர்க்கையில் பலவகையாகவும் வருமென்பது பெறப்பட்டது.

### *'எல்லாம்' என்னும் விரவுப் பெயர் உயர்திணையில் வருமாறு*

**தன்னுள் ளுறுத்த பன்மைக் கல்லது**
**உயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை. (672)**

முற்கூறிய 'எல்லாம்' என்னும் விரவுப் பெயர், உயர்திணையில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைக்கல்லது, செல்வாக்குப் பெற்று வருதலில்லை. தன் உள்ளுறுத்த பன்மை – தன்மை உள்ளிட்ட பன்மை, உளப்பாட்டுத் தன்மைப்பன்மை. ஆக்கம் இல்லை – செல்வாக்காகப் பெருக வருதலில்லை (சிறுபான்மை வரும் என்பது குறிப்பு). நாம், யாம் என்பன உயர்திணையின என்றதால் (647), 'நாம் எல்லாம்' என வருதல் இயலாது. ஆயின் 'நாமெல்லாம் முன்னேற வேண்டும்' என்று நாட்டை உளப்படுத்தும் போது 'எல்லாம்' எனவரலாம். 'நாம் எல்லாம் படையெடுத்துப் புறப்படுவோம்' என்றால் ஏனைய கரி, பரி, தேர்ப்படைகளையும் உளப்படுத்தலால் பொருந்தும். ஏனைய இடங்களில் உயர்திணையில் 'எல்லாம்' இடம்பெறாதென்பதே தெளிவு. 'நீயிர் எல்லாம்',

*ஒருவர் என்பது ஒருமையாயினும்*
*பன்மைவினை கொள்ளுதல்*

**தன்மை சுட்டின் பன்மைக்கு ஏற்கும்.** (677)

ஒருவர் என்னும் பெயரினது இயல்பைக் கருதுமிடத்து, அது பன்மை வினை கொண்டு முடியும். 'ஒருவர்' என்பது ஒருமையையே குறிப்பதாயினும் வினைமுடிபு, சொல்வடிவிற்குப் பொருந்த பன்மை வினைமுடிபாகவே அமையும் என்பதாம். ஒருவர் வந்தான் என ஒருமைமுடிபு கொள்ளாது, ஒருவர் வந்தார் எனப் பன்மை முடிபே கொள்ளும்.

*நீயிர் நீ ஒருவர் போல்வனவற்றின் திணை, பால் அறிதல்*

**இன்ன பெயரே இவை எனல் வேண்டின்**
**முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல்.** (678)

நீயிர், நீ, ஒருவர் என்று சொல்லப்பட்ட இப் பெயர்கள், இன்ன திணை, பாலுக்குரியன என்று அறியவேண்டின், சொல்லுவானது குறிப்பொடு சேர்த்து, வழக்கு முறைமையானே உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். முன்னம் - சொல்லுவானது மனக்குறிப்பு. சொல்லப்பட்ட சூழல் இவற்றைவைத்துக் குறிப்பாலுணர்தல்.

*பால்திரிந்த பெண்மகன் எனும் பெயர்*
*பெண்பால் வினை கொள்ளுதல்*

**மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி**
**மகடூஉ இயற்கை தொழில்வயி னான.** (679)

பெண்பாலிடமாகப் பால்திரிந்து வழங்கும் பெண்மகள் (இன்று பெட்டைப் பசங்கள் என்பரி என்னும் சொல், வினை கொள்ளுமிடத்துப் பெண்பால் இயல்பாய் முடியும். தொழில்வயின் - வினைவயின், மகடூஉ இயற்கை - பெண்பால் இயல்பாய் முடியும். 'பெண்மகன்' என்பது அக்காலத்து வட்டார வழக்குகளில் ஒன்றென்பர். பெண்மகன் வந்தாள்.

*பெயர்ச்சொற்களின் ஈறுதிரிதல்*
*செய்யுளுள் 'ஆ' கார ஈறுகள் ஓகார ஈறுகளாதல்*

**ஆ ஓ ஆகும் பெயருமாருளவே**
**ஆயிடன் அறிதல் செய்யுளுள்ளே.** (680)

*ஒருவர் என்பது ஒருமையாயினும் பன்மைவினை கொள்ளுதல்*

**தன்மை சுட்டின் பன்மைக்கு ஏற்கும். (677)**

ஒருவர் என்னும் பெயரினது இயல்பைக் கருதுமிடத்து, அது பன்மை வினை கொண்டு முடியும். 'ஒருவர்' என்பது ஒருமையையே குறிப்பதாயினும் வினைமுடிபு, சொல்வடிவிற்குப் பொருந்த பன்மை வினைமுடிபாகவே அமையும் என்பதாம். ஒருவர் வந்தான் என ஒருமைமுடிபு கொள்ளாது, ஒருவர் வந்தார் எனப் பன்மை முடிபே கொள்ளும்.

*நீயிர் நீ ஒருவர் போல்வனவற்றின் திணை, பால் அறிதல்*

**இன்ன பெயரே இவை எனல் வேண்டின்**
**முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல். (678)**

நீயிர், நீ, ஒருவர் என்று சொல்லப்பட்ட இப் பெயர்கள், இன்ன திணை, பாலுக்குரியன என்று அறியவேண்டின், சொல்லுவானது குறிப்பொடு சேர்த்து, வழக்கு முறைமையானே உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். முன்னம் - சொல்லுவானது மனக்குறிப்பு. சொல்லப்பட்ட சூழல் இவற்றைவைத்துக் குறிப்பாலுணர்தல்.

*பால்திரிந்த பெண்மகன் எனும் பெயர் பெண்பால் வினை கொள்ளுதல்*

**மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி**
**மகடூஉ இயற்கை தொழில்வயி னான. (679)**

பெண்பாலிடமாகப் பால்திரிந்து வழங்கும் பெண்மகள் (இன்று பெட்டைப் பசங்கள் என்பர) என்னும் சொல், வினை கொள்ளுமிடத்துப் பெண்பால் இயல்பாய் முடியும். தொழில்வயின் - வினைவயின், மகடூஉ இயற்கை - பெண்பால் இயல்பாய் முடியும். 'பெண்மகன்' என்பது அக்காலத்து வட்டார வழக்குகளில் ஒன்றென்பர். பெண்மகன் வந்தாள்.

*பெயர்ச்சொற்களின் ஈறுதிரிதல்*
*செய்யுளுள் 'ஆ' கார ஈறுகள் ஓகார ஈறுகளாதல்*

**ஆ ஓ ஆகும் பெயருமாருளவே**
**ஆயிடன் அறிதல் செய்யுளுள்ளே. (680)**

ஆன், ஆள், ஆர் என்றிவ்வாறு முடியும் பெயர்களில், ஈற்றயலில் நிற்கும் ஆ, ஓவாக மாறும் பெயர்க்ளும் உள. அவ்வாறு வருமிடங்களைச் செய்யுளுள்ளே வரும் வழக்கினை வைத்து அறிந்து கொள்க. வில்லோன், தொடியோள், நல்லோர்.

*செய்யுளில் வரும் கருப் பொருளில் இடம்பெறும்*
*உயர்திணை ஈறுள்ள விரவுப் பெயர்கள் அஃறிணை சுட்டுதல்*

**இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்**
**இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா**
**நிலத்துவழி மருங்கில் தோன்ற லான. (681)**

அகத்திணைச் செய்யுளுள் வரும் கருப்பொருளாகிய இறைச்சிப் பொருளின்கண் கூறப்படும் இயற்பெயர்கள் அந்நில அடிப்படையில் ஆண்டுள்ள கருப்பொருள் உயிரினங்கட்கு இட்டு வழங்கப்படுவனவாதலின் உயர்திணைய்யக் குறிக்கமாட்டா. செய்யுளுள் கிளக்கும் இயற்பெயர்க் கிளவி - கடுவன், மூலன், முதுமகன், வன்பறழ்க்குமரி என இவ்வாறு செய்யுளுள் வரும் இறைச்சிக் கருப்பொருள்களுக்கு இட்டு வழங்கும் இயற்பெயர்ச் சொற்கள். இவை உயர்திணை ஈறுகளுடன் காணப்படினும் உயர்திணையைச் சுட்டாமல் அஃறிணையைச் சுட்டுமென்பதாம். குரங்கு, யானை போன்ற உயிரினங்களைக் குறிக்கும் பெயர்களாகும். நிலத்துவழி மருங்கின் - நிலம் சார்ந்த கருப்பொருளடிப்படையில். தோன்றலான - தோன்றி வழங்கும் காரணத்தால். இவையும் விரவுப் பெயர்களாய், உயர்திணை ஈறுகளுடன் நின்று, அஃறிணையைக் குறித்தலின் புறனடையாக இங்குக் கூறப்பட்டுள்ளன.

*பிற திணைவழிப் பெயர்கள் உயர்திணை சுட்டுதல்*

**திணையொடு பழகிய பெயரலங் கடையே. (682)**

அகப்பாடலில் ஐந்திணையையும் சார்ந்து விடலை, மீளி, காளை என இவ்வாறு அடிப்பட வழங்கும் பெயர்கள், உயர்திணையையே சுட்டும். இவையல்லாதனவே அஃறிணையைச் சுட்டும் என்பதாம். பெயர் அலங்கடை - இப் பெயர்கள் அல்லாத இடத்து. பழகிய - அடிப்பட வழங்கிய.

# 6. வினையியல்

பொருளது புடைப்பெயர்ச்சியைக் கூறுவது வினை எனப்பட்டது. தொல்காப்பியர் தொழில், தொழில் இறுசொல் என்றிவ்வாறு வினையைத் தொழிற்சொல் என்றே சுட்டுமிடங்கள் பலவுள. பெயரும் வினையுமே மொழியின் தலைமை வாய்ந்த சொற்களெனினும், வினைச்சொற்களே ஒரு மொழியின் உயிராய் – இயக்கமாய் – அடிப்படையாய் விளங்குகின்றன. மொழிக்கலப்பு, கடன் வாங்கலில் பெயர்ச்சொற்களே மிகுதி; வினைச்சொற்கள் அங்ஙனம் கடன் வாங்கப்படுவதோ, கலப்புறுவதோ மிக மிக அரிது.

உயர்திணை வினைச்சொல், அஃறிணை வினைச்சொல், விரவுவினைச்சொல்; வினையெச்சம், பெயரெச்சம்; சில சிறப்புவிதிகள்; காலம் மயங்கும் வினைச்சொற்கள் எனப் பாகுபாடு செய்துகொண்டு நிரலே கூறிப்போகும் தொல்காப்பியத்திறம் படித்துணரத் தக்கது. உயர்திணை, அஃறிணையில் முதலில் தெரிநிலை வினைபற்றியும் பின்பு குறிப்பு வினை பற்றியும் என வரிசைப்படுத்தி விதிகூறுகிறார். தன்மை, படர்க்கை இடம்பற்றி உயர்திணை வினையில் கூறுதல், படர்க்கை இடம் பற்றிமட்டும் அஃறிணை வினையில் கூறுதல், முன்னிலை வினையை விரவு வினையில் கூறுதல் என இவற்றுக்குத் தக்க காரணமுண்டு. தன்மை வினை உயர்திணைக்கு மட்டுமே உண்டு. பிற உயிர்கள் தம்மைக் குறித்துப் பேசா. உயர்திணை, அஃறிணையில் படர்க்கை இடவினைகளே மிகுதி. முன்னிலை வினை யாவும் விரவு வினையாகத் தக்கன. இவ்வாறு தொல்காப்பிய அமைப்புக்கும், வரிசை முறைக்கும், ஒவ்வொரு சூத்திர இயைபுக்கும் காரணம் தேடி அறிய வாய்ப்புண்டு. வினையியலில் இவ் வியைபு முறை தெற்றென விளங்கி நிற்கக் காண்கிறோம்.

### இயல் கருத்து நிரல்

**வினைச்சொல்லின் பொது இலக்கணம்**

வினைச்சொல் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, வேற்றுமை (உருபுகளை) ஏற்காது; ஆராயுமிடத்துக் காலத்தோடு விளங்கிநிற்கும்.

காலம் என்பது மூன்றுவகைப்படுமெனக் கூறுவர்.

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலங்களையும்

வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கொண்டு தோன்றும் முறைமையினையுடையது, வினைச் சொல்.

**வினைச் சொல்வகை**

குறிப்பாகவும் தெரிநிலை வினையாகவும் முறைப்படத் தோன்றுவனவாய்க் காலத்தைக் காட்டி வரும் வினைச் சொற்களனைத்தும் உயர்திணைக்கு உரிமையுடையனவும் அஃறிணைக் குரிமையுடையனவும் அவ்விரு திணைக்கும் ஒத்த பொது உரிமையுடையனவுமென அம் மூவகையினவாகும். அவை தோன்றும் முறைமைக்கண் என்பதாம்.

**உயர்திணைத் தெரிநிலை வினைமுற்று**

**தன்மைப் பன்மை**

அவற்றுள், அம் ஆம் எம் ஏம் என்னும் வினை ஈறுகளாம் இடைச்சொற்களும் கும் டும் தும் றும் எனவரும் நான்கு வினையீறுகளாம் இடைச்சொற்களும் ஆகிய அவ் எட்டு இடைச் சொற்களும் தன்மைப் பன்மைச் சொற்களாகும்.

**தன்மை ஒருமை**

கு டு து று என்னும் நான்கு குற்றியலுகர ஈறுகளுடன் என் ஏன் அல் எனவரும் மூன்று ஈறுகளையும் கூட்டி, அவ் ஏழுவினை ஈறுகளும் பிறரை உளப்படுத்தாது தன் செயலை உரைக்கும் தன்மை ஒருமைச் சொற்களாகும்.

அத் தன்மை ஒருமை வின முற்றுக்களில், 'செய்கு' எனும் வாய்ப்பாட்டு வினைமுற்று, பிறிதொரு வினை கொண்டு முடியினும் தான் முற்றுவினை என்ற அவ்வியல்பினின்றும் திரியாது என்பர் புலவர். (இதனைப் பிற்காலத்தில் முற்றெச்சம் என்றனர்.)

**படர்க்கை ஒருமை**

அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கு வினைஈற்று இடைச்சொற்களும் உயர்திணைப் படர்க்கை ஒருமையைக் (ஆண்பாலும் பெண்பாலும்) குறிக்கும் சொற்களாகும்.

**படர்க்கைப் பன்மை**

அர் ஆர் ப எனவரும் மூன்று வினை ஈற்று இடைச் சொற்களும் உயர்திணையில் பலரைக் குறிக்கும் படர்க்கைச் சொற்களாகும்.

மார் என்ற வினை ஈற்றுச் சொற்களும் உயர்திணைப் பலர்பால் படர்க்கைச் சொற்களாம். அவை பிறிதொரு வினைச் சொல்லைக் கொண்டு முடியும் என்பர்.

**உயர்திணை வினைஈற்றுச் சொற்களைத் தொகுத்துக் கூறுதல்**

பலர் பாலாகிய பன்மையையும் ஆண்பெண் என்னும் ஒருமையையும் காட்டி, இன்னபால் என அறியும்படி வந்த, முற்கூறிய இருபத்து மூன்று வினைஈற்று இடைச் சொற்களும், முந்துற எடுத்தோதப்பட்ட உயர்திணையினவாகும்.

**உயர்திணை வினையீறுகள் சிலவற்றுக்குச் சிறப்பு விதிகள்**

அவற்றுள், தன்மைப் பன்மை உரைக்கும் வினைமுற்றுக்கள், பிறவற்றைத் தம்முடன் உளப்படுத்தி எண்ணிக் கூறுமிடத்து, தாம் உயர்திணைக்கே உரியன எனும் நிலைமை மாறி அஃறிணையையும் உளப்படுத்தி வேறுபடுவதுண்டு. நானும் என் செல்ல நாயும் நடப்போம்.

'யார்' எனும் வினாவடிவக் குறிப்புவினைமுற்று, உயர்திணையில் மூன்று பாலுக்கும் உரிமையுடையதாய் வரும். அவன் யார், அவள் யார், அவர் யார்.

பால் இன்னதென அறியும்படி வந்த ஆன், ஆள், ஆர் என்ற அம் மூவீற்றுச் சொற்களிலுமுள்ள ஆ, ஓவாகத் திரியும் செய்யுளிடத்து என்றவாறு. (காடிறந்தார் – காடிறந்தோர்)

ஆய் என்னும் முன்னிலை வினைச்சொல் ஈறும் முற் கூறிவற்றொடு ஒத்து, ஆ, ஓவாகும் செய்யுளுள் என்றவாறு. (வந்தாய் – வந்தோய்!)

**உயர்திணைக் குறிப்பு வினைமுற்று உருவாகும் முறைகள்**

அது வேற்றுமையின் (ஆறாம் வேற்றுமையின்) உடைமைப் பொருளிலும் கண் வேற்றுமையின் (ஏழாம் வேற்றுமையின்) இடப் பொருளிலும் ஒப்புமைப் பொருளிலும் பண்பு அடிப்படையிலும் என்று அப் பகுதிப்பட்டவற்றில், காலம் குறிப்பாக வெளிப்படும். (அவன் இனியன் எனில் 'அவன் இனியனாய் இருக்கின்றான்' என முடிக்கவேண்டும். சொல்லப்படும் சூழல்வழி காலம் உணரப்படுதலின், 'குறிப்பொடுதோன்றும்' என்றார்.)

அன்மை, இன்மை, உண்மை, வன்மை ஆகிய வாய் பட்டானமைந்தவையும் அவைபோல்வன பிறவும் அங்ஙனம் குறிப்புப் பொருண்மையோடு தோன்றும் எத்தகைய சொல்லும் காலத்தைக் குறிப்பாகக் காட்டும் குறிப்புவினைச் சொற்களாகும். (அவன் அல்லன், அவை அல்ல – அவர் இலர், அஃதில்லை – அங்கு உளன், அது உளது – அவன் வலியன், அது வலிது.)

பன்மையும் ஒருமையுமாகிய (ஆண், பெண்) பால் வேறுபாடறியப்பட்ட, முற்கூறிய உயர்திணைத் தெரிநிலை வினைகளோடு, குறிப்பாற் காலங்காட்டும் அம் மரபினையுடைய உயர்திணைக் குறிப்பு வினைகள் வேறுபாடிலவாம். அதாவது அத் திணை, பால் ஈறுகளே இங்கும் அமையுமென்பதாம். அவன் வந்தான், அவன் நல்லன், அவள் வந்தாள், அவள் அழகியள்.

### அஃறிணைத் தெரிநிலை வினைமுற்று

அ ஆ வ எனவரும் வினையிறுதிகளாம் அவை மூன்றுமே அஃறிணைப் பன்மைப் படர்க்கையினவாம். மேய்ந்தன, வெளிவரா, படர்குவ.

த், ற், ட் மெய்கள் மீதேறிய து று டு என்னும் குற்றியலுகர வினைஈறுகள் அஃறிணை ஒன்றன்பால் படர்க்கைகளாகும். கூவியது, ஓடிற்று, பேரமர்க்கட்டு (கட்டு – கண்ணை உடையது.)

இங்ஙனம் பன்மையும் ஒருமையுமாகிய பால்வேறுபாடு அறியும்படி வந்த, மேலே கூறிய அவ் ஆறு வினையிறுதி இடைச்சொற்கள் அஃறிணையினவாகும். (அ, ஆ, வ – து, று, டு)

### அஃறிணைக் குறிப்பு வினைமுற்று

எவன் என்னும் வினா வினைக்குறிப்புச் சொல் அஃறிணையில் ஒருமை, பன்மை என இரண்டு பாற்சொற்களுக்கும் ஒருபடித்தாகப் பொருந்திவரும். (அஃது எவன்? அவை எவன்? இன்று 'என்ன' என வினவுவதையே முன்பு 'எவன்?' என வினவினர்.)

இன்று, இல, உடைய எனும் சொற்களும் அன்று, உடைத்து, அல்ல எனும் சொற்களும் பண்பு அடிப்படைச் சொற்களும் உள என்னும் சொல்லும் பண்பை அடையாகக் கொண்ட சினைமுதற்சொல்லும் ஒப்புமையுடன் வரும் சொல்லும் கூடி அப் பகுதிப்பட்ட பத்துச் சொற்களும் குறிப்பாற் காலம் காட்டுவனவாம். (நன்மை இன்று, நூல்கள் இல, சிற்றூர்கள்

வளமுடைய; அது நம் கடமையன்று, அது வளமுடைத்து, அவை தீயவையல்ல; சொல் இனிது, பல்வகை நலன்கள் உள, அவை நெடுஞ்செவிய, அது பொன் அன்னது.)

பன்மையும் ஒருமையுமாகிய பால்வேறுபாடறியப்பட்ட, முற்கூறிய அஃறிணைத் தெரிநிலை வினைகளோடு, குறிப்பாற் காலங்காட்டும் அம்மரபினையுடைய அஃறிணைக் குறிப்பு வினைகள் வேறுபாடிலவாம். அதாவது அத்திணை, பால் ஈறுகளே இங்கும் பொருந்தும் என்பதாம்.

**விரவுவினை – உயர்திணை அஃறிணைக்குப் பொதுவினை**

முன்னிலை வினை, வியங்கோள் வினை, வினையெச்சச் சொல், 'இல்லை' என இன்மை செப்பும் குறிப்பு முற்றுச் சொல், 'வேறு' என வேறுபடுத்தும் குறிப்பு முற்றுச் சொல், 'செய்ம்மன' என்னும் வாய்பாட்டு வினைச் சொல், 'செய்யும்' எனும் வாய்பாட்டு வினைமுற்றாயும் பெயரெச்சமாயும் வரும் வினைச்சொல், 'செய்த' எனும் வாய்பாட்டுப் பெயரெச்சச் சொல் என அம்முறைப்படி நின்ற அவ் எட்டு **வினைச்சொற்களும்,** பிரிந்து நின்று ஒருகால் உயர்திணையையும் ஒருகால் அஃறிணையையும் உணர்த்தி வேறுபடும் தன்மையை உடையவாகி, அவ்விரு திணைச் சொல்லாதற்கும் சமமான உரிமையுடையனவாகும்.

அவற்றுள், இ ஐ ஆ எனவரும் ஈறுகளையுடைய முன்னிலை ஒருமை வினைச்சொற்கள் மூன்றும் உயர்திணை ஆண்பால், பெண்பால் ஒருமைகட்கும் அஃறிணை ஒன்றன்பாலுக்கும் பொதுவாய் வரும் இயல்பினவாகும். வருதி, வந்தனை, வந்தாய்.

இர் ஈர் மின் என வரும் ஈறுகளையுடைய முன்னிலைப் பன்மை வினைச்சொற்கள் மூன்றும் உயர்திணைப் பலர்பாலுக்கும் அஃறிணைப் பலவின்பாலுக்கும் பொதுவாய்வரும் சொற்களாகும் என்பர் புலவர். சென்றனிர், சென்றீர், சென்மின்.

எஞ்சிய ஏழு வினைச்சொற்களும், அவை தோன்றும் நெறிக்கண், முன்றிடத்தோடும் பொருந்தி இரு திணை ஐம்பாலுக்கும் உரியவாய் வரும். (வியங்கோள் வினை, வினையெச்சம், 'இல்லை', 'வேறு', 'செய்ம்மன, 'செய்யும், 'செய்த' என்ற ஏழும்.) உலகம் வாழ்க, பார்த்துப்போ, அதுஇல்லை, அவன் இல்லை, பார்த்த பார்வை முதலியன.

### சில விரவி வினைகளின் சிறப்புவிதிகள்

அவற்றுள், வியங்கோள் வினைச்சொல் முன்னிலை, தன்மை ஆகிய இரண்டிடங்களிலும் நிலைபெற வாராது. படர்க்கையில் மட்டுமே வரும்; சிறுபான்மை ஏனை இடங்களிலும் வரும் என்பதாம். நான் செல்க என்பதில்லை. ஆனால் நீ செல்க என்பது இன்றுண்டு.

நிகழ்கால முணர்த்தும் 'செய்யும்' எனும் வாய்ப்பாட்டு வினை முற்றுக்கள் உயர்திணைப் படர்க்கைப் பலர் பால், முன்னிலை, தன்மை ஆகிய அம் மூன்றுடனும் பொருந்தி வாரா. எனவே படர்க்கை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய நான்குடன் மட்டும் பொருந்தி வருமென்பதாம். (அவன் சிரிக்கும், அவள் எழுதும், அது நடக்கும், அவை பறக்கும்)

### வினையெச்ச வாய்பாடுகள்

செய்து செய்யூ செய்பு செய்தென செய்யியர் செய்யி செயின் செய செயற்கு என இவ்வாறு வரும் ஒன்பது வாய்ப்பாட்டு வினைச்சொற்களும் வினையெச்சமாகும். (வந்து சென்றான், படிக்க வந்தான், படிப்பதற்கு வந்தான், தேடிய சென்றான்.)

பின் முன் கால் கடை வழி இடத்து என்னும் காலங்கருதிய இறுதி ஒட்டுக்களையுடையனவும் அத்தகைய மரபுப்படி காலங்கருதிய ஒட்டுக்களுடன் வரும் பிற எவ்வகைச் சொற்களும் முற்கூறிய அவ்வினையெச்சங்களின் இயல்புடையனவேயாம். (வந்தபின் நடந்தது, தொடங்குமுன் வந்தான், நடந்தக்கால் பார்க்கலாம்.)

### சிறப்பு விதிகள்

அவற்றுள் முதலில் கூறப்பட்ட செய்து, செய்யூ, செய்பு என்பன மூன்றும், தன் வினைமுதல் வினையுடன் முடியும் வினையெச்சங்களாகும். (பார்த்துப் படித்தான், பார்த்ததும் படித்ததும் அவனேயாதலின் இது தன் வினைமுதல் வினையுடன் முடிந்த எச்சமாயிற்று.)

அம் மூன்று வாய்பாட்டு வினைச் சொற்களும், சினையின் வினையாகத் தோன்றிச் சினை வினையோடு முடியாமல், தன்முதல்வினையோடு முடியினும் அவ்விரு வினைமுடிபும் ஒத்ததன்மையுடையனவேயாம் என்பர் புலவர். (கால் ஒடிந்து வீழ்ந்தது. கால் ஒடிந்து வீழ்ந்தான்.)

முற்கூறிய பதினைந்து வினையெச்சங்களுள், மேலே குறிப்பிட்ட மூன்றும் தவிர்த்த, பிற பன்னிரண்டு வினையெச்சங்களும் தத்தம் வினைமுதல் வினையானும், அங்குவந்து பொருந்தும் பிறவினை முதல் வினையானும் தமக்குப் பொருந்துமாறு அமையும் விதத்தில் முடியும் என்பர். (நாளும் உழைத்து மேலும் முன்னேறினான் – தன் வினைமுதல் வினையுடன் முடிந்தது. காக்கை உட்காரப் பனம்பழம் வீழ்ந்தது – பிற வினைமுதல் வினையுடன் முடிந்தது.)

வினையெச்சச் சொற்கள் பல்வேறு வாய்பாட்டு முறைகளாலும் (அல்லது ஒரே வாய்பாட்டு முறையாலும்) அடுக்கிவந்து, சொல்தோறும் முடிவு பெறாது, முன்னைய எச்சம் பின்னதுடன் முடிய இவ்வாறே இறுதிக்கு முந்தைய எச்சத்துடன் பொருள் முடிய, எல்லா எச்சமும் முடிவுபெற்றதாகும். (ஆடிப் பாடி ஓடி வந்தான். பணத்தை முயன்று தேடிச் சேர்த்துச் சேமித்துச் செல்வனானான்.)

**பெயரெச்ச வாய்பாடுகள்**

செய்யும் செய்த என்னும் பெயரெச்ச வாய்பாடுகள் இடப்பெயர், செயப்படுபொருள், காலப்பெயர், கருவிப்பெயர், வினைமுதலாகிய பெயர், தொழிற்பெயர் ஆகிய அவ் ஆறு பெயர்களையும் ஒத்த உரிமையுடையவாய்க் கொண்டு முடியும். (இருக்கும் இல்லம், சருக்கு மரம், படித்த புத்தகம், படித்த பையன்)

**சிறப்பு விதிகள்**

அங்ஙனம் இடப்பெயர் முதலிய அறுவகைப் பெயரையும் கொண்டு முடியுமிடத்து, செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம், முன்பு முற்றுச் சொல்லுக்கு வாரா என விலக்கப்பட்ட (712) அம் மூன்று இடங்களிலும் வரும். அவையாவன படர்க்கைப் பலர்பால், முன்னிலை, தன்மை ஆகியன. (ஆடும் கலைஞர்கள், பார்க்கும் நீ, கேட்கும் யான்).

பெயரெச்சமும் வினையெச்சமும் வினை நிகழ்ச்சியைக் கூறாது, வினை நிகழாமையைக் கூறுமுகத்தான், எதிர்மறுத்துச் சொன்னாலும் தத்தமது பொருள்நிலைமைகளில் வேறுபடா. (எழுதாத கவிதை, கேளாது வந்தான்.)

பெயரெச்சமும் வினையெச்சமும் தத்தம் முடிக்குஞ் சொல்லோடு பொருந்தும்போது, கருத்து இயைபுடைய பிறசொற்கள் எவையாயினும் அவை இடைவந்து நிற்றலை நீக்கமாட்டார்கள். (கற்றுப் படிப்படியாகத் தேறினான்.)

முற்கூறிய பெயரெச்ச வாய்பாடுகளுள், செய்யும் என்னும் பெயரெச்சச் சொல்லுக்கு ஈற்றயலாகிய உகரம் தான் ஏறிய மெய்யோடும் கெடும். அங்ஙனம் கெடுமிடங்களை அறிந்து கொள்க என்பர் புலவர். (ஆகும் காலம் – ஆம் காலம், வாவும் புரவி – வாம்புரவி)

**காலமயக்கங்களும் அவற்றின் காரணமும்**

'செய்து' எனும் வாய்பாட்டு வினையெச்சத்தின் இறந்தகாலம் எதிர்காலங்காட்டும் வினையுடன் முடிதலும் உண்டு. (எடுத்த காரியத்தை முடித்து வைப்பான்.)

மூன்று காலத்தும் ஒப்ப நிகழும் படியான இயற்கையைக் கூறும் எத்தன்மையுடைய சொல்லாயினும், அதனை நிகழ்காலங்காட்டும் 'செய்யும்' எனும் வாய்பாட்டுப் பொதுச்சொல்லால் கூறுதல் வேண்டும். (ஞாயிறு கிழக்கே உதிக்கும். நீர் குளிரும்.)

எதிர்காலத்திலும் நிகழ்காலத்திலும் ஒருபடித்தாக நிகழும்படியான வினை நிகழ்ச்சியைக் குறிக்கும் கூற்றை, இறந்த காலக்குறிப்புடன் கூறுதல், விரைவு பற்றிய குறிப்புப் பொருளைப் புலப்படுத்துதற்காகும் என்பர் புலவர். (வந்து கொண்டிருக்கிறான் – இன்னும் சேரவேண்டிய இடத்துக்கு வந்து சேரவில்லை. இதுவே எதிர்காலத்து முடிய வேண்டியதாய், இப்பொழுது நிகழ்கிற வினை, இதனை 'வந்தேன்; இதோ வந்துவிட்டேன்!' எனச் சொல்வது, விரைவுக் குறிப்புப் பற்றியதாகும்.)

**சிலசொல்நடைகள்**

உயர்வு கருதிய வினைச்சொல்லாற் சுட்டி, அவ்வுயர்வாகிய பண்பைக் குறிக்கும் வினைமுதற்சொற்கள் 'ஓதுதல்', 'நல்லொழுக்கம்' என்றாற் போல்வன. அவற்றைச் செய்வதாகிய வினைமுதல் இல்லாதவிடத்து, நிகழ்காலங்காட்டும் செய்யும் என்னும் முற்றால் கூறப்படும் பொருண்மையுடையனவாகும். (ஓதுதல் உயர்வுதரும்; நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் என்று வரும். முருகன் ஓதுதலால் உயர்வுபெறுவான் என வினைமுதலுடன் கூறாமல், ஓதுதலையே எழுவாய் ஆக்குவதை 'வினைமுதற்கிளவி' என்றார். அது 'செய்யும்' என்னும் முற்றால் முடியும்.)

'இது செயல் வேண்டும்' எனும் வாய்பாட்டுத் தொடர்கள், தன்பாலானும் பிறன்பாலானும் என இரண்டடித்தும் நிலைபெறும் பொருண்மையை

உடையனவாகும். (கண்ணன் கற்றல் வேண்டும் – 'தான் கற்றலைக் கண்ணன் விரும்பும் எனில் இது தன்பால் ஆனமுடிபு. கண்ணன் கற்றலை அவன் தந்தை விரும்பும் எனப் பிறன்பால் ஆன முடிபுடனும் இத்தொடர் பொருள்படும் என்பதாம்.)

வலியுறுத்தற் பொருட்டுவரும் வினாவடிவான வினைச்சொல் எதிர்மறையாகப் பொருள்படுதற்கும் உரிமையுடையதாகும். – 'நான் வைதேனா?' – இது 'வைதிலேன்' என வற்புறுத்த வருகிறது.

எதிர்காலத்தால் குறிக்க வேண்டிய வினைச்சொல் கூற்று, ஒன்றன் மாறா இயல்பையும் தெளிவையும் குறிக்க வேண்டிய இடத்து, இறந்த காலத்தாலும் நிகழ்காலத்தாலும் அழுத்தமுறக் கூறப்படுதலுண்டு. ('அங்கு போனால் தொலைந்தாய்', 'கடன் வாங்கிப் பிழைப்பவன் கெட்டுப்போகிறான்'.)

செயப்படு பொருளைச் செய்யப்பட்டது எனக் கூறாமல், அதுவே செய்ததுபோல, அதன் செயல் என்பதுபடக் கூறுதல் உலக வழக்காற்றில் காணப்படுவதாகும். (கார்கள் இன்று ஓடின, நாடகம் நடந்தது.)

இறந்த காலமும் எதிர்காலமும் ஆகிய அவ்விரண்டும், காலம் மயங்கிவரும் கூற்றுக்களில், பொருள் அழுத்தமுறத் தோன்றும். (நேரு பெருமகன் முன்பு இந்த வழியாகத்தான் உலா வருவார்.)

அவற்றுடன் நிகழ்காலமும் மயங்கிவருதலை நீக்கமாட்டார்கள். அரிதாக வரும். (நாளைக்குத் தருகிறேன்.)

## வினையியல்

### *வினைச்சொல்லின் பொது இலக்கணம்*

**வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது**
**நினையுங் காலைக் காலமொடு தோன்றும். (683)**

வினைச்சொல் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, வேற்றுமை ஏற்காது; ஆராயுமிடத்துக் காலத்தோடு விளங்கிநிற்கும் வேற்றுமை கொள்ளாது - வேற்றுமை உருபுகளைப் பெற்று வாராது. உண்டான், பார்க்கிறான், தருவான்.

### வினைச்சொல் காட்டும் காலவகை

**காலந் தாமே மூன்றுஎன மொழிப. (684)**

அவ்வாறு குறிப்பிட்ட 'காலம்' என்பது மூன்று கூறுபடுமெனக் கூறுவர் பெரியோர்.

### *வினைச்சொல்*
### *காலங்காட்டும் முறை – வெளிப்படை, குறிப்பு*

**இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா**
**அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்**
**மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே. (685)**

'வினை காலமொடு தோன்றும்' என்ற தோன்றும் முறை வருமாறு: வினைச்சொற்கள் இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என அம் மூன்று காலங்களையும் வெளிப்படக் காட்டி நிற்பதோடன்றி, குறிப்பாகவும் கொள்ளப்படும் வழக்காற்றை உடையனவாகும். கண்டான், காண்கின்றான், காண்பான்.

நல்லன், கரியன், பொன்னன் என்பன குறிப்பு வினைகள்: 'அவன் பொன்னன்' என்றால் 'பொன்னனாய் உள்ளான்' எனக் குறிப்பாக நிகழ்காலம் காட்டும்.

## *வினைச்சொல் வகை*

### *உயர்திணை வினை, அஃறிணை வினை, விரவு வினை*

**குறிப்பினும் வினையினும் நெறிபடத் தோன்றும்**
**காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்**
**உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்**
**ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்**
**அம்மூ வுருபின தோன்ற லாறே. (686)**

குறிப்பு வினையாகவும் தெரிநிலை வினையாகவும் நெறிப்படத் தோன்றிக் காலம் விளங்க நிற்கும் வினைச்சொற்கள் எல்லாம் உயர்திணைக்குரியனவும், அஃறிணைக் குரியனவு அவ்விருதிணைக்கும் ஒத்த உரிமையுடையனவும் என அம் மூவகையினவாகும். அவை தோன்றும் முறைமைக்கண் என்றவாறு. குறிப்பு – குறிப்புவினை, வினை – தெரிநிலை வினை. (வினை என்று சிறப்பித்துச் சொல்லக் கூடியது தெரிநிலை வினையேயாம்.) உருபின – வகையின. பார்த்தான் – உயர்திணை. பார்த்தது – அஃறிணை. பார்க்கும் – பொது (அது பார்க்கும், அவன் பார்க்கும்).

### *உயர்திணைத் தெரிநிலை வினை*
### *தன்மைப் பன்மை வினைமுற்று*

**அவைதாம்,**
**அம் ஆம் எம் ஏம் என்னும் கிளவியும்**
**உம்மொடு வரூஉம் க ட த ற என்னும்**
**அந்நாற் கிளவியோடு ஆயெண் கிளவியும்**
**பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லலே. (687)**

அவ்வினைச் சொற்களுள், அம் ஆம் எம் ஏம்என்னும் இடைச்சொற்களும் இறுதியில் உம்மையொடு வரும் க ட த ற வாகிய கும் டும் தும் றும் என்னும் அந்நான்கு இடைச்சொற்களும் ஆகிய எட்டு ஈற்றுச் சொற்கள் தன்மைப் பன்மையை உணர்த்தும் உயர்திணை வினைச்சொற்களாம். பன்மை உரைக்கும் தன்மை – தன்மைப் பன்மை. நாம், யாம் என்னும் போது பிறரையும் தன்னுடன் சேர்த்துக் கூறப்படுதலின், அவற்றைப் 'பன்மை உரைக்கும் தன்மை' என்றார். **உண்டனம், வரைந்தாம், கண்டனெம், சென்றேம். உண்கும், காண்டும், வருதும், சேறும்.**

## *தன்மை ஒருமை வினைமுற்று*

**க ட த ற என்னும்,**
**அந்நான்கு ஊர்ந்த குன்றிய லுகரமொடு**
**என்ஏன் அல்என வரூஉம் ஏழும்**
**தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே. (688)**

க ட த ற என்னும் அந் நான்கு மெய்களின்மேல் ஊர்ந்து நின்ற குற்றியலுகர ஈறாகிய கு டு து று என்பவற்றோடு, என் ஏன் அல் எனவரும் ஈறுகளையும் கூட்டி, ஆக இவ் ஏழு ஈற்றிடைச் சொற்களையுடையன, பிறரை உளப்படுத்தாது தன் வினையை உரைக்கும் தன்மை ஒருமை வினைச் சொற்களாகும். உண்கு(உண்பேன்), உண்டு (உண்பேன்), வருது (வருவேன்), சேறு (செல்வேன்), காண்பென், காண்பேன், காண்பல். முற்காலத்தில் யான் நோகு, யான் வருது, யான் சேறு என வழங்கியுள்ளனர்.

## *'செய்கு' எனும் வாய்பாட்டுவினை வினைமுற்று பிறிதொரு வினைமுற்றுடன் முடிதல்*

**அவற்றுள்,**
**செய்குஎன் கிளவி வினையொடு முடியினும்**
**அவ்வியல் திரியாது என்மனார் புலவர். (689)**

முற்கூறிய ஏழு ஈற்றுத் தன்மை ஒருமை வினைச்சொற்களுள் செய்கு என்னும் வாய்பாட்டு வினைமுற்று பிறிதொரு வினைகொண்டு (பொருள் தொடர்பு பட நின்று) முடியினும் தான் முற்றுவினை என்ற அவ்வியல்பினின்றும் மாறுபடாது என்று கூறுவர் புலவர். காண்கு வந்தேன் (காண்பேன் வந்தேன் என இருவினைகளாய்த் தொடர்புபட நிற்கின்றன.) வினையொடு முடிதலின் வினையெச்சமாகவேண்டும். அங்ஙனம் திரியாது ஈண்டு வினைமுற்றாகவே நிற்கும் என்பதாம். பிற்காலத்தில் இங்ஙனம் வருவனவற்றை முற்றெச்சம் எனக் கொண்டனர். (இன்றைய மலையாள வழக்கொடு ஒப்பிடுக.)

## *உயர்திணைப் படர்க்கை ஒருமையைக் குறிக்கும் வினைமுற்று ஈற்றுச் சொற்கள்*

**அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்**
**ஒருவர் மருங்கில் படர்க்கைச் சொல்லே. (690)**

அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கு வினை ஈற்று இடைச்சொற்களும் ஆண்பால் பெண்பால் ஆகிய உயர்திணை ஒருமையிடத்துப் படர்க்கைச்

சொற்களாம். உயர்திணைப் படர்க்கை ஒருமை வினைச்சொற்கள் என்றவாறு, வந்தனள், வந்தான். வந்தனள், வந்தாள்.

*உயர்திணைப் படர்க்கைப் பன்மையைக் குறிக்கும்*
*வினைமுற்று ஈற்றுச் சொற்கள்*

**அர் ஆர் ப என வரூஉம் மூன்றும்**
**பல்லோர் மருங்கில் படர்க்கைச் சொல்லே. (691)**

அர் ஆர் ப என்னும் மூன்றும் வினை ஈற்று இடைச்சொற்களும் பலர்பாலாகிய உயர்திணைப் பன்மையிடத்துப் படர்க்கைச் சொற்களாம். உயர்திணைப் படர்க்கைப் பன்மைவினைச்சொற்கள் என்றவாறு, வந்தனர், வந்தார், வருப.

*உயர்திணைப் பலர்பால் மார் ஈற்று வினைச் சொற்கள்*

**மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை;**
**காலக் கிளவியொடு முடியும் என்ப. (692)**

'மார்' எனும் வினை ஈற்று இடைச் சொற்களும் உயர்திணைப் படர்க்கைப் பன்மைச் சொற்களாம். அவை பிறிதொரு வினைச்சொல்லைக் கொண்டு முடியும் என்று கூறுவர். காலக்கிளவி - காலம் காட்டும் தெரிநிலைவினை. கொண்மார் வந்தார், "பாடன்மார் எமரே" எனப் பெயர் கொண்டும் முடியுமெனக் காட்டுவர்.

*உயர்திணை வினை ஈறுகளைத் தொகுத்துக் கூறுதல்*
*இதுவரை கூறிய இருபத்து மூன்று ஈற்று*
*வினைச்சொற்களும் உயர்திணையின*

**பன்மையும் ஒருமையும் பாலறி வந்த**
**அந்நா லைந்தும் மூன்றுதலை யிட்ட**
**முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே. (693)**

பலர்பால் ஆகிய பன்மையும் ஆண்பெண் ஆகிய ஒருமையும் என்னும் இப் பாலுணர வந்த, அம் ஆம் முதலியனவாகக் கூறப்பட்ட இருபத்து மூன்று வினை ஈறுகளாகிய இடைச்சொற்கள், முந்துற எடுத்தோதப்பட்ட உயர்திணையினவாம். மூன்றுதலையிட்ட அந்நாலைந்து - இருபத்து மூன்று.

**வினைமுற்று ஈறுகள்**

**தன்மைப் பன்மை**

| | |
|---|---|
| அம் ஆம் எம் ஏம் | |
| கும் டும் தும் றும் | 8 |

**தன்மை ஒருமை**

| | |
|---|---|
| கு டு து று | |
| என் ஏன் அல் | 7 |

**உயர்திணைப் படர்க்கை ஒருமை**

| | |
|---|---|
| அன் ஆன் அள் ஆள் | 4 |

**மேற்படி பன்மை**

| | |
|---|---|
| அர், ஆர், ப, மார் | 4 |
| | 23 |

***உயர்திணை வினைஈறுகளுடன் சிலவற்றுக்குச் சிறப்புவிதிகள்***

***தன்மைப் பன்மை அஃறிணையை உளப்படுத்திக் கூறப்படுதலுமுண்டு***

**அவற்றுள்,**
**பன்மை உரைக்கும் தன்மைக்கிளவி**
**எண்ணியல் மருங்கில் திரிபவை உளவே. (694)**

அவற்றுள், தன்மைப் பன்மை உணர்த்தும் வினைச் சொற்கள், பிறவற்றைத் தன்னுடன் உளப்படுத்தி எண்ணிக் கூறும்போது, தன்மைவினை உயர்திணைக்கேயுரியதென்ற நிலைமை மாறி, அஃறிணையையும் உளப்படுத்தி வேறுபடுதலும் உண்டு (687, 526). எண்ணியல் மருங்கியல் திரிபவை - எண்ணிக்கூறும் போது வேறுபடுபவை. 'யானும் என் எஃகமும் சாறும்' என்பது பழைய எடுத்துக்காட்டு. 'நாமும் நாடும் முன்னேறுதும்'.

***யார் என்னும் குறிப்பு வினைமுற்று உயர்திணை முப்பாலுக்கும் வருதல்***

**யாஅர் என்னும் வினாவின் கிளவி**
**அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே. (695)**

'யார்?' என்னும் வினாவினை உணர்த்திவரும் சொல், குறிப்பு வினைமுற்றாய் நின்று, உயர்திணையிடத்து மூன்று பாலுக்கும் உரியதாகும். 'யார்' என்பது ஆரு ஈறு காரணமாக மூன்று பாலுக்கும் பொருந்தி வருகிறது. அவன் யாவன்? அவன் யாவள்? அவர் யாவர்? எனற்பாலது, அவன் யார், அவள் யார், அவர் யார் என மூன்று பாலுக்கும் வருதல் கருதத்தக்கது. அத்திணை - முந்துகூறிய அவ் உயர்திணை.

*ஆன் ஆள் ஆர் – ஈறுகள் செய்யுளில் திரிதல்*

**பால்அறி மரபின் அம்மூ ஈற்றும்**
**ஆ ஓ ஆகும் செய்யு ளுள்ளே. (696)**

பால் விளங்கித் தோன்றவரும் தன்மையினையுடைய ஆன், ஆள், ஆர் என்ற அம் மூவீற்றிலுமுள்ள 'ஆ' என்பது 'ஓ' வாகத் திரியும் செய்யுளிடத்து, 'வந்தோன் பெரும', 'நகைத்துப் பெயர்ந்தோளே', 'வாடா வள்ளியங் காடிறந்தோரே'.

*ஆய் ஈறும் அவ்வாறு திரிதல்*

**ஆய் என் கிளவியும் அவற்றொடு கொள்ளும். (697)**

'ஆய்' என்னும் முன்னிலை வினைச்சொல் ஈறும் மேற்கூறியவற்றோடு ஒத்து, 'ஆ', 'ஓ' ஆகும், செய்யுளுள் என்றவாறு, 'வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப'.

*குறிப்புவினை*

*உயர்திணைக் குறிப்பு வினைமுற்று உருவாகும் முறை*

**அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்**
**கண்என் வேற்றுமை நிலத்தி னானும்**
**ஒப்பி னானும் பண்பி னானும் என்று**
**அப்பால், காலம் குறிப்பொடு தோன்றும். (698)**

காலம் குறிப்பொடு தோன்றும் குறிப்பு வினைச் சொற்களின் இயல்பு கூறப்படுகிறது. குறிப்புவினை 'அது' - வேற்றுமைக்குரிய உடைமைப் பொருளில் தோன்றும். அவன் செல்வன் (அவன் செல்வத்தை உடையான் என்பதாம்.) அதுச்சொல் வேற்றுமை - ஆறாம் வேற்றுமை. கண் வேற்றுமைக்குரிய இடப் பொருள் அடிப்படையில் தோன்றும். கண்என் வேற்றுமை - ஏழாம் வேற்றுமை. நிலம் - இடப்பொருள். மதுரையான். மதுரையின்கண் வாழ்பவன் என்றாகும்.

ஒப்பினானும் பண்பினானும் - ஒப்புமை கூறுமுகத்தானும் பண்பு அடிப்படையானும் தோன்றும். அவள் என் உயிரன்னாள். அவன் இனியன். அப்பால் - (உடைமை, இடப்பொருள், ஒப்பு, பண்பு அடிப்படையில்) அப்பொருண்மை பற்றிய சொல்லகத்து.

*வாய்ப்பாட்டு அடிப்படையிலான*
*சில குறிப்புவினை வகைகள்*

**அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்**
**அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்**
**என்ன கிளவியும் குறிப்பே காலம். (699)**

அன்மை, இன்மை, உண்மை, வன்மை என்னும் வாய்பாட்டானமைந்த பொருளடிப்படைச் சொற்களும் அத்தகையன பிறவும் அங்ஙனம் குறிப்புப் பொருண்மையுடைய எத்தகைய சொல்லும் காலத்தைக் குறிப்பாகக் காட்டும் குறிப்பு வினைகளாகும் என்பதாம். **அல்லன், இலர், உளன், வல்லான், திறமையன், நல்லன், தீயன்.**

*முன்பு உயர்திணைத் தெரிநிலை வினைக்குக் கூறிய ஈறுகளே*
*உயர்திணைக் குறிப்பு வினைகட்கும் பொருந்துவனவாம்*

**பன்மையும் ஒருமையும் பால்அறி வந்த**
**அன்ன மரபின் குறிப்பொடு வரூஉம்**
**காலக் கிளவி உயர்திணை மருங்கில்**
**மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே. (700)**

உயர்திணையில் ஈற்றிடைச் சொற்களால் பன்மை, ஒருமை என்ற பால்வேறுபாடு அறியப்பட்ட முற்கூறிய தெரிநிலை வினைச்சொற்களோடு, மேற்கூறிய மரபினடிப்படையில் காலத்தைக் குறிப்பாகக் காட்டும் குறிப்பு வினைச் சொற்கள் வேறுபாடிலவாம். அஃதாவது பால்அறிய வந்த ஈறுகளைப் பெறுவதில் வேறுபாடில என்பதாம்.

இதனால் தெரிநிலைவினைகட்கு முன்பு கூறிய ஈறுகளே, இங்குக் குறிப்பு வினைகட்கும் பொருந்துவனவாய் அமையுமென்பது பெறப்படும். தொல்காப்பியர் தொடர்ந்து வினையீறுகளையே திணை, பால் காட்டும் சொற்களெனக் கூறிச் செல்லுதல் கருதத்தக்கது.

உயர்திணை மருங்கின் அன்ன மரபிற் குறிப்பொடு உரூஉம் காலக்கிளவி, பன்மையும் ஒருமையும் பாலறிவந்த மேலைக் கிளவியொடு வேறுபாடில

எனக்கொண்டு கூட்டிக் கொண்டால் பொருள் எளிதிற் புலனாகும். மேலைக் கிளவி - தெரிநிலை வினை ஈறுகள், குறிப்பொடு வரூஉம் காலக்கிளவி - குறிப்பு வினைகள். கரியன், கரியள், கரியர், பெரயிம், வல்லேம் என இவ்வாறு வரும்.

*அஃறிணைத் தெரிநிலை வினை*

*படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று*

**அ ஆ வ என வரூஉம் இறுதி**
**அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை. (701)**

அ ஆ வ எனவரும் வினையீறுகளாம் அப்பகுதிப்பட்ட மூன்றுமே அஃறிணைப் பன்மைப் படர்க்கைகளாகும். பறந்தன, வாரா (எதிர்மறையில்), வருவ, செல்வ.

*படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று*

**ஒன்றன் படர்க்கை த ற ட ஊர்ந்த**
**குன்றிய லுகரத்து இறுதி யாகும். (702)**

த ற ட மெய்யுடன் கூடிய குற்றியலுகரமாகிய துறுடு என்னும் வினையீறுகளே அஃறிணை ஒருமைப்படர்க்கைகளாகும். த ற ட ஊர்ந்த குன்றியலுகரம் - து று டு. ஒன்றன் படர்க்கை - படர்க்கை ஒன்றன்பால். தின்றது, போயிற்று, வந்தன்று (வந்தது), குறுந்தாட்டு (குட்டையான கால்களையுடையது எனக் குறிப்புவினை.)

*அஃறிணை வினை ஈறுகளைத் தொகுத்துக்கூறுதல்*

*இதுவரை கூறிய ஆறு ஈற்று வினைச் சொற்களும்*

*அஃறிணையின*

**பன்மையும் ஒருமையும் பால்அறி வந்த**
**அம்மூ விரண்டும் அஃறிணை யவ்வே. (703)**

அஃறிணையில் பன்மையும் ஒருமையும் எனப் பால்வேறுபாடு அறியுமாறு வந்த, முற்கூறிய வினையீறுகளாம் இடைச்சொற்கள் ஆறும் அஃறிணை சார்ந்தனவாம். (அ ஆ வ - து று டு)

*அஃறிணைக் குறிப்பு வினைகள்*

*எவன் என்னும் வினாவினைக் குறிப்பு*

*அஃறிணை இருபாலுக்கும் வரும்*

**அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்**
**ஒக்கும் என்ப எவன்என் வினாவே. (704)**

'எவன்' (என்ன) என்னும் வினா, அஃறிணையிடத்து ஒன்றன்பால் பலவின்பால் ஆகிய இருவகைச் சொற்களுக்கும் ஒருபடித்தாகப் பொருந்தி வரும் என்பர். ஈண்டு 'அத்திணை' என்றது 'அஃறிணை'. எவன் எனும் வினா இன்று 'என்ன' என மருவி வழங்குகிறது. இங்குள்ளது எவன்? இங்குள்ளவை எவன்?

*அஃறிணைக் குறிப்புவினைமுற்று உருவாகி வரும் முறை*

**இன்று இல உடைய என்னும் கிளவியும்**
**அன்று உடைத்து அல்ல என்னும் கிளவியும்**
**பண்புகொள் கிளவியும் உளஎன் கிளவியும்**
**பண்பி னாகிய சினைமுதற் கிளவியும்**
**ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ**
**அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும். (705)**

இந்நூற்பா அஃறிணைக் குறிப்புவினைச் சொற்கள் ஆகிவருமாற்றைக் கூறுகிறது. இன்று, இல என்னும் சொற்கள் காலங்காட்டாமல், அஃறிணையில் குறிப்பு வினையாய் வரும். இவை இன்மை சுட்டும் பொருளின. அவர்க்குக் கடன் இன்று, அங்கு கடைகள் இல. அன்று அல்ல என்பன மற்றொன்றை மறுத்துத் தாம் கூறவந்த பொருளை விளக்குவன. அதற்கு அதுவன்று பொருள். அவையல்ல நாம் தேடியன. உடைய, உடைத்து என்பன ஒருபொருளை உடையதாதல் பற்றி வருவன. நாடு வளமுடைத்து. சிற்றூர்கள் வளமுடைய. பண்புகொள் கிளவி - பண்பு அடிப்படையில் வரும் சொல். நிலம் கரிது. அவர் செயல் இனிது. உள என்கிளவி - ஒரு பொருள் உளதாதலை உணர்த்த வருவது. செல்வங்கள் யாவும் உள. பல்வகை வளங்கள் உள. பண்பினாகிய சினை முதற்கிளவி - பண்பு அடுத்த சினையை அடையாகக் கொண்ட முதற்பொருளை உணர்த்தும் சொல். அது குறுந்தாட்டு (குட்டையான கால்களையுடையது). அவை நெடுஞ்செவிய. ஒப்பொடு வரூஉம் கிளவி - ஒப்புமை குறித்து வரும் சொற்கள். அன்னது, அனையது, போன்றது. அன்ன, போல்வன. இவை பத்தும் குறிப்பு வினையாய்க் காலத்தை வெளிப்படக் காட்டாமல், குறிப்பினால் காட்டும்.

*முன்பு அஃறிணைத் தெரிநிலை வினைக்குக் கூறிய ஈறுகளே*
*அஃறிணைக் குறிப்பு வினைகட்கும் பொருந்துவனவாம்*

**பன்மையும் ஒருமையும் பால்அறி வந்த**
**அன்ன மரபின் குறிப்பொடு வரூஉம்**
**காலக் கிளவி அஃறிணை மருங்கில்**
**மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே. (706)**

இந்நூற்பா அஃறிணைக் குறிப்பு வினை ஈறுகளைப் பற்றியது. இதனை முன்பு (700) உயர்திணைக் குறிப்புவினை ஈறுகளைப் பற்றிய நூற்பாவுடன் ஒப்புநோக்குக.

அஃறிணையில் ஈற்றிடைச் சொற்களால் பன்மை, ஒருமை என்ற பால்வேறுபாடு அறியப்பட்ட, முற்கூறிய தெரிநிலை வினைச்சொற்களோடு, மேற்கூறிய மரபினடிப்படையில் காலத்தைக் குறிப்பாகக் காட்டும் குறிப்பு வினைச் சொற்கள் வேறுபாடில. அஃதாவது பால்காட்டும் விகுதிகளைப் பெறுவதில் வேறுபாடில என்பதாம். 'குறிப்பொடு வரூஉம் காலக்கிளவி' என்பதால் குறிப்பு வினையும் காலங்காட்டும் இயல்பில் மாறாதென உணர்த்துகிறார்.

### *விரவு வினை*
### *உயர்திணை அஃறிணைக்குப் பொதுவான வினைகள்*

**முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி**
**இன்மை செப்பல் வேறுஎன் கிளவி**
**செய்ம்மன செய்யும் செய்த என்னும்**
**அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்**
**பிரிவுவேறு படூஉம் செய்திய வாகி**
**இருதிணைச் சொற்குமொ ரன்ன உரிமைய.** (707)

முன்னிலை வினை முற்றுச்சொற்கள், வியங்கோள் வினைமுற்றுச் சொற்கள், வினையெச்சச் சொற்கள், இன்மையைச் செப்பும் 'இல்லை' என்னும் குறிப்புவினை முற்றுச் சொல், 'வேறு' என்னும் வேறுபாட்டை உணர்த்தும் குறிப்புவினை முற்றுச்சொல், செய்ம்மன என்னும் வாய்பாட்டு வினைச்சொல். 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றாயும் பெயரெச்சமாயும் வரும் வினைச்சொல், செய்த என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சச் சொல் என அம்முறைப்படி நின்ற அவ் எட்டு வினைச்சொற்களும் இருதிணைப்பொது எனும் நிலையினின்றும் பிரிந்து ஒருகால் உயர்திணைக்கும் ஒருகால் அஃறிணைக்கும் ஒத்த உரிமையுடையனவாய் வேறுபடும் தன்மையை உடைய சொற்களாகும். பிரிவு வேறுபடும் செய்தி – பிரிந்து நின்று வெவ்வேறு திணையைக் குறிக்கும் செயற்பாடு. இரண்டையும் ஒரே சமயத்தில் குறிக்காது, ஒருகால் உயர்திணையைக் குறித்தால் அதே சொல் பிறிதோரிடத்தில் அஃறிணையைக் குறிக்கவும் வரும் என்பதாம்.

### *விரவு வினையில் முன்னிலை ஒருமை வினைகள் உயர்திணை ஆண், பெண், அஃறிணை ஒன்றன் பாலுக்குப் பொது*

**அவற்றுள்,**
**முன்னிலைக் கிளவி**
**இ ஐ ஆய் என வரூஉம் மூன்றும்**
**ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும். (708)**

முற்கூறியவற்றுள் இ ஐ ஆய் எனவரும் மூன்று ஈற்றினையுடைய முன்னிலைவினைச் சொற்கள் உயர்திணை (ஆண்பால், பெண்பால் என்ற) ஒருமைக்கும் அஃறிணை ஒன்றன் பாலுக்கும் ஒத்த இயல்பினவாய்த் தோன்றும். ஒருவர்க்கும் - உயர்திணை ஆண்பால், பெண்பால் ஒருமைகளைச் சுட்ட, ஒருவர்க்கும் என்ற சொல்லால் பொதுப்படக் கூறினார். வருதி, போதி. நின்றனை, கண்டனை, வந்தாய், செல்வாய், பார்க்கின்றாய்.

### *விரவுவினையில் முன்னிலைப் பன்மை வினைகள் உயர்திணைப் பலர்பால் அஃறிணைப் பலவின் பாலுக்குப் பொது*

**இர் ஈர் மின் என வரூஉம் மூன்றும்**
**பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்**
**சொல்ஓ ரனைய என்மனார் புலவர். (709)**

இர், ஈர், மின் எனவரும் மூன்று ஈற்று வினைச்சொற்களும் உயர்திணைப் பலர்பாற்கண்ணும் அஃறிணைப் பலவின்பாற்கண்ணும் வரும் ஒரு தன்மையுடைய சொற்களாகும் என்பர் புல்வர். சொல் ஓரனைய - ஓரனைய சொற்கள். பல்லோர், பலவற்று என்பதால் உயர்திணை, அஃறிணை எனப்பிரித்தோதுதல் காண்க. உண்பீர், நின்றனிர், பார்த்தீர், சென்றீர், வருவீர். நின்மின், பார்மின், செல்மின்.

### *எஞ்சிய ஏழுவினைகளும் மூன்று இடம் இருதிணை ஐம்பாலுக்கும் பொதுவாதல்*

**எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி**
**ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே. (710)**

எஞ்சிய ஏழு வினைச்சொற்களும் அவைதோன்றும் நெறிக்கண் மூன்று இடத்தோடும் பொருந்தி, இருதிணை ஐம்பாலையும் உணர்த்தற்குரியனவாய்

வரும். 707ஆம் நூற்பாவில் கூறப்பட்ட எட்டுச் சொற்களுள், முதலிற் கூறப்பட்ட முன்னிலை வினை ஒழிந்த ஏழினையும் குறிக்க 'எஞ்சிய கிளவி' என்றார்.

தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க! உண்டு வந்தேன், கண்டு சென்றோம். யானில்லை, நீ இல்லை, அது இல்லை. அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, பானுண்மன, நீ உண்மன. அவள் வரும். நாய் குரைக்கும் நீ செய்யும் தொழில். அது பார்க்கும் பார்வை. அவள் கண்ட கனவு. மான் உண்ட எச்சில்.

### *சில விரவு வினைகளின் சிறப்பு விதிகள்*
### *வியங்கோள் வினையின் சிறப்பியல்பு*

**அவற்றுள்,**
**முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடும்**
**மன்னா தாகும் வியங்கோட் கிளவி. (711)**

அவ் ஏழனுள், வியங்கோள் வினைச்சொல் முன்னிலை, தன்மை ஆகிய இரண்டு இடங்களிலும் நிலை பெறாது. படர்க்கையில் மட்டுமே வரும். அது செல்க, அவை வருக, அவர் வெல்க, தமிழ் வாழ்க, தமிழர் வாழ்க. 'நிலைபெற வாராது' என்றமையால் தன்மை முன்னிலைகளில் சிறுபான்மை வருமென்பதாம். யாம் வெல்க எனத் தன்மைப் பன்மையில் கூறுவர். 'பாக தேரைச் செலுத்துக' என ஏவுதற் பொருண்மையில் முன்னிலையில் வருதலுண்டு. அன்புக்குரியவரைப் பார்த்து 'நீ வாழ்க' என்பதுமுண்டு.

### *செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றின் சிறப்பியல்பு*

**பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை**
**அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்**
**செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா. (712)**

நிகழும் காலத்தை உணர்த்தும் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைச்சொற்கள் உயர்திணைப் படர்க்கைப் பலர்பால், முன்னிலை, தன்மையிடங்கள் ஆகிய மூன்றுடனும் பொருந்தி வாரா. எனவே படர்க்கை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய நான்குடன் மட்டும் பொருந்தி வருமென்பதாம். நிகழுங் காலத்துச் செய்யும் என்னும் வினைச்சொல் என்பதால் இது முற்றுச்சொல் பற்றியது. அவன் பார்க்கும், அவள் சிரிக்கும், அது கூவும், அவை மேயும். எச்சச்சொல்லுக்கு மூன்று இடமும் பொருந்துமெனப் பின்னர்க் கூறுவர் (720).

### *வினையெச்சம்*

### *வினையெச்ச வாய்பாடுகள்*

**செய்து செய்யூச் செய்பு செய்தெனச்**
**செய்யியர் செய்யி செயின் செய செயற்கென**
**அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி. (713)**

செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு என்ற அவ் வாய்பாடுகளான் வரும் சொற்கள் ஒன்பதும் வினையெச்சச் சொற்களாகும். படித்துத் தேறினான், படுமகன் கிடக்கை காணூஉ பெரிது உவந்தனள். வாக்குபு தரத்தர, மழை பெய்தென நிலம் குளிர்ந்தது. காணியர் வந்தான், காணிய வந்தான், மழைபெய்யின் நிலம் விளையும், மழை பெய்யக் குளம் நிறைந்தது, படிப்பதற்கு வந்தான்.

### *காலங்கருதிய ஒட்டுக்களுடன் வரும் வினையெச்சச் சொற்கள்*

**பின் முன் கால் கடை வழி இடத்து என்னும்**
**அன்ன மரபின் காலங் கண்ணிய**
**என்ன கிளவியும் அவற்றியல் பினவே. (714)**

பின், முன், கால், கடை, வழி, இடத்து என்னும் காலங் கருதிய இறுதி ஒட்டுக்களை உடையனவும் அத்தகைய மரபுப்படி காலங்கருதிய ஒட்டுக்களுடன் வரும் பிற எவ்வகைச் சொல்லும் மேற்கூறிய வினையெச்சத்தியல் புடையனவேயாம். படித்த பின் திருமணம் ஆனது. வருமுன் காக்க வேண்டும். கடைந்தக்கால் வெண்ணெய் தோன்றும். தொடும்வழிப் பசலை நீங்கியது. தேவையுள்ளவிடத்து உதவுக.

மேலும் வான், பான், பாக்கு, ஆல், மல், மை என இவ்வாறு வரும் ஒட்டுக்கள் பலவாகும். அதனால்தான் 'அன்ன மரபிற் காலம் கண்ணிய என்ன கிளவியும்' என்றார். இவை காலங்குறித்து எச்சப்பொருள் தருவன. இவையும் வினையெச்ச வாய்பாட்டின் இயல்புடையனவாகக் கருதப்படும்.

### *சிறப்பு விதிகள் சில*

### *செய்து செய்யூ செய்பு என்னும் தன் வாய்பாட்டு வினையெச்சங்களின் சிறப்பியல்பு தன் வினைமுதல் வினையுடன் முடிதல்*

**அவற்றுள்,**
**முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின. (715)**

மேலே விதந்து சொல்லப்பட்ட வினையெச்ச வாய்பாடுகள் பதினைந்தனுள், முதலில் நிற்பனவாகிய செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்றும் தன் வினைமுதலுக்குரிய முற்று வினையுடன் முடியும் தன்மையினவாம். பாடிப் பறந்தாள், காணூஉ மகிழ்ந்தான், உண்குபு வந்தான், பாடியவள் அவளே, கண்டவன் அவனே. இவை வினையும் அதற்குரியவரும் அவரேயாதல் காண்க.

*சினைவினையாகத் தோன்றி*
*தன் முதலின் வினையொடு முடிவன*

**அம்முக் கிளவியும் சினைவினை தோன்றின்**
**சினையொடு முடியா முதலொடு முடியினும்**
**வினைஓ ரனைய என்மனார் புலவர்.** (716)

மேற் சொல்லப்பட்ட செய்து, செய்யூஉ, செய்பு என்ற மூன்று வாய்பாட்டுச் சொற்களும் சினைவினையாகித் தோன்றின் அச்சினைவினையோடு முடியாவாய் முதல்வினையோடு முடியினும் சினைவினையொடு முடியும் இயல்புடன் ஒத்த தன்மையுடையனவாம் என்பர் புலவர். 'கால் ஒடிந்து வீழ்ந்தது' என்றால் சினை வினை பற்றிய எச்சம் சினை வினை முற்றொடு முடிவதாகும். 'கால் ஒடிந்து வீழ்ந்தான்' என்பதில், சினை பற்றிய வினையெச்சம் வினை முதல் வினையுடன் முடிகிறது. அங்ஙனம் சினைக்குரிய எச்சம் வினைமுதல் வினையுடன் முடிவது தவறன்று. இருவிதமாக முடிவதும் ஏற்கக் கூடியனவே என்பது இந்நூற்பாக் கருத்தாகும்.

*முற்கூறிய மூன்றும் தவிர்த்த பன்னிரண்டு வினையெச்சங்கள்*
*தன் வினைமுதல் வினையாலும் பிற வினைமுதல்*
*வினையாலும் முடிதல்*

**ஏனை எச்சம் வினைமுத லானும்**
**ஆன் வந் தியையும் வினைநிலை யானும்**
**தாம்இயல் மருங்கின் முடியும் என்ப.** (717)

மேற்கூறிய மூன்றுமல்லாத, ஏனைய பன்னிரண்டு வினை எச்சங்களும் தத்தம் வினைமுதல் வினையானும் அங்கு வந்து பொருந்தும் பிற வினைமுதல் வினையானும் எதுவாயினும் தமக்குப் பொருந்துமாறு அமையும் விதத்தில் முடியும் என்பர். ஆன் – அங்கு. தாம் இயல் மருங்கு – தமக்குப் பொருந்தும் விதம். வேலை செய்யின் கூலி கிடைக்கும். படிக்கப்போனான். இவை தன் வினைமுதல் வினையான் முடிந்தன. மழை பெய்ய நிலம் குளிர்ந்தது. மழை பெய்யின் பயிர் தழைக்கும். இவை பிற வினைமுதல் வினையான் முடிந்தன.

வினையெச்சம் 15 : செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின்; செய, செயற்கு, இணை 9. பின், முன், கால், கடை, வழி, இடத்து இவை 6. ஆக 15.

### *வினையெச்சங்கள் அடுக்கிவந்து இறுதியில் ஒருமுடிபு பெறுதல்*

**பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி**
**சொன்முறை முடியாது அடுக்குந வரினும்**
**முன்னது முடிய முடியுமன் பொருளே. (718)**

வினையெச்சச் சொற்கள் ஒருமுறையாலோ அல்லது பல்வேறு முறைகளாலோ தொடர்ந்து சொல்லுக்குச் சொல் முடியாது அடுக்கி வந்தாலும் பின்னதுடன் முன்னது முடிய இவ்வாறே தொடர்ந்து இறுதிக்கு முந்தைய எச்சத்துடன் முடிந்து, பொருள் முடிவுபெறும். பன்முறையானும் - பல வாய்பாடுகளாலும் பிறவாறும் பல முறைகளில் தொடர்ந்து, சொன்முறைமுடியாது - சொல்தோறும் முடிக்குஞ் சொல் பெற்று முடியாது. முன்னது முடிய - இறுதிக்கு முந்தையதுடன் முடிய.

ஆடிப்பாடித் தாவிக் குதித்து ஏறி இறங்கி ஓடிவரும் ஆறு. ஒரே வாய்பாட்( நடையாய், ஒவ்வொன்றும் எச்சமாய் அடுத்ததைக் கொண்டு முடிந்து, இறுதிக்கு முந்தைய எச்சத்துடன் பொருள் முடிவு பெறுதல் காண்க. இதனை ஆடிவரும் ஆறு, பாடிவரும் ஆறு, தாவிவரும் ஆறு என்று 'சொன்முறை' முடிக்காமல், அடுக்கி முடிக்கப்படுதல் காண்க. மழை பெய்தென விரைந்து வேலை முடித்தற்கு வரின் முன்னேறுவர். பல வாய்பாடுகளான் வந்து, இறுதியில் பொருள் முடிந்தது.

## *பெயரெச்சம்*

### *பெயரெச்ச வாய்பாடுகள் கொண்டு முடியும் பெயர்ச் சொல் அடிப்படைகள்*

**நிலனும் பொருளும் காலமும் கருவியும்**
**வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட**
**அவ்வறு பொருட்கும்ஓ ரன்ன உரிமைய**
**செய்யும் செய்த என்னும் சொல்லே. (719)**

**செய்யும், செய்த** என்பன பெயரெச்ச வாய்பாடுகள். அவை இடப்பெயரும் பொருட்பெயரும் காலப்பெயரும் கருவிப் பெயரும் வினைமுதலாகிய பெயரும் தொழிற்பெயரும் என்ற அவ் ஆறு பொருட்

பெய்யரையும் கொண்டு முடிவனவாய். அவற்றிற்கு ஒத்த உரிமையுடையனவாம். நிலம் – இடம். பொருள் – செயப்படுபொருள். வினைமுதற் கிளவி – செய்பவன். வினை – தொழிற் பெயர். இவற்றிற்கு முறையே வாழும் வீடு, வாழ்ந்த ஊர்; கற்கும் நூல், கற்றநூல்; உலரும் நேரம், கடந்த மாதம்; எழுதும் கோல், அறுத்த கத்தி; படித்த புலவர், பாடிய ஓதுவார்; ஆடும் ஆட்டம், ஓடிய ஓட்டம் என வரும்.

### *சிறப்பு விதிகள்*

### *செய்யும் என்னும் வாய்பாட்டு எச்சச் சொல் முன்னைய முற்றுச் சொல்போலாது அனைத்து இடத்தும் வரும்*

**அவற்றொடு வருவழிச் செய்யும்என் கிளவி**
**முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்தே. (720)**

செய்யும் என்னும் வாய்பாட்டு எச்சச் சொல், மேலைச் சூத்திரத்திற் கூறிய நிலனும் பொருளும் முதலிய அறுவகைப் பொருளோடு முடியும் தன்மையுடன் வருமிடத்து முன்பு பல்லோர்படர்க்கை என்று தொடங்கும் சூத்திரத்தின்கண் (712) நீக்கப்பெற்ற உயர்திணைப் படர்க்கைப் பலர்பால், முன்னிலை, தன்மை ஆகிய மூன்று இடங்களிலும் வருதற்கு உரித்து. மூவீற்றும் – மூன்று இடத்தும். முதற்கண் என முன்னைய நூற்பாவைச் (712) சுட்டிக் கூறுகிறார். வரைந்த – நீக்கிய. அங்குக் கூறியது முற்றுச் சொல் பற்றியது. இங்கு 'செய்யும்' என்னும் எச்சச்சொல் பற்றிக் கூறப்படுகிறது. முற்றாயின் படர்க்கை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவற்றில் மட்டுமே வரும்; எச்சமாயின் படர்க்கைப் பலர்பால், முன்னிலை, தன்மை ஆகிய இடங்களிலும் வருமென்பதாம். பாடும் கலைஞர்கள், படிக்கும் நீ, நடிக்கும் யான்.

### *பெயரெச்ச, வினையெச்சங்கள் எதிர்மறைகளாய் வரினும் முன்னைய விதிகளையே பெறும்*

**பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்**
**எதிர்மறுத்து மொழியினும் பொருள்நிலை திரியா. (721)**

பெயரெச்ச வினைச்சொல்லும் வினையெச்ச வினைச்சொல்லும் எதிர்மறையாகச் சொல்லப்பட்டாலும் முற்கூறிய தத்தமது எச்சமாகிய பொருள் நிலைமைகளில் வேறுபடமாட்டா. பொருள் நிலை திரியா – பெயரெச்சம் நிலம் முதலிய பொருள்களுடன் முடிதலும் வினையெச்சம் தன் வினைமுதல் வினையொடும் பிறவினை முதல் வினையொடும் முடிதலுமாகிய பொருள்தரு நிலைகளில் வேறுபடா. பேசும்படம், பேசாப் படம், படித்துத் தேறினான், படியாது தோற்றான்.

### *எச்சம், கொண்டு முடியும் சொற்களிடையே பிற சொற்கள் வருதல்*

**தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்**
**எச்சொல் லாயினும் இடைநிலை வரையார். (722)**

பெயரெச்சமும் வினையெச்சமும் தத்தம் முடிக்கும் சொல்லோடு பொருந்தும்போது கருத்து இயைபுடைய பிற சொற்கள் எவையாயினும் அவை இடை வந்து நிற்றலை நீக்கமாட்டார்கள். இசைக்கும் பழங்கால மரபுள்ள முல்லைப்பண் இது. இசைக்கும் பண் என்பதன் இடைவந்தன, எச்சத்தோடு சிவணும் குறிப்புள்ள சொற்களாகும். உழுது மாட்டுடன் வந்தான் என வினையெச்சத்தும் இவ்வாறு பொருந்துவன இடையில் வரும்.

### *செய்யும் என்னும் பெயரெச்சம் ஈற்றயல் கெடும் இடங்களுள*

**அவற்றுள்,**
**செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு**
**மெய்யொடும் கெடுமே ஈற்றுமிசை உகரம்**
**அவ்விடன் அறிதல் என்மனார் புலவர். (723)**

எச்சவாய்பாடுகளாகிய அவற்றுள், செய்யும் என்னும் பெயரெச்சச் சொல்லுக்கு, ஈற்றயலாகிய உகரம் தான் ஏறிய மெய்யோடும் கெடும். (செய்யும் என்பதில் 'யு' கெட்டு, 'செய்ம்' எனநிற்கும்.) எல்லா இடத்தும் அங்ஙனம் நிகழாதாதலின், அங்ஙனம் கெடுமிடங்களை அறிந்து கொள்ளுதல் வேண்டுமென்று புலவோர் கூறுவர். வாவும் புரவி – வாம்புரவி. ஆகும் பொருள் – ஆம் பொருள். போகும் நெறி – போம்நெறி. பெயரெஞ்சு கிளவிக்குக் கூறினாலும் அவ் வாய்பாட்டு வினைமுற்றுக்கும் சில சொற்களில் இது பொருந்தும் என்பர். 'அம்பலூரும் அனொடு மொழிமே' – மொழியும் என்ற முற்று மொழிம் (மொழிமே) என 'யு' கெட்டு நின்றது. கலுழும் என்பது கலுழ்ம் என நிற்கும். இதில் மெய்நிற்க, உகரம் மட்டும் கெட்டது. மெய்யொடும் கெடும் என்ற உம்மையால் மெய்நிற்க உகரம் மட்டும் கெடுதலுண்டு எனப் பொருள் கூறுவர் உரையாசிரியர்.

### *காலமயக்கங்களும் அவற்றின் காரணங்களும் செய்து வாய்பாட்டு வினையெச்ச இயல்பு*

### இறந்த காலச் சொல் எதிர்காலச் சொல்லோடு இயைதல்

**செய்து என் எச்சத்து இறந்த காலம்**
**எய்துஇடன் உடைத்தே வாராக் காலம். (724)**

'செய்து' என்னும் வாய்பாட்டு வினைச் எச்சத்துக்கண் வரும் இறந்தகாலம். எதிர்காலவினையுடன் முடியும் இடமும் உண்டு. நன்கு கற்றுத் தேறுவான். கடுமையாக உழைத்து முன்னேறுவான். கற்று, உழைத்து என்பன செய்து வாய்பாடுகளாதலின், இறந்தகாலம் குறிப்பன. உழைத்து முன்னேறினான் என முடிபும் இறந்தகாலத்தால் வருதலே பொருந்துமாயினும், வாராக் காலத்துடனும் முடியுமிடம் உண்டு என இச்சூத்திரம் வழக்குப்பற்றிய விதியைக் கூறுகிறது.

*முக்காலத்தும் மாறா இயற்கையை*
*நிகழ்கால வினைமுற்றால் கூறுதல்*

**முந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை**
**எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து**
**மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும். (725)**

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூவகைக் காலத்தும் மாறுபாடின்றி உளதாகும் இயல்புடைய பொருளையுணர்த்தும் எல்லாச் சொல்லுக்கும் நிகழ் காலத்தைக் குறிக்கும் தன்மையுடைய பொதுச் சொல்லால் வினைமுடிபு கூறுதல் வேண்டும். முக்காலத்திற்கும் பொதுவாய் நிற்கும் வினைச்சொல் 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றாகும். மலை நிற்கும், தீச் சுடும், நீர் குளிரும், ஞாயிறு தோன்றும்.

*வினைச்சொல்லில் விரைவை உணர்த்தக்*
*காலம் மயங்குதல்*

**வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்**
**ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி**
**இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்**
**விரைந்த பொருள என்மனார் புலவர். (726)**

எதிர்காலத்தையும் நிகழ்காலத்தையும் ஒருபடித்ததாகக் குறிக்கும் வினை நிகழ்ச்சியைச் சொல்லவேண்டிய கூற்றை, இறந்த காலத்துக் குறிப்புடன் கூறுதல், விரைவுப் பொருளைக் கருதிக் கூறப்படுவதாகும் என்று புலவோர் கூறுவர். மாணவன் கட்டுரை ஒன்றை எழுதிக் கொண்டிருக்கிறான்; இனித்தான் எழுதிமுடிக்கப் போகிறான். ஆசிரியர் 'கொண்டுவா' என்று கூவுகிறார். 'முடித்துவிட்டேன்! இதோ வந்து விட்டேன்' என்று அப்போது மாணவன் இறந்தகாலத்துக் குறிப்புத் தோன்ற, அவ்வினைச் சொல்லாமல் கூறுவது விரைவு கருதியேயாம். 'வருவேன்' – என எதிர் காலத்தால் குறிக்க வேண்டியதை, விரைவு

கருதி இறந்த காலத்தால் கூறுகின்றான். 'ஓராங்கு வருதல்' – நிகழ் காலத்து நடந்து எதிர்காலத்து முடியும் படியான வினை நிகழ்ச்சி; அதனையே இறந்த காலத்தாற் கூறுதல் வழக்கு. இறந்த காலத்துக் குறிப்பு – உண்மையில் இறந்த காலமன்று; விரைவு கருதிய இறந்தகாலம் என்பது அதிலுள்ள உட்குறிப்பு. அக்குறிப்பைக் கேட்டுப்போன் உணருமாறு கூறவேண்டுதலின், 'இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்' என்றார்.

### *சில சொல் நடைகள்*

### *உயர்வு கருதும் சிறப்பு வினைகள்,*
### *வினை முதல் இல்லாவழி, 'செய்யும்' வாய்பாட்டு*
### *நிகழ்கால வினையாற் கூறப்படும்*

**மிக்கதன் மருங்கின் வினைச்சொல் சுட்டி**
**அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி**
**செய்வது இல்வழி நிகழும் காலத்து**
**மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே. (727)**

ஓதுதல் உயர்வு தரும்; ஒழுக்கம் சிறப்புத்தரும்; உழைப்பு வாழ்வு தரும் எனக் கூறும் வழக்காறு உண்டு. உயர்வு பெறுவராம் வினை முதல்கண் வெளிப்பட இல்லை. அவ்வாறு உயர்வு கருதி வருகின்ற, வினைச்சொல்லாற் சுட்டி அவ்வுயர்வாகிய பண்பைக் குறிக்கும் வினைமுதற் சொற்கள்தாம் 'கற்றல்', 'ஆன்றவிந்தடங்கல்' போல்வனவாகும். அவை அவற்றைச் செய்வதாகிய வினைமுதல் இல்லாத வழி, நிகழுங்காலத்துக்குச் 'செய்யும்' என்னும் சொல்வழக்கால் கூறப்படும் பொருண்மைஉடையனவாகும். கற்றவன் சிறப்புறுவான் என வினைமுதலுடன் வரும். அவ்வினை முதலில்லா வழி, 'கற்றல் சிறப்புறும்' என்றே கூறுவர். நிகழுங் காலத்து மெய் – நிகழ்காலத்தைக் குறிக்கும் வழக்குடைய செய்யும் என்னும் முற்று (725). செய்வது – செய்வதாகிய வினைமுதல்.

### *'இது செயல்வேண்டும்' எனும் வாய்பாட்டு வினைகள்*
### *தன்பாலும் பிறன்பாலும் பொருந்தி வருதல்*

**இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி**
**இருவயின் நிலையும் பொருட்டா கும்மே**
**தன்பா லானும் பிறன்பா லானும். (728)**

'இது செயல் வேண்டும்' என்பது போலும் தொடர்கள் பல வழங்குகின்றன.

கற்றல் வேண்டும், ஒழுகுதல் வேண்டும், வரைதல் வேண்டும் என வரும். இத் தொடர்கள் தன்பாலானும் பிறன்பாலானும் என இரண்டிடத்தும் பொருந்தும் பொருளுடையனவாகும். 'கண்ணன் கற்றல் வேண்டும்'. கண்ணன் தான் கற்றிட விரும்பும் எனத் தன்பாலானும் கண்ணன் கற்றலை அவன் தந்தை விரும்பும் எனப் பிறன்பாலானும் விரித்துப் பொருளுரை நின்றவாறு காண்க.

### *வற்புறுத்த வரும் வினாவினைச் சொல் எதிர்மறைப் பொருள் தருதல்*

**வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்**
**எதிர்மறுத்து உணர்த்துதற்கு உரிமையும் உடைத்தே. (729)**

வலியுறுத்தற் பொருட்டு வரும் வினாவடிவான வினைச்சொல், எதிர்மறையாய்ப் பொருளுணர்த்துதற்கு உரிமையும் உடையதாகும். 'யான் வைதேனா?' என வினவுவான் 'வைதிலேன்' என வலியுறுத்தவே அவ்வாறு கூறுகிறான். 'நான் அவ்வாறு பேசினேனா?' எனக் கூறுவான். அவ்வாறு பேசவில்லை என எதிர்மறுத்து உணர்த்தவே அவ்வாறு கூறுகிறான். இன்னோரன்ன வழக்காறுகள் காண்க.

### *இயல்பையும் தெளிவையும் சுட்டக் காலம் மயங்குதல் எதிர்காலம் உணர்த்தவேண்டிய வினை இறந்தகாலம் நிகழ்காலங்களில் மயங்குதல்*

**வாராக் காலத்து வினைச்சொற் கிளவி**
**இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்**
**இயற்கையும் தெளிவும் கிளக்குங் காலை. (730)**

எதிர் காலத்தால் குறிக்கவேண்டிய வினைச் சொற் கூற்றை, ஒன்றன் மாறா இயல்பையும் தெளிவையும் குறிக்கவேண்டிய இடத்து, இறந்த காலத்தாலும் நிகழ்காலத்தாலும் அழுத்தமுறுமாறு குறித்தலுண்டு. வாராக் காலத்து வினைச் சொற்கிளவி, இயற்கையும் தெளிவும் கிளக்குங்காலை இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத்தோன்றும் எனக் கூட்டுக. "நடு ஆற்றுக்குள் போனால் தொலைந்தாய்" என விழிப்புணர்த்தும் போது இனி நிகழவிருப்பதை, நிகழ்ந்து முடிந்ததாகக் கூறுவது ஒன்றன் இயல்பைத் தெளிவுபடுத்துவதாகும். "நாளை மழை நின்றால் நிச்சயம் வேலை நடக்கிறது" - நடக்கும் எனற்பாலது தெளிவு (உறுதி) பற்றி நிகழ்வதாகக் கூறப்படுகிறது.

### *செயப்படுபொருளை வினைமுதல் போல் கூறுதல்*

**செயப்படு பொருளைச் செய்தது போலத்**
**தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே. (731)**

செயப்படுபொருளைச் செய்யப்பட்டது எனக் கூறாமல், அதுவே செய்தது போல, அதன் வினை என்பது படக் கூறுதல் உலக வழக்காற்றில் காணப்படும் மரபாகும். நாடகம் நடந்தது. நாடகத்தை நடத்தினர் எனச் செயப்படுபொருளாக வர வேண்டியதை, வினைமுதலாக்கி அதுவே நடந்தது என அதன் தொழிலாக்கிக் கூறுதல் உலக மரபாகும். பேருந்துகள் வழக்கம்போல் ஓடின, குழல் இசைத்தது என இவ்வாறு வருவன உலக வழக்கில் மிகுதி.

### *காலம் மயங்கு வினைச் சொற்கள்*
### *இறந்த காலமும் எதிர் காலமும் மயங்கி வருதல்*

**இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்**
**சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி. (732)**

காலம் மயங்கி வரும் 'மயங்குமொழித் தொடர்களில்' இறந்தகாலமும் எதிர் காலமும் ஆகிய இரண்டும் பொருள் அழுத்தமுறத் தோன்றும். (நாங்கள் முன்பு இளமைக் காலத்தில் இங்கு விளையாடுவோம்.)

### *நிகழ்காலமும் அவ்வாறு அவற்றுடன் மயங்கிவருதல்*

**ஏனைக் காலமும் மயங்குதல் வரையார். (733)**

அவற்றுடன் நிகழ்காலமும் மயங்கிவருதலை நீக்கமாட்டார்கள். அரிதாக வருமென்பதாம். (1967 இல் தமிழக வரலாற்றில் ஒரு மாற்றம் நிகழ்கிறது; அறிஞர் அண்ணா முதலமைச்சராகிறார்; தமிழ்நாடு எனப் பெயர் சூட்டுகிறார். உனக்கு அடுத்தமாதம் கடிதம் எழுதுகிறேன்.)

# 7. இடையியல்

இடைச்சொல் என்பன பெயர் வினைகளைச் சார்ந்து, அவற்றினிடையே வந்து, அவற்றொடும் கூடி இயங்குவனவும் அவற்றின் பொருளைச் சிறப்பிப்பனவுமாம். பெயர் வினைகளைச் சார்ந்தன்றி அவற்றிற்குத் தமக்கென இயக்கமின்மையின், இஃது அவற்றின் பின் வைக்கப்பட்டது.

'முன்னும் பின்னும் நிற்குமேனும், பெரும்பான்மையும் இடையே நிற்றலின் இடைச்சொல் என்றார்', என்பர் நச்சினார்க்கினியர். 'மேல் அதிகரிக்கப்பட்ட சொல் நான்கினுள் இடைச் சொல்லாவது பெயரும் வினையும் போலத் தனித்தனி பொருள் உணர உச்சரிக்கப்படாது; பெயர் வினைகளைச் சார்ந்து புலப்படும்', என்பர் தெய்வச்சிலையார். 'பெயர் வினையுமாகாது அவற்றின் வேறுமாகாது இடைநிகரனவாய் நிற்றலின் இடைச்சொல் எனப்பட்டன' என்பது சிவஞானமுனிவர் கருத்து.

தொல்காப்பியர் 'பெயரொடும் வினையொடும் நடைபெற்று இயலும்' எனவும் 'தமக்கு இயல்பில' என்றும் 'வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித் திரிந்துவேறு படினும்' என்றும் பெயர்வினைகளாகிய 'அவற்று வழி மருங்கில் தோன்றும்' என்றும் கூறும் இயல்புகள் மீண்டும் மீண்டும் சிந்திக்கத்தக்கன.

இடைச்சொல்லின் இலக்கணம் ஆங்காங்கு நூல் முழுவதும் விரவிக் காணப்படுகிறதெனினும், இவ்வியலுள் இடைச்சொல்லின் பொது இலக்கணம், பொருள்புணர் இடைச்சொல்லாகிய தத்தங்குறிப்பிற் பொருள் செய்வன பொருள் உணர்த்தும் முறைகள்; அசைநிலை இசைநிறைகளாக வருவன என்பவை நிரலே உணர்த்தப்படுகின்றன. தத்தங்குறிப்பில் பொருள் செய்யும் இடைச் சொற்களுள் பலபொருள் உணர்த்தும் சொற்கள் முதலிலும் ஒரு பொருள் உணர்த்தும் சொற்கள் பின்னரும் இடம்பெறுகின்றன. சிறப்பாகக் குறிக்கத்தக்க விதிகளையெல்லாம் இறுதியில் கூறுகின்றார்.

ஒருவாற்றால் இவ்இடைச்சொற்கள் பெயர் வினைச் சொற்களை இயக்கி, அவற்றின் பொருளை வேறுபடுத்தியும் சிறப்பித்தும் நிற்றலின், குறைச் சொல்லாய் நிற்பினும் சார்ந்து வரினும் தனித்து நில்லாவிடினும் மொழி ஆற்றலில் சிறிதும்

குறைந்தவையல்ல என்பது உணரப்படும். ஏனைய சொற்கள் காலவெள்ளத்தில் கலப்பினத்திற்கு இடங்கொடுத்து நிற்கவும், தமிழில் கலந்துவந்த பிறமொழிச் சொற்களையும் இவை தமிழ்வடிவப் படுத்துவனவாய் விளங்குதலின், இவற்றைத் 'தமிழ் மொழிக் காவலர்கள்' எனலாம். பல்வேறு இயல்களிலும் தொல்காப்பியர் தந்துள்ள இடைச்சொல் இலக்கணம் அனைத்தையும் ஒருவழித் தொகுத்தால், அஃது ஏனைய சொல்லிலக்கணங்கட்குச் சிறிதும் குறைவுடையதாகாது.

## இயல் கருத்து நிரல்

### இடைச்சொல் இலக்கணம்

இடைச்சொற்கள் என்பன தாமே தனித்து இயங்கும் இயல்புடையன அல்ல. அவை பெயரோடும் வினையோடும் சார்ந்து நடைபெற்று இயங்கும் தன்மையினவாகும்.

### இடைச்சொல் வகை

அவை சொற்கள் புணர்ந்து நடக்குமிடத்து அவற்றின் பொருளை வேறுபடுத்துமாறு உடன்நின்று உதவுவன; வினைச் சொற்கள் செயல்நிகழ்வை உணர்த்துமிடத்துக் காலங்காட்டும் உறுப்புக்கள் முதலியவாய் வருவன; வேற்றுமைப் பொருளைத் தருமிடத்து உருபுகளாய் அமைவன; தமக்கெனப் பொருளின்றி அசைநிலைகளாய் இடம்நிரப்பி இடைவருவன; செய்யுளில் பொருளுணர்த்துவன; தத்தம் குறிப்பாற் பொருளுணர்த்துவன; ஒப்புமைப் படுத்தப்படாது தனித்தனி நின்றவற்றை ஒப்பிடுவதற்காக உவம உருபுகளாக வருவன என அத்தகைய பண்பும் பகுப்பும் உடையனவாகும்.

'இசைநிறையாவது இசைநிறைத்தற் பொருட்டு ஒரு சொல்லோடு ஒட்டிவரும்; அசைநிலையாவது தனிவரும்' என்பர் தெய்வச்சிலையார்.

### இடைச்சொல் நிற்குமிடம்

இடைச்சொற்கள் இடையே வருதல் மட்டுமன்றி, சொற்களின் முன்னும் பின்னுமாக அவற்றைச் சார்ந்து வரும். தம் இறுதி திரிந்து வருதலும் ஒன்றற்குரிய இடத்தில் பிறிதொன்றும் வந்தமைதலும் அல்லது பிறிதொன்று வந்து முன்புள்ளதனோடு இணைதலும் என அத்தகைய பண்புகள் யாவும் அவற்றிற்குரியவாம் என்பர்.

## பல பொருளுணர்த்தும் இடைச்சொற்கள்

### 'மன்' உணர்த்தும் பொருள்கள்

மன் எனும் இடைச்சொல் கழிவு (கழிந்தது) எனும் பொருளையும் ஆக்கம் பற்றிய பொருளையும் சொல்லாது ஒழிந்ததை உணர்த்தும் ஒழியிசைப் பொருளையும் தருகின்ற அம்மூன்று வகையாக அமையும். ('பண்டு காடுமன்' என்றால், இன்று நாடாயிற்று என்று உணர்த்துவது. இது ஒழியிசைப் பொருளாகும். அதியமான் நெடுமான் அஞ்சி இறந்தபோது, ஔவையார், 'சிறியகட்பெறினே எமக்கீயும் மன்னே!' என அழுது அரற்றியது 'அது கழிந்து போனதே' என்ற குறிப்பைத் தருதல் காணலாம்.)

### 'தில்' உணர்த்தும் பொருள்

தில் எனும் இடைச்சொல் விழைவு, காலம், ஒழியிசை என அம் மூன்று பொருள்களைத்தரும் சொல்லாகப் பயன்படும். ( 'வருக தில்' - வர வேண்டுமென யான் விழைகிறேன் என்பதாம். அறிகதில் - இனி அறியட்டும் என எதிர்காலம் உணர்த்திற்று.)

### கொன் உணர்த்தும் பொருள்கள்

கொன் என்னும் இடைச்சொல் அச்சம், பயன் இன்மை, காலம், பெருமை என்ற அப்பகுதிப்பட்ட நான்கு பொருள்களை உணர்த்தும். (கொன்னே கழிந்தன்று இளமை - பயனின்றிப் போனது.)

### உம் உணர்த்தும் பொருள்கள்

உம்மை இடைச்சொல் எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை(ஆராய்தல்), ஆக்கம் என்ற அவ்எட்டுப் பொருள்களில் வரும். (மடலும் வந்தது – பணமும் வந்ததை உணர்த்தலின் எச்சவும்மை. நன்றும் தீதும் – எண்ணும்மை)

### ஓ உணர்த்தும் பொருள்கள்

ஓகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு ஆகிய ஆறு பொருள்களை உணர்த்தும். (இதுதான் நன்றியோ? - நன்றியில்லை என்பதை உணர்த்துமிடத்து, எதிர்மறையாதல் காண்க. 'கூடவோ குறையவோ' என ஆராய்தல் தெரிநிலை. 'இதுதான் அறுசுவையோ' எனும் போது, ஒரு சுவையும் இல்லை என உணர்த்துவது ஒழியிசை.)

ஏகார இடைச்சொல் தேற்றம் (தெளிவு), வினா, பிரிநிலை, எண், ஈற்றசை, என இவ் ஐந்து பொருள்களில் வரும். ('ஏகாரம்மே' என இச்சூத்திரத்தில் வந்திருக்கும் 'ஏ' ஈற்றசைக்குக் காட்டாகும்.)

### என உணர்த்தும் பொருள்கள்

என என்னும் இடைச்சொல், வினை குறிப்பு இசை பண்பு எண் பெயர் என்னும் அவ் ஆறு சொற்களையும் சார்ந்து, அவற்றின் பொருளைச் சிறப்பிக்கும் கருத்துடையதாகும். (வா என அழைத்தான் - வினையைச் சார்ந்தது. கல்லென ஒலித்தது - இசை)

### என்று உணர்த்தும் பொருள்கள்

என்று என்னும் சொல்லும் 'என' என்ற இடைச்சொல்போல நின்று பொருளைச் சிறப்பிக்கும். அதாவது வினை குறிப்பு இசை பண்பு எண் பெயர் என்ற ஆறு சொற்களைச் சார்ந்து நின்று பொருளுணர்த்தும். (கிழக்கென்று நினைத்தான் - பெயர். கொள்ளென்று கொடுத்தான் - வினை)

### சில சிறப்பு விதிகள் : தில் இடைச்சொல்

விழைவை உணர்த்தும் தில்லைச் சொல் தன்மை இடத்தில் மட்டுமே வரும். (வருகதில் - வரவேண்டுமென யான் விழைகிறேன் என்பதாம்.) ஏனைய காலம், ஒழியிசை இரண்டும் எல்லா இடத்திலும் வருமென்பதாம்.

### ஏ, ஓ இடைச்சொற்கள்

தேற்றப் பொருள் 'ஏ'யும் சிறப்புப் (மிகுதி) பொருள் ஓவும் அளபெடை எடுத்த ஓசையினையுடையவாய் அவ்வப்பொருள்களை உணர்த்தும் என்பர். (அறமேஎ வெல்லும். இதுவன்றோஒ கண்காட்சி.)

### ஒரு பொருளுணர்த்தும் இடைச்சொற்கள்

### மற்று உணர்த்தும் பொருள்

மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்று, அசைநிலை என்ற அவ்விரண்டு கூறுகளில் வருமெனப் புலவோர் மொழிவர். (அற்றார் மற்று ஆதல் அரிது - அழிந்தார் என்ற வினையை மாற்றி ஆதலரிது என்பதால் இது வினைமாற்று.) அசைநிலைக்குப் பொருளில்லை.

### எற்று உணர்த்தும் பொருள்

'எற்று' என்பது ஒன்று கழிந்துபோனதை உணர்த்தும். (எற்றோ என் பெருமை).

**மற்றையது உணர்த்தும் பொருள்**

'மற்றைய்து' எனும் சொல் முன்பு சுட்டியது ஒழிய, அதன் இன்மான பிறிதொன்றைக் குறிக்கும். இது வீடு; மற்றையது தோட்டம்.

**மன்ற உணர்த்தும் பொருள்**

மன்ற என்பது தெளிவு – உறுதியை வெளிப்படுத்தும். ('நல்லை மன்ற அம்ம பாலே' – உறுதியாக நல்லை;பாலே!)

**தஞ்சம் உணர்த்தும் பொருள்**

தஞ்சம் எனும் சொல் எளிது எனும் பொருளுடையதாகும். (வெல்வதோ தஞ்சம் செல்வமிருந்தால்)

**அந்தில் உணர்த்தும் பொருள்**

அந்தில் என்பது ஆங்க (ஆங்கு) என்னும் பொருளிலும் அசைநிலைச் சொல்லாகவும் அமையும் அவ்விரண்டு தன்மைகளை உடையதாகும். 'சேயிழை அந்தில் காணியே வருவள்' (அந்தில் – அங்கே).

**'கொல்'லின் பொருள்**

கொல் ஐயப்பொருளை உணர்த்தும். (யார்கொல் இவர்?)

**எல்லின் பொருள்**

எல் விளக்கம் எனும் பொருளுடையதாகும். (எல்வளை)

**'ஆர்' விகுதி – மதிப்புப் பன்மை உணர்த்தல்**

இயற்பெயருக்குப் பின்னே 'ஆர்' சேர்த்தால், பலர்பாலுக்குரிய இறுதிநிலையையுடைய வினையுடன் முடியும் என்பர். (இளவழகனார் எழுதினார்.)

'ஆர்' எனும் சொல் அசைநிலையாகுமிடங்களையும் அறிந்து கொள்க.

**ஏ, குரை : இசைநிறை, அசைநிலையாதல்**

ஏ, குரை என்பன இசைநிறையாயும் அசைநிலையாயும் ஆகும் இரண்டு தன்மையுடையன என்பர். 'பல்குரைத் துன்பம்' (குரை – அசைநிலை) 'ஏ' செய்யுளில் ஈற்றசையாய் வரும். 'என்செய நினைத்தனை மனமே.'

**மா : வியங்கோள் அசைச்சொல்**

மா என்பது வியங்கோளில் அசைச்சொல்லாக இடம்பெறும். (உண்கமா)

**அசைச்சொற்கள்**

**முன்னிலை அசைச்சொற்கள்**

மியா, இக, மோ, மதி, இகும், (இ சின் என்னும் ஆறும் முன்னிலை அசைச் சொற்களாகும். (கேண்மியா, கேண்மோ, கண்டிசின்)

**இகும், இசின் ஏனை இடங்களிலும் வருதல்**

அவற்றுள் இகும்ம் (இ சின்னும் முன்னிலையில் மட்டுமன்றி, ஏனைய தன்மை, படர்க்கை, இடச் சொற்களுடனும் வரும் தன்மையுடையன என்பர் புலவர். ‘யார் அஃது அறிந்திசினோரே’.

**அம்ம தன்முகமாக்கும்**

அம்ம எனும் அசைச்சொல், படர்க்கையோரைத் தன்முகமாக்கித் தான் சொல்வதைக் கேட்கச் செய்யும். அம்ம வாழி தோழி!

**ஆங்க : உரையசையாகும்**

ஆங்க உரையாடலிடையே, உரையசையாய்ப் பொருளின்றி வரும்.

**ஒப்பில் போலி அசைநிலையாதல்**

ஒப்புமை உணர்த்தாது வரும் ‘போலும்’ எனும் சொல், ‘ஆங்க’ என்னும் இடைச்சொல்போல, உரையசையாய் வரும். (அவர் அதோ வருகிறார் போலும்.)

**அசைநிலைச் சொற்கள்**

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது என வரும் ஏழு சொற்களும் அசைநிலையாய் இடம்பெறும் இடைச் சொற்களாகும். (‘இருங்குயில் ஆலுமரோ’ – ‘அரோ’ அசை நிலை.)

**பிரிவில் அசைநிலைகள்**

ஆக, ஆகல் என்பது எனும் மூன்றும் ‘பிரிவில் அசைநிலை’களாக இடம் பெறும். (பெரியவர் என்பது தெரியும். நீ வாராய் ஆகுதல் கொடிது. யாம் அவனைப் பாடினேம் ஆக. இவை தத்தம் முன்னுள்ள சொற்பொருளையே உணர்த்தி, அவற்றின்றும் பிரிக்க முடியாதவாறு இணைந்து நிற்றலின் ‘பிரிவில் அசை நிலை’களாகும்.

**ஔ - பொருளுணர்த்திய முறைகள்**

**குறிப்பிற் பொருளுணர்த்தும்**

மொழியிறுதியில் வாராதெனப்பட்ட இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கும் 'ஔ' எனும் உயிரானது, முற்கூறியவாறு பிரிவில் அசைநிலையாக வரும் போதும் அளபெடையாக வருமிடத்தும் அளபெடை இன்றி வரும்போதும், சொல்லுவானது குறிப்பினால் ஏற்படும் ஓசை அழுத்தங்களுக்கேற்பப் பொருள் வேறுபடும். (ஔஔ, ஔஉ, ஔ - இவை களிப்பு, வெறுப்புப் போலும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தப் பயன்பட்டிருக்க வேண்டும்.)

**ஏ, ஓ இணைந்து குறிப்பிற் பொருள் தருமிடங்கள்**

'நன்று' ஈற்றில் இணையும் 'ஏ'யும் 'அன்று' ஈற்றில் இணையும் 'ஏ'யும் 'அந்து' ஈற்றிலிணையும் 'ஓ'வும் 'அன்' ஈற்றிலிணையும் 'ஓ'வும் அவை போல்வன பிறவும் குறிப்புப் பொருள்கொள்ளும். (அந்தோ, அன்னோ - இரக்கக்குறிப்பு)

**சிறப்பு விதிகள்**

**எச்சவும்மையும் எதிர்மறை உம்மையும் ஒருங்கு நில்லா**

எச்சவும்மையும் எதிர்மறை உம்மையும் தத்தமக்குள் ஒருங்குவரும். இவை இரண்டும் ஒரு தொடரில் உடன் நிற்றல் இல்லை. (கண்ணனும் வருவதும் உண்டு என வாராது.)

**எச்சவும்மை நிற்குமிடம்**

எச்சவும்மையை ஏற்கும் சொல், உம்மையின்றிச் செஞ்சொல்லாகவரின் அதனைப் பிற்படக் கூறாமல், முதலிற் கூறவேண்டும். அண்ணா நாடகம் எழுதினார்; நடிக்கவும் செய்தார். நாடகமும் எழுதினார் என்னாது உம்மையின்றிச் செஞ்சொல்லாக நாடகம் என வருதலின், அதைத் தொடரின் முற்படவே கூறவேண்டும்.

**முற்றும்மையில் எச்சக்குறிப்புண்மை**

முற்றும்மையைப் பெற்றுவரும் தொகைச் சொல்லின் கண் எச்சப் ொருள் கொள்ளுதற்கும் இடமுண்டு. (எல்லோரும் வந்திலர் – சிலர் வந்தனர் என்று கொள்ளவும் இடமுண்டு. கடன் முழுவதும் தரவில்லை. ஓரளவு தந்துவிட்டாதாகக் குறிக்க இடமுண்டு.)

**ஈற்றசை 'ஏ' ஓரளபாதல்**

செய்யுளிறுதியில் ஈற்றசையாக நின்று இசைக்கும் ஏ ஒலித்துக் கூறுதற்கண் ஒருமாத்திரையாதலுமுண்டு.

**எண்ணிடைச் சொற்கள் தொகைமுடிபு பெறுதல்**

உம், என என்னும் எண்ணிடைச்சொற்கள், தத்தமது இறுதிக்கண் தொகைச் சொல்பேறும் கட்டாயமுடையனவல்ல. பெற்றும், பெறாதும் வரலாம் என்பதாம். (உடலும் உள்ளமும் நலமா? தொகைச்சொல் இல்லை. 'பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும்' - என்பதில் நாலும் எனத் தொகைச் சொல் இறுதியில் வந்துளது.)

**ஏ எண்ணிடைச் சொல் இடையிட்டும் வரலாம்**

ஏகார இடைச்சொல் சொல்தோறும் வாராமல், இடையிட்டுவரினும், எண்ணுதற் பொருளுடையதாகும் என்பர் புலவர். (வான், மண், வளியே, ஒளியென யாவும். முன்னிரண்டு சொற்களிலும் ஏகாரமின்றெனினும் எண்ணிக்கைப் பொருள் உடையதேயாகும்.)

**எனா, என்றா என எண்ணுதல்**

எனவும் என்பதில் உம்மை தொக்கு, எனா என வரும் சொல்லும் 'ஆ' ஈறுபெற்ற என்று என்னும் சொல்லும் (என்றா) எண்ணுதற் பொருளினவாம். செடிகொடி என்றா, காய்கனி என்றா, தேரினர் எனா, களிற்றினர் எனா, மாவினர் எனா என எண்ணுவர்.)

**எனா, என்றா, பெயர்மட்டுமாய் நிற்கும் செவ்வெண் , ஏ - இவை இறுதியில் தொகைச்சொல் பெறுதல்**

முற்கூறிய எனா, என்றா என்று எண்ணுமவற்றின் இறுதியும் பெயரைமட்டும் வைத்து எண்ணும் மரபுடைய செவ்வெண்ணின் இறுதியும் 'ஏ' காரத்தான் எண்ணப்படுகின்ற இறுதியும் ஆகிய இவை எவ்விடத்து வரினும், இறுதியில் தொகைச் சொல்லின்றி நடவா. (அறம் பொருள் இன்பம் என இவை மூன்றும் என்று இறுதியில் தொகைச் சொல் கொடுத்துக் கூறவேண்டும். பெயரை மட்டும் வைத்து எண்ணுதலான் இது செவ்வெண் எனப்படும். அறமே பொருளே இன்பமே என்னும் மூன்றும்.

**எண்ணும்மையில் வேற்றுமை உருபு மறைந்துநிற்றல்**

எண்ணும்மையின் வேற்றுமை உருபு தொக்குநிற்கும். (பாலும் பழமும்

உண்டனர். பாலையும் பழத்தையும் என வரவேண்டிய உருபுகள் தொக்குநிற்றல் காண்க.)

**வினைச்சொல்லில் உம் ஈறு உந்து ஆதல்**

உம் ஈறு உந்து என ஆகும் இடனுமுண்டு (ஒலிக்கும் – ஒலிக்குந்து)

**வினைச்சொற்களிலும் எண்ணிடைச் சொற்கள் இடம் பெறுதல்**

வினைச்சொற்களிலும், எண்ணிடைச் சொற்கள் வந்து, எண்ணுதற்குப் பயன்படும். அவை அவ்வாறு வருமிடங்களை ஆராய்ந்தறிதல் வேண்டும். (ஆடியும் பாடியும் நடித்தும் வாழ்ந்தான் என வினையெச்ச வடிவங்களில் எண்ணிடைச் சொற்கள் பொருந்தும்.)

**ஓரிடத்து வரும் எண்ணிடைச் சொல்**
**பல இடத்தும் சென்று சேர்தல்**

என்று, என, ஒடு என்பன மூன்றும் எண்ணிக்கைப் படுத்திச் சொல்ல வருமிடத்து, ஓரிடத்தே தோன்றினும் பிரிந்து ஏனைய இடங்களிலும் பொருந்தும் முறைமை உடையனவாகும். (வினை பகை என்று இரண்டின் எச்சம் (குறள். 674). வினைஎன்று, பகை என்று என எண்ணப்படும்.)

**புறனடை**
**இடைச்சொற்களுக்கு முன்பு கூறியன அல்லாத பொருள்களும் வருதலுண்டு**

இடைச்சொற்களைக் கூறி, இவை இவைக்கு இவையிவை பொருளென, வழக்கினடிப்படையில் உள்ளவை கூறப்பட்டன. எனினும் வினையொடும் பெயரொடும் பொருந்தத் தோன்றி, வேறு பொருள்களைத் தரினும், அவற்றையும் ஆராய்ந்து கொள்ளுதல் வேண்டும்.

**இடைச்சொற்களும் வேறுபல உள எனல்**

இதுகாறும் கூறப்பட்டனவல்லாத, வேறுபிற இடைச் சொற்கள் தோன்றினாலும், அவற்றுக்கும் இங்குக் கூறப்பட்ட இலக்கணப்படி, ஆராய்ந்தறிந்து கொள்க.

# இடையியல்

## *இடைச் சொல்லின் பொது இலக்கணம்*

**இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்**
**நடைபெற் றியலும்; தமக்கியல் பிலவே. (734)**

இடைச்சொல் என்பது சொல்லப்படுவன பெயர்ச்சொல்லோடும் வினைச் சொல்லோடும் சார்ந்து நடைபெற்று இயங்குவன; அவை தாமே, தனித்து இயங்கும் இயல்பில்லாதன. 'பெயரொடும் வினையொடும்' என்றதால், அவற்றுடன் கூடிநின்று நடத்தல் பெறப்படும். எனவே அப்பெயர்ச்சொற் பொருளையும் வினைச்சொற் பொருளையும் உணர்த்தியும் சிறப்பித்தும் வேறுபடுத்தியும் வருவதல்லது, அவை தனித்துநின்று தமக்கெனப் பொருளுணர்த்தும் இயல்புடையன அல்ல என்பது தெளிவு. அவற்றுள் தனித்த பொருட் குறிப்புடையனவும், பெயர் வினைகளை அடுத்து நின்றே அங்ஙனம் பொருள் தருதல் கருதத் தக்கது.

கண்டான் (ட், ஆன்). கல்லை (ஐ), என்றிசினோரே (இசின்), அருங்குரைத்து (குரை). இவை சொல்லிற்குறுப்பாய் வந்தன.

அதுகொல் தோழி! பெயரை அடுத்துச் சார்ந்து நின்றது. வருகதில் அம்ம - வினையைச் சார்ந்து நின்றது. முன்னது வினாப்பொருளும் பின்னது விரைவுப் பொருளும் குறிப்பால் தருகின்றன. ஆயினும் கொல், தில் எனத் தனித்துநின்று பொருள்தருவன அல்ல.

## *இடைச்சொல் வகை*

**அவைதாம்,**
**புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதவுநவும்**
**வினைசெயல் மருங்கில் காலமொடு வருநவும்**
**வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்**
**அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்**
**இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்**
**தத்தம் குறிப்பிற் பொருள்செய் குநவும்**
**ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவும்என்று**
**அப்பண் பினவே நுவலுங் காலை. (735)**

அவற்றைப் பாகுபடுத்திக் கூறுமிடத்து, கீழ்வரும் ஏழுவகை இயல்பினை உடையனவாய் அமையும் அவ்விடைச் சொற்களாவன : சொற்கள் புணர்ந்து நடக்குமிடத்து அவற்றின் பொருள்நிலைக்கு உதவுவனவும் வினைச் சொற்கள் செயல்நிகழ்வைக் காட்டுமிடத்துக் காலங்காட்டும் உறுப்புகளாய் வருவனவும் வேற்றுமைப் பொருளைத் தருமிடத்து உருபுகளாய் வருவனவும் தமக்கெனப் பொருளின்றி அசைநிலைகளாய் இடம்நிரப்பி இடைவருவனவும் செய்யுளின்கண் இசைநிறைக்க வருவனவும் தத்தம் குறிப்பாற் பொருளுணர்த்துவனவும் ஒப்புமைப்படுத்தாது தனித்து நிற்பனவற்றை ஒப்புமைப்படுத்து முகத்தான் உவம உருபுகளாய் வருவனவும் எனும் அவை ஏழுமாம்.

புணர்ச்சியின் போது பொருள் தருதற்கு உதவுவன சாரியைகள். சாரியைகள் அனைத்தும் இடைச் சொற்களே. கரும்பின் சாறு, மரத்துக்கிளை எனச் சாரியைகள் இடைவந்து (இன், அத்து), வேற்றுமைப் பொருளைத்தந்தன. பலரை, பலவற்றை – வற்றுச் சாரியை வந்து அஃறிணை என உணர்த்துதல் காண்க.

வினைநிகழ்ச்சியில் காலமுணர்த்தவருவன : காண்பான், கண்டான், காண் + ப் + ஆன், காண் + ட் + ஆன். கால இடைநிலைகளும் பால் காட்டும் ஈறுகளும் வினையொடு சார்ந்து தத்தம் குறிப்பாற்றலால் முதனிலையின் பொருளைத் தருகின்றன.

அவன் + ஐ = அவனை, கல் + ஆல் = கல்லால். உருபாய் வந்து இணைந்து வேற்றுமைப் பொருளைத் தருகின்றன.

அசைநிலைக் கிளவி – அசைச்சொல். அசைச் சொல்லுக்குப் பொருளில்லை. உரையாடலிலோ, செய்யுளிலோ இடத்தை நிரப்ப வரும். செய்யுளில் சீராக நின்றும் சீருக்கு உறுப்பாக நின்றும் குறையை நிறைவுசெய்யும். 'பழமுதிர் சோலை மலைகிழவோனே' – 'ஏ' ஈற்றசை. 'வோன்' என நின்றால் சீர்குறையும். கேண்மியா – 'மியா' உரையசைச் சொல். 'உரைமதி வலவ' – மதி முன்னிலையசை. 'அந்தில் கச்சினன் கழலினன்' – அந்தில் சீராக நின்று அடியை நிரப்பினும், அதற்குப் பொருளில்லை. எனவே அதை அசைநிலை என்பர்.

செய்யுளில் இசையை நிறைவிக்க வருவன, 'இசைநிறை' எனப்படும். ஒருசார் பொருளுணர்ச்சியோடு, செய்யுளில் ஓசை நிறைவிக்க வருவன இவை. 'ஏஎ இஃதொத்தன்'. ஏஎ – இசைநிறை. இகழ்ச்சிக்குறிப்புமுள்ளது காண்க.

தத்தம் குறிப்பால் பொருள் தருபவை 'ஏ' முதலிய பலவாகும். அவனே செய்தான் – பிறரல்லர் என்னும் பொருளில் பிரிநிலையாகும். வலியுறுத்தும் போது

தோற்றமாகும்; வினவும் போது வினாவாகும். ஒரே தொடராயினும் சொல்வோன் குறிப்பால் பொருள் வேறுபடுகின்றன.

தனியே நின்ற இருபொருள்களை, ஒப்புமைப்படுத்திக் காட்டவரும் போல, அன்ன, புரைய முதலிய உவம உருபுகளெல்லாம் இடைச் சொற்களேயாம்.

புணரியல் நிலையுடைய மொழிகளிடையே பொருள்தர வருவனவாம் சாரியைகள் பற்றி எழுத்ததிகாரத்திற் கூறப்பட்டது. வினைக்கு உறுப்பாவன பற்றி வினையிலுள் விளக்கப்பட்டது. வேற்றுமை உருபுகள் வேற்றுமையியலில் விரித்துரைக்கப்பட்டன. ஒப்புமை உணர்த்தும் உவம உருபுகள் பற்றிப் பொருளதிகாரத்தில், உவமவியலில் விளக்கப்படும். எஞ்சிய தத்தம் குறிப்பிற் பொருள் செய்குந, அசைநிலை, இசைநிறை, மூன்றுமே இவ்வியலில் எடுத்துரைக்கப்படுகின்றன.

1. புணர்ச்சிக்கு உறுப்பாவன (சாரியை போல்வன)
2. வினைச்சொற்கு உறுப்பாவன.
3. வேற்றுமை உருபுகள்
4. அசைச்சொற்கள்
5. செய்யுளில் வரும் 'இசைநிறைகள்'
6. குறிப்பிற் பொருள் தருவன
7. உவம உருபுகள்

இவையே ஏழு வகை இடைச்சொற்கள்.

### *இடைச்சொல் நிற்குமிடமும்*
### *திரிந்து வேறுபடும் விதமும்*

**அவைதாம்,**
**முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்**
**தம் ஈறு திரிதலும் பிறிது அவண் நிலையலும்**
**அன்னவை எல்லாம் உரிய என்ப. (736)**

அவ் இடைச்சொற்கள்தாம் மொழிக்கு இடையே வருதலன்றி, மொழியின் முன்னிடத்தில் வருவனவும் பின்னிடத்தில் வருவனவும் என மொழியை அடுத்து வரும் முறைகள் காணப்படும். சில போது இடைச்சொற்கள் தம் ஈறு திரிந்துவரும். மற்றும் சிலசமயம் ஒன்றற்குரிய இடத்தில் பிறிது ஒன்று வந்து அங்கு பொருந்தும்; அல்லது பிறிதோரிடைச் சொல்வந்து அங்குள்ளதோடு இணையும் அவை அத்தகைய இயல்புகளையெல்லாம் அடைதற்குரியவையாம். அவை,

இடையேயன்றி முன்னும் பின்னும் மொழியடுத்து வருதல் ஒருநிலை; தம் ஈறுதிரிதல், பிறிது அவண் நிலையல் போல்வன பிறிதொரு நிலை. அன்னவை என இவைபோல்வன பிறவும் அளவுமாற்றைக் குறிப்பிடுகின்றார். நடப்பான், பெறலருங்குரைத்து என இடைநின்றது. அதுமன், கேண்மியா - இடத்தால் சொல்லுக்குப் பின்புறம் நின்றன (இங்ஙனம் கூறுதல் அக்கால மரபு). 'உயிர் போகுக தில்ல' - தில், தில்ல என இரண்டும், மூன்றும் எனவும் எண்ணலாம். 'வருகதில் அம்ம' - 'தில்'லுடன் 'அம்ம'வும் இணைந்துநின்றது. இவை 'பிறிது அவண் நிலையல்' ஆகும்.

### *பல பொருள்தரும் இடைச்சொற்கள் பொருளுணர்த்தும் முறை*
### *மன் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்*

**கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்று**
**அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே. (737)**

'மன்' என்னும் சொல் கழிந்தது என்னும் பொருளையும் ஆக்கப் பொருண்மையையும் சொல்லாது எச்சமாய் ஒழிந்துநின்று பொருளையும் உணர்த்தி அம் மூன்று வகைப்படுமென்பர். 'சிறிய கள் பெறினே எமக்கு ஈயும் மன்னே!' - இப்போது அது போய்விட்டதென உணர்த்தலால், இது கழிவுப்பொருள். 'அதுமன் எம்பரிசில்' - பரிசில் ஆகும் என ஆக்கப் பொருள் உணர்த்தியது. 'பண்டுகாடுமன்' - இப்போது நாடாயிற்று என்பதாம். காடுஒழிந்ததோடு நாடும் ஆயிற்று என்பதாம். தலைவி தலைவனிடம் 'நல்லைமன்' எனக் கூறினால் இப்போது வேறுபட நடக்கிறான் என்ற குறிப்பு உளது. இதுவே ஒழியிசை. சொல்லாது விட்டதைக் குறிப்பால் சொல்வது.

### *தில் இடைச்சொல்*

**விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்று**
**அம்மூன் றென்ப தில்லைச் சொல்லே. (738)**

'தில்' என்னும் இடைச்சொல் விழைவு (ஆசை), காலம், சொல்லாது ஒழிந்ததைச் சொல்வது (ஒழியிசை) என அம் மூன்று பொருள்களைத்தரும் என்பர். வருகதில் - வரவேண்டும். பெறுகதில் அம்ம - பெறவேண்டுமென விரும்புகிறேன். காலம் உணர்த்துதற்குப் பொருந்திய உதாரணம் யாரும் காட்டவில்லை. வந்தாங்கு அறிகதில் - வந்ததை அறியட்டும் என எதிர்காலம் காட்டிற்று. பரத்தை இல்லம் போன தலைவனைப் பற்றி 'வருவதில் அம்ம எம் சேரி சேர' என்று தோழி கூறுவது 'வந்தால் நன்கு பாடம் புகட்டப்படும்' என்ற சினக்குறிப்பை வெளிப்படுத்துவதே ஒழியிசையாம்.

### *கொன் இடைச்சொல்*

**அச்சம் பயமிலி காலம் பெருமையென்று**
**அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே. (739)**

கொன் என்பது அச்சம், பயன் இன்மை உணர்த்தல், காலம், பெருமை என்று அப்பகுதிப்பட்ட நான்கு பொருள்களையுணர்த்தும் சொல்லாகும். பயம் இலி - பயன் இல்லாதது. 'கொன்முனை இரவூர்' - அச்சம். 'கொன்னே கழிந்தன்று இளமை' - பயனின்மை. கொன்வரல் வாடை - காலத்தே வரும் வாடைக் காற்று. கொன்னூர் - பெருமையுடைய ஊர்.

### *உம் இடைச்சொல்*

**எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை**
**முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம் என்று**
**அப்பால் எட்டே உம்மைச் சொல்லே. (740)**

உம் என்னும் இடைச்சொல் எட்டுப் பொருள்களில் வரும். எச்சவும்மை, சிறப்பும்மை (இழிவு சிறப்பும்மை, உயர்வுசிறப்பும்மை), ஐயவும்மை, எதிர்மறையும்மை, முற்றும்மை, எண்ணும்மை, தெரிநிலை உம்மை (ஆயும்நிலை உம்மை), ஆக்கவும்மை என்ற அவ் எட்டும் 'உம்மை' வகைகளாகும். எச்சவும்மையை இறந்தது தழீஇய எச்சவும்மை நாட்டியமும் நடந்தது), எதிரது தழீஇய எச்சவும்மை என்றும் கடை உண்டு - நாளையும் உண்டென்பதைச் சுட்டும்) என இரண்டுவகைப்படுத்துவர். 'கடிதமும் வந்தது' - பணமும் உடன் வந்ததை உணர்த்தும்போது, பொதுப்பட எச்சவும்மை எனலாம். சிறப்பு - மிகுதி யானைக்கும் அடிசறுக்கும் - உயர்வுசிறப்பும்மை. நாயும் பிழைக்கும் பிழைப்பு - இழிவு சிறப்பும்மை. அவன் பணத்தை எடுத்தாலும் எடுத்திருப்பான் - ஐயம். சிலசமயம் தாய் மகனைத் திட்டுவதும் உண்டு - எதிர்மறை உம்மை. முத்தமிழும் முழங்கின - முற்றும்மை. காயும் கறியும், பாலும் பழமும் - எண்ணும்மை. தெரிநிலை - ஆராய்தல் அது தேங்காயாகவும் இருக்கலாம்; இளநீராகவும் இருக்கலாம் - தெரிநிலை கண்டாலும் இனிமை தரும். பார்த்தாலும் பசிதீரும் - ஆக்கம்.

### *'ஓ' இடைச் சொல்*

**பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை**
**தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ**
**இருமூன்று என்ப ஓகா ரம்மே. (741)**

ஓகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை,

சிறப்புடன் கூடி,. ஆறு பொருள்களில் வரும் என்பர். 'யானோ தேறேன்' (நம்பமாட்டேன்) – பிறராயின் நம்பக்கூடும். நானோ நம்பமாட்டேன் எனும் பொருள்தரும். இது பிறரிற் பிரித்தலின் பிரிநிலை. அவன் வந்தானோ? – வினா. யானோ கள்வன் – எதிர்மறை (யான் கள்வனல்லன் என வலியுறுத்துவது). ஒழியிசை – சொன்னதை வைத்துச் சொல்லாதொழிந்தவற்றைக் குறிப்பாலுணர்த்துவது. 'காதலோ இது' – காதலன்று என்பது மட்டுமன்று; இது காமம், ஏமாற்று என உணர்த்தல். அவனோ இவனோ நாம் நேற்றுப் பார்த்தவன் – தெரிநிலை (ஆராய்ச்சி). ஓஒ இதுவன்றோ இசை – சிறப்பு (மிகுதி, உயர்வு)

*'ஏ' இடைச்சொல்*

**தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே**
**ஈற்றசை இவ்வைந்து ஏகா ரம்மே. (742)**

ஏகார இடைச்சொல் தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை என இவ் ஐந்து பொருள்களில் இடம் பெறும். தேற்றம் – தெளிவு, உறுதி, ஈற்றசை – செய்யுளிறுதியில் அசையாய் வருவது. நன்மை செய்தால் நன்மையே விளையும் – தேற்றம். நீயே இதுசெய்தாய்? என முன்பு வினவினர் (இன்று 'நீயோ' எனக் கேட்கிறோம்). இவ்வகுப்பில் சிறந்த மாணவன் முருகனே – பிரிநிலை. நிலனே நீரே தீயே வளியே வானே என எண்ணுதல் வேண்டும். இச்சூத்திரத்தில் 'ஈற்றசை இவ்வைந் தேகா ரம்மே' என, இறுதியில் வந்துள்ள 'ஏ' – ஈற்றசையாகும்.

*என இடைச்சொல்*

**வினையே குறிப்பே இசையே பண்பே**
**எண்ணே பெயரொடு அவ்வறு கிளவியும்**
**கண்ணிய நிலைத்தே என என் கிளவி. (743)**

'என' என்னும் இடைச்சொல் வினை குறிப்பு இசை பண்பு எண் பெயர் என்னும் அவ் ஆறு சொற்களையும் சார்ந்து பொருள் உணர்த்தும் சொல்லாதற்கருத்துடையதாகும். கொள்ளெனக் கொடுத்தான் – வினை. 'பொள்ளென ஆங்கே, புறம்வேரார்' – விரைவுக் குறிப்புளது. 'சரேல் எனப் பாய்ந்தான்' – பாய்ந்த ஓசைக்குறிப்புளதால் இது 'இசைப் பொருண்மை' உடையதாகும். கருப்பெனத் தெரிந்தது – பண்பு. நிலனென நீரென – எண். 'அழுக்காறு என ஒருபாவி' – பெயர்.

**என்று இடைச்சொல்**

**என்று என் கிளவியும் அதனோ ரற்றே. (744)**

'என்று' என்ற இடைச்சொல்லும் என என்பதுபோல, அவ் ஆறு சொற்களையும் சார்ந்து பொருளுணர்த்தும் கருத்துடையதாகும். 'என்று சொன்னான்' – வினை. விண்ணென்று தெறித்தது – கடுமைக்குறிப்பு. ஓவென்று கதறினான் – இசை (ஒலி). கறுப்பென்று தவிர்த்தான் (பண்பு), ஆண் என்று பெண் என்று – எண். கபிலர் என்று ஒரு பெரும்புலவர் – பெயர்.

*சில சிறப்பு விதிகள்*

*தில் இடைச்சொல்லுக்குச் சிறப்புவிதி*

**விழைவின் தில்லை தன்னிடத்து இயலும்.** **(745)**

'தில்'லைச் சொல் உணர்த்தும் விழைவு காலம் ஒழியிசை எனும் மூன்று பொருள்களில் (738). விழைவுபொருள், தன்மை இடத்தில் மட்டுமே வரும். 'பெறுகதில்' – யான் பெறவிழைகிறேன். ஏனைய காலம், ஒழியிசை இரண்டும் எல்லா இடத்திற்கு வரும் என்பதும் பெறப்படும்.

*ஏ ஓ இடைச்சொற்களுக்கு சிறப்பு விதி*

**தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்**
**அளபின் எடுத்த இசைய என்ப.** **(746)**

தெளிவு (தேற்றம்) உணர்த்தும் ஏகார இடைச் சொல்லும், சிறப்பு (மிகுதி உணர்த்தும் ஓகார இடைச்சொல்லும் அளபெடையாக நீட்டி ஒலிக்கும் ஓசையையுடைய என்பர். தெளிவு – தேற்றம். அளபின் எடுத்த – அளபெடுத்த. இசைய – ஓசையினையுடைய வாய்மையேஎ வெல்லும். இதுவன்றோஒ ஓவியம் – (ஒப்புநோக்குக. சூ. 275, 290; 272, 273; 741, 742)

*ஒரு பொருளுணர்த்தும் இடைச்சொற்கள்*

*மற்று இடைச்சொல் உணர்த்தும் பொருள்*

**மற்று என் கிளவி வினைமாற்று அசைநிலை**
**அப்பால் இரண்டென மொழிமனார் புலவர்.** **(747)**

மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்று, அசைநிலை என அப்பகுதிப்பட்ட இரண்டாகுமெனப் புலவர் மொழிவர். வினைமாற்று – முன்செய்கின்றது ஒழிய இனிய வேறு ஒன்று செய்வோம் என வினையை மாற்றுதல். 'மற்றறிவாம் நல்வினை' – இப்போது செய்வது நடக்கட்டும், பிறகு நல்வினை செய்வோம் எனல். வினையை மாற்றுவதற்கண் வருவதிது. 'அதுமற் றவலம் கொள்ளாது' என்பதில் மற்று, பொருளின்றி அசைநிலையாய் நின்றது.

அசைநிலை பொருளற்றதாதலின், மற்று ஒருபொருள் தருவதென்பது பொருந்தும்.

### *எற்று இடைச்சொல் உணர்த்தும் பொருள்*

**எற்று என் கிளவி இறந்த பொருட்டே. (748)**

'எற்று' என்னும் சொல், 'ஒன்று கழிந்து போய்விட்டது' என உணர்த்தும் பொருளதாகும். 'எற்றே என் அழகு!' என, அழகுகெட்டுப்போனதை உணர்த்துவர். இறந்த பொருட்டு - இறந்தது, கழிந்தது, போய்விட்டது என்னும் பொருளையுடையது.

### *மற்றையது எனும்சொல் பொருளுணர்த்தும் முறை*

**மற்றையது என்னும் கிளவி தானே**
**சுட்டுநிலை ஒழிய இனங்குறித் தன்றே. (749)**

'மற்றையது' என்னும் சொல், ஒருவன் முன்னர்ச்சுட்டிய பொருள் ஒழிய அதற்கு இனமான பொருளைக் குறித்துவரும். 'மற்றையது எங்கே?' என்றால், சோடியாய் இருந்ததில் ஒன்றொழிய, அதன் இனமான பிறிதொன்றைப் பற்றி வினவுவதாகும். கைகேயியிடம் தயரதன் 'மற்றையது ஒன்றும் மறவென்றான்' என்பது கம்பர் காப்பியம். கேட்ட இருவரங்களுள் ஒன்றைத் தருகிறேன்; மற்றையதாகிய இராமன் காடேக வேண்டுமென்பதை விட்டுவிடு என்றான் தயரதன்.

### *மன்ற என்னும் சொல் உணர்த்தும் பொருள்*

**மன்ற என் கிளவி தேற்றம் செய்யும். (750)**

'மன்ற' என்னும் சொல் தெளிவுப்பொருளை உணர்த்தும். தேற்றம் - தெளிவு. உறுதி. 'நீ மடவை மன்ற!' (நீ நிச்சயமாக முட்டாளேதான்.)

### *தஞ்சம் என்னும் சொல் உணர்த்தும் பொருள்*

**தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே. (751)**

தஞ்சம் எனும் சொல் எளிது என்னும் பொருளுடையது. எண்மை எளிமை. பொருட்டு – பொருளுடையது. 'முரசு கெழுதாயத்து அரசோ தஞ்சம்' – அரசைக் கொடுப்பது எளிது என்றவாறு.

### *அந்தில் எனும்சொல் உணர்த்தும் பொருள்*

**அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென்று**
**ஆயிரண் டாகும் இயற்கைத் தென்ப. (752)**

அந்தில் எனும் இடைச்சொல் ஆங்க என்னும் பொருளிலும் அசைநிலையாகவும் வந்து அவ்விரண்டு சொல்வடிவங்களாகும் இயல்புடையதென்பர். ஆங்க - ஆங்கு, அங்கு. 'வருமே, சேயிழை அந்திற் கொழுநற் காணிய' (குறு. 293). 'அந்தில் கச்சினன் கழலினன்' (அகம். 76) முன்னது இடக்குறிப்பு; பின்னது அசைநிலை.

### *கொல் உணர்த்தும் பொருள்*

**கொல்லே ஐயம். (753)**

'கொல்' என்பது ஐயம் உணர்த்தும். 'வருவர்கொல் வாழி தோழி?'.. இது ஐயப்பட்டு வினவுதல்.

### *எல் உணர்த்தும் பொருள்*

**எல்லே இலக்கம். (754)**

எல் என்பது விள்ங்குதற்பொருண்மை உடையதாகும். இலங்குதல் - விளங்குதல். எல்வளை மகளிர் - ஒளிவீசும் வளையணிந்த மகளிர்.

### *'ஆர்' ஈறும் மதிப்புப்பன்மை வினைமுடிபும்*

**இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி**
**பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே. (755)**

ஆர் என்னும் இடைச்சொல், இயற்பெயர்களின் முன்னர் அவற்றைச் சார்ந்து வந்து, உயர்திணைப் பலர்பால் ஈற்றெழுத்தையுடைய வினைச்சொல்லுடன் முடியும். பலர்க்குரி எழுத்து - உயர்திணை பலர்பாலுக்குரிய ரகார ஈறு. சேந்தனார் வந்தார், இலக்குவனார் பேசினார், மு.வரதராசனார் எழுதினார். ஆர் உயர்வுப்பன்மை குறித்தது.

### *'ஆர்' இடைச்சொல் அசைநிலை ஆதல்*

**அசைநிலைக் கிளவி ஆகுவழி அறிதல். (756)**

அவ் 'ஆர்' என்பது அசைநிலைச் சொல்லாகுமிடத்தை அறிந்து கொள்க. 'பெயரினாகிய தொகையுமார் உளவே' (தொல். 551). தொகையும் + ஆர்.

### *ஏ, குரை - சொற்களின் இயல்பு*

**ஏயும் குரையும் இசைநிறை அசைநிலை**
**ஆயிரண் டாகும் இயற்கைத் தென்ப. (757)**

ஏ, குரை என்ற இடைச்சொற்கள் இசைநிறையாயும் அசைநிலையாயும் அவ்விரண்டு பொருள்படும் இயல்பினையுடைய என்பர். 'ஏஎ இஃதொத்தன்' – இசைநிறை. 'பெறலருங் குரைத்தே' – இசை நிறை. 'ஏஎ எனச் சொல்லியது' – அசைநிலை. 'பல்குரைத் துன்பங்கள்' – அசைநிலை. இவை செய்யுளில் பொருளுணர்ச்சியோடு ஓசை நிறைத்தலைக் கருதின் இசை நிறை எனவும், பொருளின்றி அசை நிரப்புதலை முதன்மையாகக் கருதின் அசைநிலை எனவும் கொள்ளப்பட்டன.

### *மா வியங்கோள் அசைச்சொல் ஆதல்*

**மா என் கிளவி வியங்கோள் அசைச்சொல். (758)**

மா எனும் இடைச்சொல் வியங்கோளைச் சார்ந்து அசைநிலையாய் வரும். உண்கமா – உண்பானாக. உப்பின்று, புற்கை உண்கமா கொற்கையோனே.

### *முன்னிலை அசைச் சொற்கள்*

**மியா இக மோ மதி இகும் சின் என்னும்**
**ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல். (759)**

மியா, இக, மோ, மதி, இகும், சின் என்று சொல்லப்பட்ட அவை ஆறும் முன்னிலை அசைச் சொற்களாய் வரும். சின் – இசின் என்பதன் முதற்குறை. முன்னின்றாரை ஏவுமிடத்து இவை பயன்படுவன. அழைக்கவும் பயன்படுவதுண்டு. கேண்மியா, கண்டிக, மொழிமோ, உரைமதி, கண்டிகும், பூண்டிசின்.

### *இகும், (இ) சின் ஏனையிடங்களிலும் வருதல்*

**அவற்றுள்**
**இகுமும் சின்னும் ஏனை இடத்தொடும்**
**தகுநிலை உடைய என்மனார் புலவர். (760)**

அம் முன்னிலை அசைகளுள் இகும், (இ) சின் இரண்டும் முன்னிலையோடு மட்டுமன்றி, ஏனைய தன்மை, படர்க்கை இடத்துச் சொற்களோடும் வரும் தன்மையுடையன என்பர் புலவர். 'கண்டிகும் அல்லமோ', 'என்றிசின் யானே' – தன்மை. 'புகழ்ந்திகும் அல்லரோ'. 'யார் அஃது அறிந்திசினோரரோ' – படர்க்கை.

### *அம்ம சொல்வதைக் கேட்கச் செய்யும்*

**அம்ம கேட் பிக்கும். (761)**

அம்ம என்னும் இடைச்சொல் 'யான் கூறுவதைக் கேள்' எனப் பிறரைத் தன்முகப்படுத்தும். 'அம்ம வாழி! தோழி!' (ஒப்புநோக்குக. 638, 212, 210.)

*ஆங்க உரையசையாகும்*

**ஆங்க உரையசை. (762)**

ஆங்க என்பது உரையாடலிடையே, உரையசையாய் வரும். 'ஆங்க குயிலும் மயிலும் காட்டி' பொருளின்றி நிற்றலின் அசைநிலை ஆயிற்று.

*ஒப்பில் போலி அசைநிலை யாதல்*

**ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும். (763)**

ஒப்புமை உணர்த்தாத 'போலும்' என்னும் சொல்லும் 'ஆங்க' எனும் இடைச்சொல்போல, உரையசையாக வரும். 'இங்கு யாரோ வருகிறார்கள் போலும்'. உவமிக்கவந்ததன்று இது. எனவே 'ஒப்பில் போலி' எனப்படும்.

*அசைநிலைச் சொற்கள்*

**யா கா**
**பிறபிறக்கு அரோபோ மாது என வரூஉம்**
**ஆஏழ் சொல்லும் அசைநிலைக் கிளவி. (764)**

யா கா பிற பிறக்கு அரோ போ மாது எனவரும் அவ் ஏழு சொற்களும் அசைநிலையாய் வரும் இடைச் சொற்களாகும். 'இவளிவட்காண்டிகா', 'நசைபிறக்கொழிய', 'இருங்குயில் ஆலுமரோ', 'தோன்றுவன் மாதோ' என இவ்வாறு இவை செய்யுளுள் அசையை நிரப்பிப் பொருளின்றி நின்றவாறு கண்டுகொள்க.

*பிரிவில் அசைநிலைகள்*

**'ஆக' 'ஆகல்' 'என்பது' என்னும்**
**ஆவயின் மூன்றும் பிரிவில் அசைநிலை. (765)**

ஆக, ஆகல், என்பது என்னும் அம் மூன்று சொற்களும் பிரிவின்றித்தாம் சார்ந்துநின்ற சொல்லின் பொருளையே உணர்த்தும் அசை நிலைகளாம். 'கானம் பாடினே மாக' - பாட என்பதே பொருள். பாடினேம் ஆக என்பன இரண்டும் பாடியதையே உணர்த்தலால், பிரிவின்றி இரண்டும் ஒன்றாய் நின்றன எனக் கருதப்பட்டன. எனவே 'ஆக' அசைநிலை. அருளாய் ஆகலோ கொடிதே - அருளாமை கொடிதென்பதே பொருள். ஆகல் அசைநிலை, 'நீ போனாய் என்பது தெரியும்' - போனது தெரியும் என்பதே பொருள். என்பது அசைநிலை. அவை

தாம் சார்ந்த சொற்களின் பொருளையே சார்ந்து அப்பொருளையே திரும்பவும் உணர்த்தி அவற்றைவிட்டுப் பிரிக்க முடியாதவாறு இணைந்து நிற்றலின் 'பிரிவில் அசைநிலை' எனப்பட்டன.

### *ஔ என்னும் இடைச்சொல் பொருளுணர்த்திய முறைகள்*

**ஈரளபு இசைக்கும் இறுதிஇல் உயிரே**
**ஆயியல் நிலையும் காலத் தானும்**
**அளபெடை நிலையும் காலத் தானும்**
**அளபெடை இன்றித் தான்வரு காலையும்**
**உளவென மொழிப பொருள்வேறு படுதல்**
**குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்.** (766)

மொழி இறுதியில் வராதது எனப்பட்ட ஈரளபு இசைக்கும் 'ஔ' எனும் உயிரானது முற்கூறியவாறு பிரிவில் அசைநிலையாக வரும்போது, அளபெடையாக வரும்போதும், அளபெடாமல் தனித்து வரும்போதும் வெவ்வேறு பொருள்களை உடையதாகும். அவை சொல்லுவானது குறிப்பிற்கு ஏற்ற, ஓசை அழுத்த வேறுபாட்டால் நெறிப்படத்தோன்றும். 'உயிர் ஔ எஞ்சிய இறுதியாகும்' என முன்னர்க் குறித்ததால் (69), ஈண்டு, அதை நினைவுகூர்ந்து, 'இறுதி இல் உயிரே' என்றார். 'ஔஔ' 'ஔஉ', 'ஔ' என்பன. இவை முன்பு களிப்பு, சிறப்பு, வியப்பு, வெறுப்பு முதலிய பொருள்களை உணர்த்திநின்றன போலும். இவை ஆகா ஆகா, ஓகோ, ஊகூம் என்ற வடிவங்களுக்கு நிகராக இவை அன்று வழங்கி இருக்கக்கூடும்.

### *குறிப்புப் பொருள் தருவன*

**நன்றீற்று ஏயும் அன்றீற்று ஏயும்**
**அந்தீற்று ஓவும் அன்னீற்று ஓவும்**
**அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்.** (767)

நன்று என்பதன் ஈற்றில் வரும் 'ஏ' காரமும் (நன்றே),
அன்று என்பதன் ஈற்றில் வரும் 'ஏ' காரமும் (அன்றே),
அந்து என்பதன் ஈற்றில் வரும் ஓ காரமும் (அந்தோ),
அன் என்பதன் ஈற்றில் வரும் ஓ காரமும் (அன்னோ)
அவைபோல்வன பிறவும் குறிப்புப் பொருளை ஏற்கும்.

'மதுவை விழைதல் நன்றே' என்றால் தீது என்ற குறிப்புப்படவும், 'விதி அன்றே ஆட்டுகிறது' என்றால் தவிர்க்க இயலாதென்ற குறிப்புப் படவும், 'அந்தோ மழைவந்ததே', 'அன்னோ என்ன செய்வேன்' என்றால் இரக்கக் குறிப்புப்படவும்

காண்கின்றோம். இவற்றுள் ஏ, ஓ என்பனவே குறிப்புப்பொருள்கள் தரக் காரணமாவன என்பதை உணர்த்த, அவற்றைப் பிரித்தோதினார். ஐயோ, அச்சோ, அம்மா, ஆஆ, ஓஓ, அச்சச்சோ, அம்மம்மா என இன்று வழங்குவனபல காண்க. தொல்காப்பியரே 'அன்ன பிறவும்' என்றாரல்லவா? முன்பு நன்றுநன்று, அன்றுஅன்று, அந்தோஅந்தோ, அன்னோஅன்னோ என்று இவை பிரிவில் அசைநிலைகளாகவும் வழங்கின என்பர்.

### *சிறப்பு விதிகள்*
### *எச்சவும்மையும் எதிர்மறை உம்மையும் தம்முள் மயங்கா*

**எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையும்**
**தத்தமுள் மயங்கும்; உடனிலை இலவே. (768)**

எச்சப் பொருள்தரும் உம்மையும் எதிர்மறைப் பொருள்தரும் உம்மையும் தத்தமக்குள் மயங்கும். ஆனால் அவை ஒருதொடரில் ஒருங்கு நிற்றல் இல்லை.

கண்ணனும் வந்தான், மணிவண்ணனும் வருவான் என்பன எச்சவும்மைகள். கண்ணன் வருவதும் உண்டு; வாராதிருப்பதும் உண்டு என்பன எதிர்மறை உம்மைகள். இவை இரண்டும் ஒருதொடரில் கலந்து நிற்றல் இயலாதென்பதாம். 'கண்ணனும் வருவதும் உண்டு' என்பது பிழையாகும். இதையே 'கண்ணன் வருவதும் உண்டு' எனவும் 'கண்ணனும் வருவதுண்டு' எனவும் சொல்லிப்பாருங்கள்; பொருள் தெளிவுபடும்.

### *எச்சவும்மைக்கு ஒரு சிறப்பு விதி*

**எச்சப்பொருட் கிளவி செஞ்சோ லாயின்**
**பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல். (769)**

எச்சவும்மையால் தழுவப்படும் எஞ்சுபொருட்கிளவி, உம்மையின்றிச் செஞ்சொல்லாக வரின், அதனைப் பிற்படக் கூறற்க; முதலில் கூறுக. எச்சப்பொருட் கிளவி – எச்சத்தை ஏற்கும் சொல். அதாவது முருகனும் என்பதில் உம்மையை ஏற்கும் 'முருகன்' எனும் சொல். செஞ்சொல் – உம்மையில்லாத சொல். முருகன் என்பது செஞ்சொல். முருகனும் என்பதும் உம்மைபெற்ற சொல். இடம் தந்தார்கள், சாப்பாடு போட்டார்கள். அல்லாமல் இடமும் தந்தார்கள், சாப்பாடு போட்டார்கள் என்பது பிழையாம்.

### *முற்றும்மைத் தொகைச் சொல் எச்சப்பொருளும் தருதல்*

**முற்றிய உம்மைத் தொகைச்சொல் மருங்கின்**
**எச்சக் கிளவி உரித்து மாகும். (770)**

முற்றும்மையைப் பெற்றுவரும் தொகைச் சொற்பொருளின் கண் எச்சப் பொருண்மை கோடற்கும் இடமுண்டு. 'பத்தும் கொடாதே' என்றால் சில குறையக் கொடு என முற்றும்மையில் எச்சப்பொருளும் தொக்கி நிற்றல் காண்க.

*ஈற்றசை ஏ ஒருமாத்திரை பெறுதல்*

**ஈற்றுநின்று இசைக்கும் ஏ என் இறுதி**
**கூற்றுவயின் ஓரளபு ஆகலும் உரித்தே. (771)**

செய்யுளிறுதிக் கண் ஈற்றசையாக நின்று ஒலிக்கும் ஏகார இறுதி, செய்யுளை ஒலித்துக் கூறுதற்கண், ஒருமாத்திரை அளபாக நின்று ஒலித்தலும் உண்டு. (இரண்டு மாத்திரையாய் நெடிலாகவும் ஒலிக்கும்; வாசிக்குமிடத்து 'எ' எனக் குறிலாய், ஓரளபுடன் நின்று விடுதலும் உண்டு என்பதாம்.) 'கடல்போல் தோன்றல காடிறந் தோரே' வாயால் ஒலித்துக் கூறுமிடத்து, 'காடிறந்தோரெ' எனக் குறுகி நிற்பதைச் சொல்லிப்பார்க்க.

*உம், என எண்ணிடைச் சொற்கள் இறுதியில்*
*தொகைச்சொல் பெறும் முறை*

**உம்மை எண்ணும் எனஎன் எண்ணும்**
**தம்வயின் தொகுதி கடப்பா டிலவே. (772)**

'உம்' எண்ணிடைச்சொல்லும் 'என' என்னும் எண்ணிடைச் சொல்லும் தத்தமது இறுதிக்கண், தொகைச் சொல் கொடுத்துக் கூறும் கட்டாய முடையனவல்ல. எனவே இறுதித் தொகைச் சொல் கொடுத்தும் கூறலாம்; கொடாமலும் கூறலாம் என்பதாம். தம்வயின் – தத்தம் இறுதிக்கண். தொகுதி - இத்தனை என்னும் தொகைச்சொல். இயல் இசை நாடகம் என்ற மூன்று தமிழும் என்பதில் மூன்று என்பது தொகைச்சொல். இயலும் இசையும் நாடகமும் கற்றான், காயெனக்கறியென இல்லை. இவை தொகைச் சொல் பெறாது வந்தன. இயலும் இசையும் நாடகமும் ஆகிய முத்தமிழும் கற்றான். காயெனக் கறியென இரண்டுமில்லை. இவை தொகைச்சொல் பெற்றுவந்தன.

*ஏ எண்ணிடைச்சொல் இடையிட்டும் வருதல்*

**எண்ணே காரம் இடையிட்டுக் கொளினும்**
**எண்ணுக்குறித் தியலும் என்மனார் புலவர். (773)**

எண்ணிக்கை குறிக்கும் ஏகார இடைச்சொல், சொல் தொறும் வருதலன்றி அங்ஙனம் வாராமல் இடைவிட்டுவரினும் எண்ணும் பொருள் குறித்தே

நடக்குமென்பர் புலவர். மலைநிலம் பூவே துலாக்கோல் அனையர் ஆசிரியர். மலையே நிலமே பூவே துலாக்கோலே எனச் சொல்தொறும் 'ஏ' காரம் வாராமல், பூவே என ஓரிடத்துமட்டும் வந்தாலும் பிறவற்றிலும் வந்ததாகவே பொருள் கொள்ளப்படும்.

*எனா, என்றா எண்ணப்பயன்படுதல்*

**உம்மை தொக்க எனா என் கிளவியும்**
**ஆ ஈ றாகிய என்று என் கிளவியும்**
**ஆயிரு கிளவியும் எண்ணுவழிப் பட்டன. (774)**

'எனவும்' என்பதில் உம்மை மறைந்து 'எனா' என நிற்கும் சொல்லும் ஆ ஈற்றதாகிய என்று என்னும் சொல்லும் (என்றா) ஆக அவ்விருசொல்லும் எண்ணுதற்பொருளினவாம். தேரினர் எனா, களிற்றினர் எனா என எண்ணப்படும். 'ஒப்பும் உருபும் வெறுப்பும் என்றா, கற்பும் ஏரும் எழிலும் என்றா' என்றும் எண்ணப்படும். துன்பம் என்றும் இன்பம் என்றும் இரண்டும் அமைவதே வாழ்க்கை என்றும் எண்ணப்படும்.

*எனா, என்றா, பெயர் மட்டும் வரும் செவ்வெண், ஏ*
*இவை இறுதியில் தொகைச்சொல் பெறுதல்*

**அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்**
**பெயர்க்குரி மரபின் செவ்வெண் இறுதியும்**
**ஏயி னாகிய எண்ணின் இறுதியும்**
**யாவயின் வரினும் தொகையின்று இயலா. (775)**

முற்கூறிய எனா, என்றா என்பவற்றால் வரும் எண் இறுதியும் பெயர்க்குரிய மரபினால் எண்ணப்படும் செவ்வெண் இறுதியும் 'ஏ' காரத்தான் எண்ணப்படும் எண்ணின் இறுதியும் எவ்விடத்து எவ்வாறு வரினும் தொகைச் சொல் இன்றி நடவா. செவ்வெண் - எண்ணிடைச் சொல்பெறாமல் தனிப் பெயர்களாய் எண்ணுப்பொருளில் வருவன. 'மரம் எனா செடியெனா கொடியெனா அவையனைத்தும் அல்லது அவை மூன்றும்' எனவரும். 'ஆண் என்றா பெண் என்றா பலர் என்றா அவை மூன்றும் உயர்திணையாம்' எனவரும். "படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் அரசருள்ஏறு" (குறள் 381) - பெயரடுக்கிய செவ்வெண் தொகைபெற்றது. "வினையே குறிப்பே இசையே பண்பே, எண்ணே, பெயரொடு அவ்வாறு கிளவியும்" (தொல். 743) 'ஏ' யின் ஆகிய எண்ணின் இறுதி தொகைச் சொல் பெற்றுமுடிந்தது.

### *எண்ணும்மைகள் வரும்போது வேற்றுமை உருபு மறைந்துநிற்றல்*

**உம்மை எண்ணின் உருபுதொகல் வரையார். (776)**

எண்ணும்மையின்கண் வேற்றுமை உருபு மறைந்து வருதலை நீக்கமாட்டார்கள். உம்மை எண் – உம்மை பெற்ற எண், எண்ணும்மை இரண்டாம் வேற்றுமை உருபும் ஏழாம் வேற்றுமை உருபும் அவ்வாறு தொக்கு வருவன என உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

யாழும் குழலும் முழவும் இசைத்தனர். யாழையும், குழலையும் முழவையும் என இரண்டாவது உருபு விரிந்து, உம் பெறற்பாலது, அவ்வுருபு தொக்கு முடிந்தது. வீட்டிலும் நாட்டிலும் ஏட்டிலும் காணப்படாத வியப்பு இது. வீட்டின்கண்ணும் நாட்டின்கண்ணும் ஏட்டின் கண்ணும் காணப்படாத வியப்பு இது என வரவேண்டிய கண்ணுருபு தொக்கு நின்றது.

### *வினையில் வரும் உம் ஈறு உந்து எனத்திரிதல்*

**உம் உந் தாகும் இடனுமா ருண்டே. (777)**

'உம்' ஈறு உந்து என விரிந்துநிற்கும் இடமும் உண்டு. 'வினைசெயல் மருங்கில் காலமொடு வருநவும்' (தொல். 735) என்றவாறு உம் ஈறு வினைச்சொல்லில் இறுதிநிலையாய்க் காலங்காட்டுவதாகும். 'இடனுமார் உண்டே' என்பதால் இது அருகிவருமென்பது உணர்த்தப்படுகிறது. ஒலிக்கும் – ஒலிக்குந்து. தண் குரவைச் சீர்தூங்கும் – சீர்தூங்குந்து.

### *வினைச்சொற்களைச் சார்ந்தும் எண்ணிடைச் சொற்கள் இடம் பெறுதல்*

**வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா**
**நினையல் வேண்டும் அவற்றவற் றியல்பே. (778)**

எண்ணிடைச் சொற்கள் பெயரொடு வருதலேயன்றி, வினையொடுவரினும், எண்ணுதலாகிய தம்தன்மையில் மாறுவதில்லை. அவை வருமிடங்களை, அவ்வவற்றின் இயல்பறிந்து ஆராய்ந்து கொள்ளவேண்டும். கண்டும் கேட்டும் உண்டும் உறங்கியும் வாழ்ந்தான். முற்றுவினையிலும் பெயரெச்ச வினையிலும் வாரா என்பதும், வினையெச்சவினையிலும் ஏற்பவற்றில் மட்டும் வருமென்பதும் என இவ்வாறு பொருந்துமிடம் அறிதல் வேண்டுமென்பார் 'நினையல் வேண்டும்' என்றார்.

### என்று, என, ஒடு எண்ணிடைச்சொற்கள் ஒரு தொடரில் ஓரிடத்தே வந்து, பலஇடத்தும் சென்றுசேர்தல்

**என்றும் எனவும் ஒடுவும் தோன்றி**
**ஒன்றுவழி உடைய எண்ணினுட் பிரிந்தே. (779)**

என்று, என, ஒடு என்பன மூன்றும் எண்ணிக்கைப் படுத்திச் சொல்ல வரும்போது ஒரோவழித் தோன்றிப் பிரிந்துசென்று, ஏனைய இடங்களிலும் பொருந்தும் முறைமையுடையன. "பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும்" (குறள். 675) என்று எண்ணும்போது, இடனொடு என்று ஓர் இடத்தில் மட்டும் தோன்றிப் பொருளொடு, கருவியொடு, காலத்தொடு, வினையொடு எனப்பிரிந்து சென்று அனைத்துச் சொற்களோடும் பொருந்திப் பொருள்தருமென்பதாம். இந் நூற்பாவினால் 'ஒடு' என்ற எண்ணிடைச்சொல் ஒன்றும் உண்டென்பது பெறப்பட்டது. சொல்தோறும் எண்ணிடைச்சொல் வரவேண்டுமென்பதில்லை. ஓரிடத்து வரினும் எல்லா இடத்திற்கும் பொருந்தும் என்பதாம். (ஒப்பு நோக்குக சூ. 773)

*புறனடை*

### இடைச்சொற்களுக்குக் கூறியன அல்லாத பொருள்களும் வருதலுண்டு

**அவ்வச் சொல்லிற்கு அவையவை பொருளென**
**மெய்பெறக் கிளந்த இயல வாயினும்**
**வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்**
**திரிந்துவேறு படினும் தெரிந்தனர் கொளலே. (780)**

மேலே இடைச்சொற்கள் பலவற்றைக் கூறி, அவ்வச் சொல்லுக்கு அவையவை பொருளென, வழக்கின்கண் உள்ளமை காட்டி நிலைபெறக் கூறப்பட்டன. அவ்வாறு கூறப்பட்ட தன்மையினவாயினும் அவை வினைச்சொல்லோடும் பெயர்ச்சொல்லோடும் இயைந்து, ஆராயுமாறு தோன்றித் திரிந்து வேறுபட்டு வழக்குமேல் அவற்றையும் நன்கு தெரிந்து பொருந்துமாறு இலக்கணம் கொள்க. 'அதுமன் கொண்க தேரே' – 'மன்' முற்கூறப்பட்ட மூன்றுபொருளும் (737) தவிர்த்து, அசைநிலையாய் வந்தது. 'தேவரே தின்னினும் வேம்பு' என ஏகாரம் சிறப்புக்குறித்து வந்தது. 'இன்று மழைபெய்யும் போலும்' – 'போலும்' ஐயப்பொருளில் வந்தது. பிறவும் இவ்வாறு வருவன எல்லாவற்றுக்கும், வழக்காற்றை அடிப்படையாக வைத்து, ஆராய்ந்து இலக்கணம் கொள்ள வேண்டும்.

### இடைச்சொற்கள் மேலும் பலவுள எனல்

**கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்**
**கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே. (781)**

மேலே எடுத்துச் சொல்லப்பட்டவை தவிர்த்து, வேறு பிற இடைச்சொற்கள் காணப்பட்டாலும் கிளந்து சொல்லப்பட்டவற்றுக்கு இலக்கணம் வகுத்த முறைப்படி ஆராய்ந்து அறிந்து கொள்க. தெய்ய, மாள, ஓரும், அத்தை, தொறு எனவரும் இடைச்சொற்களும் அவற்றின் பொருளும் காண்க. இவை போல்வன மிகப்பலவுள.

# 8. உரியியல்

உரிச்சொல் இலக்கணம் மிக விரிவாகத் தொல்காப்பியத்தில் கூறப்படுகிறது.

**'உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்**
**குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி**
**நெறிப்பட வாராக் குறைச்சொற்கிளவியும்'** (482)

என எழுத்ததிகாரத்திலேயே, உரிச்சொல்லின் இலக்கணம் சுட்டிக்காட்டப்படுகிறது. 'சான்றோன்' என்ற சொல், சால் என்பதன் அடியாகப் பிறந்தது. சால், சால எனும் அடிச்சொற்கள் உரிச்சொல் எனப்பட்டன. இன்று நாம் அடிச்சொல் என்பதையே தொல்காப்பியர் 'குறைச்சொற் கிளவி' என்றார். பெயராகவும் வினையாகவும் இவை வடிவமையக் கூடியன. இவை பெயருக்கும் வினைக்கும் அடைமொழிகளாகவும் வருவன.

உரியியலின் முதற்சூத்திரம் 'உரிச்சொல்லை' நன்கு விளக்குகிறது. உரிச்சொற்களின் அடிப்படை இசை, குறிப்பு, பண்பு என்பன. இசை – சொல்லால் பொருள்தருதல். படர் – படர்வது, பரவுவது என்பதால் நினைப்பு உள்ளத்தில் ஓடுவதையும் பிரிந்து செல்வதையும் சுட்டுமென்றார் தொல்காப்பியர். படர் – பிரிவுத் துன்பத்தைக் குறித்ததும் பொதுவாகத் துன்பத்தைக் குறித்ததும் அதன் நிழற் பொருள்களாய் நீண்டவை. இதனையே 'இசையில் தோன்றுதல்' என்றார். இசைத்தல் – சொல்லுதல், கறுப்பு, சிவப்பு என்பன வெகுளிப் பொருளாயினும், நிறத்துரு உணர்த்துவது குறிப்புப் பொருளேயாகும். 'சிவந்து நோக்கும்வாய்' என்றால், சினந்து பார்க்கும் போது எனப் பொருள்கொள்வதும் குறிப்பினால் பெறப்படுவதாகும். தவச்சிறிது, தடஞ்செவி, நளியிரு முந்நீர் எனப் பண்புணர்த்தும் அடைமொழிகளாயும் வரும். இவை ஒருசொல்லாய் நின்று பல பொருள் தந்தும், பல சொற்கள் ஒரே பொருளைத்தந்தும் இவ்வாறு அருஞ்சொற்களாய், செய்யுள் வ்ழக்கில் பெரிதும் காணப்பட்டனவாதலின், இவற்றைப் பட்டியலிட்டு நூற்றிருபது சொற்களுக்குப் பொருள்தந்துள்ளார். இங்ஙனம் தொல்காப்பியர் நிகண்டுகளின் தோற்றம் வளர்ச்சிக்கும், அகராதிக் கலைக்கும் அடித்தளமிடுகிறார். இறுதியில் சொல்லுக்குப் பொருள் கொள்ளுமாற்றையும், செயற்பொருளை உணர்த்தல் உணர்தல் பற்றியும் அவர் கூறும் திறன்கள் அருமை சான்றன.

பசுமை, வெண்மை என்பன உலகிடைப் பயில வழங்கும் உரிச்சொற்கள். இங்ஙனம் பெருவழக்காய், அனைவரும் அறிந்தவற்றைவிடுத்து, அரியவற்றையே நாம் எடுத்தோதுவதாகத் தொல்லாசான் குறிப்பிடுகிறார். இன்று 'பசுமைப் புரட்சி' என்னும் போது 'பசுமை' குறிப்புப் பொருள் தருதலின் உரிச்சொல்லாகிறது என்பதை உணர்தல் வேண்டும்.

இசை குறிப்பு பண்பு எனும் பொருட்குறியவாதலின் உரிச்சொல் ஆயிற்றென்றும் செய்யுட்கே பெரும்பான்மையும் உரியவாதலின் உரிச்சொல்லாயிற்றென்றும் பெயரையும் வினையையும் சார்ந்து பொருட்குணத்தை விளக்கலின் உரிச்சொல்லாயிற்றென்றும் இவ்வாறு வரும் உரைவிளக்கங்கள் பலவாகும். பெயரையும் வினையையும் சார்ந்து, அவற்றிடையே பொருந்தி வழங்கலின் இடைச்சொல் என்றது போல, பெயர் வினையாய் விரிதற்குரிய அடிச்சொற்களாய், அப்பெயர்ச்சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும் உரிமைபூண்டு அடைமொழிகளாய் நிற்றலின் உரிச்சொல்லாயின என்பதே தொல்காப்பியர் கருத்துக்கு இசைந்த விளக்கமாகும். இதனை,

**'பெயரினும் வினையினும் மெய்தடு மாறி**
**ஒரு சொல் பல பொருட்கு உரிமை தோன்றினும்**
**பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்'**

எனவரும், உரிச்சொல் விளக்கத் தொல்காப்பிய நூற்பாவாலும் தெளியலாம்.

**இயல் கருத்து நிரல்**

**உரிச்சொல் இலக்கணம்**

உரிச்சொல்லினது இயல்பை விரித்துரைக்குமிடத்து, அது இசை குறிப்பு பண்பு ஆகிய மூன்றின் அடிப்படையில் தோன்றும். பெயர் வினை என்ற அவ்விரு சொல்லாதற்கும் உரியதாய்த் தன் வடிவு, பலவிதமாய் மாறி அமையும். ஒரு சொல் பல பொருட்குரியவாயும் பலசொல் ஒரு பொருட்குரியவாயும் வழங்கும். அவற்றுள் பயில வழங்காதவற்றை, பெருவழக்காக வழங்குவனவற்றுடன் சார்த்திப் பொருள் காணவேண்டும். தத்தமக்கு இசைந்த பெயர், வினை ஆகிய நிலைக்களன்களால், ஒவ்வொரு சொல்லுக்குமுரிய வெவ்வேறு பொருள்களை அறிந்து கூறவேண்டும்.

**உரிச்சொல் வகை**

அது வெளிப்படு சொல், வெளிப்பட வராத சொல் என இருவகைப்படும். பொருள் வெளிப்படையாகப் பொருள் அறியப்பட்டுப் பயில வழங்கும் சொற்களை எடுத்துக்கூற வேண்டா. இவ்வியல் வெளிப்படையாகப் பொருளறியப் படாத, அருஞ்சொற்களாம் உரிச்சொற்கள் பற்றியதாகும்.

**உரிச்சொற்களும் அவை உணர்த்தும் பொருள்களும்**

| | உரிச்சொற்கள் | | பொருள் |
|---|---|---|---|
| 1. | உறு தவ நனி (3) | – | மிகுதி |
| 2. | உரு | – | உட்கு, அச்சம் |
| | புரை | – | உயர்வு |
| 3. | குரு, கெழு (2) | – | நிறம் (குரு குரூஉ என்றும் கெழு கேழ் என்றும் செய்யுளுள் திரிந்தும் வழங்கும். ஒளிமிக்க நிறமே இச் சொற்களால் உணர்த்தப்படும்) |
| 4. | செல்லல், இன்னல்(2) | – | இன்னாமை (வருத்தத்தை மிகுவிக்கும் துன்பம்). |
| 5. | மல்லல் | – | வளன் (வளம்) |
| | ஏ | – | பெற்று, பெருக்கம் |
| 6. | உகப்பு | – | உயர்வு, மேன்மேல் உயர்தல். |
| | உவப்பு | – | உவகை, மகிழ்ச்சி |
| 7. | பயப்பு | – | பயம், பயன் |
| 8. | பசப்பு | – | நிறம் (பசலை நிறம், பிரிவால் ஏற்படும் ஒளிமங்கிய தோற்றம்) |
| 9. | இயைபு | – | புணர்ச்சி (கூடுதல், ஒருங்கிணைதல்) |
| 10. | இசைப்பு | – | இசைத்தல் (யாழ் இசைத்தல்) |
| 11. | அலமரல், தெருமரல் (2) | – | சுழற்சி (சுழலுதல், மனத்தடுமாற்றம்) |
| 12. | மழ, குழ (2) | – | இளமை. (மழகளிறு, குழக்கன்று) |
| 13. | சீர்த்தி | – | மிகுபுகழ் |
| | மாலை | – | இயல்பு (இரவல் மாலையன் இரக்கும் இயல்புடையான்) |

| | | | |
|---|---|---|---|
| 14. | கூர்ப்பு, கழிவு (2) | – | உள்ளது சிறத்தல் (முன்பு உள்ள தொன்றன் மிகுதி. இவை கூர், கழி என வழங்கும்.) |
| 15. | கதழ்வு, துனைவு (2) | – | விரைவு (கதழ்பரி, துனைபரி) |
| 16. | அதிர்வு, விதிர்ப்பு (2) | – | நடுக்கம் (அதிர்ந்து போதல், விதிர்விதிர்ப்பு) |
| 17. | வார்தல், போகல், ஒழுகல் (3) | – | நேர்பு (நேர்மை, நேரானது, வரிசை, ஒழுங்கு), நெடுமை (நீண்டது). (வார்மணல் – நீண்ட மணல்வெளி, போகு கொடி மருங்குல் – ஒழுங்கான கொடிபோலும் இடை. வாழை ஒழுங்கு – வாழை வரிசை) |
| 18. | தீர்தல், தீர்த்தல் (2) | – | விடுதல், நீங்குதல், நீக்குதல், பிரிதல். ('துணையில் தீர்ந்த கடுங்கண் யானை'. துணையைப் பிரிந்த என்பதாம்.) |
| 19. | கெடவரல், பண்ணை | – | இன்ப விளையாட்டு. (கெடவரல் ஆயம் – ஆடிப்பாடும் தோழியர் கூட்டம்.) |
| 20. | தட, கய, நளி | – | பெருமை, பெரிது. (தடக்கை, கயவாய், நளிமலை) |
| | தட | – | கோட்டம், வளைவு (தடமருப்பு எருமை) |
| | கய | – | மென்மை. (கயந்தலை மடப்பிடி) |
| | நளி | – | செறிவு (நளியிரு முந்நீர்) |
| 21. | பழுது | – | பயமின்று (பயன் இல்லை). (வாழ்க்கை பழுதானது) |
| 22. | சாயல் | – | மென்மை (சாயல் அழகு – மென்மை தவழும் அழகு) |
| 23. | முழுது | – | எஞ்சாமையைக் குறிக்கும். அனைத்தும் என்பதாம். (உலகு முழுதாண்டான்.) |
| 24. | வம்பு | – | நிலையின்மை, நிலையில்லாமையைக் குறிக்கும். (வம்பப் பரத்தையர் – நிலையற்ற மனமுடையார்.) |

| | | | |
|---|---|---|---|
| 25. | மாதர் | – | காதல் (அன்பு, நேயம்.) (மாதர்கொள் மானோக்கு) |
| 26. | நம்பு, மேவு (2) | – | நசை, விருப்பம். இன்று நம்புதல் உண்மை என ஏற்பதைக் குறிக்கிறது. மேவுதல் – விரும்புதல். |
| 27. | ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய் (4) | – | உள்ளதன் நுணுக்கம் முன்பு உள்ளதொன்று மேன்மேலும் நுணுகுதல். (ஓய்தல் – கொஞ்சம் கொஞ்சமாக நிலை தளர்தல். ஆய்தல் – மேன்மேலும் நுணுகுதல்.) |
| 28. | புலம்பு | – | தனிமை (புலம்பு மணித்தாலி – மணி ஓசை தனித்து ஒலிப்பது.) தனிமையில் வருந்துதலும் அழுதலும் புலம்புதல் எனப்பட்டன. |
| 29. | துவன்று | – | நிறைவு ('ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்' – நிறைந்த என்பதாம்.) |
| 30. | முரஞ்சல் | – | முதிர்வு (முரஞ்சிய – முதிர்ந்த) |
| 31. | வெம்மை | – | வேண்டல், விரும்புதல். (நீ வெய்யோள் – நீ விரும்பியவள்.) |
| 32. | பொற்பு | – | பொலிவு, அழகு. (பொற்புடையாள் அழகுடையாள்) |
| 33. | வறிது | – | சிறிது (வறிது வடக்கு இறைஞ்சிய சீர்சால் வெள்ளி – சிறிது வடக்கே சாய்ந்த வெள்ளி.) |
| 34. | எற்றம் | – | நினைவு, துணிவு. (எற்றி – நினைத்து) |
| 35. | பிணை, பேண் (2) | – | பெட்பு, (பெட்பு – புறந்தருதல், விரும்புதல், போற்றுதல்) பேணுதல். பிணை – விருப்புக்குரியது. பெண் இதிலிருந்து பிறந்த சொல். |
| 36. | பணை | – | பிழைத்தல் (பிழையாதல்), பெருத்தல் (பெரியது), (பணைத்தோள் – பெரியதோள், பருமனானது) |

| | | |
|---|---|---|
| 37. படர் | - | உள்ளுதல்(நினைத்தல்), செல்லுதல். உள்ளம் படர்ந்த நெறி – மனம் போன வழி.) |
| 38. பையுள், சிறுமை (2) | - | நோய், துன்பம். (பையுள் மாலை, சிறுமை உறுதல் – துன்புறுதல்.) |
| 39. எய்யாமை | - | அறியாமை. (எய்யாமை எல்லா அறமும் தரும் – குறள் 296. அவன் அறியாமலே அனைத்து அறப்பயன்களையும் கொடுக்கும்.) |
| 40. நன்று | - | பெரிது (நன்றும் அரிதுற்றனை.– பெரிதும் அரிய காரியத்தைச் செய்தாய்.) |
| 41. தா | - | வலிமை, வருத்தம். (தாக்கலை – வலிமையுடைய கலைமான்.) |
| 42. தெவு | - | கொள்ளுதல். (அருஞ்சொல்) |
| 43. தெவ்வு | - | பகை. (தெவ்வர் – பகைவர்) |
| 44. விறப்பு, உறப்பு, வெறிப்பு (3) | - | செறிவு. (சுங்கப் பாடலில் வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன் என, வெறுத்த என வழங்குகிறது.) |
| விறப்பு | - | வெரூஉ, அச்சம் (அருஞ்சொல்.) |
| கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் (4) | - | அரவம், ஆரவாரம், பேரோசை (கம்பலை மூதூர் – ஆரவாரம் மிக்க பழைய ஊர்) |
| 45. அழுங்கல் | - | இரக்கம், கேடு |
| 46. கழுமு | - | மயக்கம் (கலத்தல்). கழுமிய ஞாட்பு – படைகள் கலந்து மயங்கிப் போர் செய்தல். |
| 47. செழுமை | - | வளம், கொழுப்பு. (செழும்பல் குன்றம்) |
| 48. விழுமம் | - | சீர்மை, சிறப்பு, இடும்பை (விழுப்புண் – வீரத்தால் போரில் ஏற்பட்ட புண்.) |
| 49. கருவி | - | தொகுதி. (கருவி வானம் – மேகம் இடி மின்னல் கூடிய வானம்.) |
| 50. கமம் | - | நிறைவு. (கமஞ்சூல் – நிறைந்த கருப்பம்) |

| | | | |
|---|---|---|---|
| 51. | அரி | – | ஐம்மை, நொய்ம்மை, மென்மை. (அரிமயிர் – மென்மையான நுண்ணிய மயிர்) |
| 52. | கவவு | – | அகத்திடுதல், தழுவுதல். (கவவுக்கை – தழுவியகை) |
| 53. | துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல் (4) | – | இசைத்தல் வகைகள். (வால்வளை துவைப்ப – வெண்சங்கம் ஒலிப்ப.) |
| 54. | இரங்கல் | – | கழிந்த பொருள் பற்றிய துன்பம். (இரங்கற்பா – கையறு நிலைப்பாட்டு) |
| 55. | இலம்பாடு, ஒற்கம் (2) | – | வறுமை. (இலம்பாடு நாணுத்தரும் – வறுமை வெட்கத்தைத் தரும்.) |
| 56. | ஞெமிர்தல், பாய்தல் (2) | – | பரத்தல். (தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து.) |
| 57. | கவர்வு | – | விருப்பு. (கவர்நடைப் புரவி – விருப்பத்தை விளைவிக்கும் நடையையுடைய குதிரை.) |
| 58. | சேர் | – | திரட்சி. (சேர்ந்தாற்போல் இருக்கிறாள் – திரண்டு பருத்துக் காணப்படுகிறாள்.) |
| 59. | வியல் | – | அகலம். (வியன் மார்பு – அகன்ற மார்பு) |
| 60. | பேம், நாம், உரும் (3) | – | அச்சம். (பேஎ முதிர் கடவுள்.) |
| 61. | வய | – | வலிமை (வயக் களிறு) |
| 62. | வாள் | – | ஒளி (வாள்நுதல்) |
| 63. | துயவு | – | அறிவின் திரிபு. (துயவறுதல் – அறிவு தரிதல்) |
| 64. | உயா | – | உயங்கல், வருந்துதல், துயரப்படுதல் (உயா விளி – துன்பத்தை வெளிப்படுத்தும் பறவையின் குரல்.) |
| 65. | உசா | – | சூழ்ச்சி. (சூழுதல் – கலந்து ஆலோசித்தல். உசாத்துணை – அடிக்கடி கலந்து பேசக்கூடிய துணை.) |
| 66. | வயா | – | வேட்கைப் பெருக்கம். (மாங்காய் தின்பதில் கருக்கொண்ட மகளிர் ஆசைவைப்பது 'வயா' எனப்படும்.) |

67. கறுப்பு, சிவப்பு (2). - வெகுளி, கடுஞ்சினம் நிறவேறுபாட்டையும் குறிக்கும்

68. நொசிவு, நுழைவு, நுணங்கு (3)- நுண்மை. (நுழைபுலம் – நுட்பமான அறிவு)

69. புனிறு - ஈன்றணிமை (புனிற்றா – கன்று போட்ட பசு.)

70. நனவு - களன் (ஆடுகளம்), அகலம். (நனவுப் புகுவிறலி – ஆடுகளமாம் மேடையில் புகும் விறலி. நனந்தலை உலகம் – பரந்த இடத்தையுடைய உலகம்.)

71. மதவு, மத - மடன் (இளமை), வலிமை. (மதவு நடைப்பசு – இளமை பொருந்திய நடையுடைய பசு.)

மத - மிகுதி, வனப்பு

72. யாணர் - புதிய வருவாய். (யாணர் ஊர)

73. அமர்தல் - மேவல், (விரும்பிச் சேர்தல்) அகன் அமர்ந்து – மனம் விரும்பி

74. யாண் - கவின் (கவர்ச்சிமிக்க அழகு)

75. பரவுதல், பழிச்சுதல் (2) - வழுத்துதல், வாழ்த்தி வழிபடுதல். (கடவுளைப் பரவுதல்)

76. கடி - வரைவு (நீக்குதல்), கூர்மை (கடிநுனை), காப்பு (கடிமரம் – காவல்மரம்), புதுமை (கடிஉண் கடவுள் – புதிய பலி உண்ணும் தெய்வம்), மிகுதி (கடுங்கால் – கடிய காற்று), சிறப்பு (கடுநட்பு), அச்சம் (கடும்பேய்), முன்தேற்று – தெய்வத்தின்முன் சத்தியம் செய்தல் (கடுஞ்சூள்.)

கடி - ஐயம், கரிப்பு (காரச்சுவை). (கடுத்தல் – ஐயப்படுதல். கடிமிளகு – காரம் மிக்கது.)

77. ஐ - வியப்பு. (ஐ – ஒலிக்குறிப்பாய் வியப்பதுண்டு.)

| | | | |
|---|---|---|---|
| 78. | முனைவு | - | முனிதல் (சினத்தல், வெறுத்தல்.) (முனைஇய - வெறுத்து) |
| 79. | வை | - | கூர்மை (வைந்துனை) |
| 80. | எறுழ் | - | வலிமை (உடல் வலிமை) (ஏறுழ்த் திணிதோள்) |

**உரிச்சொற் பொருளை அறியும் முறைகள்**

வழக்கிடை உளவாய் இதுகாறும் விரித்துரைக்கப்பட்ட உரிச்சொல் எல்லாம் முன்னும் பின்னும் வருகின்ற சொற்களைக் கொண்டு சிந்தித்தும், அவற்றிற்குப் பொருந்திய சொற்களைச் சார்த்தி உணர்த்தியும் தத்தமது மரபுக்கேற்ற பொருளறியப்பட வேண்டும்.

**உரிச்சொற்களுக்கு முன் கூறியவை தவிர்த்து வேறு பொருளும் தோன்றக் கூடுமெனல்**

முன்னே கூறிய பொருள்களேயல்லாமல், உரிச்சொற்களுக்கு மேலும் பிற பொருள்களும் தோன்றக்கூடும். அவற்றையும் முன் சொல்லப்பட்டவற்றோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். (புலம்பு - புலம்புதல். தனித்து அழுதல் அல்லது துணையை இழந்து அழுதல். வம்பு - புதுமை. இவ்வாறு சங்க காலத்திலேயே பொருள் வளர்ச்சி கண்டவை பல.)

**சொற்களுக்குப் பொருள் கொள்ளும் முறை**

சொல்லுக்குச் சொல்லப்பட்ட பொருளுக்குப் பொருளென்ன என்று இவ்வாறே ஆராய்ந்து சென்றால் அது எல்லையற்றுப் போகும். (மழ - இளமை. இளமைக்குப் பொருளென்ன என மேலும் மேலும் தொடங்கினால் எல்லையற்றுப் போகும்.)

**உணர்த்தும் திறன்**

உணர்த்துவோன் திறமையோடு உணர்த்த வல்லனாயின், கேட்போனுக்குத் தான் கேட்ட அப்பொருட்கண் மயக்கமுண்டாகாது.

**உணரும் திறன்**

பொருளை உணர்தலுக்கான வழி, உணர்வோர்தம் அறிவு வலிமையைப் பொறுத்தது.

**சொல்லுக்குப் பொருளமைந்த காரணம்**

எல்லாச் சொற்களுக்கும் பொருளுண்டு. அங்ஙனம் இச்சொல்லுக்கு இப்பொருள் எவ்வாறமைந்தது என்ற காரணம் முழுதும் விளங்கத் தோன்றாது. தோன்றாதாயினும் காரணம் உண்டென்பதாம்.

**உரிச்சொல் முதனிலை, இறுதிநிலைகளாய்ப் பிரிந்து நில்லாது**

உரிச் சொற்கள் முதனிலை, இறுதிநிலைகளாய் எழுத்துப் பிரிந்து நின்று, பொருளுணர்த்துதல் இயல்பன்று.

**புறனடை**

**சொன்னவைகொண்டு சொல்லாதவற்றை உணர்க எனல்**

இதுகாறும் கூறப்பட்டவையல்லாத, இவைபோல்வனவாய்ப்பிறவும் பலதிறப்படப் பரந்துபட்டு வரும் உரிச்சொற்களுக்கு எல்லாம் பொருள்கூற முயன்றால், அவை உருவாகி வரும் முறையில் இத்தனை என அறியும் எல்லை உடையனவல்ல. எனவே, இங்குக் கூறப்பட்ட வழிமுறையை நன்கு கடைப்பிடித்து, காப்புணர்வோடு போற்றிக் கூறப்பட்ட விதிமுறைகளின் இயல்புப்படி, தெளிவுபட அறிந்துகொள்க என்று கற்றறிந்த புலவர் கூறுவர்.

# உரியியல்

## உரிச்சொல்லின் பொது இலக்கணம்

**உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை**
**இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்**
**பெயரினும் வினையினும் மெய்தடு மாறி**
**ஒருசொற் பலபொருட்கு உரிமை தோன்றினும்**
**பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்**
**பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்**
**தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்**
**எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்.** (782)

உரிச்சொல்லாகிய சொல்லினதியல்பை விரித்து விளக்குமிடத்து, அஃது இசையின்கண்ணும் குறிப்புப் பொருளின் கண்ணும் பண்பின்கண்ணும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றும். பெயர்போலவும் வினைபோலவும் அமைந்து, அவ்விரு சொல்லாதற்கும் உரியதாய்த் தன் வடிவு தடுமாறும். ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் என்பதேயன்றி, ஒருசொல் பலபொருளுக்குரிமையுடையதாயும் பலசொல் ஒருபொருட்குரிமையுடையனவும் வரும். வழக்குப் பயிற்சி மிகுதியாக இல்லாதவற்றை, வழக்குப்பயிற்சி மிக்கவற்றுடன் வைத்து அவற்றின் இயல்பையும் பொருளையும் உய்த்துணர வேண்டும். அச்சொற்கள், தத்தமது இயல்புப்படி, தாம் சென்று இயைந்து நிற்கும் பெயரும் வினையுமாகிய நிலைக்களன்களால், நேர்பொருளேயன்றி நிழற்பொருளும் தந்து பொருள்வேறுபடும். இங்ஙனம் உரிச்சொல் யாதாயினும், இடமறிந்து அதன் பொருளை அறிந்து கூறவேண்டும். இசை - மொழி செவிப்புலனாவது; ஆதலின் ஓசை அடிப்படையிலும் சொற்கள் தோன்றும். சொல் உச்சரிக்கப்படுதலால் அதன் பொருள் வெளிப்படுதலை இசை என்றார். (இசைத்தல் - சொல்லுதல்) குறிப்பு - உய்த்துணருமாறு பொருள் குறிப்பாக அமைந்திருக்கும். பண்பு - நிறப்பண்பு, குணப்பண்பு, தொழிற்பண்பு எனப் பலவகைப் பண்புகளின் அடியாக வருதல். மெய்தடுமாறி - பெயர் போலவும் வினைபோலவும் அமைந்து பெயராய் விரிக்கவும் வினையாய் விரிக்கவும் இடந்தருமாறு அடிச்சொல் வடிவம் அமைந்திருத்தல். கறுப்பு, சிவப்பு என்பன சினத்தைக் குறிக்கவரும்

உரிச்சொற்கள். அவை நிறத்தைக் குறிப்பது நிழற்பொருள். நிறத்தைக் குறிக்கும் நேர்ச்சொல் 'கருப்பு' என்பதே.

### *உரிச்சொல் வகை*
### *வெளிப்படு சொல்லும் வெளிப்படவாராச் சொல்லும்*

**வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா;**
**வெளிப்பட வாரா உரிச்சொல் மேன. (783)**

உரிச்சொற்களில் பொருள் வெளிப்படப் பலரறியப் பயின்று வழங்கும் சொற்களை, இங்கு எடுத்துக்கூறவேண்டியதில்லை. எனவே இங்கு கிளக்கப்படுவன, அங்ஙனம் வெளிப்படப்பயின்று வழங்காத, பொருளறிய வாரா உரிச்சொற்கள் பற்றியனவாம். அருஞ்சொற்கள் என்பதும் அரிதாகக் குறிப்புப் பொருள் தருவன என்பதும் கருத்து.

### *தனி உரிச்சொற்களும் அவற்றின் பொருள்களும்*
### *உறு தவ நனி – மிகுதி*

**அவைதாம்,**
**உறுதவ நனியென வரூஉம் மூன்றும்**
**மிகுதி செய்யும் பொருள என்ப. (784)**

அவ்வாறு வெளிப்படையாகப் பொருள்தராத சொற்களுள் உறு, தவ, நனி எனவரும் மூன்று சொற்களும் மிகுதிப் பொருளுணர்த்துவன என்பர். உறுபொருள் – மிக்கபொருள். தவப்பல – மிகப்பல. நனிசிறந்தது – மிகச்சிறந்தது.

### *உரு – உட்கு, புரை – உயர்வு*

**உருஉட் காகும்; புரைஉயர் வாகும். (785)**

உரு எனும் சொல் அச்சம் எனப் பொருள்படும். புரை – உயர்வு ஆகும். 'உருகெழுகடவுள்' – அச்சம்தரும் கடவுள். மிகவும் மதிக்கப்படும் இடத்தில் தோன்றும் அச்சமே 'உரு' எனப்படும். 'புரைய மன்ற புரையோர் கேண்மை' (நற்.) – உயர்ந்தோர் நட்பும் உயர்ந்ததாகும்.

### *குரு, கெழு (கேழ்) – நிறம்*

**குருவும் கெழுவும் நிறனா கும்மே. (786)**

குரு, கெழு என்பன நிறத்தைக் குறிக்கும். ஒளிமிக்க நிறமே குரு, கெழு எனப்படும். 'குரூஉப்புனல் உந்தி' (மதுரைக் – 245) நிறத்தையுடைய நீரை

தள்ளி. குரு செய்யுளில் குரூஉ என நீண்டது. 'ஒண்கேழ் நூற்றிதழ் அலரி' (புறம். 27) ஒளிபொருந்திய நிறத்தையுடைய நூறு இதழ்களையுடைய தாமரைப்பூ. கெழு, கேழ் என நீண்டது.

### *செல்லல், இன்னல் – இன்னாமை*

**செல்லல் இன்னல் இன்னா மையே. (787)**

செல்லல், இன்னல் என்பன இன்னாமை எனும் பொருளின. வருத்தத்தை மிகுவிக்கும் துன்பமே இன்னாமையாகும். 'மணங்கமழ் வியன்மார்பு அணங்கிய செல்லல்' (அகம். 22). 'வெயில் புறந்தரூஉம் இன்னல் இயக்கத்து' (மலைபடு. 374)

### *மல்லல் – வளம். ஏ – பெற்று (பெருக்கம்)*

**மல்லல் வளனே; ஏபெற் றாகும். (788)**

மல்லல் வளம் எனும் பொருளதாகும். ஏ, பெற்று எனும் பொருளதாகும். 'மல்லல் மால்வரை' (அகம். 52). பெற்று - பெருக்கம். 'ஏகல்லடுக்கம்'. 'ஒரேஎ மழை', 'ஒரேஎ கல்லடுக்கம்' என்பதை முன்பு 'ஏ' எனத் தனித்துக் கூறியிருப்பர் போலும். (பெற்று - பெற்ற பெருமாள் - பெத்த பெருமாள் - பெரிய பெருமாள். தெலுங்கில் வழங்கும் சொல்.)

### *உகப்பு – உயர்வு. உவப்பு – உவகை*

**உகப்பே உயர்தல்; உவப்பே உவகை. (789)**

உகப்பு - உயர்வு. மேலே மேலே உயர்தல். உவப்பு - உவகை, மகிழ்ச்சி. பறவை விசும்புகந்து ஆடும். உவந்து வந்தனன்.

### *பயப்பு – பயன்*

**பயப்பே பயனாம். (790)**

பயப்பு - பயன் எனப் பொருள்படும். 'ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே' (குறள் 354)

### *பசப்பு – நிறம்*

**பசப்பு நிறனாகும். (791)**

பசப்பு - நிறத்தைக் குறிக்கும். பசலை நிறம் பிரிவால் ஏற்படுவது. 'மையில் வாண்முகம் பசப்பூரும்மே' (கலி. 7)

*இயைபு – புணர்ச்சி*

**இயைபே புணர்ச்சி.** (792)

இயைபு – புணர்ச்சி அதாவது ஒருங்கிணைதல், கூடுதல், ஒன்றையொன்று சார்தல் எனப் பொருள்படும். அவளோடு இயைந்த நட்பு. இயல்களிடையேயுள்ள இயைபு. இயைபுத்தொடை, இறுதி ஒன்றி வருவது, இங்கே அதன் நிழற்பொருள் புணர்ச்சி ஆனது.

*இசைப்பு – இசை*

**இசைப்புஇசை யாகும்.** (793)

இசைப்பு – இசைத்தல் ஆகும். யாழ் இசைத்தல். 'வாயிலில் தோன்றி யாழ் இசையூஉப் புக்கு'.

*அலமரல், தெருமரல் – சுழற்சி*

**அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி.** (794)

அலமரல், தெருமரல் ஆகிய இரண்டும் ஒன்றுமறியாது சுழலுதல், மனத்தடுமாற்றம் எனப்பொருள்படும். 'அலமரல் ஆயம்' (ஐங். 64). 'தெருமரல் உள்ளமொடு அன்னையும் துஞ்சாள்.'

*மழ, குழ – இளமை*

**மழவும் குழவும் இளமைப் பொருள.** (795)

மழ, குழ என்பன இளமையைக்குறிக்கும் பொருளின. 'மழகளிறு (புறம்.38), 'குழக்கன்று' (நாலடி 101).

*சீர்த்தி – மிகுபுகழ், மாலை – இயல்பு*

**சீர்த்தி மிகுபுகழ்; மாலை இயல்பே.** (796)

சீர்த்தி – மிக்கபுகழ். மாலை – இயல்பு. சீர், சீர்த்தி என்பன சிறப்பு, புகழ் எனச்சுட்டுவன. இவன் சீர்த்தி மிகவுடையான். 'இரவரல் மாலையனே' (குறிஞ்சிப். 239) – இரக்கும் இயல்புடையவன். மாலை கழுத்திலணிவதெனில் உரிச்சொல் ஆகாது. இயல்பெனப் பொருள் தருவதே அருஞ்சொல்லாகிய உரிச்சொல்லாகும். இங்கும் வேறு பொருள் தருவதால், 'மாலை' உரிச்சொல் ஆவதைக் காணலாம்.

*கூர்ப்பு, கழிவு (கூர், கழி) – உள்ளது சிறத்தல்*

**கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்.** (797)

கூர்ப்பும் கழிவும் முன்பு உள்ளதொன்றன் மிகுதியைக் குறிக்கும். கூர், கழி என்பனவே கூர்ப்பு, கழிவு எனப்பட்டன. 'துனி கூர் எவ்வம்' (சிறுபாண். 39) 'கழி கண்ணோட்டம்' (பதிற். 22). முன்பு உள்ளதொன்று சிறுகச்சிறுகக் கூடி மிகுவதையும் பெருகுவதையும் கூர்தல் என்பர். கூர்தலறம் - பரிணாமம்.

### *கதழ்வு, துனைவு - விரைவு*

**கதழ்வும் துனைவும் விரைவின் பொருள. (798)**

கதழ்வு, துனைவு என்பன விரைவு எனும் பொருளுடையன. கதழ், துனை என்பனவே கதழ்வு, துனைவு எனப்பட்டன. 'கதழ்பரி நெடுந்தேர்' (நற். 203), 'துனைபரி' (அகம். 9)

### *அதிர்வு, விதிர்ப்பு - நடுக்கம்*

**அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும். (799)**

அதிர்வு, விதிர்ப்பு இரண்டும் நடுக்கம் எனும் பொருளுணர்த்தும். 'அதிர வருவதோர் நோய்' (குறள் 429). 'விதுப்புறவு அறியா ஏமக்காப்பினை' (புறம்.20)

### *வார்தல், போகல், ஒழுகல் - நேர்பு (ஒழுங்கு), நெடுமை*

**வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்**
**நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள. (800)**

வார்தல், போகல், ஒழுகல் (வார், போகு, ஒழுகு) ஆகிய மூன்றும் நேர்மையும் நெடுமையும் காட்டும் பொருளனவாகும். நேர்மை - வரிசை, ஒழுங்கு. நெடுமை - நீட்சி. 'வார்ந்து இலங்கு வை எயிறு' (குறு.14)- வரிசையாய் விளங்கும் கூரியபற்கள். 'போகுகொடி மருங்குல்' - ஒழுங்கான கொடிபோலும் இடை. 'வார்மணல் அடைகரை' (அகம். 34). நீண்ட மணல்வெளி சார்ந்த கரை. 'மால்வரை ஒழுகிய வாழை' (சிறுபாண். 21) - பெரிய மலை மீது வரிசையாய் வளர்ந்திருக்கும் வாழை.

### *தீர்தல், தீர்த்தல் - விடுதல் (நீக்குதல்)*

**தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட் டாகும். (801)**

தீர்தல், தீர்த்தல் இரண்டும் விடுதல், நீக்குதல் எனும் பொருளுடையனவாகும். 'துணையில் தீர்ந்த கடுங்கண் யானை' (நற்.108). துணையை நீங்கிய என்பதால் உரிச்சொல்லாதற்குரித்தாகிறது. தீர்தல் -தன்வினை, தீர்த்தல் - பிறவினை. பசிதீர்த்தல், நோய்தீர்த்தல்.

*கெடவரல், பண்ணை – விளையாட்டு*

**கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு. (802)**

கெடவரல், பண்ணை ஆகிய இரண்டும் விளையாட்டு என்னும் பொருள்படும். விளையாட்டு முன்பு ஆடல் பாடலையும் கூத்து நாடகத்தையும் உள்ளிட்ட இன்ப விளையாட்டைக் குறித்தது. 'கெடவரல் ஆயம்' – ஆடிப்பாடும் தோழியர் கூட்டம். 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்' (தொல்.1195)

*தட, கய, நளி – பெருமை*

**தடவும் கயவும் நளியும் பெருமை. (803)**

தட, கய, நளி என்ற மூன்று சொற்களும் பெருமையை (பெரிது என்பதை) உணர்த்தும். தடக்கை (புறம். 394). கயவாய் (அகம். 118). நளிமலை (புறம். 150).

*தட – கோட்டம்*

**அவற்றுள்,**
**தடவென் கிளவி கோட்டமும் செய்யும். (804)**

அம்மூன்றனுள், தட எனும் சொல் வளைவையும் உணர்த்தும். கோட்டம் - வளைவு. தடமருப்பு எருமை (நற். 120).

*கய – மென்மை*

**கயவென் கிளவி மென்மையும் செய்யும். (805)**

கய எனும் சொல் மென்மையும் குறிக்கும். கயந்தலை மடப்பிடி (நற். 137)

*நளி – செறிவு*

**நளியென் கிளவி செறிவும் ஆகும். (806)**

நளி எனும் சொல் 'செறிவு' எனும் பொருளும் தரும். நளியிருமுந்நீர் (புறம் 66).

*பழுது – பயன்இன்மை*

**பழுது பயமின்றே. (807)**

பழுது எனும் சொல் பயன்இன்மையை உணர்த்தும். பயம் – பயன். இன்று 'பழுது' என்றால் கேடுற்றது என்றாகும். வாழ்நாள் பழுதாயிற்று – பயனின்றி வீணாய்ப் போனது என்பதாம்.

*சாயல் – மென்மை*

**சாயல் மென்மை.** (808)

சாயல் எனும் சொல் மென்மைப் பண்பை உணர்த்தும். 'சாயல் மார்பு நனி அலைத்தன்றே' (பதிற். 16). மயிற்சாயல் என்னும்போது வடிவொப்புமையன்று கருதப்படுவது; மென்மையோடு கூடிய மயில்போன்றதொரு தோற்றமே கருதப்படுகிறது.

*முழுது – எஞ்சாமை*

**முழுதென் கிளவி எஞ்சாப் பொருட்டே.** (809)

முழுது எனும் சொல் எதுவும் எஞ்சிநில்லாமையைக் குறிக்கும். எஞ்சாப் பொருட்டு – எஞ்சாமையாகிய பொருளையுடையது. 'உலகு முழுதாண்ட' (சிலம்பு – அந்தி – 1).

*வம்பு – நிலையின்மை*

**வம்புநிலை யின்மை.** (810)

வம்பு எனும் சொல் நிலையின்மையை உணர்த்தும். 'வம்பமாரி' (குறு. 66) காலமல்லாத காலத்துப் பெய்வது. வம்பு – என்பது, புதுமை என்ற பொருளில் சங்க இலக்கியத்தில் வருகிறது. வன்பு, வம்பானது வேறு.

*மாதர் – காதல்*

**மாதர் காதல்.** (811)

மாதர் எனும் சொல் காதல் எனப்பொருள்படும். 'மாதர்கொள் மானோக்கின் மடநல்லாய்' (கலி. 56).

*நம்பு, மேவு – நசை (விருப்பம்)*

**நம்பும் மேவும் நசையா கும்மே.** (812)

நம்பு, மேவு எனும் சொற்கள் விருப்பத்தை உணர்த்தும். நசை – விருப்பம். 'நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி' (அகம். 198). நம்பி – விரும்பி. இன்று நம்புதல் என்பது உண்மையென ஏற்பதைக் குறிக்கிறது. 'மேவேம் என்பாரையும்' – விரும்பேம் என்பாரையும்.

*ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாய்தல் – உள்ளதன் நுணுக்கம்*

**ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
**ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்.** (813)

ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாய்தல் என்ற அவை நான்கும் முன்பு உள்ளதொன்று நுணுகுதலை உணர்த்தும். ஓய்; ஆய், நிழத்து, சாய் எனவரும். ஓய்களிறு - வலிகுறைதல் (கலி.7). பாய்ந்து ஆய்ந்த தானை (கலி. 96). 'நிழத்தயானை' (மதுரைக். 303), வலிமை குறைந்தமை. 'கடும்புனல் சாஅய்' (நெடுநல். 18).

*புலம்பு – தனிமை*

**புலம்பே தனிமை.** (814)

புலம்பு என்பது தனிமையை உணர்த்தும். 'புலம்புமணித்தாலி' (அகம்.7). மணி தனித்து ஒலிப்பது.

*துவன்று – நிறைவு*

**துவன்று நிறைவாகும்.** (815)

துவன்று, நிறைவு எனப் பொருள்படும். 'ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்' (பதிற். 11).

*முரஞ்சல் – முதிர்வு*

**முரஞ்சல் முதிர்வே.** (816)

முரஞ்சல், முதிர்வு எனப் பொருள்படும். 'கோடுபல முரஞ்சிய கோளி ஆலம்' (மலைபடு. 268).

*வெம்மை – வேண்டல் (விரும்புதல்)*

**வெம்மை வேண்டல்.** (817)

வெம்மை, விரும்புதல் எனப் பொருள்படும். வேண்டல் - விரும்புதல். 'ஏம வெங்காமம் இயைவதாயினும்' (அகம். 15). 'நீ வெய்யோளொடு' (அகம். 6). வெம்மையிற் பிறந்தசொல் வெய்யோள். உலகவழக்கில் வெம்மை வெப்பத்தை உணர்த்தும்.

*பொற்பு – பொலிவு*

**பொற்பே பொலிவு.** (818)

பொற்பு, பொலிவு எனப் பொருள்படும். 'பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்' (நற். 24)

*வறிது – சிறிது*

**வறிது சிறிதாகும்.** (819)

வறிது, சிறிதெனப் பொருள்படும். 'வறிது வடக்கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி' (பதிற். 14)

*எற்றம் – நினைவு, துணிவு*

**எற்றம் நினைவும் துணிவும் ஆகும். (820)**

எற்றம் எனும் சொல் நினைவு, துணிவு என்பவற்றை உணர்த்தும். 'கானலஞ் சேர்ப்பன் கொடுமை எற்றி' (குறுந். 145). 'எற்றமிலாட்டி என் ஏமுற்றாள்' (கலி. 144)

*பிணை, பேண் – பெட்பு (போற்றுதல்)*

**பிணையும் பேணும் பெட்பின் பொருள. (821)**

பிணை, பேண் என்பன பெட்பு எனும் பொருளன. பெட்பு - புறந்தருதல், விரும்புதல், போற்றுதல். 'அரும்பிணை அகற்றி வேட்டஞாட்பினும்'. 'அமரர்ப்பேணியும் ஆவுதியருத்தியும்' (புறம். 99). விரும்பப்படுவதாகலின் பெண்மான் பிணைமான் எனப்பட்டது.

*பணை – பிழைபடல், பெருத்தல்*

**பணையே பிழைத்தல் பெருப்பும் ஆகும். (822)**

பணை, பிழைத்தலும். பெருத்தலும் ஆகிய பொருள்களைத்தரும். 'பணைத்து வீழ் பகழி' (நற். 165) – குறி தவறி விழுந்த அம்பு. 'வேய்மருள் பணைத் தோள்' (அகம். 1) – பருத்ததோள்.

*படர் – நினைத்தல், செல்லுதல்*

**படரே உள்ளல் செலவும் ஆகும். (823)**

படர் எனும் சொல் உள்ளுதலோடு செல்லுதலையும் உணர்த்தும். உள்ளல் நினைத்தல், 'வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி' (புறம். 47) – நினைத்து. 'கறவை கன்றுவயிற் படர' (குறு. 108) – செல்ல.

*பையுள், சிறுமை – நோய் (துன்பம்)*

**பையுளும் சிறுமையும் நோயின் பொருள. (824)**

பையுள், சிறுமை என்பன 'நோய்' எனும் பொருளையுடையன. நோய் - துன்பம். பையுள் மாலை (குறுந். 195). சிறுமை உறுபவோ செய்பறியலரே (நற். 1)

*எய்யாமை – அறியாமை*

**எய்யா மையே அறியா மையே. (825)**

எய்யாமை, அறியாமை எனப் பொருள்படும். 'எய்யா மையலை நீயும் வருந்துதி' (குறிஞ்சிப். 8). 'இன்னதென்றறியாத துன்பத்துடன்' என்பதாம்.

*நன்று – பெரிது*

**நன்று பெரி தாகும். (826)**

நன்று என்பது பெரிது என்னும் பொருளதாம். 'நன்றும் அரிதுற்றனையால் பெரும' (அகம்.10). நன்று - பெரிது என்றதால் இது வினையெச்சம் என்பர் உரையாசிரியர். குறிப்பு முற்றாய் வருவது வேறு.

*தா – வலிமை, வருத்தம்*

**தாவே வலியும் வருத்தமும் ஆகும். (827)**

தா என்பது வலிமை, வருத்தம் எனும் பொருள்களை உடையதாகும். 'தாவில் நன்பொன்' (அகம். 212). தா இல் - குற்றமில்லாத எனும் பொருளும் உளது. 'கருங்கண் தாக்கலை பெரும்பிறிதுற்றென' (குறுந் 69) - வருந்திய ஆண்குரங்கு. தாவிலை - தா + இலை = துன்பமில்லை என்று இன்றும் வழங்குகிறது.

*தெவு – கொள்ளுதல்*

**தெவுக் கொளற் பொருட்டே. (828)**

தெவு எனும் உரிச்சொல், கொள்ளுதல் எனும் பொருளையுடையதாகும். 'நீர்த் தெவ்வும் நிரைத் தொழுவர்' (மதுரைக். 89). தெவு செய்யுளில் தெவ்வு என விகாரப்பட்டது. இக்காலத்து இச்சொல் தேவை எனத் திரிந்து வழங்குகிறதென்பர் பாவலரேறு ச. பாலசுந்தரனார்.

*தெவ்வு – பகை*

**தெவ்வுப் பகை யாகும். (829)**

தெவ்வு, பகை எனப் பொருள்படும். தெவ்வுப்புலம் - பகைநாடு. தெவ்வர் - பகைவர்.

*விறப்பு, உறப்பு, வெறிப்பு – செறிவு*

**விறப்பும் உறப்பும் வெறிப்பும் செறிவே. (830)**

விறப்பு, உறப்பு, வெறிப்பு எனும் சொற்கள் செறிவு எனப் பொருள்படும்.

'விறந்த காப்போடு', 'உறந்த இஞ்சி' (மதில்) – என உரையாசிரியர் காட்டுவர். இச்சொல் வழக்காறுகள் சங்க இலக்கியத்தில் அருகிவிட்டன. 'வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்' (புறம்.53). வெறுத்த கேள்வி - மிகுந்த, செறிவான கேள்வியறிவு. வெறுக்கை – மிகுதி என்ற பொருளிலும் (600, 971), செல்வமிகுதி என்ற பொருளிலும் (761) திருக்குறளில் ஆளப்படுகிறது. சிலர் மிகவும் 'விறப்பாக' இருப்பதை இன்றும் காணலாம்.

*விறப்பு – வெரூஉ (அச்சம்)*

**அவற்றுள்,**

**விறப்பே, வெரூஉப் பொருட்டும் ஆகும். (831)**

முற்கூறிய மூன்று சொற்களில் விறப்பு எனும் சொல் அச்சப் பொருள்தரும். வெரூஉ - அச்சம். 'அவலெறி உலக்கைப் பாடுவிறந்து அயல' (பெரும்பாண். 226).

*கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் – அரவம் (ஆரவாரம்)*

**கம்பலை சும்மை கலியே அழுங்கல்**
**என்றிவை நான்கும் அரவப் பொருள. (832)**

கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் என்ற இவை நான்கும் அரவம் எனும் பொருளன. அரவம் - பேரோசை, ஆரவாரம். 'கம்பலை மூதூர்' (புறம். 54). 'கலிகொள் சும்மை ஒலிகொள் ஆயம்' (மதுரைக். 263). 'கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த' (அகம். 11). 'அழுங்கல் ஊரே' (நற். 203).

*அழுங்கல் – இரக்கம், கேடு*

**அவற்றுள்,**

**அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும். (833)**

அவற்றுள், அழுங்கல் என்பது இரக்கத்தையும் கேட்டையும் உணர்த்தும். 'பழங்கண்ணோட்டமும் நலிய அழுங்கினன் அல்லனோ' (அகம். 66). 'குணன் அழுங்கக் குற்றம் உழைநின்று கூறும் சிறியவர்கட்கு' (நாலடி. 353).

*கழுமு – மயக்கம் (கலத்தல்)*

**கழுமென் கிளவி மயக்கம் செய்யும். (834)**

கழுமு எனும் சொல் மயக்கம் எனப்பொருள்படும். மயக்கம் - கலத்தல், ஒன்றோடொன்று மயங்கிக் கலத்தல். 'கழுமிய ஞாட்பினுள்' (களவழி. 11). படைகள் தலைமயங்கிச் சண்டையிடும் போர்க்களம்.

*செழுமை – வளம், கொழுப்பு*

**செழுமை வளனும் கொழுப்பும் ஆகும். (835)**

செழுமை உரிச்சொல் வளம், கொழுப்பு ஆகிய பொருள்களைத் தரும். 'செழும்பல் குன்றம்' – வளம். 'செழுந்தடி தின்ற செந்நாய் ஏற்றை' – கொழுப்புள்ள ஊன்துண்டத்தைத் தின்ற ஆண் செந்நாய்.

*விழுமம் – சீர்மை, சிறப்பு, இடும்பை*

**விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்.** (836)

விழுமம் எனும் உரிச்சொல் சீர்மை, சிறப்பு, இடும்பை என்ற பொருள்களைத் தரும். சீர்மை – நன்மை, ஒழுக்கமுடைமை. சிறப்பு – உயர்வு. இடும்பை – கடுந்துயரம். 'விழுமியோர், காண்தொறும் செய்வர் சிறப்பு' (நாலடி. 159). 'வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து' (புறம். 27). விழுத்திணை – சிறந்தகுடி. 'நின்னுறு விழுமம் களைந்தோன்' (அகம். 170). இன்று விழுமியம் என்ற சொல் Value என்ற பொருளில் ஆளப்படுகிறது.

*கருவி – தொகுதி*

**கருவி தொகுதி** (837)

கருவி என்பதன் பொருள் தொகுதி. தொகுதி – பல்பொருள் கூட்டம். 'கருவி வானம் கதழ்உறை சிதறி' (அகம். 4). மேகம், மின்னல், இடி, காற்று எனப் பல்பொருள் கூட்டமாய் இருத்தலின், 'கருவி வானம்' எனப்படும்.

*கமம் – நிறைவு*

**கமம் நிறைந் தியலும்.** (838)

'கமம்' நிறைவுப் பொருளுடையதாய் நடக்கும். 'கமஞ்சூல் மாமழை' (அகம். 43) – நிறைந்த கருக்கொண்ட மேகம்.

*அரி – ஐம்மை (மென்மை)*

**அரியே ஐம்மை.** (839)

அரி எனும் உரிச்சொல் ஐம்மை என்ற பொருளுடையது. ஐம்மை – நொய்ம்மை, மென்மை. 'அரிமயிர்த்திரள் முன்கை' (புறம். 11).

*கவவு – அகத்திடுதல் (தழுவுதல்)*

**கவவுஅகத் தடுமே.** (840)

கவவு என்பது அகத்திடுதல் என்னும் பொருளை உடையது. (அகத்திடுதல் – உள்ளடங்கும்படி செய்தல், அணைத்தல், தழுவுதல்.) 'கவவுக்கை' – தழுவிய கை.

*துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல் – இசைத்தல் வகைகள்*

**துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்**
**இசைப்பொருட் கிளவி என்மனார் புலவர்.** (841)

துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல் என்ற நான்கும் ஓசை தழுவிய இசைப்பொருளை உணர்த்தும் சொற்கள் என்பர் புலவர். 'வால் வளை துவைப்பவும்' (புறம். 158). 'ஆமா நல்லேறு சிலைப்ப' (முருகு. 315). 'ஓசை... இயம்ப' (புறம். 36). 'ஏறு இரங்கு இருளிடை' (கலி. 46).

*இரங்கல் – கழிந்தது பற்றிய கவலை*

**அவற்றுள்,**
**இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும். (842)**

அவற்றுள், இரங்கல் என்பது கழிந்ததைப் பற்றிய பொருளுடையதுமாகும். கழிந்த பொருள் பற்றி வரும் துன்பம் இரங்கல் எனப்படும். 'இனிநினைந்து இரக்கம் ஆகின்று' (புறம். 243)

*இலம்பாடு, ஒற்கம் – வறுமை*

**இலம்பாடு ஒற்கம் ஆயிரண்டும் வறுமை. (843)**

இலம்பாடு, ஒற்கம் என்னும் அவ்விரண்டும் வறுமையைக் குறிக்கும் உரிச்சொற்களாகும். 'இலம்பாடு ஒக்கல்' (புறம். 285). 'ஒக்கல் ஒற்கம்' (புறம். 327)

*ஞெமிர்தல், பாய்தல் – பரத்தல்*

**ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தல் பொருள. (844)**

ஞெமிர்தல், பாய்தல் இரண்டும் பரத்தல் பொருளினை உடையனவாம். 'தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து' (நெடுநல். 90). பாய்புனல். 'புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந்து இழிதர' (குறிஞ்சிப். 172).

*கவர்வு – விருப்பு*

**கவர்வு விருப்பமாகும். (845)**

கவர்வு, விருப்பு எனப் பொருள்படும். 'கவர்நடைப்புரவி' (அகம். 130) - விருப்பத்தைத் தரும் நடையையுடைய குதிரை.

*சேர் – திரட்சி*

**சேரே திரட்சி. (846)**

சேர், திரட்சி எனப்பொருள்படும். 'சேர்ந்து செறிகுறங்கு' (நற். 170) – திரண்டு செறிந்த துடை.

*வியல் – அகலம்*

**வியல் என் கிளவி அகலப் பொருட்டே. (847)**

வியல், அகலமென்னும் பொருளது. வியன் மார்பு – அகன்ற மார்பு.

*பேம், நாம், உரும் – அச்சம்*

**பேம் நாம் உரும் என வரூஉம் கிளவி**
**ஆமுறை மூன்றும் அச்சப் பொருள. (848)**

பேம் நாம் உரும் எனவரும் சொற்களாகிய அம் முறைமையினையுடைய மூன்றும் அச்சம் எனும் பொருளன. 'பேஎம் முதிர் கடவுள்' (குறுந். 87) – அச்சந்தரும் தெய்வம். 'நாம நல்லராக் கதுவியாங்கு' – அச்சந்தரும் நல்லபாம்பு கடித்தது போல. 'உருமில் சுற்றமோடு' (பெரும். 447) – அச்சமில்லாத சுற்றத்துடன்.

*வய – வலிமை*

**வய வலி யாகும். (849)**

வய என்பது வலிமையைக் குறிக்கும். 'வயக்களிறு' (மது. 15).

*வாள் – ஒளி*

**வாள் ஒளி யாகும். (850)**

வாள் என்பது ஒளியைக் குறிக்கும். வாள்நுதல் (முருகு. 6) - ஒளிபொருந்திய நெற்றி.

*துயவு – அறிவுதிரிதல்*

**துயவு என் கிளவி அறிவின் திரிபே. (851)**

துயவு எனும் சொல் அறிவு திரிந்த நிலைமையை உணர்த்தும். 'துயவுறுதல்' – அறிவு திரிதல்.

*உயா – உயங்கல் (வருந்துதல்)*

**உயாவே உயங்கல். (852)**

உயா என்பது உயங்கல் எனப்பொருள்படும். உயங்கல் – வருந்துதல், துன்பப்படுதல். 'பருந்து இருந்து உயாவிளி பயிற்றும்' (அகம். 19) பருந்து மரத்திலிருந்து சோகக் குரலில் கூவும்.

*உசா – சூழ்ச்சி (கலந்தாலோசித்தல்)*

**உசாவே சூழ்ச்சி. (853)**

உசா - சூழ்ச்சி எனப்படும். உசாத்துணை (குறு. 207). தோழி உசாவும் துணையாவாள் தலைவிக்கு. உசாவுதல் - கலந்தாலோசித்தல் என்போம் இன்று. சூழ்ச்சி முன்பு ஆராய்தல், சிந்தித்தல் முதலாய நல்ல பொருளைத் தந்தது. சூழ்தல் – ஆராய்தல்.

*வயா – வேட்கைமிகுதி*

**வயா என் கிளவி வேட்கைப் பெருக்கம். (854)**

வயா எனும் சொல் வேட்கைப் பெருக்கத்தினை உணர்த்தும். வேட்கை – ஆசை, விருப்பம், கருக்கொண்ட மகளிர் புளியங்காய், மாங்காய் போன்றவற்றில் ஆசை கொள்வதை 'வயா' என்பர். 'வயவுறு மகளிர்' (புறம். 20).

*கறுப்பு, சிவப்பு – வெகுளி (கடுஞ்சினம்)*

**கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள. (855)**

கறுப்பு, சிவப்பு என்பன வெகுளுதலாகிய பொருளையுடையன. வெகுளுதல் – சினத்தல், பகைத்தல், நிற் கறுத்தோர் அரணம் போல – நின்னைப் பகைத்தவர்தம் கோட்டைபோல, 'நீ சிவந்து இறுத்த நீரழி பாக்கம்' (பதிற். 13) – நீ சினந்து முற்றுகையிட்ட வளமழிந்த கடற்கரை ஊர்கள்.

*கறுப்பு, சிவப்பு – நிறவேறுபாடு*

**நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப. (856)**

முற்கூறிய கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருளில் வருதலன்றி, நிறவேறுபாடு உணர்த்துதற்கும் உரிய என்பர். நிறத்து உரு – நிறவேறுபாடு. 'கறுப்பின்கண் மிக்குள்ளது அழகு' என்பது ஒரு மேற்கோள் வாசகம். சிவந்த காந்தள்' (பதிற். 15). இவை நிழற்பொருள்கள்.

*நொசிவு, நுழைவு, நுணங்கு – நுண்மைப்படுதல்*

**நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை. (857)**

நொசிவு, நுழைவு, நுணங்கு எனும் மூன்றும் நுண்மைப் பொருளின. 'நொசிமட மருங்குதல்' (கலி. 60) – நுண்ணிய இளமைவனப்புள்ள இடை. 'நுழைநூற் கலிங்கம்' (மலைபடு. 561) – நுண்ணிய நூலால் நெய்த பட்டாடை. 'நுணங்கு துகில் நுடக்கம் போல' (நற். 15).

*புனிறு – ஈன்றணிமை (கருவுயிர்த்த உடல்)*

**புனிறென்கிளவி ஈன்று அணிமைப் பொருட்டே. (858)**

புனிறு என்னும் சொல் ஈன்றணிமையை உணர்த்தும். குழவி பிறந்ததும் உள்ள உடல்நிலை. 'புனிற்று ஆ' (அகம். 56) – கன்று போட்ட பசு.

*நனவு, ஆடு களம், அகலம்*

**நனவே களனும் அகலமும் செய்யும் (859)**

நனவு என்பது ஆடுகளத்தையும் அகலத்தையும் குறிக்கும். நனவுப்புகு விறலியில் தோன்றும் நாடன் (அகம் 82). 'நனவு – ஆடுகளம்'. 'நனந்தலை உலகம்' (நற். 1). அகன்ற இடத்தையுடைய உலகம்.

*மத – மடன் (இளமை), வலிமை*

**மதவே மடனும் வலியும் ஆகும். (860)**

மத எனும் சொல் மடனும் வலிமையும் உணர்த்தும். மடன் – இளமை. வலி – வலிமை. 'மதவுநடை நல்லான்' (அகம். 14), 'மதவுநடை – இளமைபொருந்திய நடை. 'கயிறிடு கதச்சேப்போல மதமிக்கு' (அகம். 36) – கயிற்றால் கட்டப்பட்ட சினம்மிக்க எருதுபோல வலிமைமிக்கு. மதவு என்பது ஈறுதிரிந்தது. யானை 'மதம்' இதிலிருந்து வந்தது.

*மத – மிகுதி, வனப்பு*

**மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே. (861)**

மத என்ற அச்சொல் மிகுதியையும் வனப்பையும் குறித்தலுமுண்டு. மிகுதி – ஊக்கம். மதவிடை – ஊக்கமிக்க எருது. 'மதைஇய நோக்கு' (அகம். 130) – வனப்புமிக்க பார்வை.

*யாணர் – புதியவருவாய்*

**புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி. (862)**

யாணர் எனும் சொல் புதிய வருவாயை உணர்த்தும். புதிதுபடல் – புதிய வருவாய் உண்டாதல். 'யாணர் ஊர' (நற். 210) – நாடோறும் புதிய வருவாயுள்ள ஊரனே.

*அமர்தல் – மேவல் (விரும்புதல்)*

**அமர்தல் மேவல். (863)**

அமர்தல் என்பது மேவல் எனப் பொருள்படும். மேவல் – விரும்பிச் சேர்தல். 'அகன் அமர்ந்து செய்யாள் உறையும்' (குறள். 84) – மனம் விரும்பி இலக்குமி சென்று தங்குவாள்.

### *யாண் – கவின்*

**யாணுக் கவினாகும். (864)**

யாண் எனும் உரிச்சொல் கவின் எனப் பொருள்தரும். யாண், யாணு என ஆனது. கவின் – கவர்ச்சிமிக்க அழகு. 'யாணது பசலை' (நற். 50).

### *பரவல், பழிச்சுதல் – வழிபடுதல், வாழ்த்துதல்*

**பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள. (865)**

பரவலும், பழிச்சலும் வணங்கி வாழ்த்துதல் பொருளின. பரவுதல் – வழிபடுதல். பழிச்சுதல் – வாழ்த்தி மொழிதல். 'கடவுட் பரவிக் கைதொழூஉப் பழிச்சி' (மலைபடு 538). வழுத்து – வழுத்துதல், போற்றுதல், வாழ்த்துதல், 'வழுத்தின் பொருள' என்றதால் வழிபடுதலுமாம்.

### *கடி எனும் பல்பொருள் உரிச்சொல் உணர்த்தும் பத்துப் பொருள்கள்*

**கடியென் கிளவி**
**வரைவே கூர்மை காப்பே புதுமை**
**விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே**
**அச்சம் முன்தேற்று ஆயீ ரைந்தும்**
**மெய்படத் தோன்றும் பொருட்டா கும்மே. (866)**

கடி என்னும் ஓர் உரிச்சொல். 'ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றும்' முறைப்படி, வழக்காற்றடிப்படையில் நிலைபெறத் தோன்றும் பத்துப் பொருள்களை உடையதாகும். 1. வரைவு – நீக்குதல். 'கடிந்த கடிந்து ஒரார்' (குறள். 650). 2. கூர்மை. கடிநுனைப் பகழி. 3. காப்பு – காவல். 'கடிமரம் தடியும் ஓசை' (புறம். 36) 4. புதுமை. 'கடிஉண் கடவுள்' – பலியாகப் புதிது உண்ணும் கடவுள். 5. விரைவு. கடுந்தேர், கடி, கடு எனத்திரிந்து நிற்கும். 6. விளக்கம். 'கடும்பகல் ஞாயிறு' (கலி. 145) 7.மிகுதி 'கடுங்கால் ஒற்றலின்' (பதிற். 25). 8. சிறப்பு. கடுநட்பு 9. அச்சம். கடும்பாம்பு 10. முன்தேற்று – தெய்வத்தின் முன்நின்று தெரிவித்தல். மூதெளித்தல் இதிலிருந்து வந்ததாகலாம். அதாவது சூள் உரைத்தல். 'கொடுஞ்சுழிப் புகாஅர்த்த தெய்வம் நோக்கிக், கடுஞ்சூள் தருகுவன் நினக்கே'. (அகம். 110).

*கடி – ஐயம். கரிப்பு (காரம்)*

**ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே. (867)**

'கடி' எனும் பல்பொருள் உரிச்சொல் ஐயமும் கரிப்புச்சுவையும் உணர்த்துதற்கும் உரியதாகும். கரிப்பு – காரம், உறைப்பு. 'கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது' (குறள். 693). கடுத்தபின் – ஐயுற்றபின். கடிமிளகு – காரம் மிக்க மிளகு.

*ஐ – வியப்பு*

**ஐ வியப் பாகும். (868)**

ஐ எனும் சொல் வியப்புப் பொருளைத் தரும். 'ஐ' என ஒலிக்குறிப்பாய் வியத்தல் வழக்கிலுளது. 'ஐதே காமம்' (நற். 143).

*முனைவு – முனிவு (சீற்றம், வெறுப்பு)*

**முனைவுமுனி வாகும். (869)**

முனைவு, முனிதல் எனும் பொருட்டாகும். முனிதல் – சினத்தல், வெறுத்தல். 'சேற்றுநிலை முனைஇய செங்கண் காரான்' (குறு. 261). சேற்றிலே நிற்பதை வெறுத்த செங்கண் எருமை.

*வை – கூர்மை*

**வையே கூர்மை. (870)**

வை, கூர்மை எனும் பொருளுணர்த்தும். 'வைந்நுனைப் பகழி' (முல்லை.73).

*எறுழ் – உடல் வலிமை*

**எறுழ் வலி யாகும். (871)**

எறுழ், வலிமைப் பொருள்தரும். வலி – உடல்வலிமை. 'போர் எறுழ்த் திணி தோள்' (பெரும்பாண். 63).

*உரிச்சொல் பொருளுணர்த்தும் முறைகள்*

**மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்**
**முன்னும் பின்னும் வருபவை நாடி,**
**ஒத்த மொழியாற் புணர்த்தனர் உணர்த்தல்**
**தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே. (872)**

வழக்கிடைக் காணப்பட்டு, எடுத்துக்கூறப்பட்ட உரிச்சொல் எல்லாம், அவ்வவற்றிற்கு முன்னும் பின்னும் வருகின்ற சொற்களுடன் தொடர்பு பட வைத்து ஆராய்ந்து உணரப்படவும் அவற்றிற்குப் பொருந்திய மொழிகளுடன் கூட்டிப் பொருள் உணர்த்தப்படவும் வேண்டும். அதனால் அவை தொன்றுதொட்டு விளங்கிவரும் தத்தம் மரபுமுறைப்படி பொருள் விளங்கித் தோன்றும். மெய்பெற - வழக்கிடைக் காணப்படுதல். முன்னும் பின்னும் வருபவற்றால் பலபொருள் சொற்களின் அவ்வவ்விடத்துப் பொருள் உய்த்துணரப்படும். கடிவேல் - கூர்மையானவேல். கடிமரம் - காவல்மரம். கடிமணம் - சிறப்புடைய திருமணம். இவ்வாறு உடன்வரும் சொற்களைக் கொண்டே, உரிச்சொற்கள் பொருளுணரப்படவேண்டும். ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல் - அவற்றை வெளிப்படுத்தும்போதும் பொருந்திய சொற்களை முன்னும் பின்னும் புணர்த்தியே நாம் நினைக்கும் பொருளை உணர்த்தல் வேண்டும். 'தருமணல் ஞெமிர்தல்' என்றால் மணலைப் பரப்புதல். வாள்நுதல் என்றால் ஒளி பொருந்திய நெற்றி. இங்கு வாள் என்னும் கருவியைக் குறிக்காது.

வாள் விழி - ஒளிபொருந்திய என்பதன்றி, வாள்போலும் விழியும் ஆகலாம். உரிச்சொற்கள் குறிப்புப் பொருள்கள், நிழற்பொருளாம் பல சாயற்பொருள்கள் உடையனவாதலின் உணரும்போது உணர்த்தும் போதும் முன்னும் பின்னும் வருபவை நாடியும், ஒத்த மொழியால் புணர்த்தியுணர்த்தியும் பொருள்விளங்கச் சொல்லவேண்டும். 'தத்தம் மரபில்' என்றால் 'யாணர் ஊரன்' (புதுவருவாய்), கடிமரம் (காவல்மரம்) என்றிவ்வாறு பல உரிச்சொற்கள் மரபுவழியாகத் தொன்றுதொட்டு வழங்கிவரும் மரபுப்படி நின்று பொருள்தரும் என்பதாம்.

### *உரிச்சொற்கள்*
### *முன்புகூறியவையேயன்றி வேறுபொருள்களும் உணர்த்துதல்*

**கூறிய கிளவிப் பொருள்நிலை அல்ல**
**வேறுபிற தோன்றினும் அவற்றொடு கொளலே. (873)**

முன்னே இதுகாறும் எடுத்துக் கூறிய உரிச்சொற்களுக்கு இவையிவை பொருளெனக் கூறப்பட்டனவே அல்லாமல், வேறுபிற பொருள்கள் தோன்றினாலும், முன் சொல்லப்பட்டனவற்றொடு இணைத்துக் கொள்வீராக. 'புரைதீர்கிளவி' (தொல். 1060), 'புரைதீர்ந்த நன்மை' (குறள். 292) என்னுமிடங்களில் புரை - குற்றமென்றும் பொருள்படுகிறது. கடிமுரசு - ஒலிக்கும் முரசு என்றும் பொருள்படும். இவ்வாறு வேறுபட வரும் பொருள்களையும் கொள்க என்பதாம்.

### *பொருளுணர்த்தல் பற்றிய நெறிமுறை*

**பொருட்குப் பொருள் தெரியின் அதுவரம் பின்றே.** (874)

ஒன்றற்குக் கூறப்பட்ட பொருளுக்குப் பொருளென்ன என இவ்வாறு ஆராய்ந்து சென்றால், அஃது எல்லையற்றுப்போகும். ஒரு சொல்லுக்கு இதுபொருள் என்பதும் ஒருபுடை ஒப்புமையுடையதாம். அதுகொண்டு அச்சொல்லையே விளங்கிக் கொள்ளவேண்டுமேயன்றி, கூறப்பட்ட பொருளுக்குப் பொருளென்ன என வினவிக்கொண்டே போதல் கூடாது. இன்று சூழ்ச்சி என்பதற்குக் 'கெடுதல் செய்ய எண்ணுதல்' என்றாகிவிட்டது. முன்பு சூழ்ச்சி என்றால் பலர்கூடி ஆராய்தல், கலந்தாலோசித்தல், சிந்தனை செய்தலெனப் பொருள்படும். இவற்றை வைத்து, சூழ்ச்சி என்பதன் தனிநிழற்பொருண்மையை மனங்கொளவேண்டுமே தவிர, சூழ்ச்சி – ஆராய்ச்சி, ஆராய்ச்சி – நுணுக்கமாக எண்ணுதல் என்றிவ்வாறு பொருளுக்குப் பொருள்தேடிக் கொண்டு போகக்கூடாது.

### *உணர்த்துவோன் உணர்த்தும் திறன்*

**பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்.** (875)

கூறுவோன் தக்க முறையில் பொருளுணர்த்த வல்லானாயின், கேட்போனுக்குத் தான் கேட்ட பொருட்கண் மயக்கமுண்டாகாது. இது உணர்த்துபவன், கூறுபவன், ஆசிரியன் என்ற நிலையினரின் ஆற்றலை வலியுறுத்துகிறது. திரிபறத் தெளிவுபடக் கூறும் வன்மை பெறுக; அங்ஙனம் கூறின் கூறும் பொருள் திரிபின்றித் தெளிவாகக் கேட்போனுக்குப் போய்ச்சேரும் என்பதாம்.

### *உணர்வோன் உணர்ந்துகொள்ளும் திறன்*

**உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே.** (876)

பொருள் உணர்த்தலுக்கான வழி, உணர்வோர்தாம் உணர்ச்சி, அறிவு வலிமையையும் பொறுத்துள்ளது. முன்னைய சூத்திரம் உணர்த்துபவரைப் பார்த்துக் கூறியது; இது உணர்பவரை, கேட்பவரை, மாணாக்கரைப் பார்த்துக் கூறியது.

எவ்வளவு ஆற்றலோடு உணர்த்தினாலும் உணர்பவர் அறிவு வலிமையோ, திறமையோ, ஆர்வமோ இன்றியிருந்தால் சொன்ன பொருளைக் கேட்டு அறிய இயலாது. எனவேதான் உணர்ந்து கொள்ளுதற்கான, தெரிந்து கொள்ளுதற்கான வாயில் கேட்டு உணர்பவரையும் பொறுத்திருக்கிறது என்றார்

தொல்லாசான். உணர்வோர் வலிமை என்பது அறிவு, திறமை, புலமை, ஆர்வம், ஈடுபாடு அனைத்தையும் உணர்த்தும். இவை அனைத்தையும் சேரப்பெற்றவரே உணரும் வலிமையுடையவராம். இவ்விரு நூற்பாக்கள் உணர்த்துவோரையும், உணர்வோரையும் நோக்கியன.

*விளங்கத் தோன்றாவிடினும் சொற்களுக்குப் பொருளமைந்தமைக்குக் காரணம் உண்டு*

**மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா. (877)**

எல்லாச் சொற்களும் பொருள்குறித்தனவே. அப்பொருளெல்லாம் ஏதேனும் ஒரு காரணம் கருதியே அமைந்தனவாகும். இங்ஙனம் சொல்லும் அதன் பொருளும் தொடர்புடையனவாகவே இருப்பினும், அத்தொடர்புக்கான காரணத்தை முழுவதும் அறிய இயலாதிருக்கிறது. எனவேதான் தொல்காப்பியர், "சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் உள்ள தொடர்புக்கான காரணங்கள் யாவை என்பது முழுவதும் விளங்கத் தோன்றா" என்றார். மொழிப்பொருள் – சொல்லும் அதன் பொருளும். காரணம் – இப்பொருளை இச்சொல் உணர்த்தவந்தது எவ்வாறு என்ற காரணம். விழிப்ப – முழுவதும் விளங்க. தோன்றாவிடினும் காரணம் உண்டென்பது உறுதி.

*பெயர், வினைபோல் உரிச்சொல் முதனிலை, இறுதிநிலைகளாய்ப் பிரிந்து இசைக்காது*

**எழுத்துப்பிரிந் திசைத்தல் இவணியல் பின்றே. (878)**

சொற்கள் முதனிலை இறுதிநிலையாகப்பிரிந்து நின்று, பொருளுணர்த்துதல் இவ்வுரிச்சொற்களிடத்து இயல்பன்று. முன்பு 'எழுத்தோரன்ன பொருள்தெரி புணர்ச்சி, இசையில் திரிதல்' (141) பற்றிக் கூறினார். புணரியலில், பெயரும் வினையும் முதனிலை இறுதிநிலைகளாகப் பிரிந்து, வெவ்வேறு பொருளுணர்த்தலுண்டு. உரிச்சொற்கள் அடிச்சொற்களாக நின்று, பிரிக்கவொண்ணாமல் திகழ்தலின், 'இவண் இயல்பின்றே' என்றார்.

*உரிச்சொற்களுக்குப் புறனடை : போற்றிச் சொன்னவை கொண்டு, சொல்லாதவற்றைப் பாங்குற உணர்க எனல்*

**அன்ன பிறவும் கிளந்த அல்ல**
**பன்முறை யானும் பரந்தன வரூஉம்**
**உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட**
**இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்**

**வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்து**
**ஓம்படை ஆணையின் கிளந்தவற்று இயலான்**
**பாங்குற உணர்தல் என்மனார் புலவர்.** (879)

இதுகாறும் உரிச்சொல் இலக்கணங்களுள் உரிச்சொற்கள் இவை, அவற்றின் பொருள்கள் இவை எனவும் எடுத்துரைக்கப்பட்டன. அவைபோல் இங்குக் கூறப்படாமல் பிறபல உரிச்சொற்கள், பல்லாற்றானும் பரந்துபட வருவன உள. அவ்வுரிச்சொற்கள் எல்லாவற்றையும் தொகுத்து, அவற்றிற்குப் பொருளில்லாக் குறையை நிறைவுசெய்யவென்று, சொல்லும் பொருளும் கூறத்தொடங்கினால், அவை உருவாகிவரும் தன்மையில் இத்தனை என்று முழுவதும் அறியும் எல்லையுடையன அல்ல. ஆகலின் வழக்காற்று மரபு வழியை உறுதியாகக் கடைப்பிடித்து, போற்றிப் பாதுகாக்குமாறு இங்குக்கிளந்து கூறப்பட்ட இலக்கணத்தை அறிந்து, அந்நெறிமுறைகளின்படி, பிற யாவற்றையும் முறைப்பட உணர்ந்துகொள்ளுங்கள் என்று கற்றுவல்ல புலவர்கள் கூறியுள்ளார்கள். பன்முறையானும் - பல திறத்தனவாய்ப் பலவகையினவாய். பொருட்குறை - பொருள் ஆகிய குறையை. கூட்ட - நிறைவுசெய்ய. அஃதாவது சொற்களையும் பொருளையும் மேலும் பட்டியலிட்டுத் தர எண்ணுதல். இயன்ற மருங்கின் - உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு அடிப்படையில் உருவாகும் முறைமை. வழி நனி கடைப்பிடித்து - வழக்காற்று மரபு வழியை மிகவும் கைக்கொண்டு. தொல்காப்பியர் தாம் "வழி நனி கடைப்பிடித்து ஓம்படை ஆணையிற் கிளந்ததை", இவ்வாறு குறிப்பிடுகிறார். ஓம்படை ஆணை - பாதுகாக்கும் நோக்கோடு கூடிய ஆணை விதிகள். கிளந்தவற்று இயலான் = கூறப்பெற்றவற்றின் இயல்புமுறையறிந்து, அவற்றின்படி. பாங்குற உணர்தல் - நன்கு தெளிவுபட உணர்ந்துகொள்ளுங்கள்.

# 9. எச்சவியல்

சொல்லதிகாரத்தின் இறுதி இயலாகிய இதன்கண், இதுகாறும் கூறாது எஞ்சியவையும், முன்னுள்ள எட்டு இயல்களுக்கும் பொதுவானவையும் விளக்கப்படுகின்றன. பெயர்வினை இடை உரி எனச் சொற்களை வகைப்படுத்தியவர், ஈண்டுச் செய்யுளுள் (இலக்கியத்துள்) எடுத்தாளப்படும் சொற்களை வகைப்படுத்தி, முதற்கண் விளக்குகிறார். அடுத்து யாப்புப் செய்யுளுள், பொருள் தொடர்புபட அமையும் பொருள்கோள் வகைகளை எடுத்துக்கூறுகிறார்.

தமிழில் தனிச்சொற்கள் போலச் சொல்லடுக்குகள் மிகுதி. இவை தொகைகளாக நின்று பொருளுணர்த்தும் நெறி முறைகளை அடுத்து விளக்குகிறார். பின்னர் வினையியலுட் கூறாது எஞ்சியவற்றைக் கூறத் தொடங்கி, எச்சங்களாய் நின்று பொருள் தருவனவற்றைத் தொகை வகைப் படுத்துகிறார். இறுதியில் தமிழுக்குரிய பெயர் வினை இடை உரி பற்றய சில குறிப்பிட்ட சொல் மரபுகள் விளக்கப்படுகின்றன. இறுதி நூற்பா சொல்லதிகாரப் புறனடையாய், இருவகை வழக்கினும் சொன்னவை கொண்டு, சொல்லாதவற்றையும் அறியுமாறு தூண்டுகிறது.

தொல்காப்பியம் வரன்முறையான, செறிவுள்ள கட்டமைப்புடையது. காலப் பழமையாலும் ஏடெழுவோராலும் சிறுசிறு மாற்றங்கள் நேர்ந்திருக்கலாம். இன்று நாம் காரணம் அறிய முடியாத நிலையிலும், சில நூற்பா வரிசை முறைகள் உள்ளன. ஆயினும் அவற்றிற்கான காரணங்கள் மேன்மேலும் ஆராய ஆராயத் தெளிவுபடுதலுங் கூடுமாதலின், நாம் இன்றுள்ள கட்டமைப்பைப் பேணிக் கற்றலே அறிவுடைமையாகும்.

### இயல் கருத்து நிரல்

### இலக்கியத்தில் எடுத்தாளப்படும் சொற்கள்

தமிழில் இலக்கியத்துள் (செய்யுள்) எடுத்தாளப்படும் சொற்கள் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று நான்கு வகைப்படும்.

**இயற் சொல்**

அவற்றுள் இயற்சொல்லென்பன, செந்தமிழ் நாட்டின்கண் பேசப்படும் வழக்காற்றுடன் பொருந்தி, கேட்டோர்க்குப் பொருள் தவறாது விளங்கும் சொற்களாகும்.

**திரி சொல்**

திரிசொல் என்பன ஒருபொருள் தரும் பல சொற்களாகியும் பலபொருள் குறித்த ஒரு சொல்லாகியும் இங்ஙனம் இருவகைப் படுவனவாகும். இவை புலவர்களால் பெரிதும் ஆளப்படுவனவாகும். செய்யுளுக்கு ஏற்ப, புலவர்கள் சிறிதுமாற்றியும் புதுச்சொல் படைத்தும் வழங்கியன.

**திசைச்சொல்**

செந்தமிழ் வழங்கும் தேயத்தைச் சேர்ந்த, பன்னிரு வகைப்பட்ட நிலப்பிரிவுகளாலும் வாழ்வோரால் வழங்கப்படுவனவாய், அவ்வந் நிலத்தார் ஆளும் பொருட்குறிப்பின்வழி பொருளுணர்த்துவன திசைச்சொற்களெனப்படும்.

**வடசொல்**

வடமொழிச் சொற்களிலுள்ள வடமொழிக்கேயுரிய ஓசையுடைய ஒலிகளை நீக்கிவிட்டுத் தமிழ் எழுத்தானமைந்த சொல்லாக்கித் தமிழில் எடுத்தாளப்படுவது 'வடசொல்' எனப்படும். தமிழில் வந்து வேறுபாடறியப்படாது கலக்கும் அனைத்துப் பிறமொழிச் சொற்களுக்கும், இது பொருந்தும்.

அவ் வடசொற்கள், பலதிரிபு மாற்றத்திற்குட்பட்டு தமிழ் வடிவம் பெற்றுத் தமிழில் வந்து கலப்புறும்போது, தமிழுக்கு இயைபுடையனவற்றை, நீக்கமாட்டார்கள். (வடசொல்லுக்குக் கூறப்படும் இவ்விலக்கணம் பிறமொழிச் சொற்களனைத்திற்கும் பயன்படும்.)

முற்கூறிய நான்குவகைச் சொற்களையும், இலக்கியத்துள் ஆளும்போது, செய்யுளுள் வைத்துத் தொடுக்கும் போது, அவை யாவும் படைப்பாற்றலால் ஆளப்படும் திறமையை அடிப்படையாகவுடையன. அவை வருமாறு : மெல்லொற்றை வல்லொற்றாக்க வேண்டியவழி வல்லொற்றாக்கல்; வல்லொற்றை மெல்லொற்றாக்க வேண்டியவழி மெல்லொற்றாக்கல்; ஒன்றிரண்டெழுத்து விரிக்க வேண்டியவழி விரித்தல்; ஒன்றிரண்டெழுத்துத் தொகுக்க வேண்டியவழித் தொகுத்தல்; குற்றெழுத்தை நீட்டவேண்டியவழி

நீட்டுதல்; நெட்டெழுத்தைக் குறுக்கவேண்டிய வழி குறுக்குதல் என்பனவாம். (இவை வழக்காற்றை ஒட்டியும் புலவனின் திறமைக் கேற்பவும் செய்யுளின் ஓசை கருதியும் செய்யப்படுவன.)

### செய்யுளில் பொருள்கோள் வகைகள்

செய்யுளுட் பொருள்கொள்ளும் முறைகள் நான்காகும். இதனைச் செய்யுளுள் 'மொழிபுணர் இயல்பு', (சொற்களைத் தொகுத்துப் பொருளுணர்த்தும் தன்மை) என்பார் தொல்காப்பியர். அவை நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்பன.

### நிரனிறை

அவற்றுள் நிரனிறைப் பொருள்கோள் என்பது, பெயர்ச் சொற்களிலும் வினைச் சொற்களிலும் ஆராய்ந்து அமைக்கப்பெற்று, முடிக்கும் சொற்களை வேறாகவும் முடிக்கப்படும் சொற்களை வேறாகவும் வரிசைப்பட நிறுத்தி, அவை தம்முள் நிரலே இயைந்து பொருள் கொள்ளுமாறு செய்வதாகும்.

### சுண்ணம்

இயல்பான அளவடியானமைந்த ஈரடிகளுக்குட்பட்ட எண்சீர்களுள் இயைத்துப் பார்த்துப் பொருள் கொள்ளுமாறு. சொற்களைத் துணித்து மாற்றி அமைப்பது சுண்ணப் பொருள்கோளாகும்.

### அடிமறி

அடிமறிப் பொருள்கோள் என்பதன் இலக்கணம் சீர்களை நிலைமாற்றாமல் அடிகள் நிற்குமிடத்தை மாற்றி யமைத்து அவற்றை இயைத்துப் பொருள் கொள்ளுமாறு அமைப்பதாகும்.

அடிமறிப் பொருள்கோளில், பொருள்கொள்ளுமிடத்து, ஒரு செய்யுளுள் ஈற்றடிக்கண்ணுள்ள இறுதிச்சீர், ஈற்றயலே சென்று பொருந்திப் பொருள்கொள்ளுமாறு புனைவதும் உண்டு.

### மொழிமாற்று

மொழிமாற்றுப் பொருள்கோளின் இலக்கணம், சொற்கள் நிற்குமிடங்களைப் பலவாறு மாற்றியமைத்து, அவை முன்னும் பின்னுமாய் எதிர்வந்து இயையப் பொருள் கொள்ளும் வகையறிந்து கொள்வதாகும்.

### உறவுப் பெயர்கள் தொகைச் சொற்களாயினும் ஒருசொல் நீர்மையவாதல்

த, ந, நு, எ எழுத்துக்களை முதலாகவும் ன, ள, ர மூன்றையும் ஈறாகவுமுடைய, உறவுப் பெயர்களும் (நூ. 639) பிற உறவுப்பெயர்களும் இரு சொற்கள் இணைந்த தொகைச் சொற்களாயினும் தனித்தனியே பிரிக்கப்பட மாட்டா. 'நின் தந்தை' தான் நுந்தை ஆயிற்றென்றாலும் இது பிரித்துணரப் படுவதில்லை.

### தொகைச் சொற்களில் ஒரு சொல்லடுக்குகள்

தொகைச் சொற்கள் என்பன குறைந்தது இருசொற்களை அடுக்கிவருவனவே. ஒரே சொல் அடுக்கிவரும் தொகைகள் இசைநிறை, அசைநிலை, பொருளொடு புணர்தல் என்று மூன்று வகைகளாக அமையும்.

### தொகைச்சொல் வகைகள்

வேற்றுமைத் தொகை, உவமத்தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்று தொகைச்சொல் ஆறுவகைப்படும் என்பர்.

### வேற்றுமைத்தொகை

அவற்றுள் வேற்றுமைத்தொகை, வேற்றுமை உருபுகள் விரிந்துநிற்கும் வேற்றுமைத் தொடர்கள்போலவே பொருளுணர்த்தும் இயல்பினவாம். கற்குவியல் – கற்களினாலான குவியல் அல்லது கற்களது குவியல்.

### உவமத்தொகை

உவமத் தொகை, உவம உருபு விரிந்துநிற்கும் உவமத் தொடர்கள் போலவே பொருளுணர்த்தும் தன்மையினவாம். பவளவாய் – பவளம் போன்ற வாய்.

### வினைத்தொகை

வினைச்சொல் தொக்குநிற்றலென்பது, காலத்தைக் காட்டும் உறுப்புக்கள் மறைந்து நிற்பதாகும். எழுகதிர்.

### பண்புத்தொகை

வண்ணம், வடிவு, அளவு, சுவை எனவும் அவை போல்வன பிறவுமாகி, தான்

சார்ந்ததன் குணத்தை விளக்கி அமைவது பண்புத்தொகையாகும். அதனை 'இன்னது இது' வென விரிக்கவேண்டும். இவ்வியல்புடைய தொடர்கள் அனைத்தும் பண்புத் தொகையேயாகும். செம்மொழி, தமிழ்மொழி.

### உம்மைத் தொகை

உம்மைத் தொகை இரண்டுபெயர்கள், பலபெயர்கள், முகத்தலளவைப் பெயர்கள், எண்ணுடன் கூடிய பெயர்கள், நிறுத்தலளவைப் பெயர்கள், எண்பற்றிய பெயர்கள் என்ற ஆறுவகைச் சொற்களையும் கருதி அமைவதாகும்.

### அன்மொழித்தொகை

பண்புத் தொகை, உம்மைத் தொகை, வேற்றுமைத்தொகை ஆகிய பெயர்களின் இறுதியில், முன்னுள்ள தொகைகளுக்குரியவை அல்லாத மொழிகள் தொக்குவருவதே அன்மொழித் தொகையாகும்.

### தொகைச் சொற்களில் பொருள் அழுத்தமுள்ள இடம்

தொகைச் சொற்களில் பொருள் சிறப்புறப் பதிந்திருக்குமிடம் அத்தொடரின் முன்மொழியில் இருக்கும் அல்லது பின்னுள்ளதில் அமைந்திருக்கும். சில தொடர்களில் இருசொற்களிலும் ஒரு தன்மைத்தாக இருக்கும். அத்தொகைபடு சொற்கள் இரண்டுமல்லாத சொல்லொன்றிலும் பொருள் சிறந்துநிற்கும். இவ்வாறு பொருள் அழுத்தமுற அமையுமிடம் நான்காகும் என்பர்.

### தொகைத் தொடர்பு ஒருசொல் நீர்மைத்தாதல்

முன்பு கூறிய அறுவகைத் தொகைத் தொடர்களும் ஒருசொல் நீர்மைத்தாம் நடையினையுடையன. பைந்தமிழ் - பசுமையினதாகிய தமிழ். பொற்றொடி - பொன்னாலாகிய தொடி. இங்ஙனம், விரிக்கலாமெனினும் இவை ஒரு சொல் நீர்மைத்தாய் நின்று வினைமுடிபு ஏற்றல் முதலியன அமைதலின் 'ஒருசொல் நடைய' எனப்பட்டன.

### உயர்திணை உம்மைத்தொகை

உம்மைத் தொகைகள் உயர்திணைக்கண் அமையுமாயின், அவற்றின் ஈறு பலர்பாலுக்குரிய நடையினதாகும் என்பர் புலவோர், (கபிலபரணர்)

**வினைச்சொல் மரபுகள் சில**

இயங்காத மரபுடையவற்றை இயங்குவன போல் கூறுதலும் பேசாத தன்மையுடையவற்றைப் பேசுவன போல் கூறுதலும் அவைபோலக் கூறப்படுபவையனைத்தும், அவ்வவற்றிற்குரிய இயல்பின்படி, ‘இவை இன்ன பொருளின’ என்று உணரப்படும் குறிப்புடையனவாகும். (இவ்வழி திருச்சியிலிருந்து வருகிறது; மனம் இடங்கொடுக்க மறுக்கிறது.)

**இசைநிறைக்கு எல்லை நான்கடுக்கு**

இசைநிறை அடுக்கிற்கு மேல்எல்லை நான்காகும். இரண்டு, மூன்று, நான்குவரை அமையுமென்பதாம். “வாழ்க வாழ்கென வாழ்த்திசைப் போமே!”

**விரைவுப் பொருளில் மூன்றடுக்கே மேல்எல்லை**

விரைவுப் பொருளில் வரும் ஒருசொல்லடுக்கு மூன்று முறை வரை வரலாம். அதுவே மேல் எல்லையாகும். வாவா; வாவாவா.

**அசைநிலை அடுக்குகள் சில**

கண்டீர், கேட்டீர், சென்றது, போயிற்று என்றுவரும் அவை அனைத்தும் வினாக்குறிப்பொடு பொருந்தி நிற்குமிடத்து, அசைச் சொற்களாய் நிற்கும் என்பர். (பார்த்தீரா? பார்த்தீரா? இக் கொடுமையை.)

கேட்டை, நின்றை, காத்தை, கண்டை என்ற அவை அனைத்தும் முன்னிலை வினைப்பொருளை உணர்த்தாதவிடத்து, முன் சூத்திரத்தில் கூறியவாறு அசைச்சொல் இயல்பினவாகும்.

**வினைமுற்றில் பொருள் முற்றுப்பெறும் தன்மை**

இறப்பு நிகழ்வு எதிர்வு என்ற வினைச்சொல்லுக்குச் சிறப்புரிமையுடைய அம் முக்காலங்களையும் காட்டி தன்மை முன்னிலை படர்க்கை என்ற அம் மூன்றிடங்களுக்கும் உரியவாய்; உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை மூன்றினும் தெரிநிலை, குறிப்பு என இரண்டிரண்டாகப் பொருந்திய ஆறு வகையினவாய்ப் பொருள் முற்றுப்பெற்றியலும் முற்றுவினை அமையும்.

முற்கூறியவை மட்டுமன்றி, வேறு எவ்வகையானேனும் பொருள் முற்றி வருகின்ற வினைச்சொல் எல்லாம், முற்றுச்சொல் வகைக்குள் அடங்கும். (யார், எவன், இல்லை என வருவன பலவும் முற்றெனவேபடும்.)

### முற்றுவினை பெயர்கொண்டு முடிதல்

அம் முற்றுவினைகள், தத்தமக்குரிய வாய்பாடுகளான் அடுக்கிவரினும், அடுக்காது தனித்து வரினும் எல்லாவற்றானும் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் இயல்பினவாம். (அருளினன் முருகன்; முருகன் அருளினன்; போற்றினன் வாழ்த்தினன் வணங்கினன் அடியான்.)

### எச்சப்பொருள் தரும் சொல்வகை

பிரிநிலை எச்சம், வினையெச்சம், பெயரெச்சம், ஒழியிசை எச்சம், எதிர்மறை எச்சம், உம்மையெச்சம், எனவென் எச்சம், சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் எனத் தமிழில் எச்சப் பொருள்தரும் சொற்கள் பத்துவகைப்படும்.

### பிரிநிலை எச்சம் முடிக்கப்படும் முறை

அவற்றுள் பிரிநிலை எச்சம் என்பது, பிரிக்கப்பட்டதனையே முடிக்கு சொல்லாகக் கொண்டு முடியும். (அவனே கள்வன்.)

### வினையெச்சம் முடிக்கப்படும் முறை

வினையெச்சத்திற்குத் தெரிநிலை வினையும் குறிப்புவினையுமே ஆராய்ந்து முடிக்கும் சொல்லாகும். குறிப்பு வினையுடன் முடியும்போது இடையே ஆக்கச் சொல் கொடுத்துக் கூறவேண்டும். பார்த்து மகிழ்ந்தான். பயின்று வலியன் ஆயினான்.

### பெயரெச்சம் முடிக்கப்படும் முறை

பெயரெச்சம் பெயர்கொண்டு முடியும். (தேடிய செல்வம், நல்ல பெண்.)

### ஒழியிசை எச்சம் முடியும் முறை

ஒழியிசை எச்சம் சொல்லாது ஒழியிசையாய் நிற்கும் பொருளொடு முடியும். (பண்டு நல்லைமன் - இன்று நல்லனல்லன் என்பது குறிப்பால் உணர்த்தப்படுகிறது.)

### எதிர்மறை எச்சம் முடிக்கப்படுதல்

எதிர்மறை எச்சம் எதிர்மறைப் பொருளை உணர்த்துதற்குரிய சொல்லைக் கொண்டு முடியும். (நானோ திருடினேன். 'ஓ காரம் திருடவில்லை' என்பதை உணர்த்திற்று.)

**உம்மை எச்சம் முடியும்விதம்**

உம்மை எச்சம் தழுவிநிற்பதும் அதனால் தழுவப் பட்டதுமான இரண்டு முடிபுவகையானும், தனக்குரிய வினையே மற்றதற்கும் பொருந்திய முடிபாகும். (கணவனும் வந்திருந்தான் என்றால் மனைவியும் வந்திருந்தாள் எனத் தழுவப்பட்டதற்கும் அதே வினை முடிபே வரும். கணவனும் வந்தான் மனைவியும் விருந்துண்டாள் எனப் பிறிதொரு வினை ஒட்டாது.)

**உம்மை எச்சத்தில் காலமயக்கம்**

உம்மை ஏற்ற சொல்லுக்கு முன்னதாக, உம்மையில்லாத செஞ்சொல் வரின், அவை முறைப்படி நிற்குமிடத்து, நிகழ்காலமும் எதிர்காலமும் மயங்குதலையும் இறந்த காலமும் எதிர்காலமும் மயங்குதலையும் நீக்க மாட்டார்கள். (ஏவிய வேலை செய்கிறான்; கணக்கும் எழுதுவான். நன்கொடை தந்தார்; நிகழ்ச்சிக்கும் வருவார்.)

**என என் எச்சம் முடியும் விதம்**

என என்னும் எச்சம் வினைச்சொல்லைக் கொண்டு முடியும். (நண்பன் எனச் சொன்னான்.)

**முடிக்குஞ்சொல் எஞ்சிநில்லாதன**

இறுதியில் எஞ்சிநிற்கும் சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் மூன்றும் மேல்வந்து முடிக்கும் – எச்சப் பொருளை முற்றுவிக்கும் சொல்லை உடையன அல்ல. குறிப்புப் பொருளே எஞ்சிநிற்கும் என்பதாம்.

**குறிப்புப் பொருள் எஞ்சிநிற்கும் முறை**

அம் மூன்று எச்சங்களும் தம் குறிப்பின் வழி எஞ்சி நிற்கும் பொருளைத் தருவனவாகும். திருமணம் முடிவு செய்ய முயலும்போது, ‘சாதகம் பொருந்தவில்லை’ என்றால் ‘வேண்டாம்’ என்றும் கொள்ளலாம்; ‘சீர் போதாது’ என்ற குறிப்பும் இருக்கலாம். இங்ஙனம் கருதியது யாதென உய்த்துணரக் கிடப்பதால், ‘தத்தங் குறிப்பின்’ என்றார்.

**சொல்லெச்சம் பற்றிய ஒரு குறிப்பு**

சொல்லெச்சம் முன்னாகவோ, பின்னாகவோ ஒரு சொல்லின் அளவாகவே பொருளெஞ்சிநிற்கும். (‘நினைத்த அளவு நிதிசேரவில்லை’ என அறிவித்தால், தரநினைப்போரைத் ‘தருக’ என உணர்த்தும் குறிப்பு உளது.)

**அவையல்கிளவி அல்லது இடக்கரடக்கல்**

பல்லோர் குழுமிய அவையின் நடுவே வெளிப்படக் கூற இயலாதனவற்றை, மறைத்துக் கூறுதல் வேண்டும். (இன்று ஒன்றுக்கு, இரண்டுக்கு என்பன அவ்வாறே பயன்படுகின்றன.)

வழக்கின்கண் நெடுங்காலம் பொருந்தி வழங்கிவந்தவற்றை அவ்வாறு மறைக்கவேண்டியதில்லை. பல் துலக்குதலை முன்பு 'வாய்பூசுதல்' (வாயைச் சுத்தம் செய்தல்) என்றனர். இன்று பல்விளக்குதல் வழக்கில் வந்துவிட்டது.

**தமிழ்ச்சொற்கள் பொருளுணர்த்தும் மரபுகள் சில**

**ஈ, தா, கொடு**

ஈ, தா, கொடு மூன்று வினைச் சொற்களும் இரத்தற் பொருளில் பயன்படும் சொற்களாதற்குரியனவாம்.

அவற்றுள் 'ஈ' எனும் முதனிலையையுடைய ஈதற்சொல் நிலையில் தாழ்ந்தவன் ஒருவன் கூற்றாக வரும். 'எனக்கு ஈ' எனப் பல்லைக் காட்டிக் கேட்பதிது. (மன்னன் பாணர்க்குப் பொற்பூ ஈந்தான்.)

'தா' எனும் முதனிலையுடைய சொல், தம்முட் சமமானவர் இரந்து கேட்கும் கூற்றாகும். (எனக்குப் புத்தகம் தா.)

'கொடு' எனும் முதனிலையுடைய சொல் உயர்ந்த நிலையினர் தம்மைவிடத் தாழ்ந்த நிலையினரிடம் கேட்பதாகும். (மக்கள் அரசுக்கு வரிகொடுக்க வேண்டும்.)

**கொடு எனும் சொல் தன்மையிடத்ததாதல்**

எனக்குத்தா; அவனுக்குக் கொடு என்பதே சொல் மரபாகும். 'எனக்குக் கொடு' எனப் படர்க்கை இடத்ததாகிய 'கொடு' எனும் சொல்லைத் தன்மையில் பயன்படுத்துதல். தன்னைப் பிறன்போல் (படர்க்கை) பாவித்துக் கூறும் குறிப்பினதாகும். இவ்வாறு படர்க்கைப் பொருளை இயல்பாகச் சுட்டும் சொல், தன்மையினுக்குரியதாகி வரும்.

**இலக்கணக் கடப்பாடற்ற**

**சில சொல்வகைகள்**

சில பெயர்ச்சொற்களாகி வருவனவும், சில திசைச் சொற்களாகி இலக்கண வரையறையுட் படாதனவும், பழமொழிகள் போல் தொன்று தொட்டு வழங்கி

வருவனவும் உலகவழக்கில் பொருள் மயக்கமுற்று அமைவனவும் மந்திரச் சொற்களாய்ப் பொருளுணர்த்தி வருவனவும் ஆகிய அவை அனைத்தும் இலக்கணக் கட்டுப்பாடற்றனவாகும். அவற்றின் வரையறைகள் முன்பேயுள்ள விதிகளை மீறியவையாய் விளங்கும் என்பதாம்.

**செய்யாய், செய் என நிற்றல்**

'செய்யாய்' என்ற முன்னிலை வினைச்சொல், 'ஆய்' விகுதி குறைந்து, 'செய்' எனவும் நிற்குமிடமுண்டு. (நடவாய் - நட. பாராய் - பார்.) எதிர்மறையாகாமல் உடன்பாட்டுப் பொருளில் வருதலும் ஆய் விகுதி கெட்டு அதே பொருளைத் தருதலும் கருதத்தக்கன.

**ஈ, ஏ முன்னிலைவினை ஈறுகளாதல்**

முன்னிலை வினைச் சொல்லின்முன் ஈ யும் ஏ யும் ஈறாகப் பொருந்தி வரும். அந்நிலையில் தமக்கேற்ற மெய்களின்மேல் ஏறி அவை வரும். (சென்றீ – செல் + ற் + ஈ; சென்மே – செல் – ம் – ஏ. ற், ம் மெய்களை ஊர்ந்து ஈ, ஏ வந்தன.)

**புதிய சொற்கள் – சொல்வடிவங்கள் நீக்கப்படா**

காலச் சூழலான் மொழியில் வந்து தோன்றும் சொற்கள், கடிந்து வேண்டாமென நீக்கப்படுதல் இல்லை. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப் படுத்தி ஆளுதல்; தமிழில் புதிய வடிவங்களேற்று வழங்குதல்; அறிவியலுக்காகப் படைத்துக் கொள்ளுதல் என அனைத்தும் அடங்கும்.

**செய்யுள் விகாரம்**

சில சொற்கள் செய்யுளில் முதல் இடை கடைக்குறைகளாய்க் குறைக்கப்பட்டு வழங்கும். அங்ஙனம் குறைக்குங்கால் மரபறிந்து, அங்ஙனம் குறைத்தற்குரிய இடமும் அளவும் பார்த்துக் குறைக்க வேண்டும். மரை – தாமரை (முதற்குறை). உளம் – உள்ளம் (இடைக்குறை). நீல நிறத்தை நீல்நிறம் என்பது கடைக்குறை.

அங்ஙனம் குறைக்கப்பட்டனவெனினும், அவை முழுப் பெயர்போலவே பொருளுணர்த்தும் தன்மையினவாம். பெயர்ச்சொற்களே இங்ஙனம் முதலிடைகடைக் குறைகளாய் வருமென்பது இதனால் பெறப்படுகின்றது.

**இடைச்சொற்களின் இயல்பு**

இடைச்சொற்கள் என்பன எல்லாம் பெயர்வினைகளை அடுத்து நின்று அவற்றின் பொருளை வேறுபடுத்துவனவேயாம். ஐ ஆல் முதலிய வேற்றுமையுருபுகள் போலவே செயற்படுவன எனலாம்.

**உரிச்சொற்களின் இயல்பு**

உரிச்சொற்களிலும் அவ்விடைச் சொற்கள் போலப் பெயர் வினைகளையடுத்து, அவற்றின் பொருளை வேறுபடுத்துதற்குரியவை உரியவாம். உரிச்சொற்களில் எய்யாமை, ஆய்தல், பண்ணை என இவ்வாறு தனித்து நின்று பொருள்தருவனவு முளவாதலின் 'உரியவை உரிய' எனப்பட்டது.

**வினையெச்சச் சொற்கள் வேறுபட்ட பல வடிவினவாதல்**

வினையெச்சச்சொற்களும் (உம்மையால் பிற வினைச்சொற்களும்) வேறுபடவமையும் பல வடிவங்களையுடைய. (ஓடி, போய் வடிவங்கள் செய்து வாய்பாடேயாதல் காண்க.)

தொடர் மொழிகளாய் உரைக்குமிடத்தேதான், முடிக்கும் சொல்லுடன் பொருந்தி நிற்பதைக் கொண்டு, மேற்கூறிய வினைச் சொல் வேறுபாடுகள் அறியப்படும்.

**முன்னத்தின் உணரப்படும் தொடர்கள்**

சொல்வானது குறிப்பின்வழிப் பொருளுணரப்படும் தொடர்களும் உள. அவை இத்தன்மைய என அறியப்படும் சொல்லினது தொடர்ச்சியை வைத்துக் குறிப்பாலறியப்படும். ('சோற்றால் மடை அடைக்கும் சோணாடு' என்றால், பயிர்வளம் மிகுதி என்பதைக் குறித்தல்.)

**ஒரு பொருட் பன்மொழிகள்**

ஒரே பொருளைத் தரும் இரு சொற்கள் பிரிவின்றி இணைந்து நின்றே வழங்கும். (ஓங்குயர், மீமிசை).

**ஒருமைச்சொல் பன்மைக்கு ஆதல்**

ஒருமை குறித்த பெயர்ச்சொற்கள் பன்மையைக் குறிக்கும் இடங்களும் உள. (பாரத மக்கள் தம் தாய் நோக நடவார். இங்கு தாயர் என்றே கொள்ளப்படுதல் காண்க.)

**ஆற்றுப்படை இலக்கியத்தில் வரும் வினை முடிபு**

முன்னிலையில் விளியாக வரும் ஒருமைச்சொல், வினை கொண்டு முடியுமிடத்தில், பன்மை வினை கொண்டு முடிதலும் நீக்கப்படுதல் இல்லை. ஆற்றுப்படைச் செய்யுளில் இவ்வாறு வருவதைப் போற்றி, ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். ஆற்றுப்படுத்தப்படுபவர் ஒரு குழுவாக

வருதலால், தலைவனை ஒருமையில் அழைத்து, 'நீங்கள் சென்று பயன் பெறுங்கள்' எனப் பன்மையில் முடிக்கும் மரபு தோன்றி நிலைபெறலாயிற்று. சிறுபாணாற்றுப்படையுள் 'முதுவாய் இரவல!' என விளித்து, 'இனி நீயிரும் செல்குவிராயின் ...வயின் வயின் பெறுகுவீர்' என முடிப்பது கருதத்தக்கது.

## சொல்லதிகாரப் புறனடை

செய்யுள் வழக்கிலும் உலக வழக்கிலுமாக இதுகாறும் பொருண்மை பெறக் கிளக்கப்பட்ட விளக்கம் யாவும் மனங் கொள்வீராக! இவை முற்றுப்பெற்றன அல்ல. பல்வேறு வகைப்பட்ட மொழிச் செய்கைகளை உணர்த்தும் இலக்கண நூலுக்குரிய நெறிமுறை பிழையாமல், சொல்லிலக்கணத்தை மேன்மேலும் வரையறைப் படுத்தி அறிய, வகைதொகைப்படுத்திக் காட்டுவீர்களாக!

# எச்சவியல்

### *இலக்கியத்தில் இடம்பெறும் நான்குவகைச் சொற்கள்*

**இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று**
**அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே. (880)**

'செய்யுள்' ஈண்டு இலக்கியத்தைக் குறிக்கும். முன்பு இலக்கியமெல்லாம் யாப்புச்செய்யுளாகவே படைக்கப்பட்டதால், படைப்பிலக்கியம் அனைத்தும் 'செய்யுள்' எனப்பட்டன. ஒரு படைப்பிலக்கியத்துள் எடுத்தாளத்தகும் சொற்களை இந்நூற்பா வகைப்படுத்துகிறது. பெயர்வினை இடைஉரிச் சொற்கள் மொழியின் அடிப்படை வகைகள்.

இவை 'செய்யுள் ஈட்டச் சொற்கள்'. அதாவது செய்யுளுள் கொண்டுவந்து ஆளும் சொற்கள். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனும் நான்கும் இலக்கியத்தைப் படைத்தற்குரிய சொற்களாகும். செய்யுள் ஈட்டச் சொல் -செய்யுளைச் செய்தற்குரிய சொல். கதை இலக்கியத்துள் இன்று ஆளப்படும் வட்டாரவழக்குகள். திசைச்சொல்லில் அடங்குமாறு காண்க.

### *இயற்சொல்*

**அவற்றுள்**
**இயற்சொல் தாமே**
**செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்**
**தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே. (881)**

அந்நான்கனுள் இயற்சொல் எனப்படுவன, 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலக' மெனப்பட்ட, செந்தமிழ் வழங்கும் நிலத்தின்கண் பேசப்படும் வழக்காற்றுடன் பொருந்தி, கேட்போர்க்குத் தம் பொருள் வழுவாமல் உணர்த்தும் சொற்களாகும். தம் பொருள் வழுவாமையாவது, நாட்டின் உட்பிரிவினரனைவர்க்கும் ஒருங்கு, தப்பாமல் விளங்கும் தன்மையாகும். நிலம், நீர், மலை, சோறு, உண்டான், தின்றான் என்றாற்போல், அனைவர்க்கும் விளங்கும் பொதுச் சொற்கள்.

*திரிசொல்*

**ஒரு பொருள் குறித்த வேறுசொல் லாகியும்**
**வேறுபொருள் குறித்த ஒரு சொல் லாகியும்**
**இருபாற்று என்ப திரிசொற் கிளவி.** (882)

திரிசொற்கள் என்பன ஒரு பொருள் தரும் பல சொற்களாகியும் பல பொருள் தரும் ஒரு சொல்லாகியும் இங்ஙனம் இருவகைப் படுவனவாகும்.

இருபாற்று என்ப – இருபகுதிப்படும் என்பர். "அஃதேல், உரிச்சொல்லோடு இதனிடை வேறுபாடு என்னையெனின் உரிச்சொல் குறைச்சொல்லாகிவரும், திரிசொல் முழுச் சொல்லாகி வரும்" என்பர் தெய்வச்சிலையார். அடுக்கல், பிறங்கல், ஓங்கல், விண்டு, குன்று, வரை எனவரும் பலசொற்கள் மலை என ஒரு பொருள் தரும். உந்தி எனும் ஒரு சொல் ஆற்றிடைக் குறை, கொப்பூழ், தேர்த்தட்டு, யாழகத்ததோர் உறுப்பு எனப் பலபொருள் தரும். செய், செறு என்பன வயலைக் குறிக்கும். அரங்கம் என்பது ஆற்றிடைக்குறை, ஆடுமிடம், இல்லில் ஒருபக்கம் எனக் குறிக்கப்பயன்படும். ஒரு சொல்லுக்கு நிழற்பொருள் – சார்புப் பொருள் பல தோன்றி, அதனால் இங்ஙனம் வழக்கினும் இலக்கியத்தும் ஆளப்பட்டு ஆளப்பட்டு வெவ்வேறு சொற்களாய் ஒரேபொருள்தந்தும், வெவ்வேறு பொருள்படும் ஒரே சொல்லாகியும் இங்ஙனம் வேறுபாடுகளை அடைதலால் இவை 'திரிசொல்' எனப்பட்டன. திரிந்து வேறுபடும் சொல்லே திரி சொல்லாம். இதற்கு நடைமுறை வழக்கும் அடிப்படையாகுமெனினும் புலவர்தம் சொல்லாட்சியால் ஏற்படும் மாற்றங்களே காரணமாகும். புலவர்கள் பொன்னைப் 'பொலம்' என்பர். மயிலை 'மஞ்ஞை' என்பர். குருவி – குரீஇ ஆகும். செய்யுளுக்கேற்ப மாற்றும் மரபுவழியால் இவை அமைவன.

*திசைச்சொல்*

**செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**
**தம்குறிப் பினவே திசைச்சொற் கிளவி** (883)

செந்தமிழ் வழங்கும் தேயத்தைச் சேர்ந்த, பன்னிரு வகைப்பட்ட நிலப்பிரிவுகளிலும் வாழ்வோர் வழங்குவனவாய், அவ்வந் நிலத்தார்தம் குறிப்பின்வழிப் பொருள்படுவனவே திசைச்சொற்கள் எனப்படும். முன்னைய இயற்சொற்போல அனைவர்க்கும் ஒரு படித்தாய் விளங்காமல், அவ்வப் பகுதியினர்க்கே நன்கு விளங்குவனவாய் இவை காணப்படும். முன்பு மலையாளம், கருநாடகம், தெலுங்கு என்ற பிரிவுகள் முற்றுப்பெறப் பிரியாமல், வட்டார வழக்குகளாய் இருந்தன. தென்பாண்டி நாட்டார் பசுவைப் 'பெற்றம்'

என்றனர். குட்டநாட்டார் தாயைத் தள்ளை என்றனர். குடநாட்டார் தந்தையை அச்சன் என்றனர். பூழி நாட்டார் நாயை ஞமலி என்றனர். அருவா நாட்டார் சிறுகுளத்தைக் கேணி என்றனர். இன்றும் 'திருவல்லிக்கேணி' என்பது அல்லிக்குளத்தைக் குறித்தல் அறிக. தெலுங்கர் எருத்தைப் பாண்டில் என்றனர். குடகர் பிள்ளையைக் 'குடா' என்றனர். கருநாடர் 'கரைதல்' என விளித்தலைக் கூறினர். இவை இவ்வாறு அவ்வப் பகுதியார் உளக்குறிப்பின்படி பொருள்தந்து, மற்றவர்க்கு அத்துணை எளிதிற் பொருள் விளங்காது காணப்படுவன. 'தங் குறிப்பின' என்பதன் விளக்கம் அதுவேயாம். இன்று வட்டார வழக்குகள் எனப்படுவன இவையேயாம். கொச்சைவழக்குகள், திரிபுகள், பிழைபட்டவை யாவற்றையும் இதனுள் அடக்குவர் சிலர். அது தகாது.

### *வடசொல்*

**வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ**
**எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே. (884)**

தமிழ்ச் சொற்களுள் 'வடசொற்கள்' என்ற பிரிவொன்றும் உண்டு. அவையும் தமிழ்வடிவம் பெற்ற தமிழ்ச் சொற்களாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவை சமஸ்கிருத மொழிக்கேயுரிய எழுத்துக்களையுடைய சொற்களாயின், அவ் வடமொழி ஒலிகளை அறவே நீக்கி, தமிழ் எழுத்துக்களுடன் கூடிய தமிழ்ச்சொற்களாய்த் தமிழில் வழங்கப்பட்டு 'வடசொல்' என அழைக்கப்படும். இதனைத் தமிழ்வடிவப் படுத்தித் தமிழ்ச் சொல்லாக ஏற்கப்படும் அனைத்துப் பிறமொழிச் சொற்களுக்கும் பொது இலக்கணமாகக் கொள்ளலாம்.

இதிலிருந்து தமிழ் எழுத்துக்களுடன் பொதுமையுடைய பிறமொழிச் சொற்களை அவ்வாறே ஆளினும் அவை தமிழில் வழங்கும் சொல்வகையுள் ஒன்றாய் ஏற்கப்படும் என்பதும் பெறப்படுகிறது. கமலம், திலகம், அலுமினியம், பதில் போல்வன பொது எழுத்துக்களால் ஆனவை. மோகம், வச்சிரம், அரி, அரன், விசயம், பங்கயம் என்பன வடவெழுத்து நீக்கித் தமிழ்வடிவில் அமைவன. மணி, மூலம் என இவ்வாறு தமிழா, வடமொழியா என அறியப்படாதனவும் அல்லது மேலும் ஆராய்ந்து அறியத்தக்கனவுமான பலசொற்களையும் இப்பிரிவில் எடுத்துக்காட்டியுள்ளனர், உரையாளர்கள்.

### *பிறமொழிச் சொல் வடிவங்களை முழுவதும் தமிழ்வடிவப் படுத்துதல்*

**சிதைந்தன வரினும் இயைந்தன வரையார். (885)**

இங்ஙனம் வடமொழிச் சொற்கள் பல திரிபுகள், மாற்றங்கட்கு உட்படுத்தப்பட்டுத் தமிழ் வடிவப்பட்டு வரினும், பொருத்தமுடையவற்றை

நீக்கமாட்டார்கள். பிரயாணம் என்பது பயணம் ஆதலையும் ரிஷி இருடியாதலையும் இவ்வாறு வெவ்வேறு மாற்றங்கட்குப்பட்டுத் தமிழ்வடிவம் பெறும் பிறமொழிச் சொற்களையும் இதனுள். அடக்கலாம். தமிழ்வடிவைச் சிதைத்துப் பிறமொழிச் சொற்களாக்குவதைப் பார்த்துள்ளோம். மதுரை – மெசுரா. திருவையாறு – ட்ருவாடி. அதுபோல் பிறமொழிச் சொற்கள் உருமாறித் தமிழ் பெறுதலையே 'சிதைந்தன வரினும்' என்றார்.

### *செய்யுள் விகாரம்*
### *நான்குவகைச் சொற்களையும் செய்யுளுள் ஆளும் சில மரபுகள்*

**அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை**
**வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்**
**விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்**
**நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்**
**நாட்டல் வலிய என்மனார் புலவர். (886)**

மேலே கூறிய நான்குவகைச் சொற்களையும் செய்யுளுள் ஆளுமிடத்து மெல்லொற்றை வல்லொற்றாக்கவேண்டிய வழி வல்லொற்றாக்கலும் வல்லொற்றை மெல்லொற்றாக்க வேண்டிய வழி மெல்லொற்றாக்கலும் ஒருசொல்லின்கண் ஒன்றிரண்டு எழுத்து விரிக்கவேண்டிய வழித் விரித்தலும் ஒரு சொல்லில் ஒன்றிரண்டெழுத்துத் தொகுக்கவேண்டிய வழித் தொகுத்தலும் குற்றெழுத்தை நீட்ட வேண்டிய வழி நீட்டலும் நெட்டெழுத்தைக் குறுக்கவேண்டிய வழிக் குறுக்கலும் ஆகிய ஆறுவகை விகாரங்களும் செய்யுளை ஓசை இன்பம் பயக்க யாக்க வல்லார், படைக்கும் வலிமையினை அடிப்படையாகக் கொண்டவை என்று புலவோர் கூறுவர். நாட்டல் வலிய – படைக்கும் வலிமையைக் கொண்டு படைக்கப்படுபவை. பொருத்தமுற, மரபறிந்து படைக்கவேண்டுதலின் இவ்வாறு கூறினார்.

'முத்தை வரூஉம் காலம்' (தொல். 164). முந்தை, முத்தை ஆனது வலித்தல் விகாரம். 'குன்றியலுகரத்து இறுதியாகும்' (தொல். 491) குற்றியலுகரம் குன்றியலுகரமானது மெலித்தல் விகாரம். 'தண்ணந்துறைவன்' (குறு. 9). தண் என்பது தண்ணம் என ஆனது விரித்தல் விகாரம். 'மழவரோட்டிய' (அகம். 1) மழவரை எனற்பாலது மழவர் என நின்றது தொகுத்தல் விகாரம். பச்சிலை, பாசிலை (புறம். 54) ஆனது நீட்டல் விகாரம். 'திருத்தார் நன்றென்றேன் தியேன்' – தீயேன் என்பது தியேன் என ஆனது குறுக்கல் விகாரம். இருப்புச் சட்டி, கருப்பஞ்சாறு என வழக்கில் வருவனவும் சில உள.

### பொருள் கோள் வகை

**நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று**
**அவை நான்கு என்ப மொழிபுணர் இயல்பே. (887)**

செய்யுளுள் பொருளைத் தருமாறு சொற்களைத் தொடுக்கும் தன்மை நான்கு வகைப்படும். நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்பன அவை. மொழி புணர் இயல்பே - சொற்களைப் புணர்த்துத் தொடுக்கும் தன்மை.

### நிரல் நிறைப் பொருள்கோள்

**அவற்றுள்,**
**நிரனிறை தானே,**
**வினையினும் பெயரினும் நினையத் தோன்றி,**
**சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல். (888)**

அவற்றுள் நிரல்நிறைப் பொருள்கோள், பெயர்ச்சொல்லிலும் வினைச் சொல்லிலும் ஆராய்ந்து அமைக்குமாறு தோன்றும். அவற்றை முடிக்கும் சொற்களை வேறாக வரிசைப்பட நிறுத்தி, முடிக்கப்படும் சொற்களை வேறாக வரிசைப்பட நிறுத்தி அவை தம்முள் நிரலே இயைந்து பொருள்கொள்ளுமாறு அமையும். பெயரும் பெயரும் வினையும் வினையும் பெயரும் வினையும் வினையும் பெயரும் என இவை நிரலே அமையலாமாதலின் பொதுப்பட வினையினும் பெயரினும் என்றார். இவை ஆராய்ந்து கொள்ளுமாறு பல்வேறு வகைகளாக அமைக்கப்படுதலின் 'நினையத் தோன்றி' என்றார். நிரல் நிறை - நிரல்பட, வரிசைப்பட நிறுத்துதல். 'அன்பும் அறனும் உடைத்தாயின், இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' (குறள். 45). 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல், கற்றாரோடு ஏனை யவர்' (குறள்.410) முன்னது நிரல்நிறை; பின்னர் எதிர் நிரல்நிறை.

### சுண்ணப் பொருள்கோள்

**சுண்ணம் தானே**
**பட்டாங்கு அமைந்த ஈரடி எண்சீர்**
**ஒட்டுவழி அறிந்து துணித்தனர் இயற்றல். (889)**

சுண்ணம் - பொடி, பொடிபோலச் சொற்கள் சிதறிக்கிடக்கக் கொண்டுகூட்டிக் கொள்வதிது. இயல்பான அளவடியான் அமைந்த, ஈரடியாய் எண்சீர் உடையவற்றில், பொருத்திப் பார்த்துப் பொருள் கொள்ளும் வழிஅறிந்து, அதற்கியையச் சொற்களைத் துணித்து இயற்றுவது சுண்ணப்

பொருள்கோளாகும். பட்டாங்கு அமைந்த - இயல்பாக அமைந்த, நான்கு சீர் கொண்டது அளவடியாகும். அத்தகைய இரண்டு அடிகளுக்குள் சொற்களைச் சிதர்ந்துகிடக்கச் செய்து இணைத்துப் பொருள்கொள்ளுமாறு செய்வதிது. துணித்தனர் - துண்டித்துத் தனித்தனி யாக்கி; (பின்பு ஒட்டுமாறு செய்தல்).

**நீ:.வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சி**
**சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே! (புறம். 113)**

"பெரும் பெயர்ப் பறம்பே! தொழுதுநிற் பழிச்சி நீர்வார் கண்ணேம் சேறும்! வாழியோ!" எனக் கூட்ட வேண்டும்.

*அடிமறிப் பொருள்கோள்*

**அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து**
**சீர்நிலை திரியாது தடுமா றும்மே. (௪௯௦)**

அடிமறிப் பொருள்கோளை எங்ஙனம் இயற்றுவரெனில், ஒரு பாடலில் சீர்கள் உள்ளவாறு இருப்ப, அடிகள் தம்முள் மாற்றிமாற்றிப் பொருள்கொள்ளுமாறு தடுமாறும்படி செய்வதாகும்.

அடிமறிச் செய்தி - அடிமறிப் பொருள்கோளின் செய்முறை அல்லது இயல்பு. அடிகள் தடுமாறும்; சீர்கள் தடுமாறா.

மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
ஏறா மென்தோள் வளைநெகிழும்மே
கூறாய் தோழியான் வாழு மாற!

இதனுள் அடிகளை மாற்றிப் போட்டாலும் பொருள் மாறாது.

*சீர் மயங்கும் அடிமறி*

**பொருள்தெரி மருங்கின்**
**ஈற்றடி இறுசீர் எருத்துவயின் திரியும்**
**தோற்றமும் வரையார் அடிமறி யான. (௪௯௧)**

அடிமறிப் பொருள்கோளில், பொருள் அறியுமிடத்து, ஈற்றடியின் இறுதிச்சீர், ஈற்றயற்கண் திரிந்து பொருள்தருதலையும் நீக்கமாட்டார்கள். எருத்து - ஈற்றயல். தோற்றம் - தோன்றி இயைந்து பொருள்தருதல். முன் நூற்பாவில் சீர்நிலை திரியாது என்றார் இங்கு சிறுபான்மை 'திரியும் தோற்றமும்' உண்டென்று கூறுகிறார்.

சங்கப் பாடல்கள் பலவற்றில், ஈற்றடி இறுதிச்சீர், ஈற்றயலே சென்று பல அடிகள் தொடங்கி ஓரிரு சீர்கள் வரை கொண்டுகூட்டிப் பொருள் கொள்ளப்படுதல் காணலாம்.

'திருமணி விளக்கில் பெறுகுவை
இருள்மென் கூந்தல் ஏமுறு துயிலே' (அகம். 92)

இறுதிச்சீர் துயிலை - பெறுகுவை என ஈற்றயலடியுடன் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். தலைவனிடம் தோழி கூறுவதிது. இவ்வாறு ஈற்றடியில் பொருள் முடியாது, அதை ஈற்றயல் அடி, சீர்களுடன் கொண்டு கூட்டுவது சங்கப்பாடல்களில் மிகுதி.

### *மொழிமாற்றுப் பொருள்கோள்*

**மொழிமாற்றுப் இயற்கை,**
**சொல்நிலை மாற்றிப் பொருள்எதிர் இயைய**
**முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல். (892)**

மொழி மாற்றுப் பொருள்கோளின் இயல்பு யாதெனில், சொற்கள் நிற்குமிடங்களைப் பலவாறு மாற்றியமைத்து, பொருள் கொள்ளுமிடத்து, முன்னும் பின்னுமாய்க் கூட்டிப் பொருள் எதிர்வந்து பொருந்துமாறு கொள்ளுமிடமறிந்து கொள்வதாகும். கொளாஅல் - கொள்க. சுண்ணம் இரண்டடிக்குள் வரும்; இதற்கு வரையறை இல்லை. கூறாதுவிட்ட பலவகையான பொருள்கோள்கள் இதனுள் அடங்கும்.

ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும் சிறுவரை
சென்றுநின் றோர்க்கும் தோன்றும் மன்ற...
தேர்வீசு இருக்கை நெடியோன் குன்றே. (புறம். 114)

குன்று தோன்றும் எனப்பின்னுள்ளது முன்சென்று கூட்டப்பட்டது. பிற்காலத்தில் பொருள்கோள்கள் பலவகைகளாக விரிக்கப்பட்டன. அவற்றுட் சில இம் 'மொழி மாற்றில்' அடங்கும். பத்துப்பாட்டில் வரும் நீண்ட பாடல்களில் சொற்களை முன்னும் பின்னுமாய்ப் பலஇடத்தும் 'கொண்டுகூட்டிப்' பொருள் கொள்ளப்படும்.

### *தொகைச்சொல் வகை*
### *உறவுப்பெயர்கள் தொகையாகாமல் ஒருசொல் நீர்மையவாதல்*

**த ந நு எ எனும் அவைமுத லாகிய**
**கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா. (893)**

தம்பின் என்பதே தம்பி ஆயிற்று. ஆயினும் இவ்வாறான உறவுப் பெயர்கள் பிரித்துப் பொருளுணரப்படா; ஒரு சொல் நீர்மைத்தாய், ஒட்டி நின்றே

பொருள்படுமென்பதாம். த, ந, நு, எ எனும் எழுத்துக்களை முதலாகவும் ன, ள, ர எனும் மூன்று மெய்எழுத்துக்களை ஈறாகவும் உடைய, உறவு நுதலி வரும் பெயர்கள் (ஒப்பு நோக்குக. நூ.639) இருசொற்களிணைந்த தொகைச் சொற்களாயினும் பிரிக்கப்படமாட்டா; ஒரு சொல்லாய் ஒட்டி நின்றே பொருள்தருமென்பதாம். தமன், நமன், நுமன், எமன் முதலியன. ஏனைய உறவு நுதலும் பெயர்களுக்கெல்லாம் இவ்விதி பொருந்துமென உரையாசிரியர்கள் விளக்குவர். (நின் தந்தை - நுந்தை. என் தந்தை - எந்தை. இவை போல்வன பிரித்துரணரப் படுவன அல்ல.)

*தொகைச் சொற்களில் ஒருசொல் அடுக்கு வகைகள்*

**இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்று**
**அவைமூன் றென்ப ஒருசொல் அடுக்கே. (894)**

தனிச் சொற்களாக அல்லாமல் சொற்கள் அடுக்கி நிற்றலுண்டு. இடையில் உருபுகள் முதலியன தொகாமல், தனிச்சொற்களாய் அடுக்கிநிற்பன பற்றி முதலில் விளக்கப்படுகிறது. ஒரே சொல் மீண்டும் மீண்டும் வரும் அடுக்கு **இசைநிறை, அசைநிலை, பொருளொடு புணர்தல்** என்ற அம்மூன்று காரணத்தான் அமையும், 'ஏஏ இஃதொத்தன்' (கலி.62). ஏஏ எனச் செய்யுளுள் இசைநிறைக்க வந்துள்ளது. ஏ - இகழ்ச்சிக் குறிப்பு இடைச்சொல். பேச்சிடையேயும், செய்யுளிலும் 'என்ன என்ன'; 'ஆம் ஆம்'; 'மற்றோ மற்றோ' என்றிவ்வாறு பொருளின்றி அடுக்கி வருவன அசைநிலை பற்றியன. பொருளொடு புணர்ந்து வருவன விரைவு, துணிவு, உடம்பாடு, விழைவு, ஒருதொழில் பலகால் நிகழ்தல் எனப் பலவகையாக அமையும். 'வந்தது வந்தது கூற்று' (நாலடியார் 4) - விரைவு. கண்டேன் கண்டேன் - துணிவு அடித்தேன் அடித்தேன் - உடம்பாடு. வருகவருக - விழைவு. பார்பார் - பலகால் நிகழ்தல்.

*தொகைச்சொல் வகைகள்*

**வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே**
**வினையின் தொகையே பண்பின் தொகையே**
**உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்று**
**அவ்வாறு என்ப தொகைமொழி நிலையே. (895)**

தொகைச் சொல் ஆறுவகைப்படுமென்பர். அவை வேற்றுமைத்தொகை, உவமத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித்தொகை என்பனவாம். வினையின்தொகை - வினைச்சொல்லின்

இடைநிலை, ஈறு முதலியன தொக்குவரும் தொகை. பண்பின் தொகை - பண்ப உணர்த்தும் உருபுகள் தொக்குவரும் தொகை.

### *வேற்றுமைத் தொகை*

**அவற்றுள்,**
**வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல. (896)**

அவற்றுள் வேற்றுமைத் தொகை என்பன வேற்றுமை உருபுகள் தொக்கு, அவ்வாறு வேற்றுமை உருபுகள் தொகாது நின்ற வேற்றுமைத் தொடர்களைப் போலவே பொருளுணர்த்தும் தன்மையையுடையன. பந்தடித்தல் (பந்தை அடித்தல்), முள்வேலி (முள்ளாலான வேலி), முருகன் தம்பி - முருகனுக்கு தம்பி, மலையருவி (மலையிலிருந்து வரும் அருவி), யானைத்தந்தம் (யானையது தந்தம்), காட்டுயானை (காட்டின்கண் வாழும் யானை), தொகைத் தொடர்கள் ஒருசொல் நீர்மைத்தாய்ச் செறிவுடன் அமைந்திருக்கும்.

### *உவமத் தொகை*

**உவமத் தொகை உவம இயல. (897)**

உவமத் தொகை என்பன உவம உருபுகள் தொக்கு, அவ்வுருபுகள் தொகாது நின்றாற்போலவே, பொருளுணர்த்தும் இயல்பின. அன்ன நடை, முத்துப்பல், தளிர்மேனி.

### *வினைத்தொகை*

**வினையின் தொகுதி காலத்து இயலும். (898)**

வினைச்சொல் தொக்குநிற்கும் நிலை, காலத்தைக் காட்டும் உறுப்புக்கள் மறைந்து நின்று இயங்கும். தொகுதி - தொக்குநிற்றல், காலத்து இயலும் - காலங்காட்டும் உறுப்புக்கள் மறைந்து நின்று இயங்கும். கடிநாய், சுடுநீர், பாய்புலி.

### *பண்புத்தொகை*

**வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையின்என்று**
**அன்ன பிறவும் அதன் குணம் நுதலி**
**இன்னது இதுவென வரூஉம் இயற்கை**
**என்ன கிளவியும் பண்பின் தொகையே. (899)**

வண்ணம், வடிவு, அளவு, சுவை என்னும் அவையும் அவை போல்வன பிறவுமாய், தாம் அடைமொழியாய்ச் சார்ந்ததன் குணத்தை வெளிப்படுத்தி,

'இன்னது இது' என்ற வாய்பாட்டாற் கூறும் இயல்புடன் வரும் எத்தன்மைப் பட்ட சொற்களும் பண்புத் தொகை ஆகும். பசுந்தமிழ் – பசுமை உடையதாகிய தமிழ். செந்தாமரை – செந்நிறத்ததாகிய தாமரை.

தமிழ் மொழி (தமிழாகிய மொழி), பனைமரம் (பனையாகிய மரம்) என இருபெயரொட்டாய் வருவனவற்றையும் பண்புத் தொகையுள் அடக்குவர். **'இன்னது இது'** 'வென வரூஉம் என்னகிளவியும்' என்றது அதனாலேயாம்.

### *உம்மைத்தொகை*

**இருபெயர் பலபெயர் அளவின் பெயரே**
**எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி**
**எண்ணின் பெயரொடு அவ்வாறு கிளவியும்**
**கண்ணிய நிலைத்தேஉம்மைத் தொகையே. (௯00)**

உம்மைத்தொகை பொருந்திவரும் இடங்களாவன: இரண்டு பெயர்கள் (காய்கறி), பல பெயர்கள் (அறம் பொருளின்பம்), முகத்தல் அளவுப் பெயர்கள் (தூணிப் பதக்கு), எண்ணும் பெயருமாய் இயன்று வருவன (பதினைவர்), நிறுத்தலளவைப் பெயர்கள் (தொடியரை), எண் பற்றிய பெயர்கள் (பதினைந்து) என்ற ஆறுவகைச் சொற்களையும் கருதிய தன்மையுடையது உம்மைத் தொகை. கண்ணிய நிலைத்து – கருதிய தன்மையது. காயும் கறியும், அறமும் பொருளும் இன்பமும், தூணியும் பதக்கும், பதின்மரும் ஐவரும், தொடியும் அரையும், பத்தும் ஐந்தும் என இவற்றை விரிக்கவேண்டும்.

### *அன்மொழித் தொகை*

**பண்பு தொகைவரூஉம் கிளவி யானும்**
**உம்மை தொக்க பெயர்வயி னானும்**
**வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்**
**ஈற்றுநின்று இயலும் அன்மொழித் தொகையே. (௯0௧)**

பண்பு உணர்த்தும் சொற்கள் தொக்குவரும் பெயர்ச்சொற்களும் 'உம்' எனும் இடைச் சொல் தொக்குவரும் பெயர்ச்சொற்களும் வேற்றுமை உருபுகள் தொக்குவரும் பெயர்களும் ஆகிய இவற்றின் இறுதியில் பிறசொற்கள் தொக்கு நின்று அன்மொழித்தொகை அமையும். தொகுதல் – மறைதல். குறந்தாடி வந்தான் – குறுமையிலும் தாடியிலும் பொருள் நில்லாமல் குறுந்தாடி உடையவன் என அவை இரண்டுமல்லாத 'உடையவன்' மேல் பொருள் பதிந்துநிற்றல் அறிக. அன்மொழித் தொகை முன்னுள்ள தொகைகளிலுள்ளவை அல்லாத மொழி

மறைந்து வருவது. சொல்லப்பட்ட தொகையின் அடிப்படையில், சொல்லப்புடாத வேறோர் சொல் தொக்குநிற்பது. காய்கறி மூடியுள்ளது. காயும் கறியும் விற்கும் கடை. பொற்றொடி வந்தாள் - பொன்னாலாகிய தொடி அணிந்தவள் வந்தாள்.

### *தொகைச்சொற்களில் பொருள் சிறந்து நிற்குமிடம்*

**அவைதாம்,**
**முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்**
**இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்**
**அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்**
**அந்நான்கு என்ப பொருள்நிலை மரபே. (902)**

தொகைச் சொற்களில் பொருள் அழுத்தமாக நிலைபெற்று நிற்கும் இயல்பு நான்கு வகைப்படுமென்பர். அவையாவன: தொக்கு நிற்கும் இருசொற்களில் முன்மொழியிலோ, பின்மொழியிலோ அல்லது அவ்விரு மொழிகளிலுமோ, அவ்விரு மொழிகளுமல்லாத தொருமொழியிலோ பொருள் நிலைபெற்று நிற்கும். சொல்வான் பொருளுணர்த்தும் குறிப்பினாலும் சொல்லப்பட்ட பொருளிதுவென அத்தொடர் உணரநிற்றலானும் இஃதறியப்படும். முன், பின் என்பன காலமும் இடமும் பற்றியன. 'வேங்கைப் பூச் சூடினாள்' எனில் 'பூ'வையே சூடியமையால், அதன்கண் பொருள் சிறந்து நிற்கிறது. இதனையே இடத்தால் முன்மொழியில் பொருள் சிறந்து நின்றது என்பர். நாம் இன்று கால அடிப்படையிலோ முன், பின் என உணர்கிறோம்.

இன்றைய முறைப்படி பார்ப்பதே எளிது. கடிநாய், சுடுநீர் - முன்மொழிக்கண் பொருள்சிறந்து நிற்கிறது. அவை இவைஎனும் வேறுபாடு 'வினை'ச் சொல்லின் வழிப்பட்டுளது. முல்லைப்பூச் சூடினாள். சூடப்பட்டது பூவேயாதலின் பின்மொழியில் பொருள்சிறந்து நிற்கிறது. இராப் பகல், ஆடல்பாடல் போன்ற உம்மைத்தொகைகளில் இரண்டிலும் ஒரே தன்மையாகப் பொருள் சிறந்து நிற்கிறது. பொற்றொடி என ஒரு பெண்ணைக் குறிக்கும்போது, பொன்தொடியை அணிந்தவள் என அவ்விரண்டுமல்லாத மொழியில் பொருள்சிறந்து நிற்கிறது.

### *தொகைச்சொற்கள் ஒருசொல் நீர்மையவாதல்*

**எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய. (903)**

முன்பு கூறிய அறுவகைத் தொகைகளும் ஒருசொல் நீர்மைத்தாம் நடையினையுடைய. ஒருசொல் நின்று முடிக்கஞ்சொல்லோடு முடியுமாறுபோல,

இவையும் வினைமுடிபு முதலாயவற்றை ஏற்கும் என்பதாம். வெந்நீரில் குளித்தான், மைவிழி வந்தாள், ஆடல்பாடல் கற்றுத்தரப்படும். முன்னுள்ள தொகைகள் எல்லாம் ஒருசொல் நடையவாதல் காண்க.

*உம்மைத் தொகைக்கு ஒருபுறனடை*

**உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே**
**பலர்சொல் நடைத்தென மொழிமனார் புலவர். (௯0௪)**

உயர்திணைக்கண் உம்மை தொக்க தொகைச் சொற்களின் ஈறு, பலர்பாலுக்குரிய நடையினதாகும் என்று புலவர்கள் சொல்லுவர்.

கபிலபரணர், சேரசோழபாண்டியர். இவை வினைமுடிபு கொள்ளும்போது வந்தனர். ஆண்டனர் எனப் பன்மையில் முடிய வேண்டுதலின், (கபிலன் + பரணன் = கபிலபரணன் என ஆகாமல், கபில பரணர் எனப்) பன்மை ஈறு பெறுகின்றன.

*வினைச் சொற்களில் சில சொன் மரபுகள்*

**வாரா மரபின வரக்கூ றுதலும்**
**என்னா மரபின எனக்கூ றுதலும்**
**அன்னவை எல்லாம் அவற்றவற்று இயல்பான்**
**இன்ன என்னும் குறிப்புரை ஆகும். (௯0௫)**

இயங்காத இயல்புடையவற்றை இயங்குவனவாகக் கூறுதலும் பேசாத தன்மையுடையவற்றைப் பேசுவனவாகக் கூறுதலும் அத்தன்மைய எல்லாம் அவ்வப் பொருள்களின் இயல்புப்படி, அவை 'இத்தன்மைய' என உணருமாறு குறிப்பால் உரைக்கப்படுவனவாகும். 'இச் சாலை எங்கே போகிறது'. 'யானை மலை ஒற்றைக் கடையில் சேர்கிறது'. மழைமழை என்கின்றது பயிர். 'வயிறு சோறு கேட்கின்றது'. 'வயிறு பற்றி எரிகிறது'. இன்னோரன்ன பலவாகும். குறிப்பால் கருத்தை உணரவைத்தலால், 'குறிப்புரை' ஆகும் என்றார்.

*இசைநிறை அடுக்கிற்கு ஒரு புறனடை*

**இசைப்படு பொருளே நான்கு வரம்பாகும். (௯0௬)**

முன்னர் இசைநிறை, அசைநிலை, பொருளொடு புணர்தல் என ஒருசொல்லடுக்கு மூன்று வகைப்படும் என்றார் (894). அவற்றுள், செய்யுட்கண் இசைநிறைத்தற்கு எனவரும் இசைநிறை அடுக்கு நான்கு முறை வரை அடுக்கிவரும். அதற்குமேல் அடுக்கி வராது; இரண்டு, மூன்றாகவும் அடுக்கிவரும் என்பதாம். வரம்பு – மேல் எல்லை.

ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினில் சீறெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிய பூவின் நிறம்

என வரும்.

*விரைசொல்லடுக்கிற்கு ஒரு புறனடை*

**விரைசொல் அடுக்கே மூன்றுவரம் பாகும். (907)**

விரைவுப் பொருளில் வரும் அடுக்குச் சொல்லுக்கு மூன்று முறை வருதலே மேல் எல்லையாகும். இரண்டு முறையும் அடுக்கிவரக் கூடும். பாம்பு பாம்பு. தீதீதீ. போபோபோ.

*அசைநிலை அடுக்கிற்குப் புறனடை*

*வினாவொடு பொருந்தி வருவன*

**கண்டீர் என்றா கேட்டீர் என்றா**
**சென்றது என்றா போயிற்று என்றா**
**அன்றி அனைத்தும், வினாவொடு சிவணி**
**நின்றவழி அசைக்கும் கிளவி என்ப.**

கண்டீர் என்றும் கேட்டீர் என்றும் சென்றது என்றும் போயிற்று என்றும் வரும் அவை அனைத்தும் வினாக் குறிப்பொடு பொருந்தி நிற்குமிடத்து, அசைச்சொற்களாகும். வினாவொடு பொருந்தாதவழி வினைச்சொற்களாகவே நிற்கும். அதிகாரத்தால் இவை அடுக்கியும் வருமென்பர். (அதிகாரம் - இது கூறப்பட்டு வரும் இப்பகுதி அடுக்குத்தொடர்பாக இருத்தல்) கண்டீரே கண்டீரே, கேட்டீரே கேட்டீரே, சென்றதே சென்றதே, போயிற்றே போயிற்றே - எனக் காட்டுவர். பேசும்பொழுது இடையிடையே. 'கேட்டீங்களா, கேட்டீங்களா; பார்த்தீங்களா பார்த்தீங்களா' என்பர். கேட்டீரா கேட்டீரா, பார்த்தீர்களா பார்த்தீர்களா என்பதிது. அசைக்கும் கிளவி - அசைச்சொல். இவற்றிற்குப் பொருளில்லை. எனினும் கேட்போர் கருத்தை ஈர்ப்பன; தன் முகமாகத்திருப்புவன. நேர் சொற்பொருள்படுவன அல்ல. 'போச்சா போச்சா' - போயிற்றா?

*முன்னிலை வினையொடு பொருந்தி வருவன*

**கேட்டை என்றா நின்றை என்றா**
**காத்தை என்றா கண்டை என்றா**
**அன்றி அனைத்தும் முன்னிலை அல்வழி**
**முன்னுறக் கிளந்த இயல்பா கும்மே. (909)**

கேட்டை என்றும் நின்றை என்றும் காத்தை என்றும் கண்டை என்றும்

கூறப்படும் அவை அனைத்தும் முன்னிலை வினைப் பொருளை உணர்த்தாதவிடத்து, மேற்சொல்லப்பட்டவாறு 'அசைநிலைச் சொற்கள்' ஆகும். 'பார்பார் இது நல்லதா'; 'கேள்கேள் இது கொடிது'; 'நில்நில் இதைக் கேள்'; பொறுபொறு சற்றுப் பொறு. முன் நூற்பாவில் அசைக்கிளவி என்னாது 'அசைக்கும் கிளவி' என்றது, நேர்பொருளின்றேனும் ஒரு குறிப்புணர்த்துவது என எண்ண இடந்தருகிறது. இன்று பார்பார் - பார்த்தாயா பார்த்தாயா என்று பேச்சிடையே சொல்வது போலவே, முன்பு கேட்டை, நின்றை முதலியன வழங்கியிருக்க வேண்டும்.

*வினைமுற்றின் பொதுஇலக்கணம்*

*பொருள் முற்றிவரும் இயல்பனைத்தும் தொகுத்துக் கூறுதல்*

**இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்ற**
**சிறப்புடை மரபின் அம்முக் காலமும்**
**தன்மை முன்னிலை படர்க்கை என்னும்**
**அம்மூவிடத்தான், வினையினும் குறிப்பினும்**
**மெய்ம்மை யானும் ஈரிரண் டாகும்**
**அவ்வாறு என்ப முற்றியல் மொழியே.** **(௭௰)**

முற்றுச் சொல் இலக்கணம் ஈண்டுத் தொகுத்துக் கூறப்படுகிறது. வினைச் சொல்லுக்குச் சிறப்புரிமையுடைய இறப்பு நிகழ்வு எதிர்வு என்ற மூன்று காலங்களையும் காட்டும். தன்மை முன்னிலை படர்க்கை என்ற, அம் மூன்று இடங்களுக்கும் பொருந்தி வரும். மெய்மை யானும் - உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை என்ற அம்மூன்று வழக்காற்றுப் பொருண்மையானும். அவை தெரிநிலைவினை, குறிப்புவினை என இரண்டிரண்டாக அமைந்து, ஆறுவகைகளாக முற்றுவினை அமையும். முற்றியல் மொழி - முற்றாகி (பொருள்முற்றுப்பெற்று) நடக்கும் வினைச்சொல். அம்முக்காலம், அம்மூவிடம் என்ற சுட்டுக்கள் முன்பே வினையியலுள் கூறப்பட்டதை நினைவுறுத்துகின்றன.

*பொருள் முற்றி வருவன யாவும் வினைமுற்றுக்களே*

**எவ்வயின் வினையும் அவ்வயின் நிலையும்.** **(௭௱)**

முற்கூறியவாறன்றி, வேறு எவ்வகையானேனும் பொருள் முற்றி வருகின்ற வினைச்சொற்களெல்லாம், முற்றுச்சொல் வகைக்குள் அடங்கும். அவ்வயின் - முற்றுச் சொல்வகை. யார், எவன், இல்லை என்பன போல்வனவும் முற்றுச் சொற்களேயாம்.

*வினைமுற்றுக்களனைத்தும் பெயர்கொண்டு முடிதல்*

**அவைதாம்,**
**தத்தம் கிளவி அடுக்குந வரினும்**
**எத்திறத் தானும் பெயர்முடி பினவே. (௯௧௨)**

அம் முற்றுவினைச் சொற்கள், தத்தமக்குரிய வாய்பாடுகளான் அடுக்கி வரினும் (உம்மையால் அடுக்காது தனித்து வரினும்), எவ்வாற்றானும் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் இயல்பினவாம். ஓடினன் பாடினன் ஆடினன் அனுமன். அருளினன் இறைவன். நல்லன் அவன். அருளினன் முருகன்; முருகன் அருளினன் என முன்னும் பின்னுமாய் முடிக்கும் பெயர் நிற்றலும் பெறப்படும்.

*எச்சச் சொற்கள் அனைத்தையும் தொகை வகைப்படுத்துதல்*

**பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை**
**எதிர்மறை உம்மை எனவே சொல்லே**
**குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்**
**நெறிப்படத் தோன்றும் எஞ்சுப்பொருட் கிளவி. (௯௧௩)**

எச்சப் பொருள்தரும் சொற்கள் பிரிநிலை எச்சம், வினையெச்சம், பெயரெச்சம், ஒழியிசை எச்சம், எதிர்மறை எச்சம், உம்மையெச்சம், எனவென் எச்சம், சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் என அப் பத்து வகைகளாக முறைப்படத் தோன்றும். இவற்றுள் முன்னயை ஏழும் முடிக்கும் சொல்லைப் பெற்று முடியும் இயல்பின; இறுதி மூன்றும் செய்யுளுக்குரியவாய், பொருள் மட்டும் எஞ்சி நிற்பன. முன்னைய ஏழனுள் வினையெச்சம், பெயரெச்சம் தவிர்த்தவை இடைச்சொல் அடிப்படை எச்சங்களாகும். எஞ்சிநிற்கும் இயல்புகருதி இவை அனைத்தையும் ஒருங்கு தொகுத்துக் கூறுகிறார்.

*பிரிநிலை எச்சம் முடியுமாறு*

**அவற்றுள்,**
**பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின. (௯௧௪)**

அவற்றுள், பிரிநிலை எச்சம் என்பது, பிரிக்கப்பட்ட பொருளையே முடிக்குஞ் சொல்லாக உடையது. 'யாரும் இல்லை; தானே கள்வன்!' ஏகாரத்தால் பிரிக்கப்பட்டவனே முடிக்குஞ் சொல்லாய் நிற்றல் காண்க.

*வினையெச்சம் முடியுமாறு*

**வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்**
**நினையத் தோன்றிய முடிபா கும்மே**
**ஆவயின் குறிப்பே ஆக்கமொடு வருமே. (915)**

வினையெச்சச் சொல்லுக்குத் தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் எண்ணிப் பார்க்குமாறு தோன்றிய முடிக்குஞ் சொற்கள் ஆகும். அவ்விடத்தே, குறிப்புவினை கொண்டு முடியும்போது, ஆக்கச் சொல்லோடு வரும் என்பதாம். படித்துத் தேறினான். முயன்று செல்வன் ஆயினான்.

*பெயரெச்சம் முடியுமாறு*

**பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே. (916)**

பெயரெச்சச்சொல் பெயரொடு முடியும். பேசும் படம். கற்ற கல்வி. நல்ல பையன்.

*ஒழியிசை எச்சம் முடியுமாறு*

**ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின. (917)**

சொல்லாது ஒழிந்ததைச் (விட்டதைச்) சொல்வது ஒழியிசை. ஒழியிசை - ஒழிந்ததை (விட்டதை) இசைப்பது. ஒழியிசை எச்சம், ஒழியிசையாகவே நிற்கும் பொருளொடு முடியும் இயல்பினதாகும். 'கூரியதோர் வாள்மன்' – 'மன்' இடைச்சொல் இப்போது அக் கூர்மை மழுங்கிப் போனதைக் குறிக்கும். இது குறிப்பாக நிற்கும் எச்சப் பொருளைக் கொண்டு முடிகிறது.

*எதிர்மறை எச்சம் முடியுமாறு*

**எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின. (918)**

எதிர்மறை எச்சம் எதிர்மறைப் பொருளை உணர்த்துதற்குரிய சொல்லைக் கொண்டு முடியும். 'நானா செய்தேன்', 'யானோ செய்தேன்'. செய்யாமையை உணர்த்தலின் எதிர்மறை எச்சம்.

*உம்மை எச்சம் முடியுமாறு*

**உம்மை எச்சம் இருவீற் றானும்**
**தன்வினை ஒன்றிய முடியா கும்மே. (919)**

உம்மை எச்சம் தழுவியதும் அதனால் தழுவப்பட்டதுமான இரண்டு முடிபுவகையானும், தனக்குரிய வினையே மற்றொன்றற்கும் பொருந்திய

முடிபாகும். இரு ஈற்றானும் - இரண்டு வகை முடிபானும். பேச்சாளரும் வந்தனர் என்றால், தலைவரும் வந்தார் என அதே வினைமுடிபுதான் பொருந்திவரும். தலைவரும் விருந்துண்பார் என்றால், மற்றையோரும் உண்பார் என்றே ஆகும். 'தலைவரும் வருக' என்னும்போது 'மற்றையவர்கள் செல்க' என்றோ, 'உண்க' என்றோ பிறிதொரு வினைமுடிபு பொருந்தாது என்பதாம்.

### *உம்மை எச்சமும் காலமயக்கமும்*

**தன்மேற் செஞ்சொல் வரூஉங் காலை**
**நிகழும் காலமொடு வாராக் காலமும்**
**இறந்த காலமொடு வாராக் காலமும்**
**மயங்குதல் வரையார் முறைநிலை யான. (920)**

செஞ்சொல் - உம்மை இல்லாத சொல். உம்மை எச்சச் சொல் வந்து அதற்கு முன்னதாக உம்மையில்லாத செஞ்சொல் வரின் அவை முறைமாறாமல் நிற்குமிடத்து, நிகழ் காலத்தொடு எதிர்காலமும், இறந்த காலத்தொடு எதிர்காலமும் மயங்கி நிற்கும். தன் மேல் - உம்மை ஏற்ற சொல்லுக்கு முன்னதாக. வரையார் - நீக்கமாட்டார்கள். அதாவது அங்ஙனம் மயங்குதல் ஏற்கப்படும் என்பதாம்.

'பழம் உண்கின்றான், பாலும் பருகுவான்' - நிகழ்வும் எதிர்வும் மயங்கின 'பழம் உண்டான், இனிப் பாலும் பருகுவான்'. இறப்பும் எதிர்வும் மயங்கின.

### *என என்னும் எச்சம் முடியுமாறு*

**எனவென் எச்சம் வினையொடு முடிமே. (921)**

'என' என்னும் எச்சம் வினைச்சொல்லைக் கொண்டு முடியும். பெயரைக் கொண்டு முடியாது என்பதாம். வா எனக் கூவினான். ஒல்லென ஒலித்தது.

### *இறுதி மூன்று எச்சங்கள்*
### *முடிக்கும் சொல்லின்றிப் பொருளெஞ்சி நிற்றல்*

**எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்**
**எஞ்சுப்பொருட் கிளவி இலவென மொழிப. (922)**

இதுவரை கூறாது எஞ்சி நிற்கும் சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் என்ற மூன்றும், தமக்கு வேறாய்நின்று மேல்வந்து முடிக்கும்படியான, எச்சப் பொருள்தரும் சொல்லை உடையன அல்ல என்பர். 'எனவே, பிற சொல்லை அவாவி நின்றாலும், அவை வந்து முடியாமல், தாமே அவற்றைக் கூறி நிற்குமாயின', என்பர் நச்சினார்க்கினியர். அவை

குறிப்பாலுணரப் படுவனவன்றி, கொண்டு முடிக்கப்படும் சொற்களையுடையன அல்ல என்பது கருத்து.

*அவை தாமே குறிப்பால் எச்சப்பொருள் தருதல்*

**தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும். (923)**

மேற்சொல்லப்பட்ட மூன்றும் சொல்வோன் எக்குறிப்பின் வழி அவற்றைக் கூறினோனோ, அதன்படி எஞ்சிநிற்கும் பிறிதொரு பொருளை வெளிப்படுத்தும்.

ஒருவர் "சில்லரை வேண்டுமா?" என வினவும்போது, 'என்னிடம் நிரம்ப இருக்கிறது' என்பதிலிறுத்தால், 'வேண்டாம்' என்பதாம். இது சொல்லெச்சம், ஒரு சொல்லளவான குறிப்புப்பொருள் எஞ்சிநிற்கிறது.

'நீ பெரிய ஆளப்பா' என்றால், கூறுவோன் குறிப்பினால் 'மட்டமானவன்' என்பது பெறப்படுகிறது. இது குறிப்பெச்சம். 'மைவிழியார் மனை அகல்' என்றால், மை தீட்டி மயக்கும் விழியுடையார் எனவே, குலப்பெண்டிரை நீக்கிப் பரத்தையரைக் குறிப்பது இசையெச்சம். இசை - சொல்லாட்சியால் பெறப்படும் பிறிதொரு பொருள். தொல்காப்பியர் காலத்தில் இவை போல்வனவற்றிற்கும் செய்யுட்களிலிருந்துதான் உதாரணம் காட்டினர். சிற்சிலவற்றுக்கு உரைநடைவழக்கு காட்டப்பட்டுள்ளன. இக்காலத்திற்கேற்ப இவண் பல உலகவழக்கினின்றே காட்டப்படுகின்றன.

*சொல்லெச்சத்திற்கு ஒரு புறனடை*

**சொல்என் எச்சம் முன்னும் பின்னும்**
**சொல்லள வல்லது எஞ்சுதல இன்றே. (924)**

சொல்லெச்சம் என்பது முன்னதாகவோ, பின்னதாகவோ ஒரு சொல் அளவு எஞ்சிநிற்பதல்லது, கூடுதலாக எஞ்சி நில்லாது.

'உணவு ஆயத்தமாகவுளது' - உண்ண வருக என்பது சொல்லெச்சம். 'உணவுண்ண வரலாம்' என்றால், ஆயத்தமாகவுளது என இதுவும் சொல்லெச்சம். இவ்எச்சங்கள் மூன்றும், முன்பு செய்யுளில் பயின்று வழங்கியவையாகும்.

*சில சொல் வழக்காற்று மரபுகள்*
*இடக்கர்ச் சொல்லை மறைத்துக் கூறுதல்*

**அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல். (925)**

பலர்கூடிய அவைக்கண் கூறத்தகாத சொல்லை, மறைத்துக் கூறுதல் வேண்டும். மறைத்தனர் கிளத்தல் மறைத்து வேறுவாய்பாட்டாற் கூறுக என்பதாம்.

நெடுந்தூக்கம், நெடும்பயணம் எனச் சாவைக் குறிப்பன, மங்கல வழக்கிற்கூறுவன. வாய்பூசுதல், கால் கழுவுதல் முதலியன இடக்கரடக்கிக்கூறுவன.

*வழக்கில் பொருந்தியவற்றை மறைக்கவேண்டா*

**மறைக்கும் காலை மரீஇயது ஒராஅல். (926)**

அங்ஙனம் மறைத்து, வேறு சொல்லாற் கூறும்போது, வழக்கத்தில் நெடுங்காலமாகப் பொருந்தி வருவனவற்றை அவ்வாறு நீக்கற்க என்பதாம். ஆட்டுப் பிழுக்கை, ஆப்பீ என்பன. மரீஇயது - அடிப்படப் பொருந்தி வழங்கி வருவது. அவற்றை மறைத்துக் கூறவேண்டுமென்பதில்லை.

*ஈ தா கொடு*
*சொற்களுணர்த்தும் மரபுகள்*

**ஈதா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்**
**இரவின் கிளவி ஆகிடன் உடைய. (927)**

ஈ, தா, கொடு என்று கூறப்படும் மூன்று வினைச் சொற்களும் ஒருவன் மற்றவனிடம் இரத்தற்கண் கூறும் சொல்லாதற்குரியன. இரவின் கிளவி – இரக்கும் சொல். இரத்தல் எனில் கேட்டும் வேண்டுதலும் அடங்கும். ஏவல் சொற்களாகமட்டுமன்றி வினைமுற்றுக்களாகப் பயன்படுமிடங்களுக்கும் இவ்விதிகள் பொருந்தும்.

*ஈதற்சொல் மரபு*

**அவற்றுள்,**
**ஈஎன் கிளவி இழிந்தோன் கூற்றே. (928)**

அவற்றுள் ஈ என்பது உயர்ந்தோனிடம் இழிந்தோன் கூறி இரக்கும் சொல்லாகும். ஆடை ஈ; சோறு ஈ; பாரி முல்லைக்குத் தேர் ஈந்தான். 'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை' (குறள். 221)

*தா என்னும் சொல் மரபு*

**தாஎன் கிளவி ஒப்போன் கூற்றே. (929)**

'தா' என்னும் சொல் தன்னை ஒப்பான் ஒருவனிடம் இரக்கும்போது கூறும் சொல்லாகும். எனக்குத் தண்ணீர் தா, ஒரு துண்டு இருந்தால் தா. கண்ணன் நண்பனுக்குப் புத்தாடை தந்தான். என் கணவர் புத்தாடை தந்தார் என்பர்; ஈந்தார் என்னார்.

*'கொடுத்தல்' சொல் மரபு*

**கொடுஎன் கிளவி உயர்ந்தோன் கூற்றே. (930)**

'கொடு' எனும் சொல் உயர்ந்தோன் ஒருவன் தன்னைவிடத் தாழ்ந்தோன் ஒருவனிடம் இரக்கும் கூற்றாகும். எனக்கு ஒரு யானைப் பரிசில் கொடு, 'என் வீட்டிற்குச் சில அலங்காரப் பொருள் கொடு'. 'வரி கொடுக்க வேண்டும்' – ஓர் அரசு அறிவிப்பு. ஆசிரியன் மாணவனிடம் 'நாளைக்கு எனக்குச் சம்பளம் கொடு' எனக்கேட்பது மரபு.

*'கொடுத்தல்' சொல் தன்மைக்குப் பொருந்தும் முறை*

**கொடு என் கிளவி படர்க்கை யாயினும்**
**தன்னைப் பிறன்போற் கூறும் குறிப்பின்**
**தன்னிடத்து இயலும் என்மனார் புலவர். (931)**

எனக்குத்தா, அவனுக்குக் கொடு என்று கூறுதல் பொது மரபு. பொதுவாகக் 'கொடு' என்ற சொல், 'அரசன் புலவருக்குக் கொடை கொடுத்தான்' எனப் படர்க்கைக்குச் சிறப்பாக வரும். இங்ஙனம் 'கொடு' என்ற சொல்லே படர்க்கைப் பொருண்மைத்தாய்ச் சிறப்புரிமையுடையது. ஆயினும் உயர்ந்தோன், தாழ்ந்த நிலையினனிடம் எனக்குத் தா, ஈ என்னாமல், 'இந்த ஏழைக்குக் கொடு' எனக் கேட்பது, தன்னைப் பிறன்போல் கருதிக் கூறும் குறிப்பாகும். அந்நிலையில் அச் சொல் தன்மையிடத்ததாய் இயல்கிறது என்பர் புலவோர்.

*இலக்கணம் வரையறுக்கப்பாத சொல்வகைகள்*

**பெயர்நிலைக் கிளிவியின் ஆஅ குநவும்**
**திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்**
**தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்**
**மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்**
**மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்**
**அன்றி அனைத்தும் கடப்பா டிலவே. (932)**

இதன்கண் இலக்கண வரையறை கூறவியலாத – இலக்கணக் கடப்பாடு இல்லாத சொற்கள் தொடர்கள் தொகுத்துரைக்கப் படுகின்றன. இதன்பொருள் தெளிவுபடாது நிற்கிறது. பலரும் பலவாறு உரை கூறியுள்ளனர். பெயர்நிலைக் கிளவி – பெயர்த்தன்மையுடைய சொற்களாக ஆகுவன. வேங்கை எனும் சொல் புலியையும் மரத்தையும் உணர்த்தி வேகும் + கை எனவும் பொருள்படுதல். கடித ஓலையைத் திருமுகம் என்பதைக் காட்டுவர் பாவலரேறு பாலசுந்தரம்.

திசைநிலைக் கிளவி – திசைச்சொற்களாய்ப் பொருள் வேறுபடுவன. கரை என்பதை 'ஏழு கரையார்' என வகுப்புப்பிரிவைக் குறிக்க ஒரு சாரார் வழங்குவர். 'திரு' ஒரு வகுப்பாரால், தாலியைக் குறிக்க வழங்கப்படுகிறது. (திருப்பூட்டுதல்.)

தொன்னெறி மொழி – பழமொழிகள் போல் தொன்றுதொட்டுப் பொருள்தரும் நிலைமை உண்டு. 'பிறை கல்வி மலைநடக்கும்' – யானையைக் குறிக்கும்.

மெய்ந்நிலை மயங்கு – உலக வழக்கில் பொருள் மயக்கமுற்று ஆகியன. முசுமுசுக்கை என்பதைச் சித்த மருத்துவர் இருகுரங்கின்கை என்பது.

மந்திரப் பொருள்வயின் – மந்திரச் சொற்களாய்ப் பொருளுணர்த்துவன. 'எட்டினோடு இரண்டும் அறியேனை' – இவை அ, உ என்பவற்றை உணர்த்துதல். இவ்வாறு பாவலரேறு பாலசுந்தரமும் சில காட்டுகள் தந்துள்ளார். எனினும் இவை மேலும் ஆராயற்பாலனவாயுள்ளன.

### *செய்யாய் எனும் சொல்மரபு*

**செய்யாய்என்னும் முன்னிலை வினைச்சொல்**
**செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே. (933)**

செய்யாய் என்னும் வாய்பாட்டு முன்னிலை வினைச்சொற்கள், 'செய்' என நிற்றலும் உண்டு. அருளாய் – அருள், பாராய் – பார். 'ஆய்' ஈறு கெட்டு நின்றன.

### *ஈ, ஏ முன்னிலை வினை ஈறுகளாக வருதல்*

**முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்**
**அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே. (934)**

முன்னிலை வினைச்சொல்லின் முன் ஈ ஈறும் ஏ ஈறும் பொருந்தி வரும். அம் முன்னிலை மரபிற்கேற்ற மெய்யெழுத்துக்களைப் பெற்று, அவற்றினை ஊர்ந்து ஈ, ஏ இரண்டும் வரும். சென்றீ, நின்மே.

### *புதிய சொற்களை மொழியில் ஏற்றல்*

**கடிசொல் இல்லைக் காலத்துப் படினே. (935)**

காலந்தோறும் அவ்வக் காலச்சூழலில், மொழியின்கண் தோன்றி வழங்குமாயின், அச் சொற்கள் நிற்கும் நிலைமையின அல்ல. கடிசொல் – கடியப்படும் சொல், நீக்கப்படும் சொல். முன்பு சள்ளை, சமழ்ப்பு என்பவற்றைக் காட்டினர். இன்று அறிவியல், கலையியல், துறைகளில் ஆக்கப்பட்டு, வழக்கிற்கு வருவன கணக்கில.

*முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை*
*மரபுவழி இடமும் அளவுமறிந்து குறைத்தல்*

**குறைச்சொற் கிளவி குறைக்கும் வழி அறிதல். (936)**

குறைத்தற்குரிய தன்மையுடைய சொற்கள் சிலவுள. அவை 'குறைச்சொற்கிளவி' எனப்பட்டன. அவற்றை குறைக்கும் இடமும் அளவுமறிந்து குறைத்து வழங்கவேண்டும். தாமரையை மரை என்பது முதற்குறை; ஓந்தியை ஓதி என்பது இடைக்குறை; நீலம் நீல் ஆவது கடைக்குறை. கண்டவாறு கண்ட சொற்களையெல்லாம் குறைப்பது முறையன்று. குறைத்தற்குரியனவற்றை மட்டும், குறைக்கும் வழிமுறை அறிந்து குறைக்க வேண்டும். நாம் நினைத்தவாறு சிதைத்துக் கூறி, இவை முதலிடைகடைக் குறையாயின என விவாதிக்க இயலாது.

*குறைசொற்கள் நிறைப்பெயரியல்பினவே*

**குறைத்தன வாயினும் நிறைப்பெயர் இயல. (937)**

அங்ஙனம் அவை குறைக்கப்ட்டனவாயினும் முழுப்பெயர் போலவே பொருளுணர்த்தும் இயல்பினவாம். இதனால் பெயர்ச்சொற்களே முதல் - இடை - கடைக் குறையாய் அமைவன என்பது உய்த்துணரப்படும்.

*இடைச்சொற்கள் பெயர்வினைப் பொருளை*
*வேறுபடுத்த வரும் சொற்களே*

**இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே. (938)**

இடைச்சொற்கள் என்பன அனைத்தும் பெயர் வினைகளை அடுத்துநின்று அவற்றின் பொருளை வேறுபடுத்தும் சொற்களேயாம். "இடைச்சொல் பொருளை வேறுபடுக்கும் சொல் எனப்படும்; பொருளுணர்த்தும் சொல்லெனப்படா" என்பார் தெய்வச்சிலையார். பெயர், வினைகள் தனிப்பொருளுடையன. ஐ ஆல் கு இன் அது கண் போலும் உருபுகள், பிறவற்றின் பொருளை வேறுபடுத்த உதவுவனவேயாகும்.

*உரிச்சொற்களிலும் அவ்வியல்புடையன உள*

**உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய. (939)**

உரிச்சொற்களிலும் அவ் இடைச்சொற்கள் போலப் பெயர் வினைகளின் பொருளை வேறுபடுத்தற்குரியவை உரியவாம். நனிபேதை, சாலத்தின்றான், அடைமொழிகளாய்ப் பெயர்ப் பொருளை விசேடித்தன. உரிச்சொற்களுள் செல்லல், இன்னல் எனத் தனித்துநின்று பொருள்தருவனவுமுளவாமாதலின், 'உரியவை உரிய' என்றார்.

*வினையெச்சச் சொற்கள் வேறுபட்ட*
*பல வடிவங்களையுடைய*

**வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய. (940)**

வினையெச்சச் சொல்லும்(உம்மையால் பிறவும்) வேறுபட்டமையும் பல வடிவங்களையுடைய. பல் குறிய. - பல வடிவங்களையுடைய. இதற்குப் பல இலக்கணத்தையுடைய என்றும் உரை கூறுவர். ஞாயிறு பட வந்தான் என்பதை ஞாயிறுபட்டு வந்தான் என்பர். செய வாய்பாட்டைச் செய்து வாய்பாடாக்கி கூறுவதிது. செய்து வாய்பாட்டு வினையெச்சங்கள் நடந்து, சென்று என்றே அமையும். ஆயினும் ஓடி, போய் என்பனவும் செய்து என் எச்சமாகவே கருதப்படும். 'மோயினள் உயிர்த்த காலை' (அகம். 5). மோந்து என எச்சப்பொருள்தரும் முற்று இது. 'கொய்குவம் சென்றுழி' - கொய்யச் சென்றுவழி. கண்ணியன் வில்லன் வரும் - கண்ணியணிந்து வில்லேந்திவரும்.

*அவ்வாறு வடிவவேறுபாடுகள் அமைதலைத் தொடர்மொழி*
*வழக்காற்றிலேதான் அறிய இயலும்*

**உரையிடத் தியலும் உடனிலை அறிதல். (941)**

தொடர்மொழியாய் உரைக்குமிடத்தேதான், முடிக்கும் சொல்லுடன் பொருந்தி நிற்பதைக் கொண்டு, மேற்கூறிய வினைச்சொல் வேறுபாடுகள் அறியப்படும். 'மோயினள் உயிர்த்தகாலை'. தொடராக உரைக்குமிடத்தேதான், உடன்நிற்பன கொண்டு, முன்னது முற்றெச்சம் என அறியப்படும். ஞாயிறுபட்டு வந்தான் எனும் தொடரில், பட என இருக்கவேண்டுமென்பது, அதனைத் தொடராகவைத்தெண்ணும் போதுதான் தோற்றும்.

*குறிப்பால் பொருளுணரப்படுவன சொல்வான்*
*சூழற்குறிப்பினால் பொருளறியப்படுவன*

**முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே**
**இன்ன என்னும் சொல்முறை யான. (942)**

சொல்லினாலன்றி, சொல்வானது குறிப்பால், இத்தன்மைய என்னும் சொல்லினது தொடர்ச்சிக்கண் வைத்துப் பொருள் அறியப்படும் சொற்களும் உள. முன்னம் - மனக்குறிப்பு. இன்ன என்னும் சொல்முறையான் - இத்தன்மைய என்னும் சொல் தொடர்ச்சியால். 'குழை கொண்டு கோழி எறியும் வாழ்வினர்' எனில், பெருஞ்செல்வர் என்பது பெறப்படும் குறிப்புப் பொருளாகும்.

*ஒருபொருட் பன்மொழிகள் பிரித்தறியப்படாமல்*
*இணைந்தே வழங்கும்*

**ஒருபொருள் இருசொல் பிரிவில வரையார் (943)**

ஒரே பொருளைத் தரும் இருசொற்கள் பிரிவின்றி இணைந்து வருவதை நீக்கமாட்டார்கள். 'உயர்ந்தோங்கு செல்வத்தார்'. உச்சி மீமிசை.

### ஒருமைச் சொல் பன்மைக்கு ஆதல்

**ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி**
**பன்மைக்கு ஆகும் இடனுமா ருண்டே. (944)**

ஒருமை குறித்த பெயர்ச்சொல் பன்மைக்கு ஆகும் இடங்களும் உள. 'ஏவல் இளையவர்களது தாய் வயிறு கரிப்ப' எனில் தாயர் எனற்பாலது, தாய் என ஒருமையாய் நின்றது; நிற்பினும் அது பன்மையையே குறிக்கும் என்பதாம்.

### ஆற்றுப்படையில் முன்னிலை ஒருமை வந்து பன்மை வினைகொண்டு முடிதல்

**முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி**
**பன்மையொடு முடியினும் வரைநிலை இன்றே**
**ஆற்றுப்படை மருங்கின் போற்றல் வேண்டும். (945)**

முன்னிலையில் வரும் ஒருமைச் சொல் பன்மையுடன் முடியினும் நீக்கும் நிலைமை இன்று. ஆற்றுப்படை இலக்கியத்தில் இங்ஙனம் வருவதைப் போற்றி ஏற்றுக் கொள்ள வேண்டும். பெரும்பாணாற்றுப்படையுள் 'புலவு வாய்ப் பாண' என விளித்து, 'பல்வேல் திரையற் படர்குவிராயின்' என்று முடிகிறது. இது தவறன்று என்பதாம்.

### சொல்லதிகாரத்திற்கு புறனடை இதுவரை சொன்ன நெறிமுறை பிழையாது, மேற்கொண்டு இடம்பெறும் சொல்லிலக்கணத்தை வகைப்படுத்துக

**செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்**
**மெய்பெறக் கிளந்த கிளவி எல்லாம்**
**பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது**
**சொல்வரைந்து அறியப் பிரித்தனர் காட்டல். (946)**

செய்யுள் வழக்கிலும் உலக வழக்கிலும், இதுகாறும் வழக்காற்றுப்படி பொருண்மைபெறக் கூறப்பட்ட நெறிமுறைகள் எல்லாம் முற்றுப்பெறக் கூறப்பட்டன எனல் இயலாது. எனவே மொழிபற்றிய பல்வேறு செய்கைகளின் விளக்கமான இலக்கணநூல் காட்டிய வழியில், பிழைபடாமல், சொற்களினதிலக்கணத்தை வரையறைப்படுத்தி அனைவரும் அறியுமாறு, வகைப்படுத்திக் காட்டுவீர்களாக. அதாவது இதுகாறும் சொன்ன நெறிப்படி, பிழையாது, மேல்வரும் சொல்லிலகக்ணங்களையும் வகைப்படுத்தி உணர்த்துவீர்களாக என்பதாம். இலக்கண வளர்ச்சி காலந்தோறும் உருவாக்கி அறியவேண்டிய இயல்பையுடையது என்பதைத் தொல்காப்பியர் அறிவுறுத்துகிறார்.

# நூற்பா முதற்குறிப்பு


| | | | |
|---|---|---|---|
| அ ஆ வ... என சொல்லே | 492 | அவற்றுள் இரங்கல் | 842 |
| அ ஆ வ என... படர்க்கை | 701 | அவற்றுள் ஈஎன் | 928 |
| அ எனப் பிறத்தல் | 593 | அவற்றுள் எழுவாய் | 549 |
| அசைநிலை | 756 | அவற்றுள் செய்கு | 689 |
| அச்சக்கிளவி | 584 | அவற்றுள் செய்யும் | 723 |
| அச்சம் | 739 | அவற்றுள் தடவென் | 804 |
| அடிமறி | 890 | அவற்றுள் தருசொல் | 512 |
| அடைசினை | 509 | அவற்றுள் நான்கே | 660 |
| அண்மைச் சொல்லிற்கு | 616 | அவற்றுள் நிரனிறை | 888 |
| அண்மைச் சொல்லே | 612 | அவற்றுள் நீஎன் | 674 |
| அதற்குவினை | 560 | அவற்றுள் பன்மை | 694 |
| அதனின் | 558 | அவற்றுள் பிரிநிலை | 914 |
| அதிர்வும் | 799 | அவற்றுள் பெயரென | 645 |
| அதுஇது | 652 | அவற்றுள் முதனிலை | 715 |
| அதுச்சொல் | 698 | அவற்றுள் முன்னிலைக்கிளிவி | 708 |
| அத்திணை | 704 | அவற்றுள் முன்னிலைதன்மை | 711 |
| அந்தில் | 752 | அவற்றுள் விறப்பே | 831 |
| அந்நாற்சொல் | 886 | அவற்றுள் வினை | 536 |
| அப்பொருள் | 519 | அவற்றுள் வேற்றுமை | 896 |
| அமர்தல் | 863 | அவற்றுள் யாதென | 515 |
| அம்ம | 761 | அவற்றொடு | 720 |
| அம்மஎன்னும் | 638 | அவைதாம் அம்ஆம் | 687 |
| அம்முக்கிளவி | 716 | அவைதாம் இஉஐ | 605 |
| அயல்நெடி | 630 | அவைதாம் உறுதவ | 784 |
| அரியே | 839 | அவைதாம் தத்தம் | 599 |
| அர்ஆர்ப | 691 | அவைதாம் தத்தம் | 912 |
| அலமரல் | 794 | அவைதாம் புணரியல் | 735 |
| அவற்றின் வரூஉம் | 775 | அவைதாம் பெண்மை | 661 |
| அவற்றுள் அழுங்கல் | 893 | அவைதாம் பெயர் | 548 |
| அவற்றுள் அன் என் இறுதி | 615 | அவைதாம் முன்மொழி | 902 |
| அவற்றுள் இ ஈ ஆகும் | 606 | அவைதாம் முன்னும் | 736 |
| அவற்றுள் இகுமும் | 760 | அவையல் | 925 |
| அவற்றுள் இயற்சொல் | 881 | அவ்வச்சொல் | 780 |

| | |
|---|---|
| அவ்வழி அவன் | 647 |
| அவ்வே இவ்வென | 604 |
| அளபெடை மிகூஉம் | 610 |
| அளபெடைப் பெயரே | 620 |
| அளபெடைப் பெயரே | 626 |
| அளபெடைப் பெயரே | 634 |
| அளவும் நிறையும் | 601 |
| அன் ஆன் | 690 |
| அன்மையின் | 699 |
| அன்ன பிறவும் அஃறிணை | 655 |
| அன்ன பிறவும் உயர் | 651 |
| அன்ன பிறவும் கிளந்த | 879 |
| அன்ன பிறவும் தொன் | 585 |
| ஆ ஓ ஆகும் | 680 |
| ஆக ஆகல் | 765 |
| ஆக்கக்கிளவி | 505 |
| ஆக்கந்தானே | 504 |
| ஆங்க | 762 |
| ஆடூஉ அறிசொல் | 485 |
| ஆண்மை அடுத்த | 648 |
| ஆண்மை சுட்டிய | 666 |
| ஆண்மை திரிந்த | 495 |
| ஆய் என் கிளவி | 697 |
| ஆறன் மருங்கின் | 582 |
| ஆறாகுவதே | 563 |
| ஆரும் | 623 |
| ஆன்என் | 617 |
| இசைத்தலும் | 543 |
| இசைநிறை | 894 |
| இசைப்படு | 906 |
| இசைப்பு | 793 |
| இடைச்சொல் எல்லாம் | 938 |
| இடைச்சொல் கிளவி | 644 |
| இடையென | 734 |
| இதனது இது | 594 |
| இதுசெயல்வேண்டும் | 728 |
| இயற்பெயர் | 755 |
| இரட்டை | 531 |
| இரண்டாகு | 555 |
| இருதிணைச்சொற்கும் | 657 |
| இருதிணைப்பிரிந்த | 646 |
| இருதிணை மருங்கின் | 493 |
| இருபெயர் | 900 |
| இர்ஈர் | 709 |
| இலம்பாடு | 843 |
| இயற்கையின் | 564 |
| இயற்கைப்பொருளை | 502 |
| இயற்சொல் | 880 |
| இயற்பெயர்க்கிளவி | 521 |
| இயற்பெயர் | 659 |
| இயைபே | 792 |
| இறப்பின் | 910 |
| இறப்பின் | 685 |
| இறுதியும் | 587 |
| இறைச்சி | 681 |
| இனச்சுட்டில்லா | 501 |
| இனைத்தென | 516 |
| இன்று இல | 705 |
| இன்னபெயரே | 678 |
| ஈதாகொடு | 927 |
| ஈரளவு | 766 |
| ஈற்று | 771 |
| உகப்பே | 789 |
| உகரம் | 608 |
| உசாவே | 853 |
| உணர்ச்சி | 876 |
| உம்உந்தாகும் | 777 |
| உம்மை எச்சம் | 919 |
| உம்மை எண்ணின் | 776 |
| உம்மை எண்ணும் | 772 |
| உம்மைதொக்க | 774 |
| உயர்திணைஎன் | 484 |
| உயர்திணை | 904 |
| உயாவே | 852 |
| உரிச்சொல் | 939 |
| உரிச்சொற்கிளவி | 782 |

| | |
|---|---|
| உருஉட்காகும் | 785 |
| உருபு | 586 |
| உருவென | 507 |
| உரையிடத்து | 941 |
| உவம | 897 |
| உளவென | 637 |
| எச்ச உம்மை | 768 |
| எச்சம் | 740 |
| எஞ்சிய இரண்டின் | 629 |
| எஞ்சிய மூன்றும் | 922 |
| எஞ்சிய கிளவி | 710 |
| எஞ்சுபொருட் | 769 |
| எடுத்த மொழி | 544 |
| எண்ணுங்காலும் | 530 |
| எண்ணேகாரம் | 773 |
| எதிர்மறுத்து | 591 |
| எதிர்மறை | 918 |
| எப்பொருளாயினும் | 518 |
| எய்யாமையே | 825 |
| எல்லாச்சொல் | 640 |
| எல்லாத் | 903 |
| எல்லாம் | 671 |
| எல்லாரும் | 649 |
| எல்லே | 754 |
| எவ்வயின் செவ்விது | 552 |
| எவ்வயின் | 911 |
| எழுத்துப் | 878 |
| எறுழ் | 871 |
| எற்றம் | 820 |
| எற்றென் | 748 |
| எனவென் | 921 |
| என்றுஎன் | 744 |
| என்றும்எனவும் | 779 |
| ஏயும் | 757 |
| ஏழாகுவதே | 565 |
| ஏனை இரண்டும் | 513 |
| ஏனைஉயிரே | 609 |
| ஏனை எச்சம் | 717 |
| ஏனைக் காலமும் | 733 |
| ஏனைக் கிளவி | 675 |
| ஏனைப்புள்ளி | 614 |
| ஒப்பில் | 763 |
| ஒருபெயர் | 532 |
| ஒருபொருள் இருசொல் | 943 |
| ஒருபொருள் இலவே | 525 |
| ஒருபொருள் குறித்த | 882 |
| ஒருமை எண்ணின் | 527 |
| ஒருமை சுட்டிய எல் | 668 |
| ஒருமை சுட்டிய பெயர் | 944 |
| ஒருவரைக் கூறும் | 510 |
| ஒருவர் என்னும் | 676 |
| ஒருவினை | 575 |
| ஒழியிசை | 917 |
| ஒன்றறிகிளவி | 491 |
| ஒன்றறிசொல் | 486 |
| ஒன்றன் | 702 |
| ஒன்றுவினை | 537 |
| ஓய்தல் | 813 |
| ஓவும் உவ்வும் | 607 |
| ஐந்தாகு | 561 |
| ஐயமும் | 867 |
| ஐயும் கண்ணும் | 589 |
| ஐவியப் | 868 |
| கடதற என்னும் | 688 |
| கடிசொல் | 935 |
| கடியென் | 866 |
| கண்கால் | 566 |
| கண்ணுர் | 908 |
| கண்ணும் தோளும் | 545 |
| கதழ்வும் | 798 |
| கமம் | 838 |
| கம்பலை | 832 |
| கயவென் | 805 |
| கருமம் | 568 |
| கருவி | 837 |
| கவர்வு | 845 |

| | |
|---|---|
| கவவூ | 840 |
| கழிவே | 737 |
| கழுமென் | 834 |
| கள்ளொடு | 654 |
| கறுப்பும் | 855 |
| கன்றலும் | 570 |
| காப்பின் | 556 |
| காலந்தாமே | 684 |
| காலம் | 541 |
| கிளந்த அல்ல | 602 |
| கிளந்த அல்ல | 781 |
| கிளந்த இறுதி | 635 |
| குஐஆன் என | 592 |
| குடிமை | 540 |
| குத்தொக | 583 |
| குருவும் | 786 |
| குறித்தோன் | 539 |
| குறிப்பினும் | 686 |
| குறைச்சொல் | 936 |
| குறைத்தன | 937 |
| கூர்ப்பும் | 797 |
| கூறிய இயற்கைய | 553 |
| கூறிய | 873 |
| கெடவரல் | 802 |
| கேட்டை | 909 |
| கொடுஎன் | 930,931 |
| கொல்லே | 753 |
| சாயல் | 808 |
| சிதைந்தன | 885 |
| சிறப்பினாகிய | 524 |
| சினைநிலை | 569 |
| சீர்த்தி | 796 |
| சுட்டுமுதலாகிய | 523 |
| சுட்டுமுதற்பெயரும் | 633 |
| சுட்டுமுதற் பெயரே | 627 |
| சுண்ணம் | 889 |
| செந்தமிழ் | 883 |
| செப்பினும் | 499 |
| செப்பும் | 496 |
| செப்பே | 498 |
| செயப்படு | 731 |
| செயற்கை | 503 |
| செய்துஎன் | 724 |
| செய்துசெய்யூ | 713 |
| செய்யாய் | 933 |
| செய்யுள் | 946 |
| செலவினும் | 511 |
| செல்லல் | 787 |
| செழுமை | 835 |
| சேரே | 846 |
| சொல்லென | 643 |
| சொல்லென் | 924 |
| ஞெமிர்தலும் | 844 |
| தகுதியும் | 500 |
| தஞ்ச | 751 |
| தடவும் | 803 |
| தத்தம் எச் | 722 |
| தத்தம் குறிப் | 923 |
| தநநுஎஎன | 639 |
| தநநு எ எனும் | 893 |
| தன்மேற் | 920 |
| தன்மை சுட்டலும் | 508 |
| தன்மை சுட்டின் | 677 |
| தன்மைச்சொல்லே | 526 |
| தன்னுள் | 672 |
| தாஎன் | 929 |
| தாம்என் | 669 |
| தான்என் | 622 |
| தான்என் கிளவி | 670 |
| தாவே | 827 |
| திணையொடு | 682 |
| தீர்தலும் | 801 |
| துயவு | 851 |
| துவன்று | 815 |
| துவைத்தலும் | 841 |

| | | | |
|---|---|---|---|
| தெரிநிலை | 656 | பன்மையும் - டிலவே | 700 |
| தெரிபு | 642 | பன்மையும் - அஃறிணை | 703 |
| தெவு | 828 | பன்மையும் - குறிப்பொடு | 706 |
| தெவ்வு | 829 | பால்அறி மரபின் | 696 |
| தெளிவின் | 746 | பால்மயக்குற்ற | 506 |
| தேற்றம் | 742 | பிணையும் | 821 |
| தொழிலிற் | 618 | பிண்ட | 574 |
| தொழிற்பெயர் | 624 | பிரிநிலை வினா | 741 |
| நம்பும் | 812 | பிரிநிலை வினை | 913 |
| நளியென் | 806 | பிறிது | 588 |
| நனவே | 859 | பின்முன் | 714 |
| நன்றீற்று | 767 | புதிது | 862 |
| நன்று | 826 | புலம்பே | 814 |
| நான்கா | 559 | புள்ளியும் | 636 |
| நிகழூஉ | 658 | புனிறென் | 858 |
| நிரனிறை | 887 | பெண்மை - சினைமுதல் | 663 |
| நிலப் பெயர் | 650 | பெண்மை - உயர்திணை | 487 |
| நிலனும் | 719 | பெண்மை - எல்லா | 665 |
| நிறத்துரு | 856 | பெண்மைச் சினை | 662 |
| நின்றாங்கு | 542 | பெண்மை முறை | 664 |
| நீயிர்நீ | 673 | பெயரினாகிய | 551 |
| நும்மின் | 628 | பெயரினும் | 533 |
| நொசிவும் | 857 | பெயரெஞ்சு - திரியா | 721 |
| பசப்பு | 791 | பெயரெஞ்சு - முடிமே | 916 |
| படரே | 823 | பெயர்நிலைக்கிளவி காலம் | 554 |
| பணையே | 822 | பெயர்நிலைக்கிளவியின் | 932 |
| பண்புகொள் | 619 | பேம்நாம் | 848 |
| பண்புகொள் | 625 | பையுளும் | 824 |
| பண்புதொக | 901 | பொருட்குத் | 875 |
| பயப்பே | 790 | பொருட்குப் | 874 |
| பரவும் | 865 | பொருண்மை தெரி | 641 |
| பலவயினானும் | 534 | பொருண்மை | 550 |
| பல்ல | 653 | பொருளொடு | 520 |
| பல்லோர் | 712 | பொருள்தெரி | 891 |
| பழுது | 807 | பொற்பே | 818 |
| பன்முறை | 718 | மகடூஉ | 679 |
| பன்மைசுட்டிய | 667 | மதவே | 860 |
| பன்மையும் - உயர்திணை | 693 | மல்லல் | 788 |

| | |
|---|---|
| மழவும் | 795 |
| மறைக்கும் | 926 |
| மற்றென் | 747 |
| மற்றையது | 749 |
| மன்றஎன் | 750 |
| மன்னா | 517 |
| மாஎன | 758 |
| மாதர் | 811 |
| மாரை | 692 |
| மிகுதியும் | 861 |
| மிக்கதன் | 727 |
| மியாஇக | 759 |
| முதலிற்கூறும் | 598 |
| முதலும் | 573 |
| முதல்முன் | 572 |
| முதற்சினை | 571 |
| முந்நிலை | 725 |
| முரஞ்சல் | 816 |
| முழுதென் | 809 |
| முறைப்பெயர்க்கிளவி | 621 |
| முறைப்பெயர்க்கிளவி | 632 |
| முறைப்பெயர் மருங்கின் | 611 |
| முற்பட | 522 |
| முற்றிய | 770 |
| முனைவு | 869 |
| முன்னத்தின் | 942 |
| முன்னிலைசுட்டிய | 945 |
| முன்னிலை முன்னர் | 934 |
| முன்னிலை வியங் | 707 |
| மூன்றனும் | 576 |
| மூன்றா | 557 |
| மெய்பெற | 872 |
| மொழிப்பொருட் | 877 |
| மொழிமாற்று | 892 |
| யாஅர்என் | 695 |
| யாகாபிற | 764 |
| யாணு | 864 |
| யாதன் | 590 |
| யாதெவன் | 514 |
| ரஃகான் | 490 |
| வடசொல் | 884 |
| வண்ணத்தின் | 899 |
| வண்ணம் | 562 |
| வம்பு | 810 |
| வயவலி | 849 |
| வயாஎன் | 854 |
| வறிது | 819 |
| வன்புற | 729 |
| வாராக்காலத்தும் | 726 |
| வாராக்காலத்து வினை | 730 |
| வாராமரபின | 905 |
| வார்தல் | 800 |
| வாள்ஒளி | 850 |
| வியங்கோள் | 528 |
| வியல்என் | 847 |
| விரைசொல் | 907 |
| விழுமம் | 836 |
| விழைவின் | 745 |
| விழைவே | 738 |
| விளிகொள் | 547 |
| விளிஎன | 603 |
| விறப்பும் | 830 |
| வினாவும் | 497 |
| வினையினும் | 631 |
| வினையின் தொகுதி | 898 |
| வினையின் தோன்றும் | 494 |
| வினையெஞ்சு கிளவியும் | 940 |
| வினையெஞ்சு கிளவிக்கு | 915 |
| வினையென | 683 |
| வினையே | 743 |
| வினையொடு | 778 |
| வினைவேறுபடாஅ | 538 |
| வினைவேறுபடூஉம் | 535 |
| வெம்மை | 817 |
| வெளிப்படு | 783 |
| வேறுவினை | 529 |
| வேற்றுமைத்தாமே | 546 |
| வேற்றுமைத்தொகை | 895 |
| வேற்றுமைப்பொருளை | 567 |
| வேற்றுமைமருங்கில் | 600 |
| வையே | 870 |
| ளஃகான் ஆடூஉ | 488 |
| னஃகான் மகடூஉ | 489 |
| னரலள என்னும் | 613 |

# தொல்காப்பியம்

மாணவர்களுக்கு என முதன்முதலில் எழுதப்பெற்ற
புதியமுறை எளியவுரை

❀ தொல்காப்பியம்

1. எழுத்ததிகாரம்
2. சொல்லதிகாரம்
3. பொருளதிகாரம் – அகத்திணையியல், புறத்திணையியல்
4. களவியல், கற்பியல், பொருளியல்
5. மெய்ப்பாட்டியல், உவமையியல்
6. செய்யுளியல், மரபியல்
   ( ஆறு தனிநூல்கள்)

❀ தொல்காப்பியமூலம் முற்றிலும் நல்ல பாடமாக அமைக்கப் பெற்றுள்ளது.

❀ 'இயல் கருத்து நிரல்' என்பது முற்றிலும் புதிய முயற்சி. நூற்பா வரிசைப்படி,கருத்து நிரல் தரப்பெற்றிருப்பதால், அவ்வியலின் உள்ளடக்கம் முழுமையாய் விளங்கும்.

❀ நூற்பாக்கள் தோறும் தந்துள்ள தலைப்புக்கள் வாக்கியமாகத் தரப்பட்டுள்ளன. இது தொல்காப்பியம் நன்கு விளங்க வேண்டும் என்பதற்கான முயற்சி.

❀ நூற்பாக்களுக்குக் கருத்துரை, அருஞ்சொற்பொருள், புதிய – இக்கால – நடைமுறை எடுத்துக்காட்டுகள் தந்திருப்பது, இந்நூல்களின் தனிச் சிறப்பு.